Azim Premji Foundation

# ஆண்டு மலர்

## மேடையில் திசைமானி - 2018

## தொடக்கநிலை



# THEMES OF THE CONFERENCE



- Language and Arts
- Math Teaching
- English Language Teaching
- Environmental Studies Teaching
- School Practices
- Classroom Practices



# Introduction

We take immense pleasure in bringing forward the second edition of Andumalar—a compilation of papers presented at Medaiyil Thisaimaani. An annual seminar for teachers, Medaiyil Thisaimaani provides a platform for teachers to share their reflections regarding their teaching experiences over the past academic year. Not only is it a forum for discussing ideas, issues, and challenges faced in teaching, but it also allows teachers to focus on the way forward. Moreover, teachers can reflect upon their profession and analyze and update their knowledge, beliefs, and practices. The previous edition of Medaiyil Thisaimaani, which was organized last year, saw the participation of 70 teachers, from different government primary schools in Puducherry and Tamil Nadu, presenting more than 85 papers. The three-day-long seminar focused on different themes, which included Languages (Tamil and English), Environmental Studies, Mathematics, School and Classroom Practices, and Arts and Crafts in the Classroom. Besides, a few theatre performances were showcased by the teachers, and interesting Teaching Learning Materials were also on display.

While the papers pertaining to the theme of English language focused on the whole language approach, the papers on the Tamil language talked about employing engaging activities, such as telling stories, creating songs, making puzzles, playing indoor or outdoor games, which provide the space for learners to express themselves. The presentations pertaining to teaching Mathematics explored the various activities that can be used to provide a practical understanding of the subject of the subject to the students, while debunking misconceptions for a better understanding of the concepts. The need to include exposure visits and classroom projects to make learning contextual and lively was the main focus of presentations made on Environmental Science.

Apart from focusing on pedagogy and content, perspectives on classroom management, democracy in the classroom, developing empathy for the students, and other such ideas that make schools inclusive were also shared.

A panel of five experts from the field of Education were invited to facilitate and moderate the theme-based discussions. They emphasized on the critical role that is played by a teacher, which has far-reaching impacts on the lives of individuals and, through them, the society. The teachers in the government schools further have a critical role in this regard since they mostly cater to the most under-privileged sections of the society.

The responsibility of a teacher is not simply limited to teaching the contents of a textbook; they are also looked up as the guardians of children by the community. Apart from subject knowledge and an understanding of pedagogy, it is also important for a teacher to have the right perspective. It is also important that teachers share their ideas and challenges with other teachers so that there is an opportunity for collective learning to take place.

We hope the myriad experiences of teachers from different fields inspire you just as they inspired us.

Inspire and be inspired!

Azim Premji Foundation

Email your views and suggestions to: *thisaimaani@azimpremjifoundation.org*

# முன்னுரை

அன்புள்ள ஆசிரிய பெருமக்களுக்கு,

மேடையில் திசைமானி நிகழ்வில் வாசிக்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பைப் பெரு உவகையோடு இரண்டாம் ஆண்டு மலராகக் கொண்டு வருகிறோம். மேடையில் திசைமானி என்பது ஆசிரியர்கள் தங்களின் பல்வேறு பணி அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளும் ஓர் ஆண்டுக் கருத்தரங்கமாகும். இது கல்வி முன்னேற்றத்திற்கு வித்திடும் கருத்துக்களைப், பிரச்சினைகளை, நுணுக்கங்களைச், சவால்களைப் பற்றிக் கலந்துரையாடும் களம். மேலும் இங்கு ஆசிரியர்கள் தங்கள் அறிவினை, திறன்களை, நம்பிக்கைகளை மற்றும் செயல்பாடுகளைக் காலத்திற்கு ஏற்றாற்போல் தகவமைத்துக் கொள்கிறார்கள். மேடையில் திசைமானி 2018 நிகழ்வில் புதுச்சேரி மற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த 70 அரசுத் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் கலந்து கொண்டு 85 கட்டுரைகளை வாசித்தனர். ‘மொழி கற்றல், சூழலியல், கணிதம் கற்பித்தல், பள்ளி மற்றும் வகுப்பறைச் செயல்பாடுகள், வகுப்பறை கலை மற்றும் கைவினைச் செயல்பாடுகள்’ ஆகியன முக்கிய கருப்பொருள்களாக அமைந்தன. மேலும் ஆசிரியர்களின் நாடகங்களும், கற்றல் கற்பித்தல் கருவிகளும் நிகழ்வில் காட்சிகளாக்கப்பட்டன.

ஆங்கில மொழிக் கட்டுரைகளின் கருப்பொருள்களாக ஒன்றிணைந்த மொழி அணுகுமுறைகள், தமிழ் கட்டுரைகள், மாணவர்களின் திறன்களை வெளிக்கொணரும் கதை சொல்லல், பாடல்கள் படைத்தல், புதிர்கள், உள்ளரங்க / வெளியரங்க விளையாட்டுக்கள் ஆகியவற்றைப் பற்றியும் இருந்தன.

பழமையான எண்ணங்களைக் கட்டுடைத்து, நடைமுறைப் புரிந்துணர்வோடு, பாடநூலிற்கு அப்பால் கற்றலைக் கொண்டு செல்லும் பல்வேறு செயல்பாடுகள் கணிதப் படைப்புகளாக இருந்தன. களப்பயணங்களின் தேவைகள், கற்றலை உயிர்ப்பானதாக்கும் வகுப்பறைச் செயல் திட்டத்தின் முக்கியத்துவம் ஆகியவைகள் சுற்றுச்சூழல் கல்விக் கட்டுரைகளின் வழி உரைக்கப்பட்டன. கற்பித்தல் மற்றும் பாடப்பொருளுக்கு அப்பாற்பட்ட பள்ளிகளை ஒருங்கிணைந்த வகுப்பறை மேலாண்மை, வகுப்பறை மாணவராட்சி, பிறரைப் புரிந்துணர்தல் ஆகியனவும் நிகழ்வில் கலந்துரையாடப்பட்டன.

கல்விக்களத்தைச் சார்ந்த ஐந்து வல்லுனர்கள் கலந்துரையாடலை நெறிப்படுத்தவும் எளிமையாக்கவும் அழைக்கப்பட்டிருந்தனர். தனிநபர்களின் வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்தி அதன்வழி சமூகத்தைப் பாதிக்கும் ஆசிரியர் பணியின் முக்கியத்துவத்தை அவர்கள் வலியுறுத்தினர். சமூகத்தில் அரசுப்பள்ளி ஆசிரியர்களின் பங்கானது மிகவும் முக்கியமானது. ஏனெனில், அவர்கள்தான் சமூகத்தில் மிகவும் பின்தங்கிய மக்களுக்காகச் சேவையாற்றுகிறார்கள். ஆசிரியரின் பொறுப்பானது கற்பித்தலோடு முடிந்துவிடுவதில்லை. சமூகப் பரிமாணங்களைக் காக்கும் பொறுப்பும் அவர்களுக்கு உண்டு. பாடப்பொருள் மற்றும் கற்பித்தலில் அறிவு மட்டுமல்லாது, கல்வி பற்றிய சரியான உள்ளார்ந்த முன்னோக்கிய பார்வையும் ஆசிரியர்களுக்கு அவசியம். ஆசிரியர்கள் தங்களின் கருத்துக்களையும், சவால்களையும் பிற ஆசிரியர்களுடன் பகிர்ந்துகொள்வது அவசியமானது. அப்பகிர்தல் ஒரு கூட்டுக் கற்றல் வாய்ப்பினை ஆசிரியர்களுக்கு வழங்குகிறது.

இந்த அனுபவப் பகிர்தல்கள் உங்களை ஊக்குவிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

ஊக்கமாகு மற்றும் ஊக்குவி!

அசிம் பிரேம்ஜி ஃபவுண்டேஷன்.

தங்களுடைய கருத்துக்களையும் பரிந்துரைகளையும்

அனுப்பவேண்டிய முகவரி: thisaimaani@azimpremjifoundation.org

# Medaiyil Thisaimaani 2018

www. azimpremjifoundationpuducherry.org

## Classroom Practices


ஆரோக்கியமான சமூகத்திற்கான கல்விமுறையை நோக்கி ..... 7

TEACHER AS A CLASSMATE 9

ஆண்டுத்திட்டமும் வகுப்பறை செயல்பாடும் 11

குழந்தைகள் எவ்வாறு கற்கிறார்கள்? 16

A HAPPY CLASSROOM 19

CLASSROOM MANAGEMENT 20

MY EXPERIENCES IN THE CLASSROOM ABOUT HOLISTIC APPROACH TO EDUCATION 22

SPECIFIC STRATEGIES TO ADDRESS THE NEEDS OF A LEARNER 24

IMPLEMENTATION OF ICT IN THE PRIMARY LEVEL TO DEVELOP BASIC READING SKILLS 28

பாடத்திட்டத்தினைத் தாண்டிய பயணம் 29

வகுப்பறைச் செயல்பாடுகள் மற்றும் பிரதிபலிப்புகள் என்றும் பயில்பவராக ஆசிரியர் 31

மாணவர்களின் சமூகப்பின்னணியை அறிந்து கொள்வதன் முக்கியத்துவம் 32


## English Language Teaching


ACQUIRING COMPETENCE IN ENGLISH THEORY AND PRACTICE - DR. KN ANANDAN 36

CAN A SIX-YEAR-OLD STUDENT WRITE POEMS/ SONGS IN ENGLISH? 38

LEARNER-FRIENDLY LANGUAGE CLASSROOM A CASE STUDY 41

ACTIVITIES FOR ENGLISH - LANGUAGE TEACHING 46

USING CHOREOGRAPHY AS A PEDAGOGICAL TOOL IN ENGLISH-LANGUAGE TEACHING 47

LEARNING LANGUAGE THROUGH ACTIVITIES AND GAMES 49

PICTURE-BASED INTERACTION A TOOL FOR ENHANCING LANGUAGE ACQUISITION 52

REFLECTION ON THE USAGE Of TLMS IN THE CLASSROOM 54

STRATEGIES TO IMPROVE READING SKILLS OF STUDENTS 57

TEACHING LESSONS AND CHANGING STUDENTS' ATTITUDES THROUGH INTERACTION 60

THE EFFECTIVENESS OF DRAMA AS A PEDAGOGICAL TOOL IN LANGUAGE TEACHING 62

USING MAGNETIC PUPPETRY IN THE ENGLISH CLASSROOM 65

## Math Teaching


எளிய வழியில் கணிதம் கற்பித்தல் 68

MENTAL MATH AND MATH TALK 71

INTERACTION HELPS IN ADDRESSING THE MISCONCEPTIONS IN MATH AMONG STUDENTS 76

TEACHING ADDITION AND FINDING MISSING NUMBERS 80

TEACHING THE CONCEPT OF GROUPING 81

கற்பித்தலில் தகவல் தொழில்நுட்பத்தின் பங்கு 82

HANDS-ON ACTIVITIES FOR LEARNING MATH 85

BUSTING THE MISCONCEPTION THAT STUDENTS HAVE ABOUT THE MEASUREMENT OF VOLUME 86

MAKING STUDENTS FAMILIAR WITH MULTIPLICATION TABLES 90

அளவைகளும் கோப்பைகளும் 93

கணிதப் புதிர்கள் மூலமாகக் கணக்கு கற்பித்தல் 97


## Environmental Studies Teaching


குக்கூ... காட்டுப்பள்ளி 100

சூழலியல் பாடத்தில் களப்பயணத்தின் முக்கியத்துவம் 103

சூழலியல் பாடத்தில் வகுப்பறை செயல்பாடுகள் 105

சுற்றுச்சூழலிலிருந்து செயல்திட்டங்களின் மூலம் கற்றல் 107

சுற்றுப்புறத்திலிருந்து கற்றல் - பள்ளித் தோட்டம் 111

MAKING OF SEED BALLS 114

CLASSROOM SCIENCE LAB 115

பாடம் படமானது 116

எனது வகுப்பறை மகிழ்ச்சியின் கருவறை 119


## School Practices


ஜெ. கிருஷ்ணமூர்த்தியுடன் ஆசிரியர்கள் உரையாடல்கள் 123

COMMUNITY INVOLVEMENT INCREASED ENROLMENT 127

EXPLORING INNOVATIVE STRATEGIES FOR DEVELOPING STUDY SKILLS 130

பசுமைப் பள்ளி 132

பள்ளி நிகழ்வுகளில் வகுப்பறை பங்களிப்பு 136

ஆண்டு விழா 139

100 என்ற இலக்கை நோக்கிய எங்கள் பயணம் 140

பள்ளி மற்றும் சமூகம் 143

குழந்தைகளின் நூறு மொழிகள் 146

கல்விக் கண்ணோட்டம் - எண் ஐந்தும் - நானும் 150

பள்ளி வளர்ச்சியில் ஆசிரியரின் பங்கு 153

எனது பள்ளி 157

கல்விக் கண்ணோட்டம் 160

பூந்தோட்டமே எங்கள் பள்ளியின் முகத்தோற்றம் 162

பள்ளிச்செயல்பாடுகளில் தலைமையாசிரியரின் பங்கு 164

## Language and Arts

CREATIVITY IN CLASSROOM 167

PRINT RICH CLASSROOM ENVIRONMENT AND READING CORNER 169

எண்ணங்களின் வண்ணங்கள் 170

ஏலேலோ ஐலசா 173

ஓர் ஆசிரியர் பல வகுப்புகள் 175

கதை - மொழிக்கற்றலுக்கு அடித்தளம் 177

பங்கு நாடகம் 180

புள்ளி முதல் 181

எனது வகுப்பறை அனுபவங்கள் 182

மொழிகற்பித்தல் செயல்பாடுகள் 184

புதிர்களை அறிவோம் 186

நிறங்களும் மரங்களும் 189

நானும் என் குட்டிகளும் 191

கதைகளின் பெருவிழா 195

வகுப்பறை மாற்றம் 199

படங்களைப் பார்! படைப்பாளியாகு! 201

கற்றல் திருவிழாவில் என் மாணவர்கள் 205

இரு மொழிகளையும் இணைத்துக் கற்பித்தல் 206

சிறப்புத் திறன் குழந்தைகளுக்கான சிறப்பானக் கல்வி 208

கதைகூறல் 212

பிள்ளைத்தமிழ் புத்தகமும் தமிழ் வகுப்பறையும் 214

கைவினையும் கைப்பழக்கம் 218

வகுப்பறை விளையாட்டுகள் 221

முதல் வகுப்பு தமிழ்ப்புத்தகம் ஒரு பார்வை 224

தமிழ் மொழிப்பாடம் கற்பித்தலில் விளையாட்டுக்கள் மற்றும் திறன்பேசி செயலியின் பயன்பாடு 226

கவிதைகள் படைப்போம் - முதலாம் வகுப்புக் குழந்தைகள் 229

நடந்தது என்ன? - தமிழ்ப்பாடமும் நடந்தவைகளும் 233

நாடகம் வாயிலாகக் கற்றல் 237

உரையாடலினால் ஏற்படும் வகுப்பறை மாற்றங்கள் 239

மேடையில் ஆயிஷா 241

கல்வியில் ஜனநாயகம் - நாடகம் 245



# Classroom Practices & Learning

# ஆரோக்கியமான சமூகத்திற்கான கல்விமுறையை நோக்கி .....

(**மாதவன்** - *ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் தலைமை ஆசிரியராகப் பணியாற்றுபவர். அறிவியல், கல்வி, சமூக மாற்றம் தொடர்பாக தொடர்ந்து எழுதும் எழுத்தாளர்.*)



நம் நாடு அறிவியல் மற்றும் பல துறைகளில் வளர்ச்சி பெற்று வருகின்றது, அதே வேளையில் சமீபத்தில் காஷ்மீரில் நடந்த ஆசிபா சம்பவங்களும் வளர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. அனைவர்க்கும் குறைந்த பட்சம் பத்தாண்டுக் கல்வி போன்றவற்றை நோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கிறோம். இந்தப் பத்தாண்டுகளில் கணிதம், அறிவியல், ஆங்கிலம் போன்றவைகளெல்லாம் கற்றுக் கொடுக்கின்றோம். ஆனால் உயிர் வாழ்வதற்குத் தேவையான வாழ்க்கைத் திறன்களைக் கற்றுக் கொடுக்கின்றோமா? பள்ளி தான் பாட விசயங்களோடு வாழ்வதற்கான திறன்களை வளர்ப்பதற்கும் வழிவகை செய்ய வேண்டும். இதற்கு உறுதுணையாக ஆசிரியர்கள் இருக்க வேண்டும்.

நம் நாட்டில் குறிப்பாகப் பாண்டிச்சேரி மற்றும் தமிழகத்தில் அனைத்து அரசுப்பள்ளி ஆசிரியர்களும் தங்கள் துறை சார்ந்த அறிவில் தேர்ந்தவர்களாக இருந்தாலும் பணிச்சுமையால் பாதிக்கப்படுகின்றனர். என்ன தான் பணிச்சுமைகள் இருந்தாலும் ஒரு சில ஆசிரியர்கள், சமுதாயம் மற்றும் பள்ளிகள் மீதுள்ள ஆர்வத்தால் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றனர். இவர்களைத்தான் மாணவர்களும் சமுதாயமும் அங்கீகரிக்கின்றனர். ஆனால் வகுப்பில் முதல் மதிப்பெண் வாங்கும் மாணவனை மற்ற மாணவர்களுக்குப் பிடிக்காமல் இருப்பது போன்று, உடன் பணிபுரியும் சக ஆசிரியர்களுக்கும் தலைமைப் பண்பில் சிறந்து விளங்கும் ஆசிரியர்களைப் பிடிப்பதில்லை. இது ஒருவகையில் ஏற்றுக் கொள்ள முடியாத விசயமாக இருந்ததாலும் மற்றொரு வகையில் சரியே. ஏனென்றால் மற்ற ஆசிரியர்களும் பணி செய்து கொண்டு தான் இருக்கின்றனர். ஆனால் அவர்களை இன்னும் சிறப்பாகச் செயல்பட வேண்டிய அவசியத்தைப் புரிய வைப்பவர்களாக இருப்பதை ஏற்றுக்கொள்ள கஷ்டப்படுகின்றனர். எல்லோரும் சிறப்பாகச் செயல்படும் நிலையை உருவாக்குபவராகத் தலைமை ஆசிரியர் இருக்க வேண்டும்.

அதனால் தான் தலைமைப் பண்பில் சிறந்து விளங்கும் ஆசிரியர்/ தலைமை ஆசிரியர் தங்களுடைய சக ஆசிரியர்களையும் பாராட்டு பெறும் வகையில் செயல்பட உதவி புரிய வேண்டும். அவ்வாறு செய்யும் பொழுது தான் அவர் அவ்விடத்தை விட்டுச் சென்றாலும் மாணவர்களிடையோ அல்லது பள்ளியிலோ வெற்றிடம் ஏற்பட்டு தொய்வடைந்து விடாமல் நிறைவாகச் செயல்பட முடியும். அப்பொழுது தான் பள்ளியும் ஒரு நிறுவனம் என்பதில் முழுமையடையும். ஆசிபா போன்ற சம்பவங்கள் குறைவதற்கும், எழுத்தாளர் ஆயிஷா நடராசன் எழுதிய ஆயிஷா என்ற புத்தகத்தில் குறிப்பிட்டுள்ள ஆயிஷா போன்ற மாணவிகளை இழக்காமல் இருப்பதற்கும் வழிவகுக்கும்.

ஆயிஷாவின் அறிவியல் ஆசிரியர் போல்

மாணவர்களிடையே நெருங்கி பழகும் ஆசிரியர்களைத் தான் அனைத்து மாணவர்களும் விரும்புகின்றனர். தங்கள் மாணவர்களை நேசத்துடன் அணுகி அரவணைத்துக் கல்வி கற்பிப்பவர்கள் இன்று அதிகமாக உள்ளனர். ஆயினும் மிகப்பெரிய வெற்றி அடைய முடியாததற்குக் காரணம், நம்மிடையே தலைமைப்பண்பு மற்றும் அனைவரையும் உணர்வு பூர்வமாக ஒருங்கிணைத்து பணியாற்றும் திறன் சற்று குறைவாகக் காணப்படுவதே ஆகும். நாம் இனிவரும் காலங்களில் நம் சக ஆசிரியர்களிடையே மட்டுமல்லாமல் மாணவர்களிடமும் தலைமைப்பண்பை வளர்க்க முற்பட்டுக் கல்வியின் நோக்கத்தை முழுமையடையச் செய்து நல்லதோர் சமுதாயத்திற்கு அடித்தளம் அமைத்திடுவோம்.

## கலந்துரையாடலின் சுருக்கம்

பள்ளிக்கூடம் என்பது முழுமை பெற்ற மாணவச் செல்வங்களைச் சமுதாயத்திற்கு அளிக்கக்கூடிய களமாக அமைய வேண்டும். இதைச் சாத்தியப்படுத்துவது ஆசிரியர்களால் மட்டுமே முடியும். அதற்கு ஆசிரியர்கள் வகுப்பறை மட்டுமல்லாமல் அதையும் தாண்டி சமூகம் சார்ந்த தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய கற்பித்தலை முயற்சிக்க வேண்டும். ஆசிரியர்களாகிய நாம் அனைவரும் வெறும் புத்தகம் சார்ந்த கல்வியை மட்டும் போதிக்காமல், கல்வி சமூக மாற்றத்திற்கான பயணம் என்பதைக் கருத்தில் கொண்டு பயணப்பட வேண்டும். மேலும் ஆசிரியர்கள் அனைவரும் ஒற்றுமையுடன் பணியாற்ற வேண்டும். உதாரணமாக, ஜெர்மனியில் ஐம்பது கிளைகள் கொண்ட நிறுவனத்தில், ஒரு கிளை நிறுவனத்தில் மட்டும் நிர்ணயிக்கப்பட்ட வியாபார இலக்கை அடைய முடியவில்லை என்பதால் மற்ற அனைத்துக் கிளைகளும் ஒன்று கூடி இலக்கை அடைய உதவி செய்கின்றனர்.

இக்கருத்தை முன்னுதாரணமாகக் கொண்டு நாமும் ஒருங்கிணைந்து சமூக மாற்றம் சார்ந்த கல்விக்கு வித்திட வேண்டும். மாற்றத்தை நோக்கி ஆசிரியர் அனைவரும் தெருவில் இறங்கிப் போராட வேண்டும் என்ற அவசியமில்லை. அவரவர் வகுப்பறையில் அணுகுமுறையின் மூலம் மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்று கலந்தாலோசிக்கப்பட்டது.

2001ம் ஆண்டு, கற்பித்தலில் புதுமையைப் புகுத்தினேன். இன்று என்னைப்போல் நிறைய ஆசிரியர்கள் முயற்சி செய்வது வரவேற்கத்தக்கது. கல்வி வணிகமயமாக்கப்பட்ட இன்றைய சூழலில், சக ஆசிரியர்களுடன் அனுசரணையாக இருந்து மாணவர்கள் நம்மை விரோதியாகப் பார்க்காமல், அவர்தம் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்து கற்பிப்பதில் புதுமையைப் புகுத்த வேண்டும். மாணவர்களுக்கு வெறும் ஏட்டுக் கல்வியை மட்டும் போதிக்காமல் நல் உணர்வுகளையும், வாழ்வதற்குத் தேவையான திறன்களையும் வளர்த்து ஆரோக்கியமான சமுதாயத்திற்கு வழிவகுக்க வேண்டும் என்பது என்னுடைய பேராசை என்றே சொல்லலாம்.

**திசைமானிக் குழு**

# TEACHER AS A CLASSMATE

As a teacher, we need to maintain a good relationship with the students. Every student has their own unique lifestyles and skills. However, once they are inside a classroom, all of them come under one umbrella–that of the student. Yet, they are the kings and queens of their own worlds. Of course, we the teachers have also passed through that phase during our childhood. But, we are grown-ups now. Therefore, we need to understand the world of the students. Once we do that, we will find that we can easily mingle with them. And, if this is possible, we will be able to provide the students what they need. In return, our expectations pertaining to the students will be met as well. In light of this, I decided to use some keys to unlock and enter the fascinating world of the students.

In fact, we already involve ourselves with the students in school in many different ways, such as through playing, speaking, or engaging with them in some other activities. This might lead us to assume that the students do not fear us and consider us to be friendly. However, in reality, there always exists a gap between us and the students. Hence, it is up to us to create a belief amongst the students that we are also one among them—a classmate and a friend.

- Establishing a connection between the students and the teacher enhances the teaching-learning process.
- The teacher can adopt various strategies to make the students feel that he/she is also one among them.
- The teacher also needs to be aware and alert to ensure that "friendliness" does not hinder the teaching-learning process.

In my class of seven students, there was one boy who used to be terrified of me. I always tried to convince him that I was a friend of his, and there was



no reason for him to be afraid of me. He was the one of the main reasons why I decided to devise some activities that would make me a part of the world of my students.

The first change that I incorporated in this regard is that I increased the total number of students, which was written on the board, by one; i.e. I wrote the strength of my class as 8, whereas it was actually 7. Upon noticing this for the first time, the students started to murmur amongst themselves before asking me why I had done so. I just answered that, from then on, our class strength would be 8. Later, when the attendance was taken, I called out my name as well at the very end. I myself responded that I was present to my name being called. It was at that point that my students understood why I had changed the total number of students to 8—They realized that I was including myself as a student as well instead of a teacher.

In the coming days, I handed over the attendance register to the students for them to mark the attendance. This small step gave them the feeling that they were also the class teacher. It was an activity that brought them closer to me.

It was an unwritten rule in our classes for the students to seek permission from the teacher whenever a student wanted to drink water or go to the restroom. I decided that the same rule would apply to me as well. If I had to drink water or go outside, I would ask for the permission of the class. Even when the headmaster called me to her office, I would first take the permission from my students before leaving the class. Just like the students, I too did projects, homework, maintained a classwork note, and so on. I would share my snacks with the students, and they would, in turn, share theirs with me. Whatever eatables one brought, it would be divided into eight parts and shared amongst us equally.

It was these little acts that made the students accept me as their classmate. They would sometimes quip that they had one student and seven teachers in their class—the student being me. Once this friendly atmosphere was established in the classroom, it was easy for me to take care of the academic needs of my students as well.

This approach particularly helped me in bringing that one terrified boy closer to me. Gradually, his fear of me disappeared, and he joined the other students in mingling with me.

Perhaps, one challenge that a teacher might face while adopting this method is that the students may become too friendly with them to the point that the teaching-learning process is disrupted. I would like to point out that it all depends on us, the teachers. If learning does not take place in our class, then we should be aware of it. We can change this kind of a situation by altering our methods. For example, if the students want to play games, we have to devise games that would simultaneously incorporate learning as well. We need to be prepared for such situations and be ready with such games. If that happens, even the students who are usually not attentive in class would be interested and focused during such activities. Thus, we teachers should always be alert and adopt strategies and methods that will be suited to the need of the class at each point of time.

To conclude, being teachers, it is vital for us to establish a good connection with our students. It is a prerequisite for enabling a smooth teaching-learning process.



**R. RAJESH - PST - GPS SIVARANTHAGAMPET**

# ஆண்டுத்திட்டமும் வகுப்பறை செயல்பாடும்



- விரிவான ஆண்டு திட்டம் பெற்றிருப்பது வகுப்பறை செயல்பாடுகளை முறையாக நடைமுறை படுத்திட உதவும்.

- வகுப்பறையில் ஜனநாயகத்தைப் பின்பற்றினால் ஆசிரியருக்கு வகுப்பறை மேலாண்மை எளிதாகும்.

- கற்றல் என்பது நான்கு சுவர்களுக்குள் தான் நடக்கவேண்டும் என்ற அவசியமில்லை. மாணவர்கள் வகுப்பறைக்கு வெளியில் செய்யும் செயல்பாடுகளின் மூலமாகவும் சிறந்த கற்றலைப் பெறமுடியும்.

- 'செய்துப் பார்த்துக் கற்றல்' அனுபவத்தை மாணவர்களுக்கு வழங்குவதற்காகப் பல்வேறு வகையான செயல்பாடுகளை வகுப்பறையில் நாம் பின்பற்ற வேண்டும்.

எங்கள் பள்ளியின் 2017 - 2018 ஆம் கல்வியாண்டிற்கான மூன்றாம் வகுப்பு ஆசிரியர் நான். ஆண்டுத் திட்டம், பாடத்திட்டத் தயாரிப்பு, பாடமல்லாத நிகழ்வுகள், ஆசிரிய நண்பர்களுடன் உரையாடல், வாசித்தல் என்பன கற்றல்-கற்பித்தலில் முக்கிய தேவைகளாக உள்ளன. சொல்லப்போனால் கற்பிக்க செலவழித்த நேரத்தைக்காட்டிலும் நான் கற்றலில் ஈடுபட்ட நேரம் அதிகமானதாக உள்ளது. வாரம் தவறாமல் நாங்கள் வாசித்த புத்தகங்களும் பார்த்த படங்களும் மேற்கொண்ட உரையாடல்களும் கல்வி பற்றிய என் பார்வையைக் கூர்மை படுத்தி உள்ளது.

கோடை விடுமுறையின் போதே வகுப்புகள் முடிவு செய்யப்பட்டுவிட்டன. விடுமுறையில் ஏற்காட்டில் நடைபெற்ற கோடை முகாம் மற்றும் கொடைக்கானலில் நடைபெற்ற பயிற்சிப்பட்டறையிலும் என் வகுப்பிற்குரிய

திட்டமிடல் துவங்கிவிட்டது. 'First six weeks of the school' என்ற புத்தகம் என் திட்டமிடலுக்கு மிகவும் உதவியாக இருந்தது. வகுப்பறை மேலாண்மை மற்றும் ஆசிரியர் வழிகாட்டலின் அவசியம் இவற்றுக்கு இப்புத்தகத்திலிருந்து சில செயல்பாடுகளை எடுத்துக்கொண்டேன்.

**உள்ளடக்கம்**

1. வகுப்பறை விதிகள்
2. காலை தகவல்
3. பசுமை நடை பயணம்
4. பறவைகளைப் பார்வையிடல்
5. அஞ்சலகத்தில் ஒரு நாள்

1. வகுப்பறை விதிகள்

பெரும்பான்மையான நேரங்களில் மாணவர்களிடம் நாம் என்ன எதிர்பார்க்கிறோம் என்பதை அவர்களுக்குத் தெளிவுபடுத்தாமலேயே நாம் அவர்களிடம் அதிகம் எதிர்பார்க்கிறோம். வகுப்பறைக்கான விதிகளை வகுப்பது எனத் திட்டமிட்டிருந்தேன். அதன் படி மாணவர்களுடன் கலந்துரையாடி வகுப்பறை விதிகள் வகுக்கப்பட்டன விதிகள் எதிர்மறையானதாக இல்லாமல் இருக்க வேண்டும் என்பதில் கவனமாக இருந்தேன். உதாரணமாக, மாணவர்கள் ஒருவரை ஒருவர் ஏதேனும் தொந்தரவு செய்யும்போது அதற்கு விதியாக 'you broke it you fix it' என்ற விதி உருவாக்கப்பட்டது. ஒரு மாணவன் மற்றவனைக் கோபமூட்டி (Kindle) அவன் அழ நேர்ந்தால் அழ வைத்த மாணவன் 'sorry' என்று சொல்வதோடு மட்டுமல்லாது, அவனே அம்மாணவனை சிரிக்கவும் வைக்க வேண்டும். ஒவ்வொரு விதிமுறையையும் மாணவர்களிடமிருந்தே பெற்று கரும்பலகையில் எழுதினேன். அவற்றிலிருந்து வகுப்பறைக்கு பொருத்தமானவற்றை மட்டும் தேர்வு செய்து கொண்டு அவற்றை ஆண்டு முழுவதற்கும் பின்பற்றுவது என அவர்கள் சம்மதித்த பிறகு chart ல் எழுதி வகுப்பறையில் தொங்கவிட்டேன்.

எப்பொழுதெல்லாம் விதிகள் மீறப்படுகின்றனவோ அப்பொழுதுல்லாம் விதி எண் நினைவூட்டப்பட்டது. ஒருவரை ஒருவர் முந்தியடித்துக் கொண்டு செல்லக் கூடாது என மாணவர்கள் விதியைக் கூற, அவ்வாறு தள்ளாமல் இருக்க என்ன செய்யலாம் என அவர்களிடமே கேட்கப்பபட்டது. Line-னில் போகலாம்' என்றனர். எனவே 'follow Q' என்பதை ஒரு விதியாக உருவாக்கினார்கள்.

இவ்விதிகள் அவர்களாலேயே உருவாக்கப்பட்டவை என்பதால் அவற்றை முறையாகப் பின்பற்றினார்கள். 'Sit still, Speak politely, Speak one at a time' என 10 விதிகளை உருவாக்கினார்கள். வகுப்பறை மேலாண்மையில் 'வகுப்பறை விதிகள்' முக்கிய உத்தியாக எனக்கு ஆண்டு முழுவதற்கும் கை கொடுத்தது. குழந்தைகள் சுயக்கட்டிப்பாட்டுடன் நடந்து கொள்ள உதவியது. மேலும், ஒரு குழந்தை விதி மீறும் பொழுது மற்ற குழந்தைகள் அவர்களுக்கு விதியை நினைவூட்டினர். ஆசிரியராக எனக்கும் வகுப்பறை, ஜனநாயகமாக இருப்பதால் மகிழ்ச்சி.




**காலை தகவல்**

தினமும் காலை என் வகுப்பு கரும்பலகையில் மாணவர்களுக்கான தகவலை எழுதிவிடுவேன்.

அன்றைய நாளில் எதிர்பார்க்கப்படும் செயல்கள் என அனைத்தும் காலை தகவலில் அடங்கும். இறுதியில் என்னுடைய பெயரும் எனக்கு யாருடைய உதவி அன்றைய தினத்தில் தேவைப்படுகிறதோ, அந்தக் குழந்தையின்




பெயரும் இதில் அடங்கும். இவ்வாறு ஆண்டு முழுவதும் தினமும் காலை தகவல் என் கரும்பலகையை அலங்கரித்தது. இதன் மூலம் என்னுடைய பெயரையும் எனக்கு உதவ இருக்கும் குழந்தையின் பெயரையும் விரைவிலேயே படித்தனர். மேலும், அவர்களின் மொழித்திறனை வளர்க்க முடிந்தது உதாரணமாக, "let us do a cut paste activity in EVS. shall we play a bingo game? Ganesh can you help me in arranging the story books today?" போன்ற வாக்கியங்களை context உடன் புரிந்து கொண்டனர். அவர்களின் வாசித்தலும் மேம்பட்டது. மேலும், அன்றைய நாளில் அவர்கள் செய்யப்போகிற செயல்பாடுகளை விவாதிக்க உதவியது.

### வகுப்பறைக்கு வெளியே:

பாடத்தின் பகுதியாக குழந்தைகளை பள்ளிக்கு வெளியே அழைத்துச் செல்லவேண்டும். அப்பயணங்கள் ஆழமான கற்றலுக்கானதாக இருக்க வேண்டும் எனத் திட்டமிட்டிருந்தேன்.

### பசுமை நடை பயணம்

பசுமை நடை பயணம் அழைத்து செல்ல திட்மிட்டிருந்தேன். அதற்காக, EVS பாடத்தில் Plant Fairy என்ற பாடத்தைத் தேர்ந்தெடுத்து பள்ளியின் அருகிலிருந்த தோட்டத்திற்கு அழைத்துச் சென்றேன் . அவர்களை அழைத்துச் செல்வதற்கு முன்தினம் நான் ஒருமுறை சென்று பார்வையிட்டு வந்தேன். குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் பாடப்பொருளை இணைப்பதற்கும் இந்த திட்டமிடல் மிகவும் அவசியாமனதாக எனக்குப்பட்டது. அவர்கள் எதையெல்லாம் உற்றுநோக்க வேண்டும் என்பதை வகுப்பில் கூடி விவாதித்தோம். உதாரணமாக, செடிகள், மரங்கள் இவற்றின் உருவம், அளவு, அமைப்பு, இலைகளின் அளவுகள் மற்றும் அமைப்பு, அவற்றின் நிறங்கள் இவற்றை உற்று நோக்க வேண்டும் என முன்பே திட்டமிட்டுக் கொண்டோம். பயணம் முடிந்த பிறகு மரங்கள், மூலிகைகள், மரத் தாவரங்கள், ஏறும் தாவர கொடிவகைகள், படரும் தாவர கொடிவகைகள் என தாவரங்களை எளிதாக அவர்களால் வகைபடுத்த முடிந்தது. வகை வகையான இலைகளை சேகரித்தனர். அவற்றின் படங்களை வரைதல், பெயர் எழுதுதல், வகைப்படுத்துதல் என கற்றலை வெளிப்படுத்தினர். நேரடி அனுபவங்கள் நிலைத்த கற்றலுக்கு உதவுகின்றன. இதன் தொடர்ச்சியாக tooth brush மற்றும் சீப்பு, water colors, வகை வகையான இலைகளைப் பயன்படுத்தி spray painting செய்தனர். தமிழில் எங்கள் தோட்டம், ஆங்கிலத்தில் magic garden போன்ற பாடங்களை இணைத்துக் கொள்ள முடிந்தது.

### பறவைகளைப் பார்வையிடல்

### Bird watching:

உள்ளூர் பறவைகளை அறிய bird watching அழைத்துச் சென்றோம். பறவைகளைக் காணச் செல்லும் போது அமைதியாக உற்று நோக்குதல் மற்றும் பறவைகளின் ஒலியைக் கூர்ந்து கவனித்தல் முக்கியம் என்பதை மாணவர்களே வகுப்பில் முன்பே திட்டமிட்டிருந்தனர்.

### அஞ்சலகத்தில் ஒரு நாள்

EVS மற்றும் English பாடங்களை இணைத்து இந்தப் பயணத்தைத் திட்டமிட்டேன்.

உள்ளூர் தபால்காரரைத் தொடர்பு கொண்டு விசாரித்தேன். அவர் தலைமைத் தபால் அலுவலரிடம் பேசி அனுமதி பெற்றுத் தந்தார். வகுப்பறையில் கலந்துரையாடினோம். அஞ் சலகத்தில் என்னென்ன உற்றுநோக்க வேண்டும்? என்னென்ன தகவல்களைக் கேட்டறிய வேண்டும் என்பதை அவர்களே பட்டியலிட்டனர். அதன்படி 9 கேள்விகளைத் தொகுத்தனர். நான் 14 தபால் அட்டைகளை வாங்கிச் சென்று மாணவர்களை நண்பர்களுக்கோ அல்லது உறவினர்களுக்கோ கடிதம் எழுதும் முறையை விளக்கி எழுதச்செய்தேன். அதை post செய்ய கையில் எடுத்துக் கொண்டனர். யார் எந்தக் கேள்வியை கேட்க வேண்டும் என்பதையும் முன்பே திட்டமிட்டோம். ஆட்டோ ஒன்றை வாடகைக்கு அமர்த்தினேன். அரியாங்குப்பம் தபால் நிலையம் சென்றோம். அஞ்சல் பெட்டியை முதன் முதலாக நேரில் பார்த்ததும் உற்சாகத்தில் "mailbox... mailbox" என கூக்குரலிட்டனர். அஞ்சலக ஊழியர்கள் மாணவர்களின் சந்தேகங்களுக்குப் பொறுமையாக பதிலளித்தனர். எவ்வாறு கடிதம் collect செய்து டெலிவரி செய்கின்றனர் என்பதை மாதிரியாக ஊழியர் ஒருவர் செய்துகாட்டியது எங்கள் பயணத்திற்கு மகுடமாய் அமைந்தது.

இவ்வாறாக, மாணவர்களின் ஒவ்வொரு கேள்விக்கும் சோர்வில்லாமல் பதிலளித்த ஊழியர்களுக்கு நன்றி சொல்லியே ஆகவேண்டும். மாணவர்கள் தாங்கள் எழுதிக் கொண்டுவந்த கடிதத்தை mail boxல் போட்டனர்.

வகுப்பறையில் பாடங்களைத் திட்டமிடும் பொழுது, அவை வெவ்வேறு வழிகளில், குழந்தைகளின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் இருக்க வேண்டும் என்பதில் உறுதியாய் இருந்தேன். அவ்வகையில் பாரதியாரின் ஆத்தி சூடி நடத்தும் பொழுது 'பாரதி' திரைப்படத்தை வகுப்பில் திரையிட்டேன். மாணவர்களின் வகைவகையான பாரதியார் வரைபடங்கள் என்னை வியப்படைய வைத்தது. ஒவ்வொரு பாடத்திற்கும் ஏதேனும் hands on activity திட்டமிட்டேன். அது வழக்கமான வகுப்பறை செயல்பாடுகளில் இருந்து வேறுபட்டிருந்ததால் மாணவர்கள் உற்சாகத்துடன் கற்றலில் ஈடுபட்டனர். உதாரனமாக,

1. கணிதம் - skip counting

2. வீட்டு விலங்குகள், காட்டு விலங்குகள் வேறுபாடறிய - வெட்டி ஒட்டுதல் பயிற்சி

3. காகிதப் பூக்கள் செய்தல்.

4. வாழ்த்து அட்டைகள் தயாரித்தல்.

5. புதிர்கள் அடங்கிய worksheets கொடுத்தல்.

6. அருகில் உள்ள தெருக்களின் - வரைபடம் தயாரித்தல்

7. பாடங்களுக்கான பொம்மைகள் தயாரித்தல்.

இவ்வாறாக வகை வகையான செயல்பாடுகள் மாணவர்களை சோர்வடையாமல் கற்க ஏதுவாக இருந்தன. குழுவாகவும் தனித்தும் வெவ்வேறு செயல்பாடுகளை வடிவமைத்திருந்தேன். வெறும் படித்தல், எழுதுதல் என குழந்தைகளுக்குக் கடிவாளம் கட்டப்படாமல் பார்த்து கொள்ள இவ்வகை செயல்பாடுகள் உதவின.

பாடங்களைத் திட்டமிடும் பொழுது ஒவ்வொரு பாடத்தையும் வெவ்வேறு வகைகளில் கொண்டு செல்ல திட்டமிட்டிருந்தேன். அதன் படி நாடகம், தனி நடிப்பு, பொம்மலாட்டம், தகவல்கள் சேகரித்தல் போன்ற உத்திகள் மாணவர்களிடம் ஆர்வத்தை ஏற்படுத்தி கற்றலில் ஈடுபடுத்த உதவின. மாணவர்களைத் தொடர்ந்து வாசிக்கச் செய்தது (reading corner) இந்த ஆண்டு திட்டமிடலின் வெற்றியாக நான் கருதுகிறேன்.

ஆங்கிலப் பாடத்தை எளிமையாகக் கொண்டு செல்ல Discourse oriented pedagogy எனக்கு மந்திரக் கோளாய் இருந்தது. இந்த ஆண்டு என் வகுப்பு மாணவர்களின் creative writing exhibition பெற்றோரிடம் என் வகுப்பின் மீது பெரிய நமபிக்கையை ஏற்படுத்தி உள்ளது.

**முடிவுரை**

**Reflection and Conclusion:-**

ஆசிரியராக இருப்பதன் மகிழ்ச்சி நாளுக்கு நாள் கூடிக்கொண்டேயிருக்கிறது. அதற்காக கற்க வேண்டிய அவசியம் இருந்துகொண்டே இருக்கிறது.

எப்பொழுதும் நான் எதையோ செய்யப் போகிறேன் என்று காத்துக்கிடந்த என் அருமை மூன்றாம் வகுப்பு மாணவர்களுக்கும், என் வகுப்பறையை எட்டிப்பார்த்து அங்கு நடப்பதை அறிந்து கொள்ள ஆர்வம் காட்டிய என் பள்ளி மாணவர்களுக்கும் நன்றி.

என்னுடைய வகுப்பறை நாட்குறிப்பையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். என் வகுப்பறையின் கண்ணாடியாக இருக்கும் நாட்குறிப்பு, தொடர்ந்து எழுதவும் எழுதியதை அவ்வப்போது திருப்பிப் பார்க்கவும் நான் செய்ததையும் செய்ய வேண்டியதையும் உறுதி செய்யவும் உதவியாக இருக்கிறது.

**ஜி. சுபாஷினி,** தொ.ப.ஆ, அ.தொ.ப, நோணாங்குப்பம்



# குழந்தைகள் எவ்வாறு கற்கிறார்கள்?

- குழந்தைகள் எவ்வாறு கற்கிறார்கள் என்பது தெரிந்தால் நாம் அவர்களுக்கு எப்படி கற்பிக்கலாம் என்று திட்டமிடலாம்.
- பார்த்து, கேட்டு, சூழ்நிலையோடு தொடர்புப்படுத்தி, உரையாடி... என குழந்தைகள் பலமுறைகளில் கற்கிறார்கள்
- குழந்தைகளுக்கு ஏற்ற கற்றல் முறைகளோடு ஆசிரியர் கற்பிக்கும் பொழுது கற்றல் முழுமைபெறுகிறது.
- பின்வரும் குழந்தைகளை மையப்படுத்திய கற்பித்தல் முறைகள், அனைத்து விதமான கற்கும் திறனுடைய மாணவர்களுக்கும் ஏற்ற கற்பித்தல் முறைகளாகும். அவற்றில் சில a. எழுத்துக்களைக் கொண்டு வார்த்தைகளை உருவாக்குதல் b. படங்களைப் பார்த்து பெயர் எழுதுதல் c. பாடப் பகுதியைப் வாசித்தல் [குழு வாசிப்பு, சங்கிலி வாசிப்பு, இணை வாசிப்பு] d. கோடிட்ட இடத்தில் தகுந்த வார்த்தைகளால் நிரப்புதல்

குழந்தைகள் மொழியை எவ்வாறு கற்கிறார்கள்? குழந்தைகளுக்குக் கற்பிக்க வேண்டியது எழுத்துக்களை அல்ல, மொழியை. மொழியானது நாம் நினைப்பதை வெளிப்படுத்தவும், பிறர் கூறுவதைப் புரிந்து கொள்ளவும் பயன்படுகிறது என்பதோடு அல்லாமல் குழந்தைகளின் சிந்தித்தல் திறன், தொடர்புபடுத்தும் திறன், ஆராய்ந்து அறியும் திறன் போன்றவை மேம்படவேண்டும். இதற்கான கற்றல் சூழலைக் குழந்தைகளுக்கு ஏற்படுத்தி தருவதே ஆசிரி-யரின் கடமையாகும்.

குழந்தைகள் எவ்வாறு கற்கிறார்கள் என்பது தெரிந்தால் தான் நாம் எப்படி அவர்களுக்கு கற்பிக்க வேண்டும் என்பது புரியும் (எவ்வாறு அவர்களுக்குக் கற்றலில் உதவுவது) அவர்களின் தேவை என்ன? விருப்பம் என்ன? எதை? எப்படி? எங்கு? எவ்வாறு கற்பிப்பது? என்பது நன்கு தெரிந்தால் தான், கற்பித்தல் எளிமையாகவும் சிறப்பாகவும் அமையும். குழந்தைகளின் எதிர்ப்பார்ப்பு மற்றும் விருப்பம் நிறைவேறும் பொழுது தான் கற்றலில் ஆர்வமும் ஈடுபாடும் ஏற்படும். அத்தகைய ஆர்வமும் ஈடுபாடும் ஏற்பட்டால் தான் கற்றல் மற்றும் கற்பித்தல் எளிமையாகவும், மகிழ்ச்சியாகவும், உயிரோட்ட முடையதாகவும் அமைவதுடன் குழந்தைகளின் கற்றல் திறன்கள் மேம்பாடு அடையும் என்பது உறுதி!

## கற்கும் முறைகள்

a. ஐம்புலன்கள் வாயிலாகக் கற்றல், b. பார்த்து, கேட்டு, செய்து கற்றல், c.தெரிந்ததிலிருந்து கற்றல், d. சூழ்நிலையோடு தொடர்பு படுத்தி கற்றல், e.ஆராய்ந்து கற்றல், f.குழுக்கற்றல்

## திறன்பகுதி

மேற்கூறிய கற்றல் மேம்பாடுகளை மனதில் கொண்டு இரண்டாம் வகுப்பில் வடமொழி எழுத்துக்களை அறிமுகம் செய்தேன்.

## கதை கூறல்

ஒரு ஊரில் ராஜா என்ற சிறுவன் இருந்தான். கோடை விடுமுறை விட்டாச்சு. ஜூன் மாதம் தான் பள்ளி, ஸ்ரீநகரில் உள்ள தன் அத்தை வீட்டுக்குச் சென்றான். அத்தை மகள் ஆஷாவுடன் விளையாடுவான். ஒரு நாள் மாலை அனைவரும் கடைக்குச் சென்றனர். மாமா பஜ்ஜி வாங்கித் தந்தார். பஜ்ஜி சூடாக இருந்ததால் அனைவரும் ஹூ....ஹூ என்ற ஊதி ஊதிச் சாப்பிட்டபின், அத்தைக்கு கால்வலி உள்ளதால் அப்பா என்று அமர்ந்தார். ஜியோ கடையைப் பார்த்த தம்பி ஹை....ஜியோ என்றான் ஹே உனக்கு வேண்டாமா? ஜாங்கிரி, பாதுஷா,

கூட இருக்கிறது யாருக்கு எது வேண்டுமோ என்று கேட்டுகேட்டு மாமா வாங்கித் தந்தார். அனைவரும் ஹா ஹா ஹா என்று சிரித்து மகிழ்ந்தனர்.

கதையில் வரும் வார்த்தைகளைச் சொல் அட்டைகளில் ஒட்டி, ஆசிரியர் ஒவ்வொருவரிடமும் ஒவ்வொன்றைக் கொடுத்து அந்த வார்த்தையைப் படிக்கச் செய்து, வகுப்பறை சுவரில் ஒட்டினார்.

**விளையாட்டு**

பஸ் ஸ்டேண்டு, பஸ், குளோப்ஜாமுன், ஜீரா, ஜூன், ஜூலை, நேதாஜி, ராஜாஜி, ஷூ, ஜோடி. போன்ற வார்த்தை மின்னைட்டைகளைத் தயார் செய்து குழந்தைகள் கழுத்தில் கட்டி வட்டத்திற்குள் ஓடச் செய்ய வேண்டும் விசில் சத்தம் கேட்டதும் தங்கள் ஜோடியுடன் சேர்ந்து நிற்க வேண்டும் (அவ்வப்போது அட்டைகளை மாற்ற வேண்டும்), உதாரணமாக

1. பஸ் ஸ்டாண்டு - பஸ்
2. குளோப் ஜாமுன் - ஜீரா
3. ஜூன் - ஜூலை
4. ரோஜா - புஷ்பம்
5. நேதாஜி - ராஜாஜி
6. ஜோ - ஜோடி

**செயல்பாடுகள்**

1. வார்த்தைகளை உருவாக்குதல்: ன், லை, ஆ, ஓ, டி, ய, ம், உ, சி, ம, வ், தா, ப, லே, பி எழுத்துக்களைக் கொண்டு வார்த்தைகளை உருவாக்கி பின்னர் வாக்கியம் உருவாக்கிடுக.

2. படங்களைப் பார்த்து பெயர் எழுதுதல்: கொடுக்கப்பட்டுள்ள படங்களைப் பார்த்து அந்த படங்களின் பெயர்களை அதற்கு நேராக கோடிட்ட இடத்தில் எழுதவேண்டும்.

3. பாடப் பகுதியை வாசித்தல்: ஒரு குறிப்பிட்ட பாடப் பகுதியைப் படிக்கும்போது மூன்று விதமாக வாசிக்கலாம்

a. குழு வாசிப்பு - வகுப்பில் சிறு குழுக்களை உருவாக்கி அவர்களுக்குள்ளாக பாடப் பகுதியைப் பகுத்து வாசிக்கலாம். ஒரு மாணவன் வாசிக்க சிரமப்படும்போது மற்றொரு மாணவன் உதவிசெய்யலாம்.

b. சங்கிலி வாசிப்பு - ஒரு வகுப்பறையில், ஒவ்வொரு மாணவனும் ஒன்று அல்லது இரண்டு வாக்கியங்கள் வாசிக்கலாம். பின்னர் அருகிலுள்ள மாணவன், அடுத்த வாக்கியத்தை வாசிக்கலாம். இவ்வாறாக வகுப்பில் உள்ள அனைத்து மாணவர்களும் வாசித்து முடிக்கலாம்.

c. இணை வாசிப்பு - ஒரு குறிப்பிட்ட வாக்கியத்தையோ அல்லது தொகுப்பையோ இரண்டு மாணவர்கள் சேர்ந்து வாசிக்கலாம்.

1) கோடிட்ட இடத்தில் தகுந்த எழுத்தை எழுதி வார்த்தையைப் பூர்த்திசெய்யவும்.

சுதந்திர போராட்ட வீரர்கள் காந்__, ரா__ __, நோதா__ , சுபா__ சந்திர போ__, __ன்சிராணி போன்றோர் அரும்பாடுபட்டு சுதந்திரம் பெற்றுத்தந்தனர்.

2) வார்த்தைகளால் நிரப்பவும்.

a. _________ லென்ற ஜூஸ் குடித்தேன்.

b. _________ அப்படியா?

c. _________ எவ்வளவு அருமை?

ஆசிரிய நண்பர்களே, கீழே உள்ள பயிற்சிகளை முயன்று பாருங்கள்.

வாசித்து விளக்கம் கூறுங்கள்

அன்று பக்ள்ளிகூத்திடல், நாகான்ம் வப்பிகுல், புதாதிக சேர்தாந்ன் மனுதிநீ. அனவது கிந்ழித சயைட்டையும் பிந்ய்த செப்ருயுபைம் பாத்ர்த மாவர்கணள் அவனை கேலி செனய்தர். அவனை வப்றைபகுக்கு வெளியே தளினள்ர். அதனை ஆரியசிர் தழ்மிமாறன் பாத்ர்தார். மநாறுள், அவர் வப்றைபகுள்குக் நுந்ழைத போது, மாவர்கணள் அரவது கிந்ழித சயைட்டையும் பிந்ய்த செப்ருயுபைம் பாத்ர்து விந்யனதர். உடனே ஆரியசிர், “அடடே! நான் வப்றைபகுள்குக் வக்ரடாகூது அலல்வா?” என்று கூக்றிகொண்டே வெளியே செறான்ர். மாவர்கணள் அவருனைம் தம் தவறை உந்ணர்து மனுதிநீடயிம் மப்னின்பு கேனட்டர். அவனைரும் நபன்ர்கள் ஆனயிர்.

இந்த பத்தி தவறாக இருந்தாலும் நம்மால் மிக எளிமையாகப் படித்துப் புரிந்து கொள்ள முடிகிறது காரணம் நம்முடன் தொடர்புடைய ஒன்று அதனால் தான் நம்மால் தவறாக இருந்தாலும் அதைச் சரி செய்து படித்து சரியாகப் புரிந்து கொள்ள முடிகிறது. இதைப்போலத்தான் நம் குழந்தைகளும் தொடர்புபடுத்திக் கற்கின்றார்கள்

வாசித்து பொருள் கூறுங்கள்

டுவா டுயிங் தூயி ஷானா பாயி பகுனி. தின்னே சே பாபில்லே சக்குளி பிட்டா காரிபே. சேனானே காங்கு கல்லே ச்சுன்னா அனில்லே பிரி அனில்லே. ஷாலவ் பாயிங் தூ ஹேங் பானாக்கூ கல்லே. டுவா கச்சரே ஷாடி கட்ட ஹனில்லா கியேஞ்ஸ். கியே மோ ஷங்கலரு கட்ட கட்டுச்சி. டுவா கோகில்லா மூ. பக்கா மாமு பொச்சரில்லா கியேத்து. டுவா கோகில்லா மூ டுவா.

மேற்கண்ட பத்தியில் கொடுக்கப்பட்டிருக்கும் அனைத்தும் தமிழ் எழுத்துக்கள் தான் ஆனால் பொருள்...? வெறும் தமிழ் எழுத்துக்களை அறிமுகப்படுத்தக் கூடாது. அது பயன் இல்லாததோடு கற்றுக்கொள்வதும் மிகவும் கடினமாகும். வார்த்தைகளிலிருந்து எழுத்துக்களை அறிமுகப்படுத்தும் பொழுது கற்றல் மற்றும் கற்பித்தல் எளிமையாகும் என்பது அனுபவத்தில் கண்ட உண்மை.

'பை" என்ற வார்த்தையைப் படிக்கும் பொழுது முதலில் நமக்கு தோன்றுவது என்ன? ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பையின் படம் நினைவில் வருவது இயற்கை. முதலில் எழுத்துக்கள் நினைவுக்கு வருவதில்லை. அது தொடர்பான பொருள் தான் முதலில் நினைவுக்கு வருகிறது. நாமே தொடர்பு படுத்தும் பொழுது குழந்தைகளும் அவ்வாறு தொடர்புபடுத்தி மட்டுமே புரிந்து கொள்ள முடியும். ஒரு வார்த்தை சொல்லும் பொழுது குழந்தைகள் பழகிய சூழலில் அவர்களுக்குத் தெரிந்ததிலிருந்து காட்சிப்படுத்தி, தொடர்பு படுத்திப் பின்னர் உணர்வர். பிறகு அதிலிருந்து எழுத்துக்களை அறிமுகப்படுத்துவது மிக எளிமையானதாக இருக்கும்.

'அ' என்ற எழுத்தை அறிமுகப்படுத்த அம்மா.... அப்பா..... அண்ணன்... அக்கா... போன்ற வார்த்தைகளை அவர்கள் முன்னால் அவர்கள் பார்க்கும்படி ஆசிரியர் சத்தமாக சொல்லி எழுத வேண்டும் .பின்பு அந்த அட்டையைக் குழந்தைகளிடம் நாள் முழுதும் வைத்திருக்கச் சொல்லி மாலையில் அனைத்தையும் ஒன்றாக்கி அவரவர் அட்டையை எடுக்க சொல்லும் பொழுது மிகச் சரியாக எடுப்பர். இதன் மூலம் குழந்தைகள் சூழ்நிலையோடு தொடர்புபடுத்திக் கற்றுக் கொள்கின்றனர். தெரிந்ததிலிருந்து தான் தெரியாததற்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்பது ஐயமற விளங்குகிறது.

**விளைவுகள்**

கற்றல் கற்பித்தல் எளிமையாகவும், மகிழ்ச்சியாகவும், உயிரோட்ட முடையதாகவும் அமைந்தது. கற்றல் முழுமைபெற்றது. குழந்தைகளின் விருப்பம் அறிந்து ஈடுபடுத்தியதால் திறன்கள் மேம்பாடு அடைந்தனர். குழந்தைகள் மையக் கல்வியாக குழந்தைகள் மைய வகுப்பறையாக வகுப்பறை மாறியது.



**மு. சாந்தகுமாரி,** தலைமை ஆசிரியர், அ.தொ.ப. வடுவகுப்பம்

# A HAPPY CLASSROOM



- A fear-free classroom ensures joyful learning.
- An attractive classroom equipped with TLMs, and making use of project-based learning, art and craft activities, etc. enable learning to be fun.

It is the duty of the teacher to ensure that students enjoy the process of learning, especially in the pre-primary and the primary classes. Fear has no place in a classroom. To facilitate such an atmosphere in the classroom, a good relationship between the teacher and the students is necessary.

I adopted various methods and activities to provide such an atmosphere in my classroom and make it a jolly one.



The classroom was enriched with attractive TLMs, such as charts, cut-outs, stickers, pictures, etc.

'Project-based learning' was tried out too. For example, the students did projects on 'modes of transport', 'fruits and vegetables', 'domestic animals', and other such topics. An exhibition was conducted as well for them to display their works.

Art-and-craft activities were also done regularly.

The students were encouraged to share their thoughts and ideas about various topics that were taught in the classroom. Focus was given to peer learning.



All these efforts helped to ensure that our students were in a happy environment where they enjoyed learning.






**N. HEMAMALINI**
**PST - GPS PANGUR**

**A. SUBASHINI**
**PST - GPS PANGUR**



# CLASSROOM MANAGEMENT




- Specific strategies can be adopted for effective management of the classroom.
- A student-friendly classroom creates a bond between the students and the teacher.
- Appreciation encourages students to perform better.
- Assigning roles and responsibilities to students bring about discipline among them.

Our school is one of the few rural schools in Puducherry. The students hail from families that belong to the below-poverty-line category, and most of their parents are illiterate. The challenges pertaining to these children include inculcating moral values and discipline within them.

My students of the second standard were no different. I had to adopt certain strategies in my classroom to address these issues.

I will describe these briefly in the following paragraphs.

## A Student-Friendly Classroom:

I planned to create an environment that was conducive to learning. I bought stationery items, such as pencils, erasers, rulers, crayons, sharpeners, etc., for the whole class and placed them in boxes that had the names of the materials labelled on them. Each day, the students had to come and take the required materials, use them, and keep them back in the boxes once the class got over.

Labels were stuck on the different materials that were inside the classroom: cupboard, chair, window, etc. This small exercise helped the students familiarize themselves with the names of those things.

The reading corner of the class was stocked with attractive books, having vocabulary relating to fruits, vegetables, transport, etc. These books had more pictures than text. The students picked and read these books whenever they had some free time.

Thus, a student-friendly atmosphere in the classroom was created. This enabled the formation of a bond between the students and me.




## Rewards:

I had prepared a performance

chart to reward the students for their performance in the activities, discipline, etc. They would get stars for wearing tidy uniform, ID cards, sandals, belt, etc. Stars would also be awarded for completing the homework, class assignments, activities. I started handing out badges of appreciation. Every month, the best all-round performers were awarded gifts. Gradually, this made the students start to show interest in the school activities.

## Roles and Responsibilities

The students were given different responsibilities, such as monitoring the 'morning-milk drinking', lunch area, etc. The students kept a record of the number of students who drank their milk and had their lunch. They also kept a count of the number of glasses and plates. Further, they monitored the food wastage. This gradually led to the reduction in the amount of food wasted. Similiarly, a dustbin was purchased and kept within the campus. One student was given the responsibility of monitoring the cleanliness of the school. The student was required to maintain the cleanliness of the lunch area, the classroom, and the corridors.




## The Change:

I witnessed a vast change in the behavior and interests of the students. They became regular in attending school. They completed the tasks assigned on time. They even started asking for homework, projects and class tests!

I felt happy that they developed their discipline while learning as well.

## Reflection:

Children like to be appreciated, encouraged, and rewarded. As a facilitator, the teacher can provide those to the students, develop an effective teaching-learning process, and shape the characters of the students as well.



S. KAYALVIZHI - PST - GHS KALMANDAPAM

# MY EXPERIENCES IN THE CLASSROOM ABOUT HOLISTIC APPROACH TO EDUCATION

- Learners are at different learning levels.
- To address a diverse learner group, a holistic approach was adopted.
- Drama, learning-by-doing activities, class garden, yoga, etc. were some of the activities performed in class to engage all learners.
- The students became interested, creative, and confident; they understood concepts better.

My students of the fifth standard included a variety of learners having different learning needs. It was my duty to engage them all and ensure that I addressed the various needs of all the students. My aim was to make my students creative, confident in expressing their thoughts and ideas, proficient in English (reading, writing, and speaking), and good at arithmetic operations by the end of the year.

However, I realized that the conventional classroom teaching would not be adequate to achieve my aim owing to the diversity of the student group. It is then that I decided to adopt a holistic approach to education. Why not bring in drama, learning-by-doing activites, creative activities, songs, and fun into the classroom? Such an approach would not only cater to all the students, but it would also ensure their all-round development.

**Drama:** This livens up the classroom. I started writing scripts adapted from the prose lessons in Tamil and English. The students were to choose their roles and stage the drama. The students took part in this activity with much interest. They also helped each other in the process. Initially, they did face some difficulties while reading the scripts, but they gradually started reading it fluently.

**Creative Activities:** When pupils create something on their own, it builds their confidence. I asked my students to collect some waste materials (such as old newspapers, waste cloth, balls, egg shells, etc.) and bring it to class. Then, I gave them ideas on making dolls, birds, flowers, and other such things with those materials. I was amazed to see the output, and I have to say that my students are quite talented.

**Learning-by-doing Activities:** Aristotle had said, "For the things we have to learn before we can do them, we learn by doing them." I applied the learning-by-doing method to my classroom, mostly for teaching mathematics. The students started to enjoy the subject when they learnt it through activities. For example, the concept of Volume was taught in the following manner: At first, I asked the students to collect syringes, coins, pebbles, transparent tumblers, rulers, water, etc. and bring it to the classroom. Then I asked them to sit in groups. The students had to fill the tumblers with water using syringes and then calculate the volume of the tumbler. Following this, they had to put coins or pebbles inside the tumblers and measure the change in the water level. The students not only enjoyed the activity, but they also grasped the concept of Volume.

**Class Garden:** Each student brought a plant (in bottles) to the classroom. Together, a class garden was

created; it added beauty to the classroom. I encouraged my students to talk, sing, and play with their plants. They watered the plants and nurtured them with care. The class garden helped me in my discussion pertaining to the growth of plants as well as the need to take care of nature.

**Each Pupil Becoming a Teacher:** I provided a chance to every pupil to be the teacher and teach a topic to the other students in the class. This activity enabled me to assess my own teaching skills at making them understand different concepts. As the students taught the class, they became more confident; they were not shy to teach in front of others.

**Yoga:** I introduced my students to yoga. It was practiced twice or thrice in a week. The students were very interested to do it too. I could observe a change in their behaviour after doing yoga—they became calm and started concentrating on their studies more than before.

I have introduced various activities in my classroom in an attempt to provide a holistic education to my students, and it has been showing positive results. I will surely improve and continue to implement this approach in the days ahead.









**Bharathi Roja, GPS Karikkalampakkam**




# SPECIFIC STRATEGIES TO ADDRESS THE NEEDS OF A LEARNER

I teach the students of the second standard, and there are twenty students in my class. Most of the students have a single parent, and some are taken care of by their grandparents. The parents of many students are uneducated, and some of them are not even aware as to which class their children study in. It is needless to say that the guardians do not check the homework or the diary work of my students.

I believe that if the parents of my students express their concern about the education of their children and cooperate with the school, their children will definitely be able to achieve success in their life.

## Addressing the Needs of Learners:

As a teacher, I observe the various needs of my students, and I employ specific strategies to address such needs. I will share some of the issues that I have faced in my class and the strategies I adopted to address them in the following paragraphs.

- Specific strategies need to be adopted to address the needs of a learner.
- A learner-friendly classroom can make learning language more exciting, meaningful, and easy.
- The phonic method can be used to enhance the reading skills of students.

## Classroom Issue 1

Often while taking a class, I

noticed that the attentiveness of my students was quite poor. The students were seldom able to answer when I posed a question in the class,. I felt that my students lacked involvement in the classroom, and they seemed to be disinterested in the things that were being taught in class.

### Cause:

Initially while teaching these students, I used to simply write down words from a lesson on a chart and paste it on the wall, without supplementing the words with pictures. I expected my students to read the words from the chart and learn them. Of course, I referred to these charts while dealing with the lessons. However, this strategy did not prove fruitful as the students were least interested in reading the words from the chart. This made me realize that I needed to adopt new strategies that would not only help the students to get involved in the subject and pick up language from the lessons, but it would also enhance my own teaching abilities.

### Strategy Adopted—Concept-Oriented Wall Decoration:

The new strategy that I adopted involved decorating the walls of the classroom with pictures of the different characters as well as depictions of various scenes from the textbook lessons (both prose and poems). Words related to the pictures were pasted along with them.

I taught the lessons by pointing to the characters or the scenes that were pasted on the walls and related them to the text.

The introduction of a visual aid, i.e. pictures, made the students excited, and they began to show more interest in what was being taught. The students also participated actively in the different activities and were able to pick up new words from the lessons. The supplementation of the words with pictures ensured that the students were able to have a mental picture of the words, which helped them to remember their meanings. Gradually, I started introducing more words—two-letter words, three-letter words, question words, auxiliary verbs, etc.—supplementing them with pictures. The students saw these words on the wall every day, and slowly they became familiar with them. I was also able to teach them to make small sentences using these words.

Thus, the strategy of concept-oriented wall decoration made learning the language more exciting, meaningful, and easy.

## Classroom Issue 2

The concept wall had its limitations. It did not cover all the words, and some students still faced difficulty in reading. So, I thought that if the students could learn the pronunciation of each letter in Tamil, they might be able to connect the letters and read a word.

### Cause:

I realized that the students faced some difficulty in identifying the sounds that were related to particular alphabets, which hindered their reading ability. It was not possible for them to connect the letters and read a word without knowing the pronunciation of a particular letter in a word.

மாணவர்களிடம் கதை கூறுவது போல் ஒரு புதிர்க்கணக்கைக் கேட்டேன்.

(எ.கா.)"ஒரு பெரிய காடு; அதற்குள் செல்ல 12 கதவுகள். ஒவ்வொரு கதவிலும் ஒரு பூதம் இருக்கும் அது கேட்கும் வினாவிற்கு நீ விடை சொல்ல வேண்டும்" எனச் சொல்லி சிறிய புதிர்க்கணக்குகளைக் கூறுவேன். மாணவர்கள் ஆர்வமாகக் கேட்க துவங்கினார்கள். ஒரு மாணவன் ஒரு கதவைத் திறந்தான். அவனுக்கான புதிர்க்கதையைக் கேட்டேன்.

மற்ற மாணவர்களும் மிகவும் ஆர்வமாகவும், துடிப்பாகவும், நண்பர்களோடு சேர்ந்து விடை கண்டுபிடித்துச் சொல்வார்கள். இவ்வாறாக, கணக்கைக் கதையாக மாற்றி அதன் சுவையை அறிய வைக்க முயற்சி செய்தேன்.

### வகுப்பில் கேட்கப்பட்ட சில கணிதப் புதிர்கள்:

### புதிர்க் கேள்வி 1

ஒரு கிலோ பஞ்சு, ஒரு கிலோ இரும்பு; இவற்றில் எது எடை அதிகம்?




### மாணவர்களின் வெளிப்பாடுகள்

- "கடைக்குப் போய் ஒரு கிலோ அரிசி மற்றும் சர்க்கரை வாங்கு" எனச் சொல்லும் போது அவர்களின் பதில்கள் "இரண்டும் ஒன்று!!" போலவே உள்ளது.
- "பஞ்சு அதிக இடத்தை அடைத்துக் கொள்கிறது. ஆனால் இரும்பு குறைந்த இடத்தை அடைத்துக் கொள்கிறது. எடை ஒன்று தான். ஆனால், தோற்றம் வெவ்வேறாக உள்ளது" என்பது அவர்களது கருத்து.

### புதிர்க் கேள்வி 2: வட்டக் கணக்கு புதிர்

ஏழு சம-ஆரமுள்ள வட்டங்கள் உள்ளது. இவற்றை எந்த வரிசையில் பார்த்தாலும் மூன்று வருமாறு எப்படிச் செய்வது?

மாணவர்களை வரையச் செய்தேன். "எப்படி மூன்று வரிசையில் வரைவது?" என மாணவர்கள் யோசித்தனர். ஒன்பது வட்டம்



இருந்திருந்தால்தான் மூன்று வரிசையில் வரைய முடியும் என்று யோசித்தனர். பலவாறு வரைந்து வரைந்து பார்த்த பின் கடைசியில் விடையைக் கண்டுபிடித்தனர்.

ஒரு மாணவன் கீழே உள்ளவாறு வரைந்து காண்பித்தான்.



அவர்களாகவே ஒரு கணக்கு புதிர்க்கு விடை கண்டுபிடித்து அவர்களுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது..

### புதிர்க் கேள்வி 3: மாயச் சதுரம்

'ஒன்று, இரண்டு, மூன்று' மட்டும் பயன்படுத்தி எந்த வரிசையில் கூட்டினாலும் ஆறு வர வேண்டும். எப்படி? என்று கூறிவிட்டு, படத்தில் உள்ளவாறு மாயச்சதுரம் அமைத்துக் காட்டினேன்.

| | | |
|---|---|---|
| 3 | 1 | 2 |
| 1 | 2 | 3 |
| 2 | 3 | 1 |

இ த ன் மூ ல ம ா க , அ னை வ ரை யு ம் மாயச்சதுரம் எனும் புதிரில் கவனத்தைக் கொண்டு வந்தேன். வேறு மூன்று எண்களுக்கு அவர்களைப் போட சொன்னேன். ஆரம்பத்தில் சிறு பிழை ஏற்பட்டது. ஆனால், விரைவாகவே புரிந்து கொண்டனர்.

அடுத்த கட்டத்திற்கு அவர்களை அழைத்துச் செல்லும் நோக்கோடு வினாவைத் தொடுத்தேன்.

**புதிர் வினா:** ஒன்று முதல் ஒன்பது எண்கள் வரை உபயோகிக்க வேண்டும். எழுதிய எண்களை மறுபடி உபயோகிக்கக்கூடாது. எல்லா வரிசையின் கூட்டுத் தொகை 15 வர வேண்டும். மாணவர்கள் போட ஆரம்பித்தனர். இறுதியில் அவர்கள் தாங்களாகவே விடையைக் கண்டு பிடித்தனர்.

**பு தி ரி ன் விடை**

| | | |
|---|---|---|
| 2 | 7 | 6 |
| 9 | 5 | 1 |
| 4 | 3 | 8 |

### இது போன்ற புதிர்க்கணக்கின் தாக்கம்

- மதிய இடைவேளையில், ஆசிரியர் யாரும் இல்லை என்றாலும் அவர்களே தங்களது புத்தகத்தை எடுத்து கணக்குகளைச் செய்துபார்க்க ஆரம்பித்தனர்.

- அன்று முதல் மாணவச் செல்வங்கள் கணக்கைச் சுவைத்து அதில் மேதை ஆவதற்கான முதற் படியை எடுத்து வைத்துள்ளனர்.

- ஒரு விளையாட்டாகக் கணக்கைக் கொண்டு செல்வதன் மூலம் மாணவர்களின் ஆர்வத்தையும், அறிவையும் தூண்ட முடியும் என்பது உண்மையாகிவிட்டது.

மாணவர்கள் மிகவும் ஆர்வமாகவும், துடிப்பாகவும் தன் நண்பர்களோடு சேர்ந்து விடை கண்டுபிடுத்துச் சொல்வார்கள். இவ்வாறாக கணக்கைக் கதையாக மாற்றி அதன் சுவையை அறிய வைத்தேன். இப்போதெல்லாம், தினமும் மாணவர்கள் என்னிடம் புதிய புதிர்க்கணக்குகளைக் கேட்கும்படி எதிர்பார்க்கின்றனர்.



**ச. காயத்ரி,** தொ.ப.ஆ, அ.தொ.ப. தட்டாஞ்சாவடி


ENVIRONMENTAL
STUDIES
TEACHING
EVS
DRAGON FLY
BUTTER FLY
BIRD
OWL.

# குக்கூ... காட்டுப்பள்ளி

குக்கூ காட்டுப்பள்ளி சார்பாக என் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதற்காக நான் அழைக்கப்பட்டேன். சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்பாக திரு. சிவராஜ் மற்றும் நண்பர்கள் இணைந்து குக்கூ குழந்தைகள் வெளி ஆரம்பிக்கப்பட்டது. இப்பள்ளியின் நோக்கம் மாலை நேரங்களில் மற்றும் விடுமுறைக் காலங்களில் குழந்தைகளை தொலைக்காட்சிப்பெட்டி மற்றும் இன்ன பிற மின்தொலைத்தொடர்பு சாதனங்களிலிருந்து வெளிக்கொணர்ந்து நாடகம், ஓவியம் போன்றவற்றில் ஈடுபடுத்துவதற்காகவும் இயற்கை சுற்றுச்சூழல் பற்றி பொது மக்கள், குழந்தைகளின் புரிதலை வலுப்படுத்துதல், இயற்கையை அனுபவிக்கும்படியான செயல்பாடுகளை முன்னெடுத்தல்ஞ் என உருவாக்கப்பட்டது.

### வாசித்தல் - அடித்தளம் அமைத்தல்

இதைத் தொடர்ந்து, நூலகம் இல்லாத அரசு மற்றும் தனியார் பள்ளிகள் உள்ள ஆறு இடங்களில் நூலகம் அமைக்கப்பட்டது. நாளடைவில் அவை பள்ளி மாணவர்களால் நிர்வகிக்கப்படுகிறது. நூலகமும் மாலைநேர வகுப்புகளும் சுற்றுச்சூழல் தொடர்பான வேலைகளும் இணைந்து நடக்கும்படி செய்தோம். குழந்தைகள் புத்தகங்களை வாசிப்பது மட்டுமல்லாமல் காடுகளுக்கு பயணித்து உரையாடுகின்றனர். நர்சரிகளையும் (செடிகளுக்கான நாற்றங்கால்) மாணவர்களே உருவாக்கி பராமரிக்கின்றனர். உதாரணமாக குக்கூ காட்டுப்பள்ளியில் உள்ள தன்னார்வலர் அக்கா இருக்கும் இடத்தின் பொது வெளிகளான குழாயடி, சாலையோரங்களில் ஒரு கிராமத்தில் மட்டும் 300 மரங்கள் வரை வளர்த்துள்ளனர்.




### பள்ளிக் கட்டிடம் உருவாக்கிய சவால்

மேலும் குக்கூ பள்ளிக்கென்று ஒரு சொந்த இடம் இருந்தால் பயிற்சிப்பட்டறைகளை நடத்த ஏதுவாக இருக்கும் என்ற நோக்கில் கடந்த 2012ம் ஆண்டு திருவண்ணாமலை அருகில் சிங்காரப்பேட்டையில் நிலம் வாங்கப்பட்டது. ஆனால் நிதிப்பற்றாக்குறையால் கட்டிடப்பணியை தொடங்க இயலவில்லை.

சுமார் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு வருண் மற்றும் பீட்டர் முதலான தன்னார்வ கட்டிட வடிவமைப்பாளர்கள் மற்றும் முகநூல் வாயிலாகக் கிடைத்த நாற்பது தன்னார்வலர்கள் ஆகியோரின் உதவியுடன் மண் மற்றும் செங்கற்களை நாங்களே அறுத்து சிமெண்ட் அல்லாத கட்டிடத்தை பதினைந்தே நாட்களில் கட்டிமுடித்தோம்.

கட்டிடப்பணிக்கு முகநூல் வாயிலாக வந்தவர்கள் பெரும்பாலும் தமிழ்நாடு அல்லாத பிற மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களில் பலர் உதட்டுச் சாயம் இல்லாமல், கண்ணாடியில் முகம் பார்க்காமல் வெளியே சென்றதில்லை.



இங்கு கட்டிடப்பணியில் ஈடுபட்டிருந்த போது தங்குமிடம், தண்ணீர், கழிப்பிடம் போன்ற அடிப்படை வசதிகள் இல்லாத சூழலில் பணியாற்றினர். பணியாற்றிய இடத்தைச் சுற்றிலும் காடுகள் சூழ்ந்து இருந்தது. பணி முடிந்தபின் அவர்களில் பலர், இதுநாள் வரை நாங்கள் எந்த அடையாளத்தைத் தேடி பயணித்துக் கொண்டிருந்தோம் என்று தெரியவில்லை, உண்மையான வாழ்க்கைப் பயணத்தைப் பற்றி இப்பொழுது தான் ஒரு தெளிவு ஏற்பட்டிருக்கிறது என்றனர்.

### பயிற்சிப்பட்டறை அனுபவங்கள் - ஒரு பகிர்வு:

பள்ளிக்கென்று கட்டிடம் உருவான பிறகு மாதம் மூன்று அல்லது நான்கு பயிற்சி வகுப்புகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. இங்கு பஞ் சிலிருந்து நூல் நூற்றல், காகிதக் கழிவுகளிலிருந்து காகிதம் தயாரித்தல், புத்தகம் தைத்தல் (பைண்டிங்), பொம்மைகள் செய்தல் போன்ற செயல்பாடுகளை மாணவர்களுக்கு தன்னார்வலர்களின் உதவியுடன் கற்பிக்கப்படுகிறது. இவை முறையே ஒரு பயிற்சி வகுப்பு புளியனூர் கிராமக் குழந்தைகளுக்கு இலவசமாகவும் மற்றொன்று அருகாமையிலுள்ள நகர்ப்புற குழந்தைகளுக்கு குறைந்த கட்டணத்திலும் சுழற்சி முறையில் நடத்தப்பட்டு பயிற்சிப் பட்டறைக்கான நிதி நிர்வகிக்கப்படுகிறது. இருப்பினும் நிதித் தேவையை முழுவதுமாகப் பூர்த்தி செய்ய முடியவில்லை.

### தாவரவியல் - ஒரு முயற்சி

அடுத்த கட்டமாக நண்பர்கள் மற்றும் தன்னார்வலர்களின் உதவியுடன் சுமார் எண்ணூறு மூலிகைச் செடிகளைக் கொண்டு வந்து மூலிகைத் தோட்டம் உருவாக்கப் பட்டது. இரண்டாயிரம் மூலிகைச் செடிகள் வரை நடவேண்டும் என்ற இலக்கை நோக்கிப் பயணம் தொடர்கிறது. இங்கிருந்து அசிம் பிரேம்ஜி அறக்கட்டளை உட்பட தாவரவியலில் ஆராய்ச்சி மேற்கொள்ளும் அனைவரும் கட்டணமில்லாமல் செடிகளை எடுத்துச் செல்லலாம். இங்கு வந்து அவற்றை பராமரிக்கலாம்.

### தும்பி -மாத இதழ் மற்றும் புத்தக வெளியீடு

இவ்வாறு குக்கூ காட்டுப்பள்ளியின் பயணத்தைத் தொடர்ந்த போது குழந்தைகளுக்கான பாரம்பரியக் கதைகளை அவர்களுக்குக் கொண்டு செல்லும் சிந்தனையின் ஒரு அங்கமாக தும்பி என்ற பெயரில் அவர்களுக்கான மாத இதழ் வெளியிடப்படுகிறது. ஒவ்வொரு மாதமும் ஒரு முழுக்கதை ஒன்றை குழந்தைகளுக்காக வெளியிடுகிறோம். அடோடு சிறுசிறு விஜயங்களும் அதில் இணைக்கப் படுகிறது. இம்மாத இதழ் தவிர பதிப்பகத்தின் மூலம் சுற்றுச்சூழல் தொடர்பான புத்தகங்களை வெளியிட்டு வருகிறோம். இதுவரை எண்ணூறு அரசுப்பள்ளிகளுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது . ஒரு சந்தாதாரரிடமிருந்து பெறப்படும் பணத்தில் ஒரு அரசுப்பள்ளிக்கு மாத இதழ் வழங்கலாம் என்ற சமன்பாட்டில் செயல்படுகிறது.

இருப்பினும் நிதிப்பற்றாக்குறை தொடர்கிறது. மாத இதழ் தேவைப்படும் அரசுப்பள்ளிகள் தொடர்பு கொள்ளலாம்.

### உரையாடலில் பகிரப்பட்டவை

நான் தற்போது பெங்களூரு தனியார் பள்ளியில் பணிபுரிகிறேன். இதற்கு முன் நான் தகவல் தொழில் நுட்பத் துறையில் பணியாற்றிக்

கொண்டிருந்தேன். அத்துறையை விடுத்து ஆசிரியப்பணிக்கு வந்து பணியாற்றுவதே மிகப்பெரிய தகுதியாக, கர்வமாகக் கருதினேன். நான் பெங்களூரு சைனிக் பள்ளியில் பணிபுரிகிறேன். ஆனால் என் வகுப்பறையை ஆசிரியப் பணியில் மிகுந்த அனுபவமிக்க ஆசிரியர் குழு தொடர்ந்து மூன்று நாட்கள் பார்வையிட்டனர். அப்பொழுதுதான் நான் உணர்ந்தேன். ஆசிரியப்பணியின் ஆரம்ப நிலையில் நான் இருக்கின்றேன், மேலும் இப்பணி அவ்வளவு எளிமையானது அல்ல.

எங்கள் பள்ளியில் கடைப்பிடிக்கும் சில வழிமுறைகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விழைகிறேன். எங்கள் பள்ளி ஆசிரியர் அனைவரும் தினமும் காலை எட்டு மணியளவில் கூடி அன்றைய நாளுக்கான செயல்களைத் திட்டமிடுதல், வாசித்த புத்தகம் குறித்த நினைவூட்டல் போன்றவற்றைத் திட்டமிடுவதை பள்ளிக் குழந்தைகளும் கவனித்த வண்ணம் நமக்காக ஆசிரியர்கள் முனைப்பாக இயங்குகின்றனர் என்ற எண்ணத்துடன் விளைக் கொண்டிருப்பர். பின்னர் எட்டு முப்பது மணியளவில் புல்லாங்குழல் இசையுடன் குழந்தைகள் வகுப்பறைக்குள் ஒவ்வொருவரும் தனித்தனியாக ஆசிரியருடன் கைகுலுக்கி வரவேற்று வகுப்பைத் தொடங்குவோம். மாலையிலும் கைகுலுக்கி விடை பெறுவர். அன்று தவறு செய்த மாணவனிடமும் பாரபட்சமின்றி அன்புடன் கைகுலுக்கி வழியனுப்புவது மிகப்பெரிய மாற்றத்தை அவனிடம் ஏற்படுத்துகிறது.

மேலும் ஒவ்வொரு மாணவரின் இல்லத்திற்கும் சென்று மாணவர் மற்றும் பெற்றோர் பற்றிய புரிதலைப் பலப்படுத்திக் கொள்ளும் பணியை மேற்கொள்கிறோம். இச்செயல் ஆசிரியப்பணியை மேலும் செம்மையாக்குகிறது. கடந்த ஆண்டை விட இந்த ஆண்டில் நான் என் பணியில் முன்னேற்றம் அடைந்திருப்பததாகக் கருதுகிறேன். என் வகுப்பில் இருபத் இரண்டு மாணவர்கள் உள்ளனர். தினமும் இரவில் ஒவ்வொருவரைப்பற்றியும் இரண்டு வரிகள் எழுதுகிறேன். இது திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் உரையாற்றிய போது செடிகளுடன் தொடர்ந்து பேசுவதால் அவற்றிற்குத் தாயாகிறோம் என்பது போல, மாணவர்களுக்கும் ஆசிரியருக்குமிடையே நேசத்தைப் பலப்படுத்துகிறது.

என்னுடைய பார்வையில் பாடத்திட்டம், புத்தகங்கள் போன்றவை ஒரு கருவி மட்டுமே .மேற்கூறிய விஜயங்களே கற்றலுக்கு இன்றியமையாதது.

நிறைவாக, பங்கு பெற்ற பார்வையாளர்கள் கலந்துரையாடலில் முதலாவதாக மொழியியல் வல்லுநர் டாக்டர்.திரு.ஆனந்தன் அவர்கள், குக்கூ காட்டுப்பள்ளியின் அணுகுமுறை மகிழ்ச்சியளிக்கக் கூடியதாக இருப்பதாகக் கூறினார். மேலும் காலனிய ஆதிக்கக் காலத்தில் பின்பற்றிய கல்விமுறையை இன்றளவிலும் பயன்படுத்துவது நம் கல்வித்துறையின் மிகப்பெரிய பின்னடைவு. பள்ளிகளில் காலைப் பேரவை போன்றவை எதற்காகக் கடைபிடிக்கிறோம் என்பதைப் பற்றிய புரிதல் இல்லாமல் செயல்பட்டுக்கொண்டிருக்கிறோம். இன்னும் பத்து ஆண்டு காலகட்டத்தில், அரசு தனியார் கூட்டு நிறுவனம் (Public Private Partnership) என்ற அமைப்பின் வாயிலாக மட்டுமே கல்வித்தரத்தை மேம்படுத்த முடியும் என்று வலியுறுத்தினார். மேலும் அனைத்துப் பாடங்களையும் ஒருங்கிணைத்த கல்வி முறையே சிறப்பானது என்ற தம் கருத்தைத் தெரிவித்தார். மற்றொரு ஆசிரியரும் பாடத்திட்டம், புத்தகங்கள் போன்றவை ஒரு கருவியே என்ற கருத்தை வலயுறுத்தினார்.

(- செந்தில் சிறப்பு விருந்தினர்)

# சூழலியல் பாடத்தில் களப்பயணத்தின் முக்கியத்துவம்

- மாணவர்களைச் சமூக நோக்குடன் கற்றலில் ஈடுபடச் செய்தல்.
- இனிமையான கற்றல் சூழலில் மாணவர்களைக் கற்கச் செய்தல்.

சூழ்நிலையியல் பாடத்தில் மாணவர்களின் கற்றல்- கற்பித்தலை, சிறப்படையச் செய்ய சூழலோடு சென்று கற்றல் சிறந்த பயனைத் தரும் என்பது எனது எண்ணம். எனவே எந்தெந்த பாடங்களுக்கெல்லாம் இயற்கை சூழலோடு கற்பிக்க முடியுமோ அதற்கெல்லாம் நான் முயற்சி செய்தேன்.

பள்ளி அருகில் உள்ள மரங்கள் நிறைந்த பகுதி, மண்பானை செய்யும் இடம், தபால் நிலையம் போன்ற இடங்களுக்கு மாணவர்களை அழைத்துச் சென்றேன். தபால் நிலையத்திற்கு அழைத்துச் சென்ற அனுபவங்களைப் பற்றி இங்குக் கூற உள்ளேன்.

## களப்பயணம் மூலம் கற்றல்

- ஒரு வகுப்பறையில் மாணவர்களிடம் பலமுறை தகவல்களைக் கூறுவதை விட அந்த இடத்தினை நேரில் சென்று பார்ப்பது கண்டிப்பாக எளிதில் மனதில் பதியும் என்பதை எண்ணியே மாணவர்களைத் தபால் நிலையத்திற்கு அழைத்துச் சென்றேன்.
- 45 நிமிடங்கள் மாணவர்களை ஒரே இடத்தில் அமரச் செய்து கற்பிப்பது ஆசிரியர்களுக்கு ஒரு சவாலாகவே உள்ளது. இது போன்ற நேரடி அனுபவங்கள் மாணவர்களிடம் நல்ல புரிதலை ஏற்படுத்தும்.

## தபால் நிலையத்திற்கு ஒரு பயணம்

தபால் நிலையத்தின் பணிகளை அறியத் தபால்



நிலையத்திற்கு மாணவர்களை அழைத்துச் செல்ல முடிவு செய்தேன். பள்ளியைச் சுற்றி உள்ள தபால் நிலையத்திற்கு அழைத்துச் செல்ல அங்குச் சென்று அனுமதி பெற்று வந்தேன். பின்னர் மாணவர்களிடம் எங்கு, எதற்காக, எப்பொழுது செல்லப் போகிறோம், என்பதனைத் தெரியப்படுத்தி பெற்றோர்களிடமிருந்து அனுமதி பெற்று மாணவர்களைத் தபால் நிலையம் அழைத்துச் சென்றேன்.

பேருந்தில் தபால் நிலையம் செல்லும் வழியில் மாணவர்களிடம் என்னென்ன வினாக்கள் கேட்கலாம் என்பதனைக் கலந்துரையாடியபடி சென்றோம்.

தபால் நிலையத்தில் எங்களுக்காக அலுவலர் காத்திருந்தார். அவர் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு தபால் நிலையம் தொடர்பான பின்வரும் தகவல்களை விளக்கினார்.

- தபால் நிலையம் குறியீடு
- விலை, அதிலுள்ள படம் stamp ஒட்டுவதற்கான காரணம்.
- கடித வகை
- சேமிப்பு முறைகள்
- படிவத்தை எப்படி நிரப்புவது
- பின்னர் மாணவர்கள் தங்களின் சந்தேகங்களைக் கூறினார்கள்.
- வாழ்த்து மடல் அனுப்பலாம்?
- எவ்வாறு பணம் சேமிப்பது?
- ஏன் பலவித?

அலுவலர் அவர்களின் சந்தேகங்களைத் தீர்த்து வைத்தார். பின்னர் பள்ளியை அடைந்தோம்.

கடிதம் எழுதும் பழக்கத்தைக் கொண்டு வர என் வகுப்பு மாணவர்கள் அனைவருக்கும் கடிதம் எழுதினேன். அக்கடிதத்தை மாணவர்கள் கண்ட போது அவர்கள் அடைந்த மகிழ்ச்சி



அளவில்லாதது. இது மாணவர்களை அவர்களின் நண்பர்களுக்குக் கடிதம் எழுதத் தூண்டியது.

### இந்த நேரடி அனுபவம் மூலம்

- மாணவர்கள் எந்தவொரு சிரமமும் இல்லாமல் தபால் நிலையம் தொடர்பான விவரங்களை அறிந்தனர்.

- ஒன்றாகச் சேர்ந்து செல்லும் போது மாணவர்கள் பாட அறிவை மட்டும் அல்லாமல் சக மாணவர்களுடன் எவ்வாறு ஒன்றாகச் செல்ல வேண்டும், பொது இடத்தில் எவ்வாறு பழக வேண்டுமென்பதையும் அறிந்தனர்.

- களப்பயணம் சமூகத்தோடு உரையாடலும், மூத்தவர்களோடு உரையாடும் விதமும், சமூகத்தை உற்று நோக்கலுக்குமான பொன்னான வாய்ப்பாக அமைந்தது. சூழலியல் பாடத்திற்குக் களப்பயணம் இன்றியமையாததாகிறது.

- குழு கற்றல், குழு விவாதம் மற்றும் பகிர்தல் போன்ற செயல்பாடுகள் மாணவர்களுக்குள்ளும் ஆசிரியர்களோடும் நடைபெற்றது.

- ஆசிரியராகிய நான் பல்வேறு விஷசயங்களைத் தெரிந்து கொள்ள உதவியது எனக்கொரு உற்சாகத்தையும் தந்தது.

இந்த மாதிரியான பல்வேறு களப்பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வயல் வெளி, கரும்புத் தோட்டம் மற்றும் பானை செயல்முறை அதில் சில உதாரணங்கள்.



**மஹேஸ்வரி**, தொ.ப.ஆ, அ.தொ.ப. கலிதீர்த்தால்குப்பம்பேட்

# சூழலியல் பாடத்தில் வகுப்பறை செயல்பாடுகள்

### எனது பள்ளி

எனது பள்ளியில் 20 மாணவர்களும் 3 ஆசிரியர்களும் உள்ளனர். அனைத்து மாணவர்களும் பொருளாதார நிலையில் பின் தங்கியே உள்ளனர். எங்கள் பள்ளியில் வரும் மாணவர்கள் அனைவரும் மெயின் ரோட்டைக் கடந்து வரும் நிலைமை தான் உள்ளது. பள்ளியில் வரும் மாணவர்களின் எண்ணிக்கையைத் தக்கவைத்துக் கொள்ள ஆசிரியர்கள் ஒன்று சேர்ந்து ஆட்டோ வசதி ஏற்படுத்தி உள்ளோம். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைப் பாதுகாப்பாக அனுப்புவதற்கு மகிழ்கிறார்கள். இதை நாங்கள் கடந்த 2 ஆண்டுகளாகச் செயல்படுத்தி வருகிறோம்.

### ஒரு ஆசிரியராக எனது ஆர்வங்கள்

ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன் மகனைச்

சான்றோன் எனக்கேட்ட தாய்

இந்தத் திருக்குறளின் பொருள் ஒரு தாய்க்கு மட்டும் பொருந்தாது, என்னைப் பொறுத்தவரை ஓர் ஆசிரியர்க்கும் பொருந்தும். தன்னிடம் பயின்ற மாணவ-மாணவி வாழ்வில் நல்ல நிலையை அடைந்து நம்மை வந்து சந்தித்து 'நான் உங்கள் மாணவன்" என்று கூறும் போது ஏற்படும் மகிழ்ச்சிக்கு அளவில்லை.

மாணவர்கள் தாமாகவே கற்றுக்கொள்ள வேண்டும் என்பதில் ஆர்வம் அதிகம் எனக்கு. அதற்கு ஒரு தூண்டுகோலாக இருக்க வாழ்வில் கற்றுக்கொள்ளும் செயல்களைப் பாடத்துடன் இணைத்துக் கற்பிப்பேன். முடிந்தவரை அவர்கள் வாயிலிருந்து விடை வரும்வரை கேள்வி எழுப்பிக்கொண்டே இருப்பேன். படம் வரைந்து பாடப்பொருள் விளக்குவதில் ஆர்வம் மிகுதி.



### அனுபவப் பகிர்வு

கடந்த வருட வகுப்புப் பயிற்சிகளில் என்னை மிகவும் கவர்ந்த மற்றும் மாணவர்கள் மனமகிழ்ந்த பாடப்பகுதி "Foods we eat" மூன்றாம் வகுப்பு சூழ்நிலையியல் அறிவியல்.

### நோக்கம்

- மாணவர்கள் உணவு வகைகள் பற்றி அறிதல்
- உணவுப் பொருட்கள் மற்றும் செய்முறை பற்றி அறிதல்
- சமைத்த மற்றும் பச்சையாக உண்ணும் உணவுப்பொருள்களை அறிதல்

### திட்டமிட்ட விதம்

பாடப் பகுதிக்கு ஏற்ப மாணவர்களைத் தாங்கள் வீட்டிலிருந்து பல்வகை உணவுகளைக் கொண்டு வரச்சொன்னேன். எனது பங்கிற்குச் சத்துமாவு பட்டாணி சுண்டல் மற்றும் பழங்கள் கீரைகள் போன்ற உணவுப்பொருள்களை எடுத்துச்சென்றேன்.

### கற்பித்தல் மற்றும் மதிப்பிடுதலுக்கான யுத்திகளின் சுருக்கம்

மாணவர்கள் தாங்களாகவே கற்றுக்கொள்ள

வேண்டும் என்ற நோக்கத்துடன் இவ்வகுப்பை ஆரம்பித்தேன். அவர்களிடம் வினாக்கள் எழுப்பிக்கொண்டே இருந்தேன்.

(எ.கா) நேற்று இரவு என்ன சாப்பிட்டாய்

விடை: சப்பாத்தி

வினா: சப்பாத்தி செய்வதற்கு என்ன தேவை?

விடை: கோதுமை மாவு, தண்ணீர். உப்பு

பிறகு 'உணவைக் கண்டறிதல்" என்னும் விளையாட்டு விளையாடினோம். மாணவர்கள் உணவின் வாசனையை வைத்து முதலில் என்ன உணவு, அதன் ருசி, அதில் கலக்கப்பட்டு இருக்கும் உணவுப்பொருள் ஆகியவை குறித்துக் கூற வேண்டும். இந்தச் செயலின் போது மாணவர்களின் கண்கள் கைக்குட்டையால் கட்டப்பட்டிருக்கும். இதற்கு மதிப்பெண்கள் கரும்பலகையில் கொடுத்தேன்.

ஒரு மாணவி தனக்குக் கொடுத்த உணவுப்பொருளை (சத்துமாவு) கண்டுபிடிக்கவில்லை. ஆதலால் மதிப்பெண் குறைந்து அவள் முகம் வாடியது. அன்று முதல் இது போன்ற போட்டிகளுக்கு நட்சத்திரம், பூ, ☺, போன்ற குறிகளைப் பயன்படுத்த ஆரம்பித்தேன்.

மேலும், உணவுப்பொருள்கள் உண்ணும் முறை அறிய வைப்பதற்குப் பச்சைக்காய்கறிகள் பழங்கள் பருப்பு வகைகள் கீரைகள் போன்றவற்றைப் பெட்டியில் போட்டு கண்களை மூடியவாறு ஒரு பொருளை எடுத்து அதனைத் தொட்டு உணர்ந்து அதன் பெயர் கூற வேண்டும். பின்பு அவர் கண்கள் திறந்து அவர் கையில் இருக்கும் பொருளைப் பார்த்து அதன் பெயர், அதனை அவர் எப்படி உண்ணுவார், அதன் நிறம், சுவை, அதிலிருக்கும் சத்து, பலன் ஆகியவற்றைக் கூற முயலவைத்தல்.

(எ.கா): உருளை - வேகவைத்து உண்ணுவேன், மாவுச்சத்து நிறைந்தது, சுவையாக இருக்கும்

கேரட்: வேகவைத்தும். பச்சையாகவும் உண்ணலாம், ஆரஞ்சு நிறம், சுவையாக இருக்கும். கண்பார்வைக்கு நல்லது.

இவ்வாறாகச் செய்யும் போது அவர்கள் தாங்கள் பயின்றவற்றைச் சூழ்நிலையுடன் இணைத்துப் பார்க்கிறார்கள். அவர்கள் உண்ணும் போதும். கடைவீதிகளுக்குச் செல்லும் போதும். தாங்களாகவே உணவுப்பொருள்களை ஆராயத் தொடங்குகிறார்கள்.



**க. அமலா**, தொ.ப.ஆ, அ.தொ.ப. இடையார்பாளையம்



# சுற்றுச்சூழலிலிருந்து செயல்திட்டங்களின் மூலம் கற்றல்

## எங்கள் பள்ளி

பள்ளி வாடகை கட்டிடத்தில் இயங்குகிறது. இங்கு 7 ஆசிரியர்கள் பணியாற்றுகிறார்கள். சென்ற வருடம் 142 ஆக இருந்த மாணவர்களின் எண்ணிக்கை தற்போது 168 ஆக உயர்ந்துள்ளது. எங்கள் பள்ளியில் பெரும்பாலும் முஸ்லீம் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் பொருளாதாரத்தில் பின் தங்கிய மாணவர்களே பயில்கின்றனர். பெற்றோர்கள் பெரும்பாலும் கூலி வேலைக்குச் செல்வதால் மாணவர்களின் கவனிப்பு குறைவாகவே உள்ளது. எங்கள் பள்ளியில் ஆசிரியர்கள் அனைவரும் மாணவர்களிடம் அதிக அக்கறை கொண்டு தனி கவனம் செலுத்திக் கற்பிக்கின்றனர்.

சூழ்நிலையியலில் செயல்திட்டங்கள் தீட்டி கற்பிப்பது, மாணவர்களைக் களப்பயணம் அழைத்துச் செல்வது போன்றவற்றில் ஆர்வமாக ஈடுபடுவேன்.

## சுற்றுச்சூழலிலிருந்து செயல்திட்டங்களின் மூலம் கற்றல்

நான் சென்ற வருடம் (2017 - 18) ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்குச் சூழ்நிலையியல் பாடம் கற்பித்தேன். சூழ்நிலையியல் பாடங்களை மாணவர்கள் ஆர்வமுடன் கற்க அவர்கள் வாழும் சுற்றுப்புறத்தைக்கொண்டு அவர்களாகவே கற்குமாறு செயல்திட்டங்கள் வடிவமைத்தேன்.

## செயல்திட்டம் 1

நோக்கம்: பலவகையான விலங்குகளின் வாழ்க்கை முறையை அறிதல்;

மாணவர்கள் தங்களுடைய வீட்டின் அருகில் வாழும் விலங்குகளைப் பற்றி தகவல் சேகரித்தனர். ஆவணம் தயாரித்தனர் (Animal profile). அதாவது விலங்குகளின் படத்தை வரைந்து அதன் செல்லப் பெயர், நிறம், அது உண்ணும் உணவு, உறங்கும் நேரம், அதை கவனிப்பது யார், அதன் குணாதிசியங்கள் போன்ற தகவல்களைச் சேகரித்து அவற்றைப் பற்றித் தெரிந்து கொண்டேன். மாணவர்கள் ஒவ்வொருவரும் ஒரு விலங்கைப் பற்றி செய்தி சேகரித்து வந்தனர். மாணவர்கள் எழுதி வந்த தகவல்களை வகுப்பறையில் பகிர்ந்து கொண்டனர். மாணவர்கள் 25 விலங்குகள் பற்றிச் செய்திகளை அறிந்து கொண்டனர்.



## செயல்திட்டம் 2

நோக்கம்: உணவுகள் எவ்வாறு கெட்டுப்போகிறது. அது கெட்டுப்போக ஆகும் காலம் அவற்றை எவ்வாறு பாதுகாப்பது போன்றவற்றைப் பற்றி அறிதல்.

திட்டம்: செயல்திட்டத்திற்குத் தேவையான பல்வேறு வகையான உணவுகளை மாணவர்களே தங்களுடைய வீட்டிலிருந்து கொண்டுவரச் செய்தல், அட்டவணையைத் தயாரித்தல். மாணவர்களை ஐந்து குழுவாகப் பிரித்தல்.

செயல்பாடு : ஒவ்வொரு குழுவிற்கும் சில உணவுப் பொருள்களைக் கொடுத்தேன் ஒவ்வொரு உணவையும் நான் சிறிய ஒளி புகும் பிளாஸ்டிக் கொள்கலனில் அடைத்து வைத்து, அவற்றில் ஒன்றை மூடியும் மற்றொன்றைத் திறந்தும் வைத்து ஒரு வாரம் உற்று நோக்குச் செய்த பிறகு ஒன்றை வெயிலிலும் மற்றொன்றை வகுப்பறையிலும் வைத்து அவற்றில் ஏற்படும் மாறுதல்களை அட்டவணையில் குறித்தனர். (உணவுப்பொருளின் பெயர்,வாசனை, நிறம், தன்மை) மேலும் உணவுப் பொருளை ஓர் அறையினுள் திறந்து வைக்கும் பொழுதும் மூடி வைக்கும் பொழுதும் சூரிய ஒளியில் திறந்து வைக்கும் பொழுதும் மூடி வைக்கும் பொழுதும் ஏற்படும் மாற்றங்களை உற்று நோக்கி அட்டவணையில் குறித்தனர்.

மாணவர்கள் தொடர்ந்து ஏழு நாட்கள் உணவுப் பொருள்களை உற்று நோக்கி அதன் தன்மைகளை அறிந்து கொண்டனர். முட்டை, பால் போன்றவை இரண்டு நாட்களிலே கெட்டுப்போய் வாடை வந்து துர்நாற்றம் வீசியதால் அதைக் குப்பையில் வீசி விட்டோம். மாணவர்கள் ஆர்வமாக உற்றுநோக்கி செயல்திட்டங்களில் ஈடுபட்டனர். உணவுகள் எவ்வாறு கெட்டுப்போகிறது என்பதையும் அதற்கு எவ்வளவு நேரம் ஆகிறது என்பதையும் அறிந்துகொண்டனர். உணவுப் பொருள்களை, காய வைத்தல், ஊறுகாய் போடுதல், உப்போடு சேர்த்து வைத்தல் போன்றவற்றால் உணவுப்பொருட்கள் கெட்டுப்போவதைத் தவிர்க்க முடியும் என்பதை அறிந்து கொண்டனர்.

## செயல்திட்டம் 3

நோக்கம்: அருகில் உள்ள நீர்நிலைகளைப் பற்றி விரிவாக அறிந்து கொள்ளுதல் இதன் மூலம் பாரம்பரிய நீர்நிலைகளின் தற்போதைய



நிலையைப் பற்றித் தெரிந்து கொள்ளுதல்.

திட்டம்: களப்பயணம் அழைத்துச் செல்லும், சுல்தான் பேட்டை குளத்தையும் மாணவர்கள் செல்லும் வழியையும் அதற்கு ஆகும் நேரத்தையும் முன்னரே பார்த்துத் திட்டமிட்டேன்.

செயல்பாடு: மாணவர்களைக் களப்பயணமாகப் பள்ளி அருகில் உள்ள சுல்தான்பேட்டை குளத்திற்கு அழைத்துச் சென்றேன். மாணவர்கள் அனைவரும் குளத்தை உற்றுநோக்கி தற்போது எப்படி உள்ளது என்பதை அறிந்து கொண்டனர். குளம் பராமரிப்பின்றி தற்போது வறண்டு, சிறுசிறு செடிகள் முளைத்துச் சுற்றுச் சுவர்கள் பெயர்ந்து காணப்பட்டது. மாணவர்கள் இதனைப் பற்றிப் புரிந்துகொள்ள என்னிடம் சில கேள்விகள் வினவினர் (எ-கா: ஏன் இந்தக் குளம் இந்நிலையில் உள்ளது, யார் இதைப் பராமரிப்பது?) மேலும் மாணவர்கள் அவ்வூர் பெரியவரிடம் இக்குளத்தைப் பற்றிப் பலச்செய்தியை, கேட்டுத் தெரிந்துகொண்டனர். குளத்தின் வரலாறு, குளத்தை யார் பராமரிப்பது, குளத்திற்கு எங்கிருந்து தண்ணீர் வருகிறது, குளம் தற்போது எவ்வாறு புறக்கணிக்கப்படுகிறது போன்ற செய்திகளை மாணவர்கள் அறிந்தனர். மாணவர்கள் மகிழ்ச்சியாகக் களப்பயணம் சென்று ஆர்வமுடன் கேள்விகளைக் கேட்டு, வகுப்பறைக்கு வந்தவுடன் தாங்கள் பெற்ற செய்திகளை வாய்வழியாகப் பகிர்ந்து கொண்டனர். இதன் மூலம் அவர்கள் நீர்நிலைகளின் அவசியத்தையும் அவற்றின் தற்போதைய நிலைகளையும் புரிந்து கொண்டனர்.

மேலும் மாணவர்கள் தங்கள் வீடுகளின் அருகில் உள்ள நீர்நிலைகள் (குளம், கிணறு) பற்றி விவரங்களை வகுப்பறையில் பகிர்ந்தனர். இச்செயல் திட்டங்கள் மூலம் மாணவர்கள் நீர்நிலைகளின் அவசியத்தையும் பாரம்பரிய நீர்நிலைகளின் முக்கியத்துவத்தையும் அறிந்து கொண்டனர். மேலும், நீர்நிலைகளைப் பாதுகாப்பதன் அவசியத்தையும் உணர்ந்தனர்.

### செயல்திட்டம் 4

நோக்கம்: போக்குவரத்து வாகனங்களைக் கணக்கெடுத்து வரைபடம் தயாரித்தல், பயன்படுத்தப்படும் எரிபொருளின் அளவை அறிந்து கொள்ளுதல்.

திட்டம்: மாணவர்களை ஐந்து குழவாகப் பிரிந்து அவர்கள் கணக்கெடுக்கும் வாகனத்தைப் பிரித்துக் கொடுத்தல், மேலும் வாகனங்களைக் கணக்கெடுக்கும் முறை மற்றும் நேரம் பற்றி விளக்கிக்கூறுதல்.

செயல்பாடு: வகுப்பறையில் உள்ள மாணவர்களை 6 - குழுவாகப் பிரித்து அவர்களுக்கு ஒவ்வொரு வாகனத்தையும் பிரித்துக் கொடுத்து கணக்கெடுக்கக் கூறினேன். மாணவர்களைப் பள்ளிக்கு அருகில் உள்ள சுல்தான் பேட்டை பிரதான சாலைக்கு பாண்டி - விழுப்புரம் சாலைக்கு அழைத்துச் சென்று அங்கு வாகனங்களின் எண்ணிக்கையைக் கணக்கெடுத்தனர். ஒவ்வொரு குழுவும் தங்களுக்குரிய வாகனங்களை, அரை மணி நேரத்தில் சாலையில் சென்ற போது ஒவ்வொன்றாக எண்ணி கணக்கெடுத்தனர். (மிதிவண்டி, பேருந்து மற்றும் சிற்றுந்து, ஆட்டோ, மோட்டார் சைக்கிள், கார், சரக்கு வாகனம்)

மாணவர்கள் கணக்கெடுத்து முடித்தவுடன் வகுப்பறையில் வந்து, அரை மணி நேரத்தில் கடந்து சென்ற வாகனங்களின் மொத்த எண்ணிக்கையைக் கூறினர். அந்த எண்ணிக்கையை வைத்து, அனைவரும் சேர்ந்து வாகனங்களின் எண்ணிக்கை அடிப்படையில் வரைபடம் தயாரித்தோம். மேலும் வாகனங்களுக்குத் தேவைப்படும் எரிபொருள் பற்றியும் எரிபொருளைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என்பதையும் உரையாடி



தெரிந்து கொண்டனர். இதன் மூலம் மிதிவண்டி பயன்பாடு மிகவும் குறைந்துள்ளது என்பதைப் புரிந்துகொண்டனர்.

மாணவர்கள் தங்கள் வீடுகளில் வாகனங்களின் பயன்பாட்டைப் பற்றி (பயன்படுத்தும் எரிபொருள், பயன்படுத்தும் தூரம்) குறித்துக்கொண்டு அதற்கும் வரைபடம் (bar chart) வரைந்தனர். பின்பு வாகனங்களின் எண்ணிக்கையைப் பற்றியும் வாகனங்களில் பயன்படும் எரிபொருளைப் பற்றியும் உரையாடினோம். எரிபொருள் சிக்கனம் பற்றியும், மிதிவண்டி பயன்பாடு குறைவாக இருப்பதைப் பற்றியும் விரிவாக உரையாடினோம். மேலும் எரிபொருள்களைச் சிக்கனமாகப் பயன்படுத்த என்னென்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி கலந்துரையாடினோம். (எ-டு) குறைவான தூரத்திற்கு நடப்பதும், மிதிவண்டியைப் பயன்படுத்துவது, நீண்ட தூரத்திற்குப் பேருந்து, தொடர்வண்டி பயன்படுத்த வேண்டும் என்றும் உணர்ந்தனர். இச்செயல் திட்டத்தில் சூழ்நிலைக்கேற்ப கணிதப் பாடத்தில் தாங்கள் கற்ற வரைபடம் பற்றிய புரிதல்களையும் பயன்படுத்தினர். அதன் மூலம் சூழ்நிலையியல் கணிதத்தையும் தொடர்புபடுத்தி கற்றனர்.

**இச்செயல்திட்டங்களின் மூலம்**

- புத்தகங்களிலிருந்து தகவல்களைப் பெற்றதோடு தாங்களாகவே சுற்றுப்புறங்களிலிருந்து கூடுதல் தகவல்களைச் சேகரித்து பாடத்திட்டக் கருத்துகளைப் பெற்றனர்.
- மாணவர்கள் ஆர்வமாகச் சூழ்நிலையியல் பாடங்களைக் கற்றனர்.
- இதன் மூலம் பாடத்திட்டத்தில் உள்ளூர்சூழலைப் புகுத்த முடிந்தது. மேலும், நானும் ஓர் ஆசிரியராக நிறைய அறிந்து கொள்ள முடிந்தது.
- மாணவர்கள் தாங்களாகவே ஆராயும் மனப்பான்மையை வளர்த்துக் கொண்டனர் இவ்வாறு பல்வேறு திறன் - திறமைகளை வளர்த்துக் கொண்டனர்.(எ-டு) குழு மனப்பான்மை, கேள்வி கேட்டு தகவல்களைச் சேகரிக்கும் திறன், பகுத்தாய்வுத் திறன்.

**இதனால் வரும் கல்வியாண்டில்**

- அடுத்த இச்செயல்திட்டங்கள் மேலும் செம்மைப்படுத்திக் கற்பிப்பது
- அனைத்துப் பாடங்களுக்குக் குறைந்தது ஒரு செயல் திட்டமாவது செயல்திட்டங்களை உருவாக்கிக் கற்பிப்பது
- புதிய புதிய செயல்திட்டங்களை உருவாக்கும்போது உள்ளூர் சூழலைக்கொண்டு சூழ்நிலையியல் செயல்திட்டங்களை வடிவமைப்பது
- செயல்திட்டங்கள் மூலம் சூழ்நிலையியல் பாடத்தினை வேறு சில பாடங்களுடன் தொடர்படுத்திக் கற்பித்தல்.



**மு. ராமகிருஷ்ணன்,** தொ.ப.ஆ, அ.தொ.ப. சுல்தான்பேட்டை

# சுற்றுப்புறத்திலிருந்து கற்றல் - பள்ளித் தோட்டம்



• வயல்வெளிக்குக் ‘களப்பயணம்’ சென்றதன் மூலம் பள்ளியில் தோட்டம் அமைக்க ஆர்வம் பிறந்தது

• பள்ளித் தோட்டத்தின் மூலம் உழவுத் தொழில் பற்றி நேரடியாகச் செய்துபார்த்துக் கற்றது

## ஆர்வங்கள்

• இயற்கையின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் இயற்கையோடு அமைந்த கல்வியை இனிமையாக மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டும்.

• சூழ்நிலைகளைப் பற்றி மாணவர்கள் அறிந்து கொண்டு சுற்றுப்புறச் சூழல்களோடு கற்ற கல்வியைக் களப்பணிகளோடு இணைக்க வேண்டும்.

• இயற்கைக் கொடுத்த வளங்களை நிலைத்திருக்க நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை மாணவர்களுக்கு உணர்த்துதல்

• அனுபவ வழிக் கற்றலை மாணவர்களுக்கு இன்னும் சிறப்பாக உணர்த்த வேண்டும்.

கற்பித்தலில் எனது நோக்கங்களும் சவால்களும்

கற்றல் என்பது காகிதத்தில் இருக்கும் எழுத்துக்களால் உணரப்படுவது அல்ல. தன்னாலும், தன்னைச் சுற்றியுள்ளவர்களாலும் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகளால் அறியப்படுவதும், அனுபவங்களால் உணரப்படுவதும் ஆகும்.

• கற்பித்தலில் நாம் கற்பிக்கின்றோம் என்ற எண்ணமே மாணவர்களுக்கு ஏற்படாத வகையில் சூழ்நிலைகள் மூலம் செயல்பாடுகளை வடிவமைத்தல்.

• அனுபவங்களின் மூலம் மகிழ்ச்சியாகவும், எளிமையாகவும் மாணவர்கள் கற்கும் வகையில் வடிவமைத்தல்.

• மாணவர்கள் தான் கற்ற கல்வியை வாழ்க்கையோடு தொடர்புப்படுத்தும்படியான கற்பித்தல்.

• தன் தேவைகளைத் தானே பூர்த்தி செய்துகொள்ளும் படியாகக் கற்பித்தல்.

## தோட்டம் அமைப்பதற்குத் திட்டமிட்ட விதம்

மாணவர்கள் தான் வாழும் மண்ணைப் பற்றியும் தான் உண்ணும் உணவைப்பற்றியும், அது விளையும் தன்மைப் பற்றியும் அதனை மேற்கொள்ளும் மனிதனைப்பற்றியும் அறிய பலவிதமான செயல்பாடுகளை மேற்கொண்டேன். மாணவர்களைத் தொடக்கம் முதல் இறுதிவரை நடைபெறும் செயல்பாடுகளை முன்கூட்டியே வகுத்துக் கொண்டேன்.

• பள்ளியில் செயல்பாடுகளை

மேற்கொள்வதற்கு முன், பள்ளியைச் சுற்றியுள்ள வயல்களுக்குக் களப்பயணம் அழைத்துச் சென்றேன்.

• விவசாயிகளிடம் மாணவர்களை உரையாட வைத்தேன்.

• நிலங்களில் பயன்படுத்தப்படும் கருவிகளின் பெயர்களை அவர்கள் மூலமாக அறிய வைத்தேன்.

• பயிருக்கு அவர்கள் இடும் உரங்களின் பெயர்களைக் கேட்டறியச் செய்தேன்.

• பள்ளியில் இயற்கை உரம் தயாரிப்பதற்குத் தேவையான ஓர் இடத்தினையும் செடிகள் வைப்பதற்குத் தேவையான இடத்தினையும் தேர்வு செய்தேன்.

• மாணவர்கள் தினமும் உண்ணும் உணவுகளின் விதைகளைச் சேகரித்தேன்.

## தயாரிப்பு முறை

இயற்கை உரம் மாணவர்கள் அனைவரையும் மகிழ்ச்சியாக ஈடுபட வைத்த செயல்பாடு இது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு செயல்பாடு கொடுக்கப்பட்டது. காய்ந்த இலைகளைச் சேகரித்து அதன் மேல் மண்ணிட்டு நீரினை ஊற்றி பின் ஆட்டு மற்றும் மாட்டுச் சாணங்களைச் சேகரித்து வரச்செய்து இலைகளுடன் கலந்தனர். வேப்பமர இலைகளை மீண்டும் அதனுடன் சேர்த்து மாணவர்களை மண்புழு எடுத்து வரச் செய்து அதில் இட்டு மறுபடியும் அவைகளைக் கலந்து சிறிது நாட்கள் விட்டோம். மாணவர்களைத் தினமும் கவனிக்குமாறு கூறினேன். ஒவ்வொரு நாளும் இதனைப்பற்றிக் கலந்துரையாடினேன். முடிவில் ஒரு நாள் இயற்கை உரம் தயாரானது.

## விதைத்தல்

மாணவர்களுக்கு அருகாமையில் வீட்டில் எளிதில் கிடைக்கக் கூடிய விதைகளைச் சேகரிக்கச் செய்தேன். களப்பயணம் மூலம் மேற்கொண்ட செயல்பாடுகளைக் கொண்டு மாணவர்களே எம்முறையில் விதை விதைப்பது என்பதை அறிந்தனர். ஒரு இடத்தில்



விதைக்கப்பட்ட விதைகளில் இயற்கை உரத்தினையும், மறு இடத்தில் விதைக்கப்பட்ட விதைகளில் இரசாயன உரமும் இட்டனர். பின் அவை இரண்டுக்கும் உள்ள வேறுபாட்டினை மாணவர்களே உணர்ந்தனர். பின் மாணவர்களிடம் கலந்துரையாடினேன். அதில் ஒரு மாணவன் நானே எதிர்பாராத ஒரு விடையைக் கூறினான். இயற்கை உரம் நாம் செய்தது, இரசாயன உரம் பணத்திற்கு வாங்கியது என்றதும், இதில் எவ்வளவு பெரிய பொருளாதாரம் உள்ளது என்பதை எடுத்துரைத்தேன்.

செடிகள் நன்றாக வளர்ந்து காய் கனிகளைக் கொடுத்தபின் அவைகளை மறுபடியும் விதைகளாக (கடுகு, தக்காளி) மாற்றினோம். இச்செயல்பாட்டின் மூலம் விதையிலிருந்து மறுபடியும் விதை கிடைக்கிறது என்பதை மாணவர்கள் உணர்ந்தனர். இயற்கை உரம் இட்ட மண்ணில் நிறத்தையும், இரசாயன உரம் இட்ட மண்ணின் நிறத்தையும் உற்றுநோக்கச் செய்தேன் இதன் மூலம் மண்ணின் வளம்பற்றி அறிய வைத்தேன். வீட்டில் நாம் தேவையில்லாத பொருட்களைக் கொண்டு எவ்வாறு தோட்டம் அமைக்கலாம் என்பதையும் மாணவர்கள் உணர்ந்தனர். வீட்டில் தோட்டம் அமைத்து நம் வீட்டிற்குத் தேவையான காய்கறிகளை விளைவிக்கும் போது பொருளாதாரம் எவ்வளவு சேமிக்கப்படுகிறது என்றும் உணர்ந்தனர்.

## கற்பித்தல் மற்றும் மதிப்பீட்டிற்கான யுத்திகள்

மாணவர்கள் தொடர்ச்சியாகச் செய்த

மேற்கூறப்பட்ட செயல்பாடுகளை வகுப்பறை பாடத்தோடு தொடர்புபடுத்தி நடத்தும் போது எளிமையாக இருந்தது. மாணவர்களே பாடப்புத்தகத்தில் உள்ளவற்றைத் தானாக முன்வந்து கூறினர்.

மாணவர்களை மதிப்பிட நான் பல தலைப்புகளைக் கூற, ஒவ்வொருவரும் அனைத்து தலைப்புகளைப்பற்றியும் தெளிவாகக் புரிந்து வைத்திருந்தது எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

**எனது லட்சியம்**

மாணவர்களுக்கு இயற்கையின் முக்கியத்துவத்தையும் அதனை எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என்பதையும் உணர வைப்பதே எனது லட்சியம்.

மாணவர்கள் அனைவரையும் முழு ஈடுபாட்டுடன் கற்க வைக்க மேலும், சில செயல்பாடுகளை மேற்கொள்ளவேண்டும்.



**என். நாகராஜ்,** தொ.ப.ஆ, அ.தொ.ப., வடுவகுப்பம்

# MAKING OF SEED BALLS



The birth anniversary of Thiru K Kamaraj, popularly known as 'Students' Day', was celebrated by carrying out a special program in which the students prepared seed balls.

## Objective

To create an awareness about trees and their role in the environment—shelter for birds, carbon sinks, regulators of ground water table, etc.—amongst the students.

The celebration was also aimed at sensitizing the students about local trees in the surroundings and the benefits of afforestation.

## Process

The students from grades 6 to 8 were involved in the activity. Small balls of earth were made by rolling a mixture of manure, clay, and water. A couple of seed were kept inside the ball as well. Seeds of Jamun, Neem, Peepal, and Pungai were selected because of the shade that those trees would provide once they are fully grown. These seed balls were dried in the sun for a week before being scattered across the school surroundings and the nearby Nallavadu Lake.

## Learnings

The students enjoyed working with clay. They were very excited to make seedballs and compost, and they also partook in preparing the soil for cultivation. The students were able to observe their surroundings and learn about the different local trees.

## Way forward

The students should be encouraged to monitor and maintain the growth of the plants around the area by making regular observations and visits. We also would like to involve the community in similar activities in the coming future.



M. ARULJYOTHI - PST - GMS NALLAVADU

# CLASSROOM SCIENCE LAB



A science lab was set up by the students of Grade 5 through the support and encouragement of the Headmistress, Mrs. Dhana Mary, and other teachers of the school. The parents of the students were also invited to witness the calibre of their "young scientists".

The objective of this initiative was to bridge the gap between the EVS textbook and the life of the students.

## Process:

The students were divided into 6 groups, and they were free to choose any topic that kindled their interest. The teacher supported students at each step. The creative and scientific prowess of the students were displayed in the lab for the entire academic year. To facilitate language acquisition as well through this exercise, the students were encouraged to talk only in English inside the lab.

## Outcome

The Classroom Science Lab helped the students enhance their knowledge through the effective use of the internet and through learning concepts. As for example, when the students were taught about the digestive system, they searched the internet to see how the digestive system works. Later, they were able to recreate those models on their own.






**PUSHPALATHA - PST - GPS PANGUR**

# பாடம் படமானது

- **பாடங்களைப் படைப்பாக மாற்றுவதால் மாணவர்களிடையே கற்றல் எளிமையாகிறது.**
- **பாடப்புத்தகத்திற்கும் சுற்றுச்சூழல்களுக் குமிடையே முரண்கள் இருப்பதாக உணர்கின்றனர். படைத்தல் நிகழ்வு முரண்களை முறியடிக்க முற்படுகிறது.**
- **பாடல்கள், கதைகள், களப்பயணம் போன்ற செயல்பாடுகளினால் கற்றல் ஆழமானதாகவும் அர்த்த முள்ளதாகவும் உள்ளது**

### பணிசார்ந்த ஆர்வங்கள்

ஆசிரியப்பணி நான் மிகவும் விரும்பி ஏற்ற பணி. என்னுடைய பார்வையில் கற்பித்தல் என்பது மாணவர்களுக்கு அனுபவங்கள் மூலம் கற்கும் வாய்ப்பை ஏற்படுத்தித் தருவதாகும். நுட்பமான வித்தியாசமான கற்பித்தல் முறைகளையே அதிகம் விரும்புவேன்.

### படைப்பு

மாணவர்களுக்கு சூழ்நிலையியல் பாடம் தொடர்பான குறும்படம் ஒன்று தயாரித்தோம். இதில் முழுக்க முழுக்க மாணவர்களை ஆர்வத்துடனும் ஈடுபாட்டுடனும் நடிக்கச் செய்து தயாரித்துள்ளோம். இப்படம் உருவான கதை மற்றும் மாணவர்களின் செயல்பாடுகளை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

### நோக்கம்

நான்காம் வகுப்பு சிபிஎஸ்இ (CBSE) சூழ்நிலையியல் பாடத்தில் Busvas's Farm என்ற பாடத்தில் விவசாயம் செய்யும் வழிமுறைகள் மற்றும் அதற்காகப் பயன்படுத்தப்படும் கருவிகள் போன்றவை விளக்கப்பட்டிருந்தது. அந்தப் பாடத்தை மாணவர்களுக்கு அனுபவப்பூர்வமாக அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென நினைத்தேன்.

### களப்பணி

மாணவர்களை எங்கள் பள்ளிக்கு அருகில் உள்ள மாதூர் வேளாண் பண்ணைக்கு அழைத்துச் சென்றோம். அங்கு மாணவர்கள் நேரடியாக விவசாயிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார்கள். இந்தக் கலந்துரையாடலின் வாயிலாக விவசாயம் செய்யும் முறை, விவசாயக் கருவிகள், உரம் தயாரிக்கும் முறை போன்றவற்றை உற்றுநோக்கி அறிந்துகொண்டனர். மேலும் நீர் பற்றாக்குறையினால் விவசாயிகள் அடையும் இன்னல்களையும், அவர்களின் வாழ்வாதாரம் நலிவடைவதையும், அதனால் விவசாயம் நலிவடைந்து வருவதையும் விவசாயிகள் எடுத்துக்கூறினர். இதனால் ஏற்படும் எதிர்கால பாதிப்புகளையும், விவசாயத்தை அனைவரும் ஊக்குவிக்க வேண்டும் என்றும் எடுத்துக் கூறினர். அது மாணவர்களுக்கு மட்டுமின்றி எங்களுக்கும் மனதளவில் நெகிழ்ச்சியையும் பாதிப்பையும் ஒருசேர ஏற்படுத்தியது மாணவர்களுக்கு விவசாயத்தின் முக்கியத்துவத்தையும் அதற்கு நீர் சேமிப்பு இன்றியமையாதது என்பதையும் உணர்த்த திட்டமிடலை மேற்கொண்டோம்.

### அனுபவங்கள் நாடகமாக உருப்பெறுதல்

மாணவர்கள் நேரடி அனுபவம் மூலம் கற்றதை மேலும் வலுப்படுத்தும் வகையில் விவசாயம் மற்றும் நீரின் இன்றியமையாமையை உணர்த்தும் விதமாக ஓர் இசை நாடகம் தயாரிக்கலாமென முடிவெடுத்தோம். நாடகத்திற்குத் தொடர்புடைய வரிகளைக் கொண்ட பாடல்களைப் பதிவுசெய்து மாணவர்களையும் நடிக்கச் செய்து அதை வகுப்பறையில் இசை நாடகமாக நிகழ்த்தினோம்.

மாணவர்கள் நடித்ததோடு மட்டுமல்லாமல் கற்றலில் மிகுந்த ஆர்வத்துடனும் மகிழ்ச்சியுடனும் ஈடுபட்டனர்.

### நாடகம் குறும்படமானது

வகுப்பறை நாடகத்தைப் பார்வையிட்ட பள்ளித் தலைமையாசிரியர் திரு. ச. விஜயராகவன் அவர்கள் இதைக் குறும்படமாகத் தயாரிக்கத் திட்டமிட்டார். பள்ளித் தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர் திரு. ஊ. சுரேஷ்குமார் ஆகியோரின் பெரும் முயற்சியாலும் பங்களிப்பாலும் எங்கள் நாடகம் குறும்படமானது.

### மாணவர்கள் மற்றும் பெற்றோர் மனநிலை

வகுப்பறையில் நடித்த மாணவர்களைக் களத்திற்கு அழைத்துச் சென்று படப்பிடிப்பை நடத்தினோம். இதில் மாணவச் செல்வங்கள் பெரும் மகிழ்ச்சியடைந்தனர் மேலும் ஈடுபாட்டுடன் நடித்தனர். பிள்ளைகள் குறும்படத்தில் நடிப்பதை எண்ணி பெருமிதம் கொண்ட பெற்றோர்களும், பொதுமக்களும் படப்பிடிப்பில் பெரும் பங்களிப்புக் கொடுத்தனர்.

### உதவிக்கரங்கள்

'பொத்தனூர் தபால் நிலையம்' என்ற படத்தில் துணை இயக்குநராக பணியாற்றிய திரு. விக்னேஷ் அவர்கள் வெற்றிகரமாக இக்குறும்படத்தை இயக்கினார். இவ்வாறு எங்கள் முயற்சியைக் குறும்படமாக்கிய பெருமை படக்குழுவினர், தலைமையாசிரியர் மற்றும் ஆசிரிய ஆசிரியைகள், பெற்றோர், பொதுமக்கள், மாணவர்கள் என அனைவருக்கும் உண்டு.

### வலுவான கற்றல்

இந்தக் குறும்படத் தயாரிப்பு அனுபவம் மாணவர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் மறக்கமுடியாத இனிய அனுபவத்தை ஏற்படுத்தித் தந்ததாக மாணவர்கள் கூறினர். இதில் மாணவச் செல்வங்கள் நடித்தனர் என்பதை விட வாழ்ந்தனர் என்பதே பொருத்தம்.

மாணவர்கள் களத்திற்கே சென்று நடித்ததால் விவசாயம் எப்படி நடைபெறுகின்றது, அதற்குத் தண்ணீரும், காலமும் சூழ்நிலையும் எவ்வாறான பங்குகள் வகி(கு)க்கின்றன என்பதைத் தங்களுடைய அனுபவமாக்கினர்.

விவசாயத்தின் முக்கியத்து வத்தையும் விவசாயிகளின் உழைப்பையும் மதித்துப் பெருமிதப்பட்டனர். மேலும் ஒரு சிலர் எதிர்காலத்தில் விவசாயிகளாக இருக்க விருப்பம் தெரிவித்தனர்.

"நீரின்றி அமையாது உலகெனின் யார் யார்க்கும்
வானின்றி அமையாது ஒழுக்கு."

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர்."



- என்ற வள்ளுவரின் வரிகளை உணர்ந்து மழைநீர் சேகரிப்பின் இன்றியமையாமையையும், விவசாயத்தின் முக்கியத்துவத்தையும் நிலையாக மாணவர்கள் உணர்ந்து கொண்டனர்.

## சிறப்பு

இக்குறும்படத்தை நாங்கள் பள்ளி ஆண்டு விழாவில் வெளியிட்டபோது பல உயரதிகாரிகள், முக்கியப் பிரமுகர்கள், பொதுமக்கள் என அனைத்துத் தரப்பினரின் பாராட்டுக்களையும் பெற்றுத்தந்தது. மேலும் தூய்மை இந்தியா திட்டத்தில் எங்கள் பள்ளி தேசிய விருதினைப் பெறுவதற்கு இப்படம் முக்கிய காரணியாக அமைந்தது.

## பிரதிபலிப்பு

இதுபோன்ற செயல்பாடுகள் மூலம் மாணவர்களுக்கு அனுபவப்பூர்வமான நிலையான கற்றல் நடைபெறுகிறது. குழுச்செயல்பாடு, சமூகப்பங்கேற்பு போன்ற மனப்பான்மைகள் வளர்கிறது. மாணவர்களிடையே இயற்கையைப் பாதுகாக்கும் மனப்பான்மையை வளர்க்கிறது. மாணவர்களுக்கு மட்டுமின்றி ஆசிரியர்களுக்கும் ஒரு புதுவித கற்பித்தல் அனுபவத்தைப் பெற்றுத்தந்தது.



**ஜ. விஜயலட்சுமி**, தொ.ப.ஆ, அ.தொ.ப, கோட்டுச்சேரிபேட், காரைக்கால்.

# எனது வகுப்பறை மகிழ்ச்சியின் கருவறை

- **சூழலியல் பாடத்தில் உணவு, விலங்குகள், பயணம் பற்றிய பாடங்களை உற்சாகமிகுந்த செயல்பாடுகள், விளையாட்டுகள் மற்றும் நாடகம் மூலம் கற்பித்தல்**
- **மாணவர்களுக்கு முன்மாதிரியாக இருப்பதற்காக ஆசிரியர் மேற்கொண்ட முயற்சிகள்**

### எனது பள்ளி

எனது பள்ளியில் 58 மாணவர்களும் 5 ஆசிரியர்களும் உள்ளனர். அனைவரும் ஒரே குடும்பம் போல் இணைந்து செயல்படுகிறோம். இங்குப்படிக்கின்ற மாணவர்களில் சில பேர் மிகவும் வறுமையில் உள்ளவர்கள். சில பேர் நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அனைத்துப் பெற்றோர்களுமே கூலித்தொழிலாளர்களாகவே உள்ளனர். பெற்றோரை இழந்த குழந்தைகள், மூளை வளர்ச்சி குறைந்த குழந்தைகள் எனப் பல்வேறு சூழ்நிலைகளையுடைய குழந்தைகள் இங்குக் கல்வி பயில்கின்றனர். அனைவருமே அன்றாட வாழ்க்கைச் சூழலில் பல்வேறு விதமான பிரச்சனைகளை எதிர்கொண்டு எதிர்நீச்சல் போட்டுக் கொண்டிருக்கின்றனர்.

### கடந்த ஆண்டு என் வகுப்பறை

கடந்த ஆண்டு என் வகுப்பறையில் நான் எனது நான்காம் வகுப்பு மாணவர்களுடன் சேர்த்துச் செயலாற்றிய பல்வேறு முயற்சிகளை இங்கே பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

பஸ்வாவின் பண்ணை என்ற பாடத்தை நடத்தும் போது உழவுத்தொழில் தொடர்புடைய திரைப்படப் பாடல்களைத் திரையிட்டுக்காட்டி மாணவர்களின் கற்றல் சூழலை உற்சாகப்படுத்தினேன். உழவர்

வகுப்பறை என்பது
ஒரு வாய்ப்பு - நழுவவிடாதிருங்கள்
ஒரு கடமை - நிறைவேற்றுங்கள்
ஒரு இலட்சியம் - சாதியுங்கள்
ஒரு சோகம் - தாங்கிக்கொள்ளுங்கள்
ஒரு மகிழ்ச்சி - அனுபவியுங்கள்
ஒரு போராட்டம் - வென்றுகாட்டுங்கள்
ஒரு பயணம் - நடத்திமுடியுங்கள்
நாம் அனைவருக்கும் ஒரே
மாதிரியான திறமைகள் இல்லாமல்
இருக்கலாம் - ஆனால் அனைவரும்
திறமைகளை வளர்த்துக் கொள்ள
ஒரே மாதிரியான வாய்ப்புகள் உள்ளன.
அதுவே
நம் ஒவ்வொருவரின் வகுப்பறை

ஒருவரை அழைத்து வந்து உழவுத்தொழில் பற்றிய முழு விளக்கத்தையும் கலந்துரையாடல் மூலம் மிகத்தெளிவாக தெளிவு பெற செய்தேன். ஐந்து வகை மண் வகைகளைக் கொண்டு வந்து அந்தந்த மண்ணில் விளையும் பயிர்களை விதை ஊன்றி விளைவித்து பராமரித்து மகிழ்ந்தனர். இந்தச் செயல்பாடுகளால் மாணவர்கள் உழவுத்தொழில் பற்றி முழுமையான தெளிவைப் பெற்றுக் கொண்டனர்.

நந்துவுடன் ஒரு நாள் என்ற பாடத்துக்குக் குறும்படம் காட்டினேன். யானைகளைப் பற்றிய முழுமையான தெளிவைப் பெற்றனர். முகமூடி அணிந்து குறுநாடகமாக நடித்து மகிழ்ந்தனர். கூண்டில் அடைத்து வைத்துள்ள விலங்குகள், பறவைகள் படங்களைச் சேகரித்துத் தானாகவே அவற்றைப் பற்றி வினாவிடை எழுதி மகிழ்ந்தனர். இப்பாடச் செயல்பாடுகளின் மூலம் மாணவர்கள் விலங்குகளைத் துன்புறுத்தக்கூடாது என்றும் அவைகளையும் தம்மைப்போல் பாவித்து நேசிக்க வேண்டும் என்றும் கற்றுக்கொண்டனர்.

கால மாற்றங்கள் என்ற பாடத்தை நடத்தும் போது எங்கள் பள்ளியிலேயே கட்டிடப்பணி நடைபெற்றதால் நேரடியாகக் கண்டும் கேட்டும் தொட்டுணர்ந்தும் கொள்ளக்கூடிய மிகப்பெரிய வாய்ப்புக் கிடைத்தது. பயன்படுத்தப்படும் பொருட்கள் பணியாட்களுக்குரியப்பெயர்கள் இவற்றை அவர்களே ஆர்வமுடன் கேட்டு புரிந்து கொண்டார்கள். அனைவரும் இணைந்து களிமண்ணால் வீடுகளைக் கட்டி மகிழ்ந்தனர்.

பயணங்கள் என்ற திறமையைப்பெற தொடரி என்ற திரைப்படத்தைத் திரையிட்டுக் காட்டினேன். இதனால் தொடர்வண்டி பற்றிய முழுமையான கற்றல் அடைவைப் பெற முடிந்தது. கற்றல் சூழல் மிகவும் உயிரோட்டமுள்ளதாகக் காணப்பட்டது அவர்களுக்குள்ளேயே அருமையான கலந்துரையாடல் நிகழ்ந்தது. அனைத்து நிலை மாணவர்களுக்கும் எளிதில் புரிந்தது. வினாக்கள் கேட்க ஆளுக்கொரு விடைகளை அளித்ததோடு தக்கத் தையா தையா பாடலுக்கு நடமாடி மகிழ்ந்தார்கள். அனைவரும் இணைந்து தொடர் வண்டி போல நடித்து மகிழ்ந்தார்கள்.

மாணவர்களிடம் நீங்கள் பள்ளிக்கு எப்படி வருவீர்கள் என்றதற்குச் சிலர் நடந்தும் பைக்கிலும் சைக்கிள்களிலும் வருவதாகப் பதிலளித்தனர்.

வெளியூர் செல்வதற்கோ (அ) கடற்கரைக்குச் செல்வதற்கோ எப்படிச் செல்வீர்கள் என்று வினா எழுப்பியதற்கு ஒரு மாணவன்,"நாங்க பஸ்ல ஏறி டிக்கெட் எடுத்தோமா? பஸ் ஸ்டாண்டுக்குப் போயி இறக்கி விட்டாங்களா, அப்புறம் நடந்து போனோமா, அங்கே போயி காந்தி சிலையில் சர்க்கஸ் விட்டோம். ஐஸ்கிரீம் சாப்பிட்டோம். அப்புறம் அதே போலவே திரும்ப வீட்டுக்கு வந்தோம்" எனக் கூறினான்.

அனைத்துக் குழந்தைகளும் அவர்களே ஆளுக்கொரு போக்குவரத்துச் சாதனங்கள் படங்களை வரைந்து வண்ணமிட்டு அட்டைப்பெட்டிகளை மாட்டிக்கொண்டு அதனைப்பற்றித் தனக்குத் தெரிந்தவற்றைப் பேசி ஒரு நாடகம் போல் நடித்துக் காட்டியும் பாடல்கள் பாடியும் மகிழ்ந்தனர். அனைத்து போக்குவரத்துச் சாதனைகளையும் சேகரித்து வந்து அவர்களே ஒரு கண்காட்சி அமைத்தும் மகிழ்ந்தார்கள். மேலே குறிப்பிட்டுள்ள இச்செயல்பாடுகள் மூலம் கற்க மிகவும் சிரமப்படும் மாணவர்களும் கூட ஆர்வமுடன் பங்கேற்று தன் கருத்துக்களையும் பகிர்ந்து கொண்டனர். கற்றலுக்கு அதிக வாய்ப்பளித்ததால் எளிமையாகப் புரிதல் நடைபெற்றதுடன் மகிழ்ச்சியோடும், மனநிறைவோடும் காணப்பட்டனர்.

வகுப்பறைச்சூழலை உயிரோட்டமுள்ளதாக மாற்றியதால் கற்றல் இனிமையாக நிகழ்ந்தது. இதனால் அனைவரும் விடுப்பின்றி வகுப்பறை வந்தனர்.

## எனது மாற்றங்கள்

அனைத்துக் குழந்தைகளையும் படிக்க வைப்பது எனக்கு முதலில் மிகப்பெரிய சவாலாகத் தோன்றியது. சில நாட்கள் யோசித்தேன். நிறைய வழிகாட்டி புத்தகங்களைப் படித்தேன். எனக்குள் பல திட்டங்களை வகுத்தேன். அவற்றை வகுப்பறையில் செயல்படுத்த முயற்சித்து முயற்சித்து அதற்கான திருப்தியும் மனநிறைவும் அடைந்தேன்.

முதலில் நான் முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு நேரம் தவறாமல் பள்ளிக்குச் செல்வேன். இறைவன் எனக்குக் கொடுத்த வகுப்பறை என்னும் பொக்கிஷத்தைச் செம்மைப்படுத்தி கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் அனைத்தையும் கொண்டு அழகுபடுத்தினேன். என்னிடம் குறையாகக் காணப்பட்ட கோபம், முகம் சுழித்தல், ஆர்வமின்மை போன்ற துர்குணங்களை நானே கண்டறிந்து அவைகளைக் குப்பைத்தொட்டியில் போட்டு எரித்தேன். ஊக்குவிக்கும் வண்ணம் கைத்தட்டல், கைக்குலுக்குதல், பரிசு வழங்குதல், ஸ்டார் வரைதல், கிரீடம் சூட்டுதல் போன்ற உத்திகளைக் கையாண்டேன். மிக மிக முக்கியமாகக் குழந்தைகளின் கருத்துக்களுக்கு வாய்ப்பளித்து நேரம் ஒதுக்குவதால் அவர்கள் வகுப்பறை என்ற சூழலை மறந்து வீட்டில் உறவினர்களுடனும் நண்பர்களுடனும் பழகுவது

போலவே என்னுடன் பழக ஆரம்பித்தாலும் கற்றல் அடைவைப்பெற செய்ய முடிந்தது.

**மாணவர்களின் மனத்தேடல்கள்**

தினந்தோறும் முந்தைய நாளில் நடைபெற்ற நிகழ்வுகள் பாடமாக இருந்தாலும் எதுவாக இருந்தாலும் கலந்துரையாடுவோம். அனைத்துக் குழந்தைகளுமே தமக்குத் தோன்றிய எண்ணங்களை என்னிடம் பகிர்ந்து கொள்வார்கள்.

அவற்றில் ஒரு சில - நீங்க விடுப்பே எடுக்காதீங்க எங்களுக்கு போர் அடிக்குது, இப்பல்லாம் கோபப்படமாட்டேங்குறீங்க, எல்லாரிடமும் பாசமாகப் பேசுறீங்க, நாங்க ஏதாவது சொன்னா உடனே திருத்திக்கிறீங்க, அடுத்த ஆண்டும் நீங்களே வரனும், விடுமுறை நாட்களில் உங்களை ரொம்ப மிஸ் பண்ணுவோம்.



**உபகாரநம்பிக்கைமேரி**, தொ.ப.ஆ, அ.தொ.ப. தவளக்குப்பம்




# SCHOOL PRACTICES AND DEVELOPMENT

# ஜெ. கிருஷ்ணமூர்த்தியுடன் ஆசிரியர்கள் உரையாடல்கள்

(**ஜெ. கிருஷ்ணமூர்த்தி** - *ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர். புதுச்சேரி பள்ளி கல்வி பாதுகாப்பு இயக்கத்தில் செயலாளராக இருந்து பல மாற்றங்களை ஏற்படுத்தியவர். புதுவை அறிவியல் இயக்கத்தை உருவாக்கியவர்.*)




## புத்தகப் பரிந்துரைகள்

“ஆசிரியர்கள் அனைவரும் ஒரு குடும்பமாகச் செயல்பட்டு ‘பள்ளி’ என்பதற்கான அடையாளத்தை முதன்மைப்படுத்திப் பணியாற்றுதலே உண்மையான வெற்றியாகும்” எனக்கூறி தன்னுரையைத் தொடங்கிய ஜெ.கிருஷ்ணமூர்த்தி, விமர்சன அடிப்படையிலான கற்றலுக்கு (Critical Learning) ‘பகல் கனவு’, ‘ஜன்னலில் சிறுமி’, ‘ஏன் டீச்சர் என்னை ஃபெயில் ஆக்குனீங்க?’, ‘குழந்தைகள் எவ்வாறு கற்கிறார்கள்?’, ‘குழந்தைகள் எவ்வாறு தோற்கிறார்கள்?’, ‘முதல் ஆசிரியர்’, ‘ஒடுக்கப்பட்டோரின் விடுதலைக்கான கல்வி’ டாக்டர். பரசுராமனின் ‘நல்ல பள்ளிக்கூடம்’, மற்றும் ‘தவறில்லாமல் எழுதுவது எப்படி’ முதலிய நூல்களின் சிறப்பம்சங்களைக் குறிப்பிட்டு ஆசிரியர்களுக்குப் பரிந்துரை செய்தார். மேலும் கல்வி குறித்த இத்தகைய நூல்களைப் படிக்கக்கூடிய வாய்ப்பு தன் மாணவப்பருவத்தில் கிடைக்கவில்லையே என்ற தன் வருத்தத்தையும் பதிவுசெய்தார். இப்புத்தகங்களைப் படிக்க ஆரம்பித்த பிறகுதான் தன்னுடைய உண்மையான, ‘விமர்சன அடிப்படையிலான’ கற்றல் தொடங்கியதாகக் குறிப்பிட்டு “நாம் கல்வி தொடர்பான நூல்களை எவ்வளவு படிக்கின்றோமோ அவ்வளவு சிறப்பான மாணவர்களை உருவாக்க முடியும்” என்றார். ஆசிரியை ரூபி தெரசா அவர்களின் யூட்யூப் வீடியோக்களையும் மற்றும் ஆசிரியர் அன்பழகன் தன்னிடம் பகிர்ந்த கல்வி தொடர்பான ஆன்டிராய்ட் பயன்பாட்டுச் செயலிகளின் தற்கால அவசியத்தையும் குறிப்பிட்டு “வாழ்வியலைப் போதிக்கின்ற இடமாக வகுப்பறை இருக்கவேண்டும்” என்று பள்ளித் துணை ஆய்வாளர் வட்டம் - 3 திரு. பக்கிரிசாமி கூறியதை மேற்கோள்காட்டினார்.

## இடைநிற்றல் - தொடக்கக்கல்வியைப் பொதுமையாக்கல்

“வகுப்பறை மிகவும் துயரமாக இருக்கிறது, பாடத்திட்டம் அதைவிடவும் துயரமாக இருக்கின்றது” என்று ஆசிரியர்களின் பின்னூட்டத்தைக் குறிப்பிட்டு “வகுப்பறைத் துயரங்களைப் பற்றி வகுப்பறையை விட்டு வெளியேறிப்போன மாணவர்களைக் கேட்டால்தான் நாம் உண்மை நிலையை அறியமுடியும்” என்றார். இடைநிற்றல் குறித்த, பாரதியார் பல்கலைக் கழகப் பேராசிரியர். ராமகிருஷ்ணன் அவர்களுடைய “இடைநிற்றல் ஏன் நிகழ்கிறது? அதற்கான காரணம் என்ன?” என்பன குறித்த ஆய்வறிக்கையை மேற்கோள் காட்டி பழமையான இடைநிற்றல் காரணங்களை ஒப்பிட்டு ஆராய்ந்து அதனடிப்படையில் பின்தங்கிய மாணவர்கள் வகுப்பறையில் ஒடுக்கப்படுவதையும் ஒதுக்கப்படுவதையும் குறிப்பிட்டார். ‘வகுப்பறை பின்தங்கிய மாணவர்களுக்கு மகிழ்ச்சி நிறைந்த இடமாக இல்லை’ என்பதையும் “நாங்கள் ஆசிரியர்கள் விரும்புகின்ற மாணவர்களாக இல்லை” என்று பின்தங்கிய மாணவர்கள் ஆய்வில்

குறிப்பிட்டதையும் கூறினார். இம்மாதிரியான ஆய்வுகளையெல்லாம் அடிப்படையாகக் கொண்டுதான் 'அனைவருக்கும் கல்வி' (Education for All) திட்டம் அரசால் கொண்டு வரப்பட்டதையும், 'தொடக்கக்கல்வியைப் பொதுமையாக்கல்' (Universalisation of Elementary Education) திட்டத்தையும் நினைவுகூர்ந்தார்.



**குழந்தைகளுக்கு மரியாதை - ஜானஸ் கோர்ச்சாக்** (Janus Korczak)

கல்வியிலறிஞர் ஜானஸ் கோர்ச்சாக்- (Janus Korczak) முதன்முதலில் "குழந்தைகளுக்கு மரியாதை" எனும் கருத்தாக்கத்தைக் குறிப்பிட்டதாகக் கூறி ஜானஸ் கோர்ச்சாக்கின் நூல்களைப் படிக்குமாறு ஆசிரியர்களை ஊக்கப்படுத்தினார். "வன்முறைகளிலேயே மிகவும் கொடூரமானது எதுவென்றால் பெற்றோர்களும் ஆசிரியர்களும் குழந்தைகளைப் பயமுறுத்தித் தாங்கள் நினைத்தைச் சாதித்துக் கொள்வதுதான். குழந்தைகளிடம் குரலை உயர்த்துவது கூட வன்முறையே!" எனும் ஜானஸ் கோர்ச்சாக்கின் கூற்றுகளை மேற்கோள் காட்டினார். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் மீதான பாதுகாப்பு உணர்வை வெளிப்படுத்தும் வழிமுறைகளை மிகவும் கவனமாகக் கையாளவேண்டும் என்பதை வலியுறுத்தினார். "சமூகத்தில் உள்ள பல பிரச்சினைகளை எதிர்கொள்ளும் திறன் வாய்ந்த மாணவர்களை உருவாக்கக் கூடிய வழிமுறைகளை, தற்போது உள்ள பாடத்திட்டங்களோடு இணைந்து கற்பிக்கக் கூடியவர்களாக ஆசிரியர்கள் விளங்க வேண்டும், அதுவே சிறந்த ஆசிரியர்களின் தலையாயப் பணியாகும்" என்று குறிப்பிட்டார். தலைமைப் பொறுப்பில் இருப்பவர்களையே விசாரிக்கும் அளவிற்கு வலிமை கொண்ட ஷானஸ் கோர்ச்சாக்கின் 'குழந்தைகள் நீதிமன்றம்', எப்படிச் செயல்படும் என்பதை விளக்கி, அதை மேற்கோளாகக் கொண்டு கீழ்ப்படிதலானது கீழ்நிலையில் இருந்து மேல்நிலை வரை இருப்பது வழமை, ஆனால் கல்வித்துறையில் கீழ்ப்படிதல் மேல்நிலையில் இருந்து கீழ்நிலை வரை படிப்படியாக இருக்க வேண்டும் என்று கூறினார். ஒரு தலைமையாசிரியர் ஆசிரியருக்கும், ஓர் ஆசிரியர் மாணவர்களுக்கும் கீழ்ப்படியவேண்டும்' என்று கேட்டுக்கொண்டார். ஜெ.கிருஷ்ணமூர்த்தியின் கீழ்ப்படிதல் தொடர்பாக வளநர்.விவேக் எழுப்பிய 'மனிதர்களுக்கு இடையே உயர்வு/ தாழ்வுப் படிநிலைநிலைகள் உள்ளனவா? அப்படியென்றால் அவற்றை உருவாக்கும் காரணிகள் என்ன?'- என்ற கேள்விக்கு ஜெ.கிருஷ்ணமூர்த்தி ஆசிபா வன்புணர்வு செய்யப்பட்ட நிகழ்வினை அழுத்தமாகப் பேசி , அத்தகைய மனிதர்களும் இதே மண்ணில்தான் வாழ்கிறார்கள் என்றார். மேலும் "என்னைப் பொறுத்தவரை மனிதர்களுக்கு இடையே உயர்வு/ தாழ்வுப் படிநிலைகள் பணத்தாலோ, பதவியாலோ அல்லது கல்வியாலோ உருவாகுவது இல்லை, ஒரு மனிதனின் நற்பண்புகள் தான் அப் படிகளை உருவாக்கி பிற மனிதர்களிடமிருந்து அவனை வேறுபடுத்திக் காட்டுகின்றன" என்றார்.

ஜான்ஸ் கோர்ச்சாக் எழுதிய 'குழந்தைகள் உரிமைப் பிரகடனத்தை' அறிமுகப்படுத்தி, அது யுனெஸ்கோவில் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவும் தெரிவித்தார். அமெரிக்கப் பள்ளிகளில் தாய்மொழிக்கு வழங்கப்படும் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். பயிற்றுமொழி ஆங்கிலமாகவே இருந்தாலும், பெற்றோருக்கு ஆங்கிலம் நன்றாகவே தெரிந்திருந்தாலும் வீட்டில் குழந்தைகளோடு பெற்றோர் தாய் மொழியில் பேசவேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார்.

எவர் சிறந்த ஆசிரியர் என்பதற்கான வரையறையாக "எந்த ஆசிரியர் தன்னுடைய அறிவிற்கு உடனடியாக எட்டாத கேள்விகளைக் கேட்கும் அளவிற்குத் தன்னுடைய வகுப்பறையில் மாணவர்களுக்குச் சுதந்திரத்தை அளித்துள்ளாரோ, அவரே என்னைப் பொறுத்தவரை சிறந்த ஆசிரியர்" என ஜெ. கிருஷ்ணமூர்த்தி குறிப்பிட்டார்.

கல்வியின் பொதுவான நோக்கங்களைத் தாண்டி சமூக, பண்பாட்டு, அரசியல் சார் நோக்கங்களையும் கற்றுத்தர வேண்டியது ஆசிரியர்களின் கடமையாகும் என வலியுறுத்தினார். உங்களுடைய பார்வையை வகுப்பறைக்குள்ளேயோ, பள்ளிக்குள்ளேயோ அல்லது கல்வித்துறைக்குள்ளேயோ குறுக்கிக் கொள்ளாதீர்கள்; வானத்தின் மீதேறி உங்கள் சமூகத்தின் அனைத்துப் பரிமாணப் பிரச்சினைகளையும் கண்டு உணருங்கள்



எனக்கூறி ஆசிரியர்களிடம் தங்கள் எல்லைகளை விரிவு செய்யக் கேட்டுக்கொண்டார்.

ஜானஸ் கோர்ச்சாக்கின் 'குழந்தைகளுக்கு மரியாதை' எனும் கருத்தாக்கத்தில் ஈர்க்கப்பட்டு அதைத் துணைநூலாகக் கொண்டு அதே தலைப்பில் தான் ஒரு கட்டுரை எழுதியதாக ஆசிரியர். ஜேம்ஸ் குறிப்பட்டார். பாலோ பிரேயரின் 'ஒடுக்கப்பட்டோரின் விடுதலைக்கான கல்விமுறை' நூலும் தன்னைப் பாதித்தாகக் கூறி இருவரின் நூல்களையும் பிற ஆசிரியர்களுக்குப் பரிந்துரை செய்தார். மேலும் குழந்தைகள் நம்முடைய நடவடிக்கைகளைப் பிரதிபலித்தே பலவற்றையும் கற்றுக்கொள்கிறார்கள் என்பதால் அவர்களுக்கு உரிய மரியாதை தந்து நற்பண்புகளைக் கற்பிக்கவேண்டும் என்று கூறினார்.

'முதல் ஆசிரியர், ஒடுக்கப்பட்டோரின் விடுதலைக்கான கல்விமுறை, ஒவ்வொரு குழந்தையையும் நேசிப்போம் - ஆகிய நூல்கள் தன் கல்விப் பணியிலும் தனிப்பட்ட வாழ்விலும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியதாகக் குக்கூ காட்டுப்பள்ளி ஆசிரியர் செந்தில் குறிப்பிட்டார்.

ஒவ்வொரு மாணவனும் தனிச்சிறப்பு வாய்ந்தவர்களாக உள்ளனர். ஒவ்வொருவரையும் புரிந்துகொள்ள திறந்த மனதோடு ஆசிரியர்கள் மாணவர்களை அணுகவேண்டும். முதலில் ஆசிரியர் தன்னைப்பற்றியும் பணிச்சூழலின் தன்மையையும் புரிந்துகொண்டு அவற்றின் அடிப்படையில் பணியாற்ற வேண்டும் என்று திரு. பக்கிரிசாமி ( Zone 3 DIS) அவர்கள் ஆசிரியர்களைக் கேட்டுக்கொண்டார்.



நம்முடைய கல்விமுறை, கற்றல்-கற்பித்தல் அணுகுமுறை, கற்பித்தலியல் நுட்பங்கள், பாடப்புத்தகங்கள், பாடப்பொருள்கள் என அனைத்தையும் கேள்விக்கு உட்படுத்தினாலொழிய எந்த மாற்றத்தையும் கல்வித்துறையில் கொண்டுவர முடியாது என்று மொழிக்கல்வி வல்லுநர் ஆனந்தன் தெரிவித்தார். மேலும் அவர் பாலோ பிரேயரின் விமர்சன அடிப்படையிலான கற்பித்தல் முறையின் அவசியத்தைக் கூறி, அதைப்பற்றிப் பேசியதற்காக ஆசிரியர். செந்திலுக்கு நன்றி கூறினர்.

வளநர் காந்திமதி, நூல்களைப் படித்து அதன்மூலம் அறிவு பெறுவதற்கும், நூல்களைப் படித்து அதன் தாக்கதினால் ஏற்படும் நடத்தை மாற்றம் இவையிரண்டிற்கும் இடையேயுள்ள வேறுபாட்டை அடையாளப்படுத்தி, ஆசிரியர்களுடனான புத்தகத் திறனாய்வு நிகழ்வுகள் எப்படித் தன்னுள் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தின என்று குறிப்பிட்டார்.

ஆசிரியை சுபாஷினி 'ஒடுக்கப்பட்டோரின்



விடுதலைக்கான கல்விமுறை' நூலின் மொழிபெயர்ப்பு படிப்பதற்குச் சற்று சிரமமாக இருந்ததாகக் குறிப்பிட்டார். ஜன்னலில் சிறுமி, மாடசாமியின் சிவப்பு பால்பாயின்ட் பேனா, ஆளுக்கொரு கிணறு போன்ற புத்தங்கள் தன்னுள் ஒருவித குற்ற உணர்ச்சியை ஏற்படுத்தித் தன்னுள் படிப்படியாக நல்ல மாற்றங்களைக் கொண்டுவந்தன என்று குறிப்பிட்டு, பிற ஆசிரியர்களுக்கும் அப்புத்தகங்களைப் பரிந்துரை செய்தார்.

### ஜெ. கிருஷ்ணமூர்த்தி - நிறைவுரை

''உங்களுடைய பணியைச்சிறப்பாகச் செய்து திருப்தியடைவதோடு நின்றுவிடாமல் உங்களைப் போன்று பிறரையும் அர்ப்பணிப்பு உணர்வோடு பணியாற்றச் செய்வதற்கான முயற்சிகளில் நீங்கள் ஈடுபடவேண்டும்'' - என்று ஜெ. கிருஷ்ணமூர்த்தி ஆசிரியர்களைக் கேட்டுக்கொண்டார். முரட்டுத்தனம் நிறைந்த ஒரு மாணவனை, தான் எவ்வாறு அன்புசெலுத்தி அவனுக்குச் செடிகளைப் பராமரிப்பது போன்ற சிறுசிறு பொறுப்புகளைக் கொடுத்து, அவனை நல்வழிப்படுத்திய அனுபவங்களை ஆசிரியர்களோடு பகிர்ந்துகொண்டார்.

கலைத்தித்திட்ட எல்லைகளை எல்லாம் தாண்டி, "குழந்தைகள் ஏன் கற்றுக்கொள்ளவில்லை?'' என்ற கேள்வியைத் தவிர்த்து, குழந்தைகள் எப்படிக் கற்கிறார்கள்? எது அவர்களை கற்பதற்கு ஆர்வமூட்டுகின்றது? என்றெல்லாம் யோசித்து வகுப்பறைச் சவால்களுக்குத் தீர்வுகாணச் சொன்னார். சிறப்புக் குழந்தைகளையும் பொதுப்பள்ளிகளில் சேர்த்து, கல்வியில் சமவாய்ப்புகளை அளிக்கும் 'உள்ளீடான கல்வி முறைமை'யின் (Inclusive Education) அவசியத்தை வலியுறுத்தினார். அலுவலகப் பணிகளைக் கூடுதலாக வழங்குவதால் ஆசிரியர்களுக்கு ஏற்படும் மன அழுத்தத்தால் ஆசிரியர்களும் மாணவர்களும் எவ்வாறு பாதிக்கப்படுகின்றனர் என்று விளக்கி, இப்பிரச்சினையிலிருந்து ஆசிரியர்களை விடுவிக்கவேண்டும் என்று தலைமை ஆசிரியர்களைக் கேட்டுக் கொண்டதோடு, தன் பள்ளி ஆசிரியர்களுக்கு அலுவலகப் பணிகளைக் கூடுதலாக வழங்காத இருளன்சந்தை அரசு தொடக்கப்பள்ளித் தலையாசிரியை.மகேஸ்வரி அவர்களைப் பாராட்டினார். பிரச்சினைகளைத் தனித்தனி நபர்களாக அணுகுவதைவிட, அனைவரும் சேர்ந்து ஓர் அமைப்பாக அணுகுவதே சிறப்பான தீர்வுகளைத் தரும் என வலியுறுத்தினார்.

"ஆங்கில மொழிக் கல்வியைச் சிறப்பாக அளியுங்கள், ஆங்கில வழிக்கல்வி அறவே வேண்டாம்" என்பதை இறுதியாக வலியுறுத்தி ஜெ.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தன்னுரையை முடித்துக்கொண்டார். வளநர். சாலை செல்வம், ஜெ. கிருஷ்ணமூர்த்தியின் நீண்ட உரைக்கு நன்றி தெரிவித்து உரையாடல் நிகழ்வினை முடித்துவைத்தார்.

# COMMUNITY INVOLVEMENT- INCREASED ENROLMENT




> A school community is not merely made up of teachers, students and their parents; it includes every member of the village. Involving the whole community in school programs helped both sides to have a better understanding of each other. This understanding gave shape to a series of school events and a variety of extracurricular activities. As the word about the school's commitment to education spread, the school enrolment increased.

There are many issues faced by government schools: the lack of proper infrastructure and decrease in student strength are major concerns. This is largely because of the negative image people have about government schools and the rise in the number of private schools. To this end, I would like to share my inputs on how we improved student enrollment through a 'Community Participation Programme' in our school.

## Community Participation Programme (CPP)

In my opinion, a community not only involves the students, their parents and the School Management Committee (SMC), but every member of the village. It was a challenging task to involve all of them. Our school teachers and staff members got together and planned a yearly schedule of Community Participation Programmes to bring everyone together.

Every month we had programmes such as:For each programme, the fourth and fifth grade students of our school, created simple invitation cards and invited their neighbours and all the community members. We, the teachers concentrated our efforts on the participation of members of the panchayat, wealthy patrons and business people residing in the locality. We also interacted with the parents of children studying in the private schools nearby and made them participate in our school programmes.

Through these programmes, we successfully reached out to all the community members. These programmes created an opportunity for everyone in the village to visit our school, go around our thriving classrooms and browse through our students' activities and projects. This helped us earn a good reputation in the community. This was made possible by the collective effort of our SMC and Parents Teachers Association (PTA).

## More Activities

Through these programmes, we were able to understand

| Month | Name of the event |
|---|---|
| June | Pravesh Utsav |
| July | Birth Anniversary of Dr. Kamarajar |
| August | Science Exhibition (School level) |
| September | Rally week (Creating awareness on social issues) |
| October | Hand Wash Day, Food Festival, Birth Anniversary of Dr. A P J Abdul Kalam |
| November | Children's Day |
| December | Christmas Celebration |
| January | Samathuva Pongal |
| February | Community Participation Programme (Sunday special) |
| March | Annual Day |

better the views of the people and their expectations from government schools. The feedback from the community helped us focus on the areas of their interest and improve them. We started to involve our students in many extracurricular activities like Spoken English, Yoga, Karate, arts & crafts, smart class, movie screening, etc. We encouraged students to talk about these activities and programmes with their playmates and neighbours.



Spoken English classes

We engaged third, fourth and fifth grade students in spoken English classes once a week. During these classes we encouraged students to participate in different speaking activities such as role play, dialogue conversation, story narration, skits, etc. This motivated them to speak in English.

Yoga / Arts / Crafts

Our school teachers learned basic yoga exercises, arts and crafts activities and taught them to students once a week.

Smart class / Movie screening

On the second Wednesday of every month, we borrowed a projector and laptop from Azim Premji Foundation and arranged smart class sessions for our students. In the morning session, we played lesson oriented CDs provided by our department such as Toon Masti, Hello English, etc. During the afternoon session, we screened educational movies and animated movies. Children thoroughly enjoyed these activities and looked forward to these sessions.

Karate class

We organized Karate classes for our children thrice a week after school hours. An alumnus, M. Radhika, a Karate practitioner, taught the basics of Karate to our students. The






news of this activity spread and people started talking more about our school.

## Results and reflections

By conducting regular community involvement programmes in our school, we enrolled a certain number of students from private schools during the academic year 2017-18. This was to our great surprise and I believe that this was possible only through the Community Participation Programmes. These programmes created a difference in the community and enhanced the image of our school. I feel proud to say that each class of our school has one or two students who have attended private schools earlier.



SAINT THOMAS VIMALA - PST - GPS KRISHNAVARAM

# EXPLORING INNOVATIVE STRATEGIES FOR DEVELOPING STUDY SKILLS






We, the teachers, often find ourselves wishing to be credited for the work we have done in school. However, we must adopt a different strategy; we must work towards creating a brand for our school. In such a case, even if we get transfered to different locations, parents will look forward to admitting their children in our school. It is of utmost importance that we keep working towards that aim. Then, naturally, we will get our due recognition.



## Language Games:

To develop English-language learning amongst our students, we came up with a few different ideas. We did begin with the traditional approach of finding the difficult words in the lesson, highlighting them, finding their meaning, and writing them in their notebooks. However, we performed this conventional exercise in an unconventional manner—by projecting the textbook on the smart board and highlighting the words with a presentation marker. It proved to be an excellent strategy to captivate the students, and they were interested and attentive in the







Teachers must work not for themselves but for the school and try and develop it into a brand. If that is achieved, then parents would want to send their children to that school. One of the ways in which this can be done is by making effective use of Information and Communication Technology (ICT), Visual learning media, and language games as tools to make learning easier and more interesting.



learning activity because of its novelty.

We also made use of jumbo books that had more pictures than text. This small change greatly helped in improving the interest of the students towards reading, even amongst the low-proficient ones. Certain word games helped in boosting memory and enabled faster learning, further improving the study skills of the students. For instance, in one game, a die would be rolled, and the students would be asked to pick six cards from a pack of cards.

After doing that, the students were required to synchronize the cards with the number on the die.

## Utilization of ICT:

Apart from engaging in fun classroom activities, we also utilized Information and Communication Technology (ICT) in the best possible way. The students were given ample opportunities to interact and familiarize themselves with this medium, and they found it very interesting.

A lot of study materials were used to simplify the lessons, thereby developing the studying skills of the students. Visual Learning Media, such as Tangrams and Domino cards, were used for this purpose.

I am also proud to share that we have launched smart classes in our school and are making use of iPad Pro and Amazon 5T. Lessons are taught using YouTube videos, and it is ensured that the students are given opportunities to use interactive learning media.

These are a few ways in which we have tried to improve the learning environment in our school, and these have definitely brought about considerable success in terms of students' learning and progress. All of this has been possible through the support of our Zone DIS, and we are grateful for the freedom that she has given us.



**K. RAJARAM - GPS - SOOKANATHANPET**



# பசுமைப் பள்ளி

**பள்ளிக் குழந்தைகளே வருங்காலச் சமூகமாக இருக்கும் பட்சத்தில் வகுப்பறை மாற்றமே நமது சமுதாயத்தின் மாற்றம்.**

**மாணவர்கள் மனதில் நமது இயற்கை அன்னையைப் பாதுகாப்பதன் அவசியத்தை உணர்த்தி, மரம் நடுவதும் அவற்றைப் பாதுகாப்பதும் இன்றைய காலத்தில் எவ்வளவு முக்கியமான செயல் என்பதையும் இம்முயற்சியில் பள்ளியின் பங்கு என்ன என்பதையும் இக்கட்டுரையில் காணலாம்.**

## பசுமை விரும்பி

சிறு வயதிலிருந்தே எனது சுற்றுப்புறத்தைப் பசுமையாக வைத்து கொள்வதில் எனக்கு அலாதி பிரியம். அந்த பச்சைப்பசேல் என்ற நிறம் கண்ணுக்கு மட்டுமல்ல மனதிற்கும் ஆனந்தம் தரும். எனது சிறு வயது நிகழ்வுகள் பல நினைவுக்கு வருகின்றன. நான் திருச்சியில் தங்கியிருந்த பொழுது வீட்டின் பின்புறம் பரந்த இடம் இருந்தது .அந்த இடத்தில் நானும் எனது சகோதரனும் விளையாட்டாகச் செடி வளர்க்க ஆரம்பித்தோம். மிளகாய்ச் செடி, கத்தரிக்காய், பூசணிக்காய், அவரைக்காய், போன்ற சிறு வகை செடி கொடிகளை வளர்த்து பராமரிப்போம். அதுமட்டுமில்லாமல் அச்செடிகளில் விளையும் பொருட்களை வீட்டிற்கும் பயன்படுத்துவோம். இப்படி வளர்ந்ததுதான் எனது ஆர்வம். எப்படியாவது மாணவர்கள் மனதில் நமது இயற்கை அன்னையைப் பாதுகாப்பதன் அவசியத்தை உணர்த்திட வேண்டும் என்பதே எனது மிகப்பெரிய ஆசை.

## புது முயற்சிகள்

பள்ளிக்குழந்தைகளே வருங்கால சமூகமாக இருக்கும் பட்சத்தில் வகுப்பறை மாற்றமே நமது சமுதாயத்தின் மாற்றம் என்பது திண்ணம்.

நான் பணியில் சேர்ந்து இரண்டு வருடம்தான் ஆகிறது என்பதால் நடப்பவை எல்லாம் எனக்கு அனுபவமே. 2016 - 2017 ஆம் கல்வியாண்டில் நான் பணியில் சேர்ந்த புதியதில், எனது பள்ளி வளாகம் சற்று பெரியது, ஆனால் மரங்கள் சற்றுக்குறைவே. மாணவர்கள் உதவியுடன் மரக்கன்றுகள் நட முடிவு செய்து மேட்டுப்பாளையத்தில் உள்ள அரசு நர்சரியில் இலவச மரக்கன்றுகள் வாங்கும் முறைகள் பற்றி விவரம் கேட்டு தலைமையாசிரியை நிலை-II, திருமதி. இந்திரா அவர்களிடம் அனுமதியுடன் புதுவையிலுள்ள வனத்துறை அலுவலகத்தின் வாயிலாக மேட்டுப்பாளையம் அரசு நர்சரியிலிருந்து 75 மரக்கன்றுகள் வாங்கி வந்தோம். என்னுடன் மரக்கன்றுகள் வாங்க உடனிருந்தவர் ஆசிரியர் திரு. வெங்கடேசன் அவர்கள்.

## மரம் நடு விழா

மரக்கன்றுகள் நடும் நிகழ்வை எனது தலைமையாசிரியை ஒரு விழாவாகக் கொண்டாட விழைந்து விழா ஏற்பாடு செய்தார்.



அதன்படி, பெற்றோர் மற்றும் ஆசிரியர் சங்க உறுப்பினர்கள் வரவழைக்கப்பட்டனர். அவர்களது கரங்களால் ஏறத்தாழப் பத்து மரக்கன்றுகள் நடப்பட்டன. மீதமுள்ள மரக்கன்றுகளை நானும் எனது மாணவர்களுமே நட்டு முடித்தோம். இப்பொழுது பள்ளி வளாகம் முழுவதும் சிறு சிறு குழந்தைகளைப் போல மரக்கன்றுகள் காட்சியளிப்பது என் மனதுக்கு மிகுந்த மகிழ்ச்சியாக இருக்கிறது.

## கடந்த கால அனுபவப் பகிர்வு

பள்ளியில் இன்று ஏறத்தாழ பத்துக்கும் மேற்பட்ட பெரிய மரங்கள் உள்ளன. பெற்றோர் ஆசிரியர் சங்க உறுப்பினர்களில் ஒருவர் பள்ளிக்குப் பெரிதும் உதவியாக இருக்கும் பள்ளியின் முன்னாள் மாணவர் கஜேந்திரன் என்பவர் படிக்கும் காலத்தில் மாணவர் பருவத்தில் நட்டவை அம்மரங்கள். சிறு வயதில் எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாமல் விளையாட்டாக நட்ட மரக்கன்றுகள் இன்று நூற்றுக்கணக்கான சிறு பறவைகள், பூச்சியினங்களுக்கு வாழிடமாக இருப்பது மட்டுமில்லாமல், எம் பள்ளிக்கு குளிர்ந்த காற்றும் நிழலும் தரும் மிகப்பெரிய விருட்சமாக இருப்பது அரிய விசயம் அல்லவா!

## தாவரங்கள் நமது மூதாதையர்கள்

எனது பள்ளிப் பருவத்திலிருந்தே, நமது பூமியில் உள்ள தாவரங்கள் உட்பட அனைத்து உயிரினங்களும் நமது மூதாதையர்கள் எனும் கருத்தில் எண்ணம் நிலைத்துவிட்டது. இதனால் தாவரங்களையும் மற்ற உயிரினங்கள் போலவே பாவிக்க வேண்டும் என்பது எனது விருப்பம். ‘அவதார்’ என்கிற ஆங்கிலப் படத்தில் வரும் கதாபாத்திரங்கள் அங்குள்ள மிகப்பழமையான மரங்களை அவர்களது மூதாதையர்களாகப் பாவித்து வழிபடுவது எனது கருத்துக்கு வலு சேர்த்தது. உயிரினங்கள் ஒரு செல் உயிரினத்திலிருந்து வந்தவைகள் என்றால் தாவரங்கள் நமது மூதாதையர்கள் தானே.

## கடினமான அனுபவம்

நாங்கள் மரக்கன்றுகள் நட்டு ஒரு மாதம் கூட முழுமை பெறாத நிலையில் பெரும்பாலானவை காணாமல் போய் விட்டன அல்லது சிதைக்கப்பட்டன. பிடுங்கி எறியப்பட்ட காய்ந்த செடிகளைப் பார்த்த எனக்கு மனம் நொந்தது. மரங்களைக் குழந்தைகளாகவே பாவிக்கும் ஒவ்வொருவருக்கும் அதன் வலியும் வேதனையும் புரியும். எனது பள்ளி உயர்நிலைப் பள்ளி என்பதால் உயர் வகுப்பு மாணவர்களிடமிருந்து செடிகளைப் பாதுகாப்பது இயலாத காரியமாக



இருந்தது. மேலும், எங்கள் பள்ளி வளாகம் பொது மக்களும் பயன்படுத்தும் வளாகம் என்பதால், அந்த மரக்கன்றுகள் அவர்களது கண்களை உறுத்தியதில் ஆச்சரியமில்லை. அந்த மரக்கன்றுகள் அவர்கள் சமூகத்தினரின் நலனுக்காகத் தான் என்பதை அவர்கள் உணராமல் போனதே அதற்கு காரணம்.

ஒரு சமயம் அந்த ஊர்க்கோயில் திருவிழாவின் போது அவ்வூர் இளைஞர்கள் எம் பள்ளியில் உள்ள செடிகள் மேல் பட்டாசு வெடித்துக் கொண்டாடினர். இதனால் பெரும்பாலான செடிகள் இலைகளற்று எலும்புக்கூடுகள் போல் காட்சியளித்தன. இந்த நிகழ்வையே எனது மாணவர்களுக்குப் பாடமாக்கினேன். செடிகள் நடுவதை விட இயற்கை பற்றிய புரிதலை மாணவர்களிடம் ஏற்படுத்த வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தேன். தினந்தோறும் தாவரங்களின் மகத்துவத்தை எடுத்துக் கூறினேன். செடிகளுக்கும் மனிதர்களைப் போலவே உணர்வு உண்டு என்பதை விளக்கினேன். பிறகென்ன, என் மாணவச் செல்வங்களே செடிகளைக் கவனித்துக் கொண்டனர்.

## உற்ற உறுதுணை

2017 ஆம் ஆண்டில் எங்கள் பள்ளிக்குப் புதியதாக தலைமையாசிரியர் நிலை-II, திரு. ராமதாஸ் அவர்கள் பணியில் சேர்ந்தார். அவரும் செடிகள் பராமரிப்பில் அலாதி பிரியம் கொண்டவர், அனுபவசாலியும் கூட. என்னுடைய முயற்சிகளுக்கு அவரே பெரும் உறுதுணையாக நின்றார். பலமுறை அவர் தனது சொந்தப் பணத்தில் செடிகள் வாங்கிக் கொடுத்துள்ளார். ஒவ்வொரு முறை செடிகள் நடும் போதும் அதன் பிறகும் பள்ளி மாணவர்கள் மற்றும் வெளியாட்கள் அவைகளுக்கு ஏற்படுத்தும் பாதிப்புகள் குறித்து வருந்தினாலும் முதல் முறை இருந்த பாதிப்பை விட அடுத்த முறை குறைவானதாகவே இருந்தது. இது எங்கள் முயற்சிக்கு பலன் கிடைத்ததை உறுதி செய்தது.

அதன் பிறகு பலமுறை, மரக்கன்றுகள் மற்றும் அழகுச் செடிகள் என்று நூற்றுக்கணக்கான செடிகள் வாங்கி நட்டோம். இப்பொழுது எம் பள்ளி பசுமைப் பள்ளியாகவே மாறிவிட்டது எனலாம். ஒருமுறை எம் பள்ளிக்கு வருகை புரிந்திருந்த கல்வி முதன்மை அலுவலர் அவர்கள், பள்ளி சுத்தமாகவும் பசுமையாகவும் பராமரிக்கப்படுவதாகக் கூறி தலைமையாசிரியரிடம் பாராட்டிச் சென்றார்.

இதற்கிடையில் மாணவர்களிடம் எப்படிச் செடிகள் பராமரிப்பில் ஆர்வம் உருவானது என்பது ஆச்சரியமான விசயம். ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு வகுப்பிற்கு செல்லும் போதும் குறைந்தது பத்து நிமிடம் நம் சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலியுறுத்திப் பேசுவேன், கணித பாட வகுப்பிலும் கூட. மாணவர்களைக் கொண்டே பள்ளம் பறித்தல், செடி நடுதல் மற்றும் நீர் ஊற்றுதல் என அனைத்து வேலைகளையும் செய்வேன். அதிலும் குறிப்பாகத் தொடக்கப்பள்ளி மாணவர்களையே

அதிகம் பயன்படுத்தினேன். பொதுவாக ஒரு பொருள் நமக்குச் சொந்தம் என்று தெரிந்த பிறகுதான் அதன் மேல் உள்ள நமது பொறுப்பு உணர்வு அதிகரிக்கும். எனவே மாணவர்கள் அவர்கள் நட்ட செடியைப் பராமரிப்பதில் மிகுந்த ஆர்வம் காட்டினர். தற்பொழுது எமது பள்ளி வளாகத்தில் உள்ள செடிகள், மரக்கன்றுகள் அனைத்தும் ஆரம்பப்பள்ளி மாணவர்களாலேயே பாரமரிக்கப்படுகின்றன என்பது தனித்துவம் வாய்ந்தது. இதுவே நாங்கள் செய்த முயற்சிக்கு பெரும் வெற்றி.

2016-2017 ஆம் கல்வி ஆண்டில் நான் ஆறாம் வகுப்பு மாணவர்களைக் கொண்டு ஒரு நாடகம் (Mime) ஏற்பாடு செய்தேன். அந்த நாடகம் மரங்களை வெட்டக் கூடாது என்ற மையக் கருத்தை அடிப்படையாகக் கொண்டது. அந்நாடகம் அனைவரிடமும் பாராட்டைப் பெற்றது. இந்நேரத்தில் எனது முயற்சிக்குப் பெரிதும் உறுதுணையாக இருந்த தலைமையாசிரியர்கள், மற்ற ஆசிரியர்கள் மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக எமது பள்ளி மாணவச் செல்வங்கள் அனைவருக்கும் எனது இதயம் கனிந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

## எதிர்காலத் திட்டங்கள்

நாம் நம் சமூகத்தை மாற்ற நம்மைச் சுற்றியுள்ள குழந்தைகளின் மனதில் ஆரோக்கியமான எண்ணங்களை வளர்த்தாலே போதுமானது. ஏனென்றால் எதிர்காலச் சமூகமே அவர்கள்தான்.

- கிராம வளாகத்தைச் சுத்தம் செய்தல்.
- தெருமுனை சமுதாய விழிப்புணர்வு நாடகங்கள் நடத்துதல்.
- பள்ளி மாணவர்களிடம் நற்பண்புகளை வளர்க்க தொடக்கப்பள்ளியிலேயே மாணவர் அமைப்பு மற்றும் சுகாதாரக் குழுக்கள் அமைத்தல்.

இது போன்ற பல எதிர்காலத் திட்டங்கள் மனதில் உள்ளன. மாணவர்கள் மற்றும் சக ஆசிரியர்கள் ஒத்துழைப்போடு அவற்றை நிறைவேற்ற கடமைப்பட்டுள்ளேன்.

ஏதோ சமூக மாற்றம் என்பது ஒரு குறிப்பிட்ட சமுதாயமே மாற வேண்டும் என்பதல்ல. சமூகத்தின் ஒரு அங்கமான தனி மனிதன் மாறினாலே, முழு சமுதாயமும் மாற்றம் பெறும். மேலும், நாம்தான் இந்த குழந்தைகளுக்கு ஆசான்கள் என்று நினைத்துக் கொள்ள வேண்டாம். அந்த குழந்தைகளை நமது ஆசான்களாகப் பார்ப்போமேயானால் அவர்களிடமிருந்து நாம் கற்றுக் கொள்வது மிக அதிகம். நம்மிடம் பெற்றோர்கள் ஒப்படைப்பது அவர்களது குழந்தைகளை மட்டுமல்ல ஒரு சமுதாயத்தையே என்பதை நாம் மறந்து விடக் கூடாது. என்றும் குழந்தைகளின் மாற்றமே சமுதாய மாற்றம்.



**செந்தமிழ்ச் செல்வன்**, தொ.ப.ஆ, அ.தொ.ப., திருபுவனை

# பள்ளி நிகழ்வுகளில் வகுப்பறை பங்களிப்பு

**கல்வி என்பது பாட புத்தகத்தைக் கடந்த முழுமையான வளர்ச்சியாகும். பள்ளிச் செயல்பாடுகள் அனைத்தும் மாணவர்களின் முழுமையான வளர்ச்சியை மையப்படுத்தியே இருத்தல் வேண்டும்.**

**பள்ளி விழாக்கள் மாணவர்களின் தனித்திறனை வளர்ப்பதிலும் அவர்களின் வாழ்வியல் திறன்களை வளர்ப்பதிலும் பெரும் பங்கு வகிக்கின்றன. உதாரணமாக, உலக தண்ணீர் தினம், காடுகள் தினம், வாக்காளர் தினம்.**

நான் நான்காம் வகுப்பிற்குப் பாடம் கற்பிக்கின்றேன். எனது வகுப்பில் 36 மாணவச்சிற்பிகள் இருக்கின்றனர். இந்த ஆண்டு தொடக்கம் முதலே எனது குறிக்கோள் ஒன்று தான் - அனைத்து மாணவர்களையும் கற்றல் செயலில் ஈடுபடச்செய்வது மற்றும் பள்ளியில் நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் மாணவர்களைப் பங்குபெறச் செய்வது.

## நோக்கம்

விழாக்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது, இவ்விழாக்கள் பற்றிய அறிவை அதன் முக்கியத்துவத்தை அறியச் செய்தல், மாணவர்களை விழாக்களில் பங்குபெற வாய்ப்பினை ஏற்படுத்துதல், பொறுப்பினைப் பகிர்ந்தளித்தல்.

## நோக்கத்தை அடைய மேற்கொண்ட வழிமுறைகள்

ஒவ்வொரு மாதமும் கொண்டாட வேண்டிய விழாக்களைப் பட்டியலிட்டு அதை நடைமுறைப்படுத்தல். அதாவது - அரசாங்கம் சொல்லும் விழாக்கள் மற்றும் பள்ளியாகவே நடத்தும் விழாக்கள். ஜூன் - 21 உலக யோகா தினம் அன்று மாணவர்கள் உடல் நலத்தினை யோகா செய்வதன் மூலம் எவ்வாறு சுகாதாரமாகப் பாதுகாப்பது என்பது குறித்து யோகா செய்து காட்டினர். இதற்காக மாணவர்களுக்கு ஒரு வாரம் முன்பே பயிற்சியினை அளித்தேன். மாணவர்களும் சிறப்பாகப் பங்கு பெற்றனர். இதன் மூலம் மெதுவாகக் கற்கும் திறனுடைய மாணவர்களும் ஆர்வமுடன் பங்கு பெற்றனர். அது மட்டுமல்லாமல் உலக எழுத்தறிவு தினம், ஓசோன் தினம், உலகத் தாய்மொழி தினம், உலக இதய பாதுகாப்பு தினம் போன்ற சிறப்பு தினங்கள் வரும்போதெல்லாம் அது குறித்துத் தகவல்களைச் சேகரித்து மாணவர்களிடம் கலந்துரையாடுவேன். மேலும், இணையம் மூலம் அந்த நிகழ்ச்சி குறித்து விளக்கங்கள் மற்றும் படங்களைக் காட்டுவேன்.

**விலங்குகள் தினம்:** அக்டோபர் - 4 உலக விலங்கு தினம் கொண்டாடினோம். அன்று மாணவர்கள் ஒவ்வொரு விலங்கு பற்றியும் அதன் சிறப்புகள் பற்றியும் நடித்துக்காட்டினர். The Ship of the Desert - என்ற ஒரு பாடம் உள்ளது அந்தப் பாடத்தை நாடக வடிவில் கடந்த ஆண்டு வகுப்பறைச் செயல்பாடாக நடித்திருந்தனர். அந்த நாடகத்தை மறக்காமல் வசனங்களை ஆங்கிலத்தில் பேசியும் நடித்தும் காட்டி அனைவரது பாராட்டையும் பெற்றனர். கடந்த ஆண்டு படித்த (அ) கற்ற பல விசயங்களை மறந்திருந்தாலும் இந்த வசனங்கள் மட்டும் மறக்காமல் இருக்கக்காரணம் அதை நாடக வடிவில் நடித்ததே.

**உணவுத் திருவிழா:** அக்டோபர் 16 உலக உணவுத் திருவிழாவைக் கொண்டாடினோம். இதன் மூலம் பகிர்ந்து உண்ணும் பழக்கத்தை மாணவர்களிடையே அறிமுகப்படுத்தினேன். மேலும், அந்த உணவில் மிகுந்துள்ள சத்துக்களை

அறிந்துகொண்டனர். அதோடு மட்டுமல்லாது நமது பாரம்பரிய உணவு முறைகளான கேழ்வரகு அடை கீரைவடை, தினைமாவு போன்றவற்றை ருசித்தும் அதன் நன்மைகளைப் பற்றியும் அறிந்து கொண்டனர்.

தேசிய பெண்குழந்தைகள் தினம்: ஜனவரி 24, தேசிய பெண்குழந்தைகள் தினம் கொண்டாடினோம். பெண்ணின் பெருமையைப் பேச்சாகவும் கவிதையாகவும் நாடகமாகவும் நடித்துக்காட்டினர். இத்தகைய நிகழ்ச்சியில் கல்வியில் பின் தங்கிய மற்றும் மெதுவாகக் கற்கும் திறனுடையோரைப் பங்கு பெறச் செய்தேன்.

**வாக்காளர் தினம்:** ஜனவரி 25- ம் நாள் தேசிய வாக்காளர் தினம் பள்ளியில் கொண்டாடப்பட்டது. அதில் பள்ளியின் தலை சிறந்த மாணவர்களைப் போட்டியாளர்களாக நிறுத்தி அவர்களுக்குச் சின்னம் ஒதுக்கி அவர்களை வகுப்புவாரியாக வாக்கு சேகரிக்கச் செய்தோம். மாணவர்களும் மாதிரிவாக்குச் சாவடியில் தங்கள் வாக்கினைச் செலுத்தி மையினால் குறி இட்டு தாங்கள் விரும்பிய நபரைத் தேர்ந்தெடுத்தனர். இந்த நிகழ்வின் மூலம் ஓட்டுப்போடும் முறையினை அறிந்ததோடு வாக்களிப்பதின் முக்கியத்துவத்தை அறிந்து கொண்டனர்.

**உலகக் காடுகள் தினம்:** மார்ச் - 22 உலகக் காடுகள் தினம் கொண்டாடினோம். இதில் மாணவர்கள் கவிதை, ஸ்லோகன்கள் பேச்சு மற்றும் நாடகம் ஆகியவற்றில் கலந்து கொண்டனர். காடுகள் தினவிழாவில் நான்காம் வகுப்பு ஆங்கிலப்பாடத்தில் இடம் பெற்றுள்ள The Giving Tree என்ற கதையை நாடகமாக நடித்துக்காட்டி அனைவரது பாராட்டினைப் பெற்றனர். இதன் மூலம் முறையான உச்சரிப்பு, வாக்கியத்தெளிவு நடிப்புத்திறன் வெளிப்படும்.

**உலகத் தண்ணீர் தினம்:** மார்ச் - 22 உலகத் தண்ணீர் தினம் கொண்டாடினோம். தண்ணீர் சிக்கனம் மற்றும் சேமிப்புமுறையிகளைக் கவிதைகளாகவும், நாடகமாகவும், ஸ்லோகனாகவும் மாணவர்கள் தங்கள் திறனை வெளிப்படுத்தினர். இவையாவும் ஒரே நாளில் தயார் செய்த நிகழ்ச்சி என்பதைப் பெருமையோடு சொல்ல ஆசைப்படுகிறேன்.

இந்த ஆண்டின் இறுதி நிகழ்ச்சியாக ஏப்ரல் - 7 உலக சுகாதார தினத்தைக் கொண்டாடினோம். இதில் உடல் தூய்மை, சுற்றுப்புறத்தூய்மை பற்றி மாணவர்கள் பேசினர். எளிய வடிவில் மாணவர்கள் ஆங்கிலத்தில் பேசி நடித்து அனைவரையும் ஆச்சரியப்படுத்தினர்.

**பிற விழாக்கள்:** இந்த விழாக்கள் மட்டுமல்லாது, சுதந்திர தினம், குடியரசுதினம், குழந்தைகள் தினம், திருக்குறள் போட்டி, மழலையர் விழா, விளையாட்டு விழா போன்ற விழாக்களிலும் மாணவர்கள் அனைவரும் கலந்து கொண்டு பரிசினைப் பெற்றது மிகவும் மகிழ்ச்சியே! அது மட்டுமல்லாது சுதந்திரப் போராட்ட வீரர்களான வ.உ.சி, வாஞ்சிநாதன் வாழ்க்கை வரலாறு பற்றி கதையினைக் கூறுவது பாரதியார், பாரதிதாசன் மற்றும் திருவள்ளுவர் பற்றியும் மாணவர்களுக்குக் கூறி திருக்குறளின் மீது ஈடுபாடு உண்டாகுமாறு செய்தேன்.

**பிரதிபலிப்பு:**

இவ்வாறு விழாக்களில் தொடர்ந்து பங்கு பெற்றதால் மாணவர்களின் ஆளுமைத்திறன் வளர்ந்து, மேடைப்பேச்சுக்கு ஒரே நாளில் தயாரானார்கள். நாடகம் என்றால் இரண்டே நாட்களில் தயாரானார்கள். மாணவர்களிடம் இருந்த அச்ச உணர்வு மற்றும் கூச்ச சுபாவம் நீங்கியது. போட்டிகளில் கலந்து கொண்ட மாணவர்களுக்குச் சிறப்புப்பரிசுகளை வழங்கி அவர்களைப் பாராட்டினேன். அந்த நிகழ்வு மற்ற மாணவர்களையும் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள ஊக்கப்படுத்தியது. மெதுவாகக் கற்கும் திறனுடைய மாணவர்களுக்கு அவர்கள் விரும்பி உண்ணும் உணவை அளித்து, உற்சாகப்படுத்தி அவர்களையும் நிகழ்ச்சியில் பங்குபெறச் செய்தேன். தற்போது எங்கள் பள்ளியில் ஒரு விழா என்றால் எங்கள் வகுப்பில் உள்ள 36 மாணவர்களும் போட்டி

போட்டுக் கொண்டு ஆர்வமுடன் கலந்து கொள்ள முன்வருவார்கள் என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன்.

இத்தகைய தொடர் விழாக்களால் பாடத்திட்டத்தினை முடிப்பதில் கொஞ்சம் சிரமம் உள்ளது என்பதை வெளிப்படையாக ஒப்புக்கொண்டே ஆக வேண்டும். அதோடு இல்லாமல் இத்தகைய விழாக்களுக்கு மாணவர்களைத் தயார் செய்ய முன்கூட்டியே திட்டமிடுதலும் அவசியமாகிறது. இதனால் ஆசிரியருக்குச் சுமையானாலும் மாணவர்களின் திறன் அனைவரது முன்னிலையில் வெளிப்படுகிறது. இதனால் சுமப்பதும் பெருமையே.



**ஹேமமாலினி,** தொ.ப.ஆ, அ.தொ.ப., எக்கோல் ஆங்கிலேஸ்

# ஆண்டு விழா

GMS நல்லவாடுவில் நடந்த ஆண்டு விழாவின் சிறப்பு அம்சங்கள்

எமது பள்ளியில் 27.03.2018, செவ்வாய் அன்று ஆண்டுவிழா கொண்டாடப்பட்டது. மாலை 3.00 மணியளவில் தொடங்கப்பட்ட விழாவிற்கு திரு. S. ஜோசப் (TGT) வரவேற்புரை வழங்கினார். பள்ளித் தலைமையாசிரியர் திரு. பி. சங்கர; (HM) விழாவிற்குத் தலைமையேற்று நோக்கவுரை வழங்கினார். திருமதி. P. இராஜலட்சுமி ஆண்டறிக்கை வாசித்தார். சிறப்பு அழைப்பாளர்களாக திரு. C. குமார் (DIS. ZONE III) திரு M.G. இராபர்ட் கென்னடி (DIS. ZONE IV) திரு. பக்கிரிசாமி (DIS. ZONE V) பூரணாங்குப்பம் அரசு நடுநிலைப் பள்ளி தலைமையாசிரியர் திரு. வேளாங்கன்னி வீரகுமார், ஆண்டியார்பாளையம் அரசு நடுநிலைப் பள்ளி தலைமையாசிரியர், திருமதி விமலா மற்றும் பூரணாங்குப்பம் கிராம நிர்வாகி அதிகாரி திரு. T.சிவப்பிரகாசம் ஆகியோர் பங்கேற்று வாழ்த்துரை வாங்கினர்.

ஒவ்வொரு வகுப்பிலும் கல்வி, வருகை ஒழுக்கம், தூய்மை ஆகியவற்றில் சிறந்த விளங்கிய மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து மாணவ-மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. கலை நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைத்து மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. விழாவில் பெற்றோர் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். இறுதியாக திரு. R. தனராஜா FAT நன்றியுரை வழங்கினார். விழாவிற்கான ஏற்பாடுகளைப் பள்ளி ஆசிரிய - ஆசிரியைகள், மாணவ - மாணவிகள் மற்றும் ஊழியர்கள் செய்திருந்தனர்.

**தனவந்தினி**, தொ.ப.ஆ., அ.தொ.ப., நல்லவாடு.

# 100 என்ற இலக்கை நோக்கிய எங்கள் பயணம்

**மாதவன் - சிறப்பு விருந்தினர்**

புதுச்சேரி வட்டம் - 2 நைனார் மண்டபம் புதுநகர்

பள்ளிச் சூழலை மாற்றி மாணவர்களின் உணர்வுகளை மதிக்கும் வகையான செயல்பாடுகளை மேற்கொள்ளல் - ஒரு பார்வை

பள்ளிக்கூடம் என்ற சொல்லே மாணவர் தொகுப்பைத்தான் நம் கண்முன் கொண்டு வருகிறது. சோழன் வீதியில் கம்பீரமாய் காட்சி அளிக்கிறது எங்களின் நைனார் மண்டபம் அரசு தொடக்கப்பள்ளி. அதில் சில வருடங்களாக 83-க்குள்ளாகவே இருந்த மாணவர் எண்ணிகையை உயர்த்தி 100 என்ற இலக்கை அடைய தீர்மானித்து அதற்கான பயணத்தைத் தொடர்ந்தோம். மாணவர்களின் மீது அக்கறை காட்டுதல், கல்விச்செயல்பாடுகளைத் தொடர்ச்சியாகவும் பயனுள்ளதாகவும் மாற்றியமைத்தல், அதோடு கல்விக்கான சூழலை உருவாக்குதல் மற்றும் பெற்றோர்களை இணைத்த நிகழ்வுகள் ஆகிய செயல்பாடுகளின் மீது நம்பிக்கை வைத்து பயணிக்கத் துவங்கினோம்.

சென்ற கல்வி ஆண்டு முதலே எம் பயணம் துளிர்விடத் தொடங்கியது. முதலில் அனைத்து மாணவச் செல்வங்களுக்கும் அடையாள அட்டை, டைரி ஏற்பாடு செய்து தந்து அனைவரின் கவனத்தை ஈர்த்தோம்.

**பெற்றோர்களை இணைத்த நிகழ்வுகள்**

குழல்இனிது யாழ்இனிது எனபர்தம் மக்கள்

மழலைச்சொல் கேளா தவர்

- என்ற குறள் வழி நின்று பெற்றோர்கள் தம் குழந்தைகளின் திறமைகள், செயல்பாடுகள், ஆற்றல்கள், பங்களிப்புகளை நேரில் கண்டுணர ஒவ்வொரு மாதமும் பெற்றோர் கலந்தாய்வுக் கூட்டங்களையும், பள்ளி மேலாண்மைக் குழு கூட்டங்களையும் தவறாமல் நடத்தி அரசுப் பள்ளியின் மீது அதீத நம்பிக்கையை வளரச் செய்து புதிய மாணவர் சேர்க்கைக்குப் பெற்றோர்களின் ஆதரவையும், ஈடுபாட்டையும் புதிய பலமாகப் பெற்றோம்.



## கல்விச் செயல்பாடுகள்:

காலைப் பேரவையில் மாணவர்களை உற்சாகப்படுத்தி, நற்பழக்கவழக்கங்களைக் கடைபிடிக்க அடித்தளமிட்டோம். நடை, உடை, பாவனைகளில் இனிய மாற்றங்கள் ஏற்பட்டன. பெற்றோரிடமும், பொதுமக்களிடமும் 'அரசுப் பள்ளி நம் பள்ளி' என்ற எண்ணத்தையும் நம்பிக்கையையும் தொடர்ந்து ஏற்படுத்தினோம். மதிய உணவு, காலையில் பால், இவற்றை மாணவர்க்குச் சிரத்தையுடன் அளிப்பதோடு பெற்றோர்கள் அதை மேற்பார்வையிடுவது மற்றும் சேர்ந்து உணவு உண்ணுவது என பெற்றோரின் பங்களிப்பு நன்மதிப்பை ஈட்டித் தந்தது.

மதிய உணவு இடைவேளையின் போது பொது அறிவு, சொற்களஞ்சியம் பெருக்குவோம், செய்தித்தாள் வாசித்தல், கையெழுத்துப்பயிற்சி போன்ற செயல்பாடுகள் மாணவர்களுக்குப் பாதுகாப்பை அளித்ததோடு, அறிவுப்பெருக்கத்திற்கும், மகிழ்ச்சியான கற்றல் சூழலுக்கும் வழி வகுத்துப் பள்ளியின் மீது பற்றுதலையும், ஆர்வத்தையும் வளர்த்து வருகின்றன.

தொடர்ந்து வகுப்பறைக்குச் சென்று மாணவர்களைச் சந்திப்பது, அவர்கள் கற்கும் பாடங்கள் தொடர்பாகச் சிறு உரையாடலை மேற்கொள்வது அவர்களது நோட்டுக்களை வாங்கிப் பார்ப்பது, பாராட்டுவது, வகுப்பறையில் நானும் உட்கார்ந்து பாடம் கவனிப்பது போன்ற செயல்களைத் தவறாமல் செய்வேன்.

பெற்றோர்களை வகுப்பறைக்கு அழைத்துச் சென்று பாடச் செயல்பாடுகளைக் காட்டுதல், அவர்கள் கருத்துக்களைக் கேட்டல், படிப்பு தொடர்பான கேள்விகளைக் கேட்கச் செய்தல், பாடங்களை எப்படி நடத்துவோம், என்னென்ன செய்வோம் என அவர்களுக்கு விளக்குதல் போன்ற செயல்பாடுகளை மேற்கொண்டோம்.

இவற்றால் தனியார் பள்ளிக்குத் தாவ நினைத்த சில பெற்றோரைக் கட்டிப் போட்டது குறிப்பிடத்தக்கது. அதோடு அவர்கள் பள்ளிச் செயல்பாடுகளுக்கு உதவத்துவங்கினர்.

## பள்ளி நிகழ்வுகள்:

தொடர் பள்ளி நிகழ்வுகள் மூலம் பெற்றோர்கள் ஆதரவு மட்டுமல்லாது நைனார் மண்டபம் மக்கள் நல இயக்கத்தின் ஒத்துழைப்பும் , பங்களிப்பும் ஊர்ப்பிரமுகர்களின் பாராட்டுதலையும் அங்கீகாரத்தையும் பெற்றுள்ளோம். அரசு பள்ளியின் மேன்மையும், நடைமுறைகளும் ஊர்மக்களுக்குச் சென்று சேர ஒரு முத்தாய்ப்பாய் பள்ளி நிகழ்வுகள் அமைத்தன. நாளுக்கு நாள் நிகழ்வுகளில் பங்கேற்கும் பெற்றோர் மற்றும் பொது மக்களின் எண்ணிக்கை அதிகமானது. 'சமம் பெண்கள்' அமைப்பினரின் நிகழ்வை பள்ளிச் செயல்பாடுகளில் இணைத்தோம்.

பள்ளி ஆய்வாளர் அடிக்கடி எங்கள் பள்ளியை பார்வையிட்டு எங்களை பாராட்டினார்கள். உதவி இயக்குநர் வந்து பாராட்டியதோடு சிறந்த பள்ளிக்கான வீடியோவிற்கு எங்கள் பள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக டாக்டர் ஆ. ப. ஜெ அப்துல் கலாம் அவர்களின் நினைவு நாள் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு,பள்ளியில் 'கலாம் தோட்டம்' உருவாக்கப்பட்டு அனைவருக்கும் மரக்கன்றுகள் விநியோகிப்பது, அறிவியல் கண்காட்சி ஏற்பாடு செய்து பொதுமக்களையும் பார்வையிடச் செய்வது, பரிசளிப்பு விழாக்கள் நடத்துவது போன்ற செயல்பாடுகள் புதிய மாணவர் சேர்க்கைக்கு வலுவூட்டின.

உலக நீர் நாள் மார்ச் 22 - ம் தேதி நைனார் மண்டபம் மக்கள் நல இயக்கமும், அரசு தொடக்கப் பள்ளியும் இணைந்து 'விழிப்புணர்வு பேரணி' ஊர்வலம் நைனார் மண்டபம் வீதிகளில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சி 100 என்ற இலக்கை நோக்கிய எம் பயணத்திற்கு ஒரு வரப்பிரசாதமாக அமைத்தது எனலாம். அதைத் தொடர்ந்து பள்ளியில் குழந்தைகள் வாசிப்பகம் (ரீடிங் கார்னர்) சட்டமன்ற உறுப்பினர், ஊர்ப்பெரியோர் முன்னிலையில் திறப்பு விழா செய்து நடைமுறைப்படுத்தப்பட்டது தனியார்

பள்ளியில் பயின்ற மாணவரை எம் பள்ளியில் சேர்க்க வழி கோலியது.

தேசிய பசுமைப்படையால் மாணவர் சேர்க்கைக்கான விழிப்புணர்வு பேரணி நடத்தியும், அருகில் உள்ள அங்கன்வாடி மையங்களில் உள்ள குழந்தைகளின் பெற்றோரை நேரில் சந்தித்தும் பள்ளியின் பல்வேறு விழாக்கள், தூய்மை இந்தியா செயல்பாடுகள், பரிசளிப்பு விழாக்கள் பற்றியும் சமூகத்தில் எம் அரசுப் பள்ளிக்கு ஊர் அங்கீகாரத்தை ஏற்படுத்தி இந்தக்கல்வி ஆண்டில் முதல் வகுப்பு மாணவர் சேர்க்கையை இரட்டிப்பாக்கி, இத்தருணத்தில் 93 என மாணவர் எண்ணிக்கையை நெருங்கி உள்ளோம் என்பதைப்பற்றியும் பெருமகிழ்வோடும், பெருமிதத்தோடும் அனைவரிடமும் பகிர்ந்து கொள்கிறோம்.

**பள்ளி நிகழ்வுகளின் பட்டியல்:**

- 12-6-17 பிரவேச உற்சவம். புதிய மாணவர்களை வரவேற்றல்

- 21-6-17 சர்வதேச யோகா தினம். ஆசிரியர் விளக்கம் மாணவர்கள் செயல்பாடு

- 15-7-17 மாணவர் தினம் - காமராசர் வேடமிட்டு பேச்சுப்போட்டி

- 27-7-17 அப்துல்கலாம் நினைவு நாள்

- 15-8-17 சுதந்திர தினம்

- 1-9-17 பள்ளி அளவிலான அறிவியல் கண்காட்சி

- 5-9-17 ஆசிரியர் தின விழா

- 1-9-17 தூய்மை பிறக்கலாம் .தொடர்ச் செயல்பாடு.

- 15-9-17 முதல் 2-10-17 வரை தூய்மை இந்தியா உறுதிமொழி

- 20-10-17 மக்கள் நல இயக்கத்தின் உதவியுடன் நிலவேம்பு கசாயம் குடித்தல்.

- 21-11-17 டெங்கு விழிப்புணர்வு முகாம்.

- 1-11-17 புதுச்சேரி சுதந்திர தினம்

- 14-11-17 குழந்தைகள் தினம்

- 12-1-18 பொங்கல் விழா

- 8-3-18 பெண்கள் தினம்

- 28-2-18 தேசிய அறிவியல் விழா

- 22-3-18 உலக மகளிர் தினம்

- 29-3-18 வாசிப்பு மூலை மற்றும் கணித ஆய்வகம்

- 7-4-18 கல்வி சுற்றுலா மரக்காணம், உப்பளம், தக்ஷன் சித்ரா, முதலைப்பண்ணை, மகாபலிபுரம்

- 10-4-18 மாணவர் சேர்க்கைக்கான விழிப்புணர்வு முகாம்

- 11-4-1 ஐந்தாம் வகுப்பு மாணவர்கள் பிரிவு உபச்சார விழா

- 12-4-18 விளையாட்டு விழா.

'100' என்ற இலக்கை நோக்கிய எம் பயணத்திற்குத் தற்போதைய பள்ளிச் செயல்பாடுகள், ஆசிரியர்களின் ஒத்துழைப்பு, வட்டம் -2 பள்ளித்துணை ஆய்வாளரின் ஊக்கமும், வழிகாட்டலும், மாணவச் செல்வங்களின் கற்றல் வெளிப்பாடுகளும் உரம் சேர்க்கும் என்ற நம்பிக்கையுடன் இனிதே பயணிக்கிறோம்.

அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை உயர்த்த நம்மால் மட்டும் தான் முடியும். ஆசிரியர் சமுதாயம் அனைவரும் ஒன்று கூடி தொடக்கக்கல்வி என்ற தேரை வடம்பிடித்து இழுத்து, பொலிவுடன் கல்வித்துறையிலே பவனி வரச் செய்வோம்.



**அனந்தநாயகி**, தலைமை ஆசிரியை, அ.தொ.ப, நைனார்மண்டபம்

# பள்ளி மற்றும் சமூகம்

**கல்வி, சமூகப்பங்களிப்பு இன்றி முழுமையாகாது.**

- **நமது பள்ளி செயல்பாடுகளில் பொது மக்களை ஈடுபடுத்தும் போது தான் அவர்களுக்குப் அரசுப் பள்ளிகள் மீதான நம்பிக்கையை ஏற்படுத்த முடியும்.**
- **பள்ளிச் செயல்பாட்டில் மாணவர்களின் பெற்றோர்களைப் பேசச் செய்வது, அவர்களது கருத்துக்களுக்கு மதிப்பளிப்பது அவற்றை முடிந்தவரை நடைமுறைப்படுத்துவது போன்ற செயல்பாடுகள் பள்ளியில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்துகிறது.**

## நோக்கம்

கல்வி என்பது பள்ளியோடு முடிந்து விடுவது அன்று. சமுதாயத்தோடு தொடர்புடையது. கல்வி செயல்பாடுகளில் பெற்றோர்; மற்றும் மக்களின் பங்களிப்பு இணையும் போது தான் முழுமையடைகிறது. அதிலும் அரசுப்பள்ளிக்கு அது அத்தியாவசியமாகிறது. அரசுப்பள்ளி என்பது மக்களுடையது. மக்களின் வாழ்வை மையமாகக் கொண்டு செயல்படக்கூடியது. தற்போதைய காலகட்டத்தில் மக்களுக்கு ஆங்கிலக் கல்வி மற்றும் தனியார் பள்ளிகளின் மீதான மோகம் மிக அதிகமாக உள்ளது. எனவே, பள்ளி செயல்பாடுகளில் பொதுமக்களை ஈடுபடுத்தும் பொருட்டு அவர்களுக்குப் அரசுப்பள்ளிகள் மீது நம்பிக்கை ஏற்படுத்த முடியும். பள்ளிகளின் மீது நம்பிக்கை ஏற்படுத்துவது என்பது, கல்விச்செயல்பாடுகள் மூலம் சமூகத்தை இணைப்பது மற்றும் பெற்றோர், பொது மக்களிடம் தொடர் உறையாடல் நிகழ்த்துவது என்பதைப் புரிந்துகொண்டு, இவ்வாண்டு நாங்கள் செய்த சில விசயங்களை கீழ்கண்டவாறு இணைத்துள்ளோம்.

எமது பள்ளியில் படிக்கும் மாணவர்களின் பெற்றோர்களுள் பெரும்பான்மையானோர் கூலித்தொழிலாளிகள். கல்வி கல்லாதவர்கள். எங்கள் மாணவர்கள் அதிகமாக, நடனம், கதை, பாடல் மற்றும் விளையாட்டுகளில் ஆர்வமுடையவர்கள். எனவே கற்றல் செயல்பாடுகளோடு இவற்றிற்க்கும் முன்னுரிமை கொடுக்கின்றோம். பாடங்களோடு கதைகள் மற்றும் பாடல்களை இணைத்தல், செயல்பாடுகள் மற்றும் விளையாட்டுகளை இணைத்தல் போன்றவற்றைக் கவனமாகக் கையாண்டோம். இதனால் கற்றலில் மிகவும் பின்தங்கிய மாணவர்கள் கற்றலில் சிறந்து விளங்குகின்றனர். அதோடு எங்கள் வகுப்பறைச் செயல்பாடுகள் வீட்டிலும் தொடர்ந்தது.

முதல் வகுப்புப் பாடங்களுடன் தொடர்புடைய கதைகளை வீட்டில் கேட்டுக்கொண்டு வரச்செய்தல், வீட்டில் நடக்கும் விசயங்களை உற்றுப்பார்த்துப் பேசச்செய்தல், கேள்விகள் கேட்டுப் பதில்களைக் கொண்டு வரச்செய்தல் போன்றவை மூலம் நாம் நம் குழந்தைகளுடன் மேலும் ஆழமாக ஈடுபட முடிகிறது. ஒரு பாடம் முடிந்ததும் அல்லது நடத்திக்கொண்டே இருக்கும் பொழுதும் ஊரில் கேட்டுக்கொண்டு வரும்படி சில கேள்விகள் கொடுப்போம். (எ.கா) “இளனி விக்கிரவர்கள் யாராவது இருந்தால், யார் என்று தெரிந்து கொண்டுவரச் சொல்லுதல், ஒரு இளனி எவ்வளவு என்று அப்பா, அம்மாவிடம் சின்ன கேள்விகள் கேட்டனுப்புதல், கேட்டு எழுதிக் கொண்டுவர சொல்லுதல்.” அதைக் கேட்டுக்கொண்டு வரும் பொழுது அவர்களைப் பாராட்டுதல், பெற்றோரிடம் பதிலளிக்கும் படியும் பள்ளிச் செயல்பாடுகள் பற்றிக் கேட்கும் படியும் எடுத்துக் கூறுவோம்.

## பள்ளி நிகழ்வுகளில் சமூகம்

மாணவர்களின் கல்வி இணை செயல்பாடுகளை வெளிப்படுத்த பெற்றோர் கூட்டங்கள், அரசு விழாக்கள் போன்ற நிகழ்ச்சிகளைப் பள்ளியில் நடத்துகின்றோம். என்.சி.சி மூலம் சுற்றுச்சூழலைப் புரியவைக்க தொடர் நிகழ்வு ஒன்றை ஏற்பாடு செய்தோம். அதன் முதல் கட்டமாக, 'மனித நேயத்தின் இறகுகள்' என்ற தன்னார்வத்தொண்டு நிறுவனத்தின் உதவியுடன் விதைப்பந்து செய்தோம். இதற்காக விதைப்பந்து தயாரிப்பது பற்றி மாணவர்களை ஆயத்தப்படுத்தும் நிகழ்வு நடந்தது. அதன் மூலம் மாணவர்கள் பெற்றோரிடம் அதை எடுத்துச்சொல்லி விதை எடுத்துக்கொண்டு வந்தனர். அதன் தொடர்ச்சியாக மாணவர்களுடன் விதை சேகரிக்கும் நிகழ்வு ஒன்றும் நடந்தது. ஒரு நாள் நிகழ்வாக மாணவர்கள் 300 - க்கும் மேற்பட்ட விதைப்பந்தைச் செய்தனர். சேகரித்து வைத்திருந்த விதைப்பந்தை ஏரிக்கரையில் பொது வெளிகளில் போடுவதற்காக ஊர் தலைவரைச் சந்தித்துப் பேசினோம். பின் சூழ்நிலையை அறிந்து கொள்ள ஒரு பயணம் மேற்கொண்டோம். நாங்கள் ஏற்படுத்திய தொடர் நிகழ்வு கற்றல் செயல்பாடுகளுக்கு உட்பட்டதாக இருந்தாலும் ஊர் மக்களை உள்ளடக்கியது. இதை அவர்கள் விரும்புவது எங்களுக்குப் பிடிபட்டது. இதனால் பள்ளிச் செயல்பாடுகளில் ஈடுபட விரும்பிய பெற்றோர்களை எங்களால் வகைப்படுத்த முடிந்தது.

பள்ளிக்கு மாணவர்கள் விடுப்பு எடுக்கும் பொழுது எங்களுக்குத் தெரியப்படுத்தச் சொன்னோம். காலை 8 மணிக்கெல்லாம் சில பெற்றோர்கள் "என் மகள் இன்று பள்ளி வரவில்லை" என்பதைத் தொடர்ந்து நாளை வந்து விடுவாள் என்பர். இப்படிச் சின்ன சின்ன விசயங்களில் அவர்களுக்கு நாம் கொடுக்கும் மரியாதையைப் பல மடங்காக அவர்கள் திருப்பித்தந்தனர்.

உதவிக் கரங்களின் உதவி, குழந்தைகளின் களப்பயணம் மற்றும் விழாக்களுக்கு உதவியாக இருந்தது. கற்றல் கருவிகளுக்கும் ஆசிரியர் பயிற்சிக்கும் அசிம் ப்ரேம்ஷி ஃபவுண்டேசனின் உதவி முக்கியமானது.

ரோட்டரி சங்கம் மூலம் இரத்தப் பரிசோதனை நடத்த முடிந்தது. வெங்கட் என்ற நிலச்சுவான்தார் மூலம் 10,000 ரூபாய் அளவில் தேவைப்படும் கற்றல் கருவிகளை வாங்கிக் கொடுத்தார்.

இவ்வாண்டு வெவ்வேறு கற்றல் கற்பித்தல் நிகழ்வுகளுக்கு, தொண்டு நிறுவனங்கள் மற்றும் கம்பெனிகளின் உதவித் தொகையை பயன்படுத்த முடிந்தது. கடலூரில் இருந்து ஆங்கிலக்கதை சொல்லுதல் கற்பித்தலை பானுப்பிரியா தொடர்ச்சியாகச் செய்ய முடியவில்லை.

பெற்றோர்களுக்காக நாங்கள் துவங்கியுள்ள வாட்ஸ்அப் நிகழ்வு மூலம் சில முக்கிய உரையாடல்களை ஏற்படுத்திக் கொண்டு வருகிறோம். இவ்வாண்டு கடந்த காலத்தில்



பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் நிகழ்ந்து வந்த வாக்குவாதங்கள் இப்பொழுது இல்லை என்று சொல்லும் அளவுக்கு மாற்றம் நடந்துள்ளது.

### பள்ளி ஆண்டு விழா:

இத்தகைய நிகழ்ச்சிகளில் மிகவும் முக்கியமானது பள்ளி ஆண்டு விழா. கடந்த இரண்டு ஆண்டுகளாக நடைபெற்ற ஆண்டு விழாக்களில் பல பிரச்சினைகளைச் சந்தித்தோம். அவற்றுள் முக்கியமானவை சரியான நேரத்திற்கு நிகழ்ச்சி துவங்காதது, திட்டமிட்டபடி பரிசுகளை வழங்க முடியாமை, மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் மனநிலைக்கேற்ப நிகழ்ச்சிகளை ஒருங்கிணைக்காதது போன்றவையாகும்.

எனவே, இந்த ஆண்டு அனைத்துச் செயல்பாடுகளும் முன்னரே மிகத்துல்லியமாகத் திட்டமிடப்பட்டன. அதோடு அல்லாமல் பெரும்பாலான செயல்பாடுகளில் பெற்றோர்களையும் ஊர் மக்களையும் இணைத்துச் செயலாற்றினோம். அவர்களைக் கூப்பிட்டுத் திட்டமிடல் கூட்டம் நடத்தினோம். அவர்கள் முன்வைத்த கோரிக்கைகளைக் கவனித்துக் கேட்டோம். சென்ற ஆண்டு நாங்கள் எதையெல்லாம் சரியாகச் செய்யவில்லை என்று பட்டியலிட்டனர். ஓராண்டு கழித்து அவர்கள் நினைவு கூர்ந்தது ஆச்சரியமாக இருந்தது. அதோடு இதைப்பற்றி அவர்களாக எப்பொழுதும் எதுவும் சொன்னதுமில்லை. அவர்கள் குறிப்பிட்டதில் செய்ய முடிந்ததையெல்லாம் நிறைவேற்றினோம். பெற்றோர்களிடம் தங்கள் குழந்தை ஆண்டு விழாவில் ஈடுபடும் செயல்பாடு பற்றி எடுத்துக் கூறினோம். முன்னாள் மாணவர்களான நடனக் கலைஞர்கள் பிரகாஷ் மற்றும் பரியான் அதே ஊரில் இருப்பதை நாங்கள் அறிந்திருக்கவில்லை. அவர்களை அழைத்து வந்து எங்களுக்கு அறிமுகப் படுத்தினர். அவரது உதவியுடன் மாணவர்களுக்கு நடனப்பயிற்சி அளித்தோம். நிகழ்ச்சியைப் பத்திரிக்கைகளுக்கு அளிக்கும் பொறுப்பை அவர்களே எடுத்துச்செய்தனர் இதனால் இந்த வருட ஆண்டு விழா எந்த தங்கு தடையுமின்றி மிகச் சிறப்பாக நடைபெற்றது.

மிகக்குறுகிய காலத்தில், கிட்டத்தட்ட ஒருவார கால ஏற்பாடுகளில், நடத்தப்பட்ட ஆண்டு விழாவில் அனைத்து நிகழ்ச்சிகளும் சிறப்பாக அமைந்தன. மாணவர்களின் நடனத்தைக் கண்டு அனைவரும் பிரமித்தனர். எங்கள் சிறப்பு விருந்தினர். மற்றும் உயரதிகாரிகள் வெகுவாகப் பாராட்டினர்.

பள்ளிச் செயல்பாடுகளில் பெற்றோர்களைப் பங்களிக்கும்படியாகச் செய்யவேண்டும் பங்களிப்பு என்பது அவர்களால் செய்யக்கூடியதாக இருக்க வேண்டும். அதோடு அவர்கள் மனமுவந்து செய்வது போல் தயார் செய்ய வேண்டும். ஒத்துழைக்க முடியாத குழந்தைகளின் பெற்றோர்களைக் குறைகூறுவதைக் காட்டிலும் அக்குழந்தைகள் மீது அக்கறைப்படும் ஆயா, தாத்தா, அத்தை ஆகியோரிடம் எடுத்துக்கூறும் பொழுது சாத்தியப்படுகிறது.

பெற்றோர்களை மட்டுமல்லாமல் ஊர்ப்பிர முகர்களை, குறிப்பாக உள்ளூர் கலைஞர்கள், உள்ளூர் வளங்களைக் கல்வி செயல்பாடுகளில் ஈடுபடுத்துவது அவசியம் என உணர்ந்தோம்.

பள்ளிச் செயல்பாட்டில் மாணவர்களின் பெற்றோர்களைப் பேசச்செய்வது, அவர்களது கருத்துக்களுக்கு மதிப்பளிப்பது, அவற்றை முடிந்தவரை நடைமுறைப்படுத்துவது, பள்ளியில் பெறும் மாற்றத்தை ஏற்படுத்துகிறது.



**சங்கரதேவி** தொ.ப.ஆ,
அ.தொ.ப., அபிசேகப்பாக்கம்



**நித்ய** தொ.ப.ஆ,
அ.தொ.ப., அபிசேகப்பாக்கம்

# குழந்தைகளின் நூறு மொழிகள்

**• புத்தகம் வாசிப்பு மற்றும் கல்வி சார்ந்த படங்களைத் திரையிடுதல் மூலம், நேர்மறையான கல்விச் சூழலை உருவாக்கலாம்.**

**• பாடப்புத்தகத்தை, குழந்தைகளின் வளரும் பருவத்தில் அவர்களுடைய எண்ணங்களோடும் இயல்புகளோடும் பொருத்தி கற்றலை நெறிப்படுத்துவதில் ஆசிரியர் பங்கு முக்கியமாகும்.**

கடந்த இரண்டு ஆண்டுகளாக மகாத்மா காந்தி அரசு நடுநிலைப்பள்ளி, நெல்லித்தோப்பில் ஆசிரியராகப் பணியாற்றுகின்றேன். கடந்த ஆண்டு 5 -ம் வகுப்பு மாணவர்களுக்கு வகுப்பாசிரியராக இருந்தேன். என் வகுப்பில் 15 குழந்தைகள். இந்த ஆண்டு 4 - ம் வகுப்பாசிரியராக இருக்கிறேன். இந்த ஆண்டும் 15 குழந்தைகள். இவர்களின் பெற்றோர்கள் வெவ்வேறு வகையான தினக்கூலி வேலைகளில் ஈடுபடுபவர்கள். எங்கள் பள்ளியில் பயிலுகின்ற மாணவர்கள் பிற்படுத்தப்பட்ட பொருளாதாரச் சூழ்நிலையைக் கொண்டவர்கள். பெற்றோர் பெரிதாகச் சம்பாதிப்பவர்களோ அல்லது குழந்தைகளைச் சரியான முறையில் பராமரிப்பவர்களோ இல்லை.

முதல் வருடத்தில், இப்பள்ளியில் பணிபுரிதல் என்பது சவாலாகவே இருந்தது. காரணம், மாணவர்களிடம் சுற்றுச்சூழலின் தாக்கம் பெருமளவு காணப்பட்டது.

இச்சவாலைச் சமாளித்து, சாதனையாக மாற்ற உறுதுணையாக இருந்தது, புத்தக வாசிப்பு மற்றும் கல்வி சார்ந்த படங்களே ஆம், கல்வி சார்ந்த புத்தகம், மற்றும் படங்களை வாசித்து, பார்த்து ஒத்தக் கருத்துடைய சக ஆசிரியர் நண்பர்களுடன் கலந்துரையாடுவதன் மூலம் என் தேடல்கள், கேள்விகள், சவால்கள் ஆகியவற்றிற்கு எளிதில் தீர்வு காண முடிந்தது. நாம் அன்றாடம் சந்திக்கும் வகுப்பறை சவால்களுக்குப் பதில் அளிப்பவையாகப் புத்தக வாசிப்பு மற்றும் ஆவணப்படங்கள் இருந்தன என்றால் அது மிகையாகாது.

## குழந்தைகளின் நூறு மொழிகள்- ஓர் பார்வை

பேராசிரியரும் கல்வியாளருமான மாடசாமி அவர்களின் இப்புத்தகம் கல்வியின் நோக்கம், மாணவர்களின் உரிமை, ஆசிரியரின் கடமை எனக் கல்வியின் பல்வேறு பரிமாணங்களையும் பேச முனைந்திருக்கிறது. பல்வேறு காலகட்டங்களில் எழுதப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு இந்நூல். இத்தொகுப்பு, கல்வி தொடர்புடைய கருத்தாக்கங்களை மையப்படுத்தி எழுதப்பட்டிருக்கிறது.

நூலாசிரியர் தமக்கு ஏற்பட்ட பல்வேறு வகுப்பறை அனுபவங்களையும் இக்கட்டுரைகளில் பகிர்ந்து கொள்கிறார். அந்த வகையில் இந்த நூல்கள் ஆய்வு அடிப்படையிலான தரவுகளையும் நமது வகுப்பறையின் அனைத்து அம்சங்களையும் குறிப்பிட்டிருக்கிறது.

கல்வி குறித்து காந்தியின் சிந்தனை, டால்ஸ்டாயின் கொள்கைகள் போன்றவற்றையும் முன் வைக்கிறார் நூலாசிரியர்.

வைட்காலர் ஜாபை நோக்கி, கேரட்டைப் பார்த்து ஓடும் கழுதையின் வேகத்தோடு ஓடிக்கொண்டிருக்கிறது நமது கல்வி முறை. கேரட்டைக் கவ்விய சில பாக்கியசாலிகளைத் தவிர மற்றவர்களுக்கு என்ன காத்திருக்கிறது? அவர்கள் அவமானமாகக் கருதும் சிறுதொழிலும் வேண்டவே வேண்டாம் எனக் கைவிட்ட

விவசாயமும் தான். தவறுகளிலிருந்து பாடம் கற்க மறுத்து, மேன்மேலும் அதே தவறினைச் செய்து, அது சரிதான் எனச்சொல்ல நினைக்கிறதா நம் கல்விக்கொள்கை? இதுபோல் கட்டுரைகளில் எழுப்பப்படும் பல கேள்விகளும், யோசிக்க வைக்கும் கருத்துக்களும் போகிற போக்கில் விட்டுவிட முடியாமல் மண்டையைக் குடைந்து கொண்டே இருப்பது கல்வி குறித்த நமது கடமையைப் புரிதலைச் செழுமைப்படுத்துகிறது.

இந்நூலைவாசித்து, கல்வியின் நோக்கம், மாணவர்களின் உரிமை, ஆசிரியரின் கடமை எனக் கல்வியின் பல்வேறு பரிமாணங்களையும் கலந்துரையாடி, சமூகக்கடமைகளை எங்களால் உணர முடிந்தது.

"இருப்பதும் பெறுவதும்" ஆவணப்படத் திரையிடல் மற்றும் உரையாடல் : -

மாணவர்களிடம் ஈடுபாட்டோடு பணிபுரியும் ஆசிரியர் பற்றிய ஃப்ரெஞ்ச் ஆவணப்படம். அவர் நடத்திய அப்பள்ளியில் 4 வயது முதல் 11 வயதுள்ள குழந்தைகளுக்கு ஒரே வீட்டில் ஒரே ஆசிரியராய் செயல்படும் விதத்தைப் பார்த்து வியக்க முடிந்தது.

ஒரே வயதுக்குட்பட்ட ஒரு வகுப்பு மாணவர்களைத் தனி வகுப்பில் வைத்துக் கையாள்வதைப் பெரும் சவாலாகக் கருதும் நமக்கு அதிசயமாகத்தான் இருக்கும்.

ஆசிரியரின் மாணவர்களுடனான உரையாடல் இப்படத்தின் பலம் எனலாம். ஒவ்வொரு மாணவருடனும், அவர் நடத்தும் உரையாடல் அந்தக் குழந்தைகளின் கல்வியாக, கண்டுபிடிப்பாக, தேடலாக மாறுகிறது.

மாணவர்கள் தங்களுக்குள் அடித்துக் கொள்வதும் சேர்ந்து கொள்வதும், ஆசிரியராய் நாம் அவர்களது பண்புகளை வளர்ப்பதில் அவர் ஈடுபடும் விதத்தை நாம் கற்றுக்கொள்ள பேருதவியாக உள்ளது. என்றே கருதுகின்றோம்.

குழந்தைகளை உற்று நோக்குதல், அவர்கள் பேசுவதைக் கவனித்தல், அவர்களையே அதைப் பற்றி யோசிக்கவைத்தல் போன்ற விசயங்களை நம் வகுப்பறையில் கையாள ஏதுவான காட்சிகள் இடம் பெற்றிருந்தது. மேலும் ஆசிரியர் மற்றும் பெற்றோர் இணக்கத்தில் இருக்க வேண்டும் என்பதை உணர முடிந்தது.

கல்வி வெறும் பாடப்புத்தகம் சார்ந்ததல்ல என்பது நமக்குத் தெரியும், ஆனால் அதை வாழ்வியலோடு இணைக்க, குழந்தைகளின் இயல்புகளோடு சேர்ந்து புரிந்துகொள்ள ஆசிரியர்களாகிய நாம் பழக்கப்படுத்தப்படவில்லை பழகிக் கொள்ளவுமில்லை.

இவரது பள்ளியிலிருந்து வேறு பள்ளிக்குப் படிக்கச் செல்லும் மாணவர்களைத் தயார்ப்படுத்தும் விதம் அற்புதம். அவர்கள் மேற்கொள்ளும் உரையாடல் நம் பாடம் தொடர்புடையது தான் ஆனால் சிந்திக்க வைக்காததாக இருந்தது.

படம் முடியும் விதம் அழகானதாகவும், ஆசிரியர் மாணவர்களிடம் விடைபெறும் விதம் மனதை நெகிழவைப்பதாகவும் இருந்தது.

கலந்துரையாடலின் போது பல இடங்களில் நம் வகுப்பறையை ஒப்பிட்டுப் பேசினோம். நம்மால் நமது மாணவர்களுடன் நெருக்கமான உறவை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகளைப் பற்றியும் விவாதித்தோம். இன்னும் கூட கற்றல் கருவிகளற்ற நமது வகுப்பறையும் திட்டமிடப்படாத பாடச்செயல்பாட்டையும் ஒப்பிட்டுப் பார்த்தோம்.

"இருப்பதும் பெறுவதும்" படமாக மட்டுமல்லாமல் மாணவர்களைப் படிக்க உதவும் பாடமாகவும் இருந்தது.

## கனவுப்பட்டறை - புத்தக வாசிப்பு மற்றும் கலந்துரையாடல் :

கனவுப்பட்டறை எனும் சிறுகதைத் தொகுப்பு நூலின் நூலாசிரியர், மதி. இந்நூல் ஒரு ஆசிரியரின் அற்புதமான செயல்பாட்டின், அனுபவப்பகிர்வு என்று கூறினால் மிகையாகாது. இன்று குழந்தைகளிடம் பிரச்சனையாகப் பார்க்கப்படும் விசயங்களுக்குத் தீர்வாக

அமைந்த நூல் இது எனலாம்.

எல்லா மனிதர்களும் தன் வாழ்க்கையில் திரும்பிப் பார்க்க நினைக்கும் பருவமாக இளமைப்பருவம் இருக்கும். முரண்பாடுகள் நிறைந்த பருவம், சரி - தப்பு என்று அறிந்தும் அறியாமலும், புரிந்தும் புரியாமலும், அப்பருவம் பற்றி கருத்துக்கள் ஏராளம்.

வளரும்பொழுது மாணவர்களின் மனதில் இருக்கும் கூச்ச சுபாவம், அன்பு, கள்ளத்தனம், குறும்பு, என எல்லா இயல்புகளையும் இன்று நாம் பிரச்சனையாகப் பார்க்கிறோம் .இவற்றை ஒவ்வொன்றாகக் கதைகளில் கையாளுகின்றார் நூலாசிரியர். பள்ளியில் படித்த போது நான் செய்த குறும்பும், அதற்கு எனக்கு கிடைத்த தண்டனையும் நினைவுக்கு வந்தது.

தீபாவளி சமயம் - பொட்டுப்பட்டாசு வாங்கி வந்தார் என் தந்தை, அதை மூன்று பாகமாக்கி, என் தந்தை எனக்கு அளித்தார். என் பங்கைப் பாதுகாப்பாக வைக்கும் நோக்கில் அதை என் புத்தகப்பையில் வைத்தேன். அதை மறந்து பள்ளிக்கு எடுத்துச் சென்றேன். புத்தகப்பை பெஞ்சு ஆணியில் மாட்டிக் கிழிந்தது. பொட்டுப்பட்டாசுகள் ஆங்காங்கே தரையில் சிதறின. அப்போது இடைவேளை. நான் வகுப்பறைக்குள் இல்லை. என் வகுப்பு மாணவர்கள், காலால் தேய்க்க பட்டாசு பட்பட், டப், டப், என வெடித்தது. ஒரு கைதியைப் போல புத்தகப் பையைக் கட்டி அணைத்தபடி அலுவலக அறையில் கண்ணீர் மல்க நின்று கொண்டிருந்தேன்.

என் பெற்றோர்கள் வரவழைக்கப் பட்டிருந்தனர். உங்கள் மகள் செய்த குற்றம் இதுவெனக் கூறி, அதற்கான தண்டனை 10 நாட்கள் சஸ்பென்சன் எனத் தீர்ப்பு மட்டும் அளித்து வெளித்தள்ளியது அப்பள்ளி.

இந்நூலைப் படிக்கும் போது, என்னுடைய ஆசிரியர்களும் தலைமையாசிரியர்களும் படித்திருந்திருந்தால் இப்படி ஒரு வடு என் மனதில் ஏற்பட்டு இருக்காதே எனத்தோன்றியது.

ஏன் வகுப்பறையில் மாணவர்கள் சிலர் இதேபோல், தீபாவளி சமயங்களில் ரோல்கேப், வத்திப்பெட்டி எடுத்து வருவது வழக்கம். அது எனக்குக் குற்றமாகத் தெரியவில்லை அவர்களின் குழந்தைத்தனமும், ஆசையுமே தெரிந்தது. இருப்பினும் அதை வகுப்பறையில் அனுமதிப்பது ஆபத்து என அறிவேன். அதை நான் வாங்கி வைத்துக் கொண்டு, வீடு செல்லும் போது கொடுத்து அனுப்புவேன், ஒரு சிறு எச்சரிக்கையுடன் - பள்ளிக்கு எடுத்துவரக்கூடாது, வீட்டில் பட்டாசை, பெரியவர்கள் துணையோடு பாதுகாப்பாக வெடிக்க வேண்டும் என்று.

சிந்திக்க, சிரிக்க, வழிகாட்ட எனப் பல்வேறு பரிமாணங்களில் கதைகள் இருந்தன, மாணவர்களைச் சோம்பேறி, கோவக்காரன், விளையாட்டுப்பிள்ளை, மக்கு போன்ற முத்திரைகளைத் தூக்கியெறிய உதவுவதாய் இப்புத்தகம் அமைந்திருக்கிறது.

குறிப்பாக கவனிக்கப்பட வேண்டிய அல்லது முத்திரைக்குத்தப்பட்ட அல்லது ஒதுங்கியிருக்கும் மாணவர்களின் வாழ்வில் பங்கெடுப்பதிலும், அவர்களை நெறிப்படுத்துவதிலும் ஆசிரியரின் பங்கு மகத்தானது என அறிய உறுதுணையாக உள்ளது. ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களைக் காட்டிலும் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு, மாணவர்களை நெறிப்படுத்தும் வழிகாட்டியாகக் கனவுப்பட்டறை புத்தகம் உள்ளது.

## கக்கூஸ் - ஒரு பார்வை

நாம் அன்றாடம் பயன்படுத்தும் ஒவ்வொரு பொருளின் பின்னால் உள்ள மனிதர்கள், அவர்களின் உழைப்புப் பற்றி ஒரு போதும் நாம் நினைத்துப் பார்த்தது இல்லை.

அது போல, தேவையில்லை என்று கழிவுகளாக வெளியேற்றப்படும் ஒவ்வொன்றையும் தூய்மை செய்யும் துப்புரவுப் பணியாளர்களைப் பற்றியும் ஒரு போதும் நினைத்ததே இல்லை.

துப்புரவுப் பணியை அரசு கையாளும் விதம்,

அவர்கள் தங்கள் பணிகளில் எதிர் நோக்கும் பல்வேறு இடர்கள் ஆகியவற்றை எதார்த்தமாய்க் கூறும் ஆவணப்படமே கக்கூஸ்.

துப்புரவுத்தொழில் செய்யும் மனிதர்கள் தாங்கள் ஒரு நாளில் எத்தனை வகைக்கழிவுகளைக் கையாளுகின்றனர் என்பதையும் அதனால் அவர்கள் உடல் எப்படி எல்லாம் பாதிக்கப்படுகின்றன என்பதும் இந்தப்படத்தைப் பார்க்கையில் நம்மை ஒரு கணம் உறையச் செய்கிறது.

குப்பையை நாம் எப்படியெல்லாம் உருவாக்குகிறோம் என்பதும் எல்லாக் கழிவுகளையும் எந்தப்பாதுகாப்பு உபகரணமும் இன்றி துப்புரவுப்பணியாளர்கள் சுத்தம் செய்வதையும் இப்படம் சித்தரிக்கிறது.

## முடிவில்

குழந்தைகளைப் புரிந்து கொள்வதில் புத்தகங்களும் ஆவணப்படங்களும் பெரும் பங்கு வகிக்கின்றன.



**கேசவர்த்தினி,** தொ.ப.ஆ, அ.தொ.ப, நெல்லித்தோப்பு

# கல்விக் கண்ணோட்டம் - என் ஐந்தும் - நானும்

**• மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தால் பணிச்சுமை குறையும் என்பதை விட பொறுப்புணர்வு அதிகம் என்பதை உணர முடிந்தது.**

**• முறைப்படி எழுத்தையோ அல்லது சொல்லையோ அறிமுகம் செய்ய வேண்டியது இல்லை. முழு சொற்றொடராகவே அறிமுகம் செய்து ஆங்கிலத்தை எளிமையாகக் கற்பிக்க முடியும் என்பதை அறிந்து கொள்ள முடிந்தது.**

**• விளையாட்டுகள் மூலமாகவும் கற்றல் நிகழும், சுற்றுப்புறத்தில் உள்ள இலைகள், குச்சிகள் மூலமும் கணிதம் கற்பிக்க முடியும் எனப் புரிந்தது.**

இக்கல்வியாண்டில் நான் கண்ட சவால்களுக்கு எவ்வாறு தீர்வு கண்டேன் என்பதையும் கற்றல் கற்பித்தல் முறைகளையும் உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். எனக்குப் பெரும் சவாலாக அமைந்தது என் வகுப்பு மாணவர்களின் எண்ணிக்கை தான். ஏனென்றால், முதன் முறையாக மிகக்குறைவான எண்ணிக்கை கொண்ட மாணவர்களோடு இக்கல்வியாண்டு தொடங்கியது.

கோகுல், பிரசன்னகுமார், சுஷித் ஹரிஷ்குமார் மற்றும் ஹேமா ஆகிய ஐந்து மாணவர்களைக் கொண்ட ஒன்றாம் வகுப்பு பொறுப்பாசிரியர் நான். ஐந்து மாணவர்களும் ஐந்து விதமான கற்றல் திறன்களைக் கொண்டவர்கள். ஒவ்வொரு முறையும் நான் பாடத்திட்டம் எழுதும் போது இத்திறன்களை எவ்வாறு கொண்டு சேர்ப்பது, எம்முறைகளை நான் பயன்படுத்த வேண்டும், எந்த அளவிற்கு என் கற்பித்தல் இருக்க வேண்டும் என்றெல்லாம் சிந்தித்து அவர்கள் ஐவருக்கும் ஏற்ற வகையில் அமைத்துக்கொள்வேன்.

சில சமயங்களில் என் திட்டமிடல் கூட வகுப்பறையில் கற்பித்தல் செயலில் தோற்றுப்போய்விடும். அச்சமயம் எனக்குப் பெரும் சவாலாகவே அமைந்தது. உ.தா. ‘0’ முதல் ‘9’ வரை எண்களை அறிமுகம் செய்த பின்னர் அவ்வெண்களைக் கொண்டு கூட்டல் கற்பித்தேன். ஐந்து மாணவர்களுக்கும் 5 விதங்களில் புரியவைத்துக் கற்பிக்கும் படியான நிலையே என் சவால்.

30 மாணவர்கள் கொண்ட வகுப்பறையாக இருந்திருந்தால் கற்பித்த உடனே குறைந்தது 20 மாணவர்களாவது நன்றாகக் கூட்டல் செய்யும் திறனைப் பெற்று விடுவர். ஆனால், என் 5 மாணவர்களில் ஹேமா என்ற மாணவி மட்டுமே புரிந்து கொண்டு கற்பித்த உடனே கூட்டல் கணக்குகளைச் சரியாகப் போட ஆரம்பித்துவிடுவார். ஆனால், மற்றவர்களுக்கு வேறு ஏதாவது செய்ய வேண்டி இருந்தது.

மறுநாள் மாணவர்களிடம் குச்சி, கூழாங்கற்கள், இலைகள் என என் பள்ளியில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டு வரச்சொன்னேன். மாணவர்களும் மிக மகிழ்ச்சியோடு சென்று ஆளுக்கொரு பொருட்களைக் கொண்டு வந்தனர். கொண்டு வந்த பொருட்களைச் சுற்றி நாங்கள் அனைவரும் வட்டமாக அமர்ந்தோம். மூன்று காகிதத் தட்டை வைத்து முதல் தட்டில் 4 இலையும், இரண்டாம் தட்டில் 2 இலையும் எடுத்து வைத்தேன். பிறகு மாணவர்களை எண்ணுமாறு கூறினேன்.

இரண்டு தட்டுகளிலும் உள்ள இலைகளை மூன்றாம் தட்டில் சேர்த்துக் கொட்டச்சொன்னேன், கொட்டிய பிறகு அதை எண்ணச்சொன்னேன். மாணவர்கள் எண்ணி 6 இலைகள் மிஸ் என்று

கூறினார்கள். உடனே நான் கரும்பலகையில் 4 + 2 = 6 என்று எழுதினேன். பின்பு இதேபோல் மற்ற பொருட்களையும் எடுத்து வைக்கச் சொல்லி, ஒவ்வொரு மாணவர்களாகச் செய்ய அவ்வெண்ணிக்கைகளையும் கரும்பலகையில் எழுதினேன். இம்முறையான கற்பித்தல் ஐவருக்கும் ஏற்றதாக இருந்தது.

இரு நாட்களுக்குப் பிறகு எண்களை எழுதி எண்ணிற்கான புள்ளிகளை வைத்துப் பின்பு கூட்டும் முறையைக் கற்பித்தேன். இம்முறையிலும் என் வகுப்பில் உள்ள மூன்று மாணவர்கள் மட்டுமே எளிதில் புரிந்து கொண்டனர். மீதம் இரண்டு மாணவர்கள் புள்ளியை வைக்கும் போதே தவறு செய்தனர். எ.கா. 6, ஆறு புள்ளிகளை வைக்க வேண்டும் என்றால் அம்மாணவன் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு எனக்கூறிக்கொண்டே ஐந்து புள்ளி, வைத்திருப்பான் இது போன்ற சவாலைத் தீர்க்க அவன் அருகே அமர்ந்து கொண்டு கூடுதல் கவனம் செலுத்திக் கற்பிக்கும் நிலை ஏற்பட்டது. தொடர்ந்து இது போன்ற வெவ்வேறு முயற்சிகளை எடுக்க பழகிக் கொண்டேன்.

தமிழைப் பொறுத்தவரை ஒவ்வொரு பாடத்திற்கும் பாடல், படக்காட்சி, எழுத்து மற்றும் சொற்களை மாணவர்களுக்குக் கொண்டு சேர்க்க வேண்டும். அது எனக்குக் கூடுதல் பொறுப்பாக அமைந்தது. பாடலை ஓசையோடு மட்டும் பாடி நான் அறிமுகம் செய்வதில்லை. அப்பாடல் அடிகளுக்கு ஏற்ற நடனம், அப்பாடலில் வரும் பாத்திரங்களுக்கு முகமூடி செய்து அவர்களுக்கு மாட்டி பாடலைக்கற்பிப்பேன். அவ்வாறு செய்யும் போது எம்மாணவர்கள் மிகுந்த ஆனந்தத்தோடும் ஆர்வத்தோடும் பாடுவார்கள்.

மாணவர்களோடு வட்டமாக அமர்ந்து படக்காட்சிகளைக் காட்டி வார்த்தைகளை அறிமுகப்படுத்துவேன். பின் அதில் இருக்கும் சொற்களைக் கொண்டு ஒரு கதையை உருவாக்குவோம். மாணவர்களோடு திரும்பத் திரும்ப அச்சொற்கள் விடையாக வரும் வரை அவர்களோடு உரையாடுவேன். இடையிடையே வினாக்களையும் கேட்டு வருவேன்.பின்பு அச்சொற்களின் படங்களைக் கரும்பலகையில் வரைந்து மாணவர்களையும் வரையச் சொல்லி ஈடுபடுத்துவேன். பிறகு அச்சொற்களின் முதல் எழுத்தை மட்டும் படங்களோடு அறிமுகம் செய்வேன்.

பட அட்டை, எழுத்து அட்டை, சொல்லட்டை என மூன்று விதமான அட்டைகளையும் கொண்டு பல்வித பயிற்சிகளைக் கொடுப்பேன். விளையாட்டுகள் மூலம் மாணவர்களின் திறன் அடைவை அறிவேன். விளையாட்டுகளும் கற்றலை மையப்படுத்தியதாக அமையுமாறு சில புது உத்திகளைக் கையாளத் தொடங்கினேன் எடுத்துக்காட்டாக குளம் கரை விளையாட்டு, சொற்களை எழுதி மடித்து ஒரு பெட்டிக்குள் போட்டுக் குலுக்கி விளையாடும் விளையாட்டு என விளையாடுவோம். சொற்களை எழுதி மடித்து ஒரு பெட்டிக்குள் போட்டுக் குலுக்கி விளையாடும் விளையாட்டில் மாணவர்களை அழைத்து ஆளுக்கொரு சீட்டை எடுக்கச் சொல்லி, அச்சொல்லைப் படித்துவிட்டு மாணவர்கள் அச்சொல்லை வைத்து குளமா அல்லது கரையா என முடிவு செய்து, அதற்குள் போய் அமரவேண்டும்.

ஐந்து மாணவர்களும் அமர்ந்த பின்னர் அவர்களிடம் உள்ள சொல்லைப் படிக்கச் சொல்லுவேன். அச்சொற்களை நான் கரும்பலகையில் எழுதிய பின் அடுத்தச் சுற்றுக்குப் போய்விடுவோம். இவ்விளையாட்டு மூலம் மாணவர்களின் படித்தல் திறனைக் கண்டறிய முடியும், மாணவர்களுக்கு நான் உதவி செய்வேன். அதுமட்டுமல்ல நாம் மறந்து வரும் மரபு விளையாட்டுகளையும் என் மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தி விளையாடி வந்தோம். (எ.கா.) பல்லாங்குழி, நேர்ப்பழம், குச்சி சேகரித்தல் முதலியன.

இரண்டாம் மொழியாகிய ஆங்கிலம் கற்பித்தலுக்கு மிகவும் உறுதுணையாக இருந்தது கிசிணி பயிற்சிப்பட்டறை. இதில் பன்னிரெண்டு நாட்கள் தொடர்ந்து ஈடுபட வைத்ததே என்

மாணவர்கள் தான். பயிற்சிக்கு முன் ஆங்கிலம் கற்பித்தல் ஒரு பெரும் சவாலாக இருந்தது.

கிசிணி பயிற்சிக்குப் பின் முறைப்படி எழுத்தையோ அல்லது சொல்லையோ அறிமுகம் செய்ய வேண்டியது இல்லை. முழு சொற்றொடராகவே அறிமுகம் செய்து ஆங்கிலத்தை எளிமையாகக் கற்பிக்க முடியும் என்பதை அறிந்து கொண்டு அதை செயல்படுத்தி வெற்றியும் கண்டேன்.

தற்போது என் மாணவர்கள் எது வரைந்தாலும் அதைப் பற்றி ஒன்று அல்லது இரண்டு சொற்றொடர்களை ஆங்கிலத்தில் எழுதும் அளவிற்கு உள்ளனர். சில சமயங்களில் ஆங்கிலமும் தமிழும் கலந்து எழுதுவார்கள். அவ்வாறு எழுதுவதையும் ஊக்கப்படுத்தினோம். காலப்போக்கில் கற்றலில் ஒரு நல்ல மாற்றத்தை ஏற்படுத்தியது.

நானும் அதை என் வகுப்பறையில் அனுபவப்பூர்வமாகக் கண்டுள்ளேன். அணில் வரைந்த மாணவன் “this is அணில்” என்று எழுதி வந்தான். நானும் சரி என்று கூறி பாராட்டி அணில் என்பது தமிழ் வார்த்தை என்று கூறினேன். அடுத்த நிமிடமே அவன் ஓடிப்போய் ‘reading corner’ - இல் உள்ள ‘animals name’ -என்ற புத்தகத்தை எடுத்து வந்து காட்டி ‘இதான் வருமா மிஸ்’ என்றான்.

நானும், “ஆமாம்” அணிலுக்கு ஆங்கிலத்தில் squirrel என்று கூறினேன் உடனே அவன் ‘This is a sqirrel’ என்று கூறியதே என் கற்பித்தலுக்கான வெற்றியாகக் கருதினேன்.

குறைவான மாணவர்களைக் கொண்டு கற்பிக்கும் போது நமது பணிச்சுமை மிக அதிகம் என்பதை என் அனுபவத்தால் அறிந்து கொண்ட கல்வியாண்டு தான் 2017-18. மிகவும் சவாலாக அமைந்த இக்கல்வியாண்டு என் பணி அனுபவக் காலங்களில் மறக்க முடியாத நினைவுகளாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.



**இராஜதிலகம்,** தொ.ப.ஆ, அ.தொ.ப செம்பியபாளையம்

# பள்ளி வளர்ச்சியில் ஆசிரியரின் பங்கு

Dr.APJ. அப்துல் கலாம் ஐயா, அவர்களைப்பற்றிய, விழிப்புணர்வு வீடியோ ஆல்பத்தை ,எனது சொந்த செலவில் இலட்சிய இந்தியனின்-“ சபதமேற்போமே” என்ற தலைப்பில், சுமார் ரூ. 85,000 மதிப்பில், விழுப்புரம் மாவட்டம் ஆசிரியர்கள்.,மற்றும் எங்கள் ஒலக்கூர் ஒன்றிய ஆசிரியர்கள் ஆகியோரை ஒன்றிணைத்தும், கோனேரிக்குப்பம் பள்ளி மாணவர்களை ஊக்கப்படுத்துவதற்காக, அவர்களையும் ஒன்றிணைத்தே ஆல்பம் தயாரித்தோம்,

Anna University Director திரு.உத்திரியராஜ் அவர்களால் ஆல்பத்தை வெளியிட்டோம். இந்த ஆல்பத்தின் நோக்கம் அப்துல் கலாம் கண்ட கனவு. இந்தியாவை நமது அரசுபள்ளியின் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இவர்களால் மட்டுமே நினைவாக்க முடியும் என்ற விழிப்புணர்வை ஆழமாய் உணரவைத்து, கனவு இந்தியாவின் நோக்கத்தோடு பயணிக்க வைத்தோம்.

- **அப்துல் கலாம் கண்ட கனவு இந்தியாவை நினைவாக்க முடியும் என்ற விழிப்புணர்வை ஆழமாய் உணரவைத்து, கனவு இந்தியாவின் நோக்கத்தோடு பயணித்தோம்.**
- **சமுதாயம் பண உதவி மூலம் பள்ளிக்கூட மேம்பாட்டுக்கு முக்கியமான உள்கட்டமைப்பு வசதிகளில் பங்களித்துள்ளது.**
- **ஒன்றுபட்டால் உண்டு உயர்வும் மாற்றமும் என்பதற்கு இப்பள்ளி ஒரு எடுத்துக்காட்டு.**

கலாம் ஆல்பத்தின் இயல், இசை, இயக்கத்திற்கு நான் பொறுப்பு எடுத்தேன். என்னோடு இணைந்து கலாம் ஆல்பத்தை இயக்கியவர்கள் நமது மாவட்ட ஆசிரியர்கள், R. ராஜேஷ், ராஜேஷ்பாரதி கணபதி, மற்றும் சந்தோஷ். ஆவர். இந்த ஆல்பம் எங்கள் ஒன்றிய ஆசிரியர்களுக்கு மறுமலர்ச்சியையும், தன்னம்பிக்கையும் தந்துள்ளது.



2. ஒன்றாம் வகுப்பறையை, கனவு வகுப்பறையாக்கும் நோக்கத்தோடு, மாணவர்களின் விருப்பத்தைக்கேட்டு, அவர்களின் விருப்பத்திற்கு ஏற்றார்போல், வகுப்பறையை ரூ. 1,70,000 மதிப்பில், நன்கொடையாளர்கள், மற்றும் ஊர் மக்கள் இணைந்து , படிப்படியாக மாற்றத்தை, Smart Class-ஐ உருவாக்கியுள்ளோம். இதன் மூலம் எங்கள் பள்ளியின் சேர்க்கையை அதிகரிக்க முயற்சி எடுத்து வருகிறோம்.

3. பாடத்தலைப்பிற்கு ஏற்றார் போல், பாடக் கருத்துக்களை வீடியோவாக தயாரித்து,

மாணவர்கள், பாடத்தை ஆர்வமோடு கவனித்து, புரிந்துக்கொள்ள, தொழில்நுட்ப முறையைப் பயன்படுத்தி கற்று தருகிறோம்.

4. தமிழ், ஆங்கிலம், கணக்கு பாடப்புத்தகப் பாடலுக்கு, இசைக்கருவிகளைப் பயன்படுத்தி, (Keyboard and drums) இசையமைத்து, மாணவர்களுக்கு சொல்லி கொடுத்து, வீடியோக்கள் தயார்செய்து, Whatsapp மற்றும் Facebook குழுவின் மூலம் தமிழக அளவில் நமது ஆசிரியர்களுக்குப் பகிர்ந்து வருகிறோம். ஆங்கில பாடல்களை இந்திய அளவில் சில ஆசிரியர்களுக்குப் பகிர்ந்து வருகிறோம்.இதனை அறிந்த News-18 நமது பள்ளியின் ஆடல் பாடல் கல்வி முறையை, கோப்பியமாக எடுத்து சென்றார்கள்.

5. கலாமின் பெயரில் அறிவியல் மன்றம் உருவாக்கி, மூன்று மாதத்திற்கு ஒருமுறை, 1ஆம் மற்றும் 2ஆம் வகுப்பு குழந்தைகளுக்கு கண்காட்சிகள் வைத்து, அறிவியல் ஆர்வத்தை முதல்வகுப்பிலிருந்தே ஊக்குவித்து வருகிறோம்.

6. சினிமாவின் தாக்கத்தால் அழிந்து வருகின்ற, நமது பண்பாட்டு கிராமியக் கலைகளைக் காப்பதற்காக, எங்கள் பள்ளியில் "மாணவர் கிராமியக் கலைக்குழு" தொடங்கி, எனது சொந்த செலவில் சுமார் ரூ. 15,000 மதிப்பில் இசைக்கருவிகளைப் பள்ளிக்காக வாங்கி, நமது பண்பாட்டு கலைகளை எங்கள் பள்ளியில் கற்றுதருகிறோம். (கரகம், கும்மி, கோலாட்டம், பறையாட்டம், சிலம்பாட்டம், ஒயிலாட்டம், சக்கசுச்சி, கலியல், குறவன்குறத்தி) இதன்மூலம் பள்ளி விழாக்களில் சினிமா பாடலைத் தவிர்த்து, நமது நாட்டுப்புற கலைகளுக்கு முக்கியத்தும் கொடுத்து, பண்பாட்டு கலைகளை மீட்டுவருகிறோம். அதுமட்டுமல்ல, ஒன்றிய பள்ளிகளுக்கும் இக்கலைகளைக் கற்றுதந்து, இசைக்கருவிகளை அவர்களும் இலவசமாகப் பயன்படுத்தி பயன்பெற துணையாக இருந்துவருகிறோம். இவற்றை அறிந்த எங்களின் கிராமிய கலைக்குழுவைப் பற்றிய செய்தி தொகுப்பு, 'தந்தி' தொலைக்காட்சியில், நம்நாடு நிகழ்ச்சியில் ஒளிபரப்பானது. நமது அரசுப்பள்ளிக்கு கிடைத்த பண்பாட்டைக் காக்கும் நற்பெயர் இது. இதன் மூலம் கல்லூரிகளில் நமது பள்ளி மாணவர் கிராமிய கலைக்குழுவிற்கு நிகழ்ச்சி நடத்த அழைப்பு தருகிறார்கள்.

7. ஒவ்வொரு மாணவர் வீட்டிலும் மூன்று கிராமத்தில் உள்ள முன்னால் மாணவர்கள் வீட்டிலும், பழ மரக்கன்றுகள் நட்டு, "புதிய தலைமுறை தொலைக்காட்சி" நம்மால் முடியும் குழுவோடு இணைந்து, பசுமையைக் காக்க, சமுதாயப்பணியில் அடிக்கடி இணைந்து வருகிறோம். இதற்கு முழு ஒத்துழைப்பு தருபவர்கள் மூன்று கிராம இளைஞர்களும் இளம்பெண்களும் தான்.

8 குஜராத்தில் - தேசிய அளவில் நடைபெற்ற DFC- INDIA, I CAN செயல்திட்டத்தில் கலந்து கொண்டு, பள்ளிக்குத் துப்புரவு பணியாளர்கள் இல்லாத சூழலைக் கருத்தில் கொண்டு... மிகப்பெரிய பள்ளி வளாகத்தைப் பெருக்கும் வண்டியைத் தயாரித்து, அதற்காக, இந்திய அளவில் சிறந்த 20 செயல்திட்ட படைப்பாக தேர்வாகி, DFC INDIA - I CAN AWARD -2016 விருதை வென்று சாதனைப்படைத்தோம். அதுமட்டுமல்ல top -5 க்கும் Nominated ஆகவும் வந்தோம்.

9 . சுடிதார் அணியும் எட்டாம் வகுப்பு மாணவிகள்



சிலர், ஓடி ஆடி விளையாடுவதற்கும், யோகா செய்வதற்கும் சிரமம் படுகிறார்கள். அவர்கள் சுதந்திரமாக ஓடி ஆடி விளையாட, கோட் தைத்து கொடுத்து பள்ளிக்கு வர ஏற்பாடு செய்தோம். இதனால் அவர்களின் சுதந்திரம் குறையாமல் மகிழ்ச்சியோடு பள்ளிக்கு வர எங்களின் முயற்சி உதவியது.

10. கல்லூரிக்கு இணையாக, சுமார் ரூ.5,16,470 மதிப்பில், அரசின் தன்னிறைவு திட்டத்தைப் பயன்படுத்தி ICT- COMPUTER LAB க்கு முயற்சி எடுத்து, மூன்றில் ஒரு பங்கு தொகையான ரூ.1,72,157ல் திரு. பாரிவேல் முருகன் முழுமதி அறக்கட்டளை (ஜப்பான்) ரூ.80,000, பள்ளி ஆசிரியர்கள் ரூ.30,000, நல்லாத்தூர், நங்குணம், கோனேரிக்குப்பம் ஆகிய மூன்று கிராம மக்களை ஒன்றுதிரட்டி ரூ. 62,000 பொருளாதார உதவி திரட்டி, அரசின் தன்னிறைவு திட்டம் மூலம் (SMC -மூலம்) கணினி ஆய்வகம் அமைக்க தேவையான (Computer -24, Computer tables -24,Chairs -48 ) ஆகியவற்றை வாங்குவதற்கு மாவட்ட ஆட்சியரிடம், எங்கள் நிதியை கொடுத்து, Computer lab அமைக்க ஆணையை ரூ.5,16,470 மதிப்பிற்கு பெற்றோம். மேலும் கணினி ஆய்வக அறையை புதுப்பிக்க ரூ.2,50,000 மதிப்பில், புதிய மர ஜன்னல்கள் -3, மரக்கதவு -1, டெயில், பெயிண்ட், வாங்க, கோனேரிக்குப்பம் மண்ணின் மகள் திருமதி. கலைச்செல்வி யுவராஜ்-USA- ரூ.72,000 வழங்கினர். ஜான்ராஜா [சௌதி] = ரூ.10,000, வினைத்தீர்தான் பிவி = ரூ.10,000, பாலாஜி குழு IT. = ரூ.15,000 கார்த்திகேயன் ஏழுமலை = ரூ.35,000. Fr. செல்வம் - கிசி. வழங்கினர். இவற்றை பயன்படுத்தி கிரில் பாதுகாப்பு பணிகளையும், ஆய்வக அறையைப் புதுப்பிக்கும் அனைத்து பணிகளையும் செய்து முடித்தோம். விழுப்புரம் மாவட்டத்தில் ரூ. 7,50,000 மதிப்பில், பிரமாண்ட கணினி ஆய்வகம் அமைத்தோம்.

11. மதில் சுவர் இல்லாத, வளாகத்தில், 34 அடி நீள இடத்தை, சிலர் ஆடுமாடுகளைக் கட்டி பள்ளியின் இடத்தை அபகரித்தனர். Fr,Benjamin- USA, பள்ளி முதல்வர், திரு.Sam Daniel - little Jacky Mat, Hr, Sec, School பள்ளி முதல்வர், ஆகிய இவர்களிடம் ரூ.40,000 உதவிகள் பெற்று, 6அடி உயரத்தில் மதில் சுவர் கட்டி முடித்தோம்.

12. நான்கு அடி உயரத்தில் இருந்த, 30 அடி பள்ளி வளாக சுற்றளவை, 7அடியாக உயர்த்திக் கட்டினோம்.

13. மலைமேட்டில் பள்ளி இருந்ததால், எங்கு பார்த்தாலும் பாறைகளாக இருந்தது. JCB வைத்து

அந்த கற்களை அகற்றினோம்.

14. பள்ளி வளாகத்தை, நல்ல விளையாட்டு மைதானமாக்க, 20 -TRACTOR வண்டி மண்ணை, பள்ளி வளாகத்தில் கொட்டி, சமன்செய்தோம். திரு.யுவராஜ் அவர்கள் மற்றும் கிராம மக்கள் உதவினார்கள்.

15. என்னைப் பற்றிய Article.....'The Hindu' தமிழ் நாளிதழில், அன்பாசிரியர் - 35 பகுதியில் வெளிவந்தது.

16. NEWS-18ல் என்னை பற்றியும் பாடல் மூலம் கற்பிக்கும் எனது கல்விமுறைப் பற்றியும் இப்படிக்கு நிகழ்வில் கோப்பியமாக வந்தது...

17. கனவு வகுப்பறைக்குள், டைல்ஸ், 3 - புதிய ஜன்னல்கள், வகுப்பறைக்குள் நாடக மேடை, பழைய மின் இணைப்புகள் புதுப்பித்தல். சுவர் பட்டிப்பார்த்தல், அழகான பெயிண்ட் அடித்தல் போன்ற பணிகளை முடித்துள்ளோம்.

18. Single phase ல் இத்தனை ஆண்டுகளாய் இருந்த பள்ளி, three phase line ஆக Conversion பெற்று, ரூ.20,000 செலவில், Computer lab, Dream class, main line wires அனைத்தையும் செல்வி. பிரேமகலா -BBC-DELHI உதவியோடு புதுப்பித்துள்ளோம்.

19. மே மாத விடுமுறையில், 3 நாட்கள், கிராமியக்கலை பயிற்சி வழங்கினோம் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் திஸி. BENJAMIN - USA அவர்களின் உதவியோடு.

20. South Indian Young Inspiring Teacher Award -2017 June -3 அன்று, எனக்கு தென்னிந்தியாவின் சிறந்த ஆசிரியர் விருது கிடைத்தது.

21. திரு. சாகுல் ஹமீது - கத்தார். அவர்களின் மூலம் 24,000 மதிப்பில் வகுப்பறைக்கும், மதில் சுவற்றிற்கும் பெயிண்ட் அடித்தோம்.

22. ஐந்தாம் வகுப்பு கட்டிடம் 20,000 மதிப்பில் புனரமைத்தோம்.

23. ஒவ்வொரு வருடமும் கிறிஸ்மஸ் விழாவில் மலைவாழ் மாணவர்கள் 10 பேருக்கு, கல்வி ஊக்கத்தொகையாக ரூ.1000 வழங்கி வருகிறோம். மதநல்லிணக்கத்தைக் கற்றுதருகிறோம்.

24. பள்ளி கட்டிடம் முழுதும் ரூ. 50,000 மதிப்பில், அரசுப்பள்ளியைக் காப்போம் இயக்கத்தின் உதவியோடு, வண்ணம் தீட்டினோம்.

25. திறன் வகுப்பறை Smart Class, கணினி ஆய்வகம் Computer lab ஆகியவற்றை, நமது பள்ளிக்கல்வித்துறை செயலர், உயர்திரு. த. உதயசந்திரன் அவர்களால், 23.02.2018 அன்று, திறந்து வைக்கப்பட்டது. இதுதான் எங்களுடைய மிகப்பெரிய முயற்சி.

26. Altius Foundation உதவியோடு, 6 முதல் 8 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு, கணினி ஆய்வகம் மூலம், கணிதம் நடத்த ஒப்பந்தம் செய்துள்ளோம்.

27. தமிழ் ஆசிரியர் ஒருவரை நியமித்து, ஊதியம் வழங்கி, மாணவர்களுக்கு, திருக்குறள் பயிற்சி அளிக்கிறோம் ரூ 15,000 மதிப்பில்.

28. பழைய கட்டிடங்களைப் புதுப்பித்துள்ளோம்.



**ஆரோக்கியராஜ்,** ஊ.ஒ.ந.ப, கோனேரிக்குப்பம், விழுப்புரம்

# எனது பள்ளி

**ஒரு பள்ளியின் தலைமையாசிரியர் என்பவர் கல்வி மற்றும் கல்வி-சார் செயல்களில் மட்டுமே பங்கேற்பவர் அல்ல. ஒவ்வொரு மாணவனின் நலனிலும் முழுமையான அக்கறை கொண்டவராக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் கட்டுரை இது.**

ஆசிரியனாக இருப்பவனுக்கு ஓர் அர்ப்பணிப்பு வேண்டும். அவ்வாறு இருந்தால் மட்டுமே அவரால் உருவாக்கப்படும் சமுதாயத்தில் நாட்டுப்பற்று, பிறர்நலம், மனித நேயம் போன்ற நற்பண்புகள் நிரம்பி இருக்கும். ஓர் ஆசிரியராக இருப்பவர், மாணவர்களுக்கு வழிகாட்டியாக மட்டுமல்லாமல் எடுத்துக்காட்டான ஒரு வாழ்க்கை வாழ்பவராக இருந்தால் மட்டுமே அவருடைய எண்ணத்திற்குத் தக்கவாறு மாணவர்களை உருவாக்க முடியும். மாணவர்களின் உடல் நலனிலும், பாதுகாப்பிலும், மிகுந்த அக்கறையுடன் இருப்பது, மாணவர்களின் கற்றல் மற்றும் அனைத்து நடவடிக்கைகளையும் கண்காணித்து ஆலோசனைகளை வழங்கி நன்னெறிப்படுத்துவது போன்றவைகளை அவர் தாமாக முன்வந்து செய்பவராக இருக்கவேண்டும். அவருடைய கற்பித்தல் மற்றும் அனைத்து நடவடிக்கைகளும், மாணவர்களிடம் ஏற்படும் சீரான வளர்ச்சி மற்றும் கற்றல் விளைவுகள் அவருக்கு மன நிறைவையும் மகிழ்ச்சியினையும் அளிக்கும்.

மகிழ்ச்சியானச் சூழலில், ஆசிரியர் இடர்ப்பாடுகளையு பொருட்படுத்தாது சிறப்புடன் தொடர்ந்து கற்பிப்பார். அங்கே அச்சுறுத்தல்கள் கிடையாது. அச்சுறுத்தல்களின் தேவையும் இருக்காது.

**ஆசிரியர்-மாணவர் உறவு:**

இயற்கையாகவே, ஆசிரியர் வகுப்பறையில் மாணவனுக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டால் அவனுக்குச் செய்ய வேண்டிய முதலுதவி, பெற்றோருக்குத் தகவல் தெரிவிப்பது போன்றவற்றைச் செய்ய முற்படும்போது மாணவனிடம் உள்ளார்ந்த அன்பு மற்றும் ஆசிரியருடனான உறவை பலப்படுத்தும். ஆனால் இவைகளை விதிகளால் முறைப்படுத்தினால் விதிகளைக் கடைபிடிப்பதில் சில சமயம் தவறுகள் நிகழலாம்.

ஒவ்வொரு மனிதனும் என் நண்பன்;ஒவ்வொரு மனிதனும் என் சகோதரன்

அல்லல் படுபவன் என் நண்பன்; ஆபத்தில் இருப்பவன் சகோதரன்

காரணம் அவனும் மனிதன் என்று எனக்குச் சிறுவயதில் எனது பள்ளியில் கற்பித்த பாடல் வரிகள் நினைவுக்கு வருகின்றன. அவ்வாறு நம்மைச் சுற்றியுள்ள ஒவ்வொருவரும் சகோதரனாகவும் நண்பனாகவும் புலப்படும் போது விதிகள் வரையறுக்க வேண்டிய அவசியம் ஏது?

ஆசிரியனாய் இருப்பவன் குழந்தைகளை முன்னிறுத்திப் பணிபுரிபவன். பரந்த மனப்பான்மை, தொலைநோக்குப்பார்வை, மனித நேயம், சேவை மனப்பான்மை, பிறர்க்கு உதவிசெய்தல், உடுக்கை இழந்தவன் கைபோல உதவும் நட்பு ஆகியவற்றிற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்பவன். இவை மாணவர்களால் வீட்டிலும், நாட்டிலும், பள்ளியிலும் வகுப்பறையிலும் அறியாத ஒன்றாய், அன்றாட வாழ்வில் பிணைக்கப்படாமல் இருந்து வரும் துயரமான சூழ்நிலை மாற வேண்டும் என்பதை உறுதி செய்கிறேன். ஆனால் மிக விரைவாக மாற்றம் ஏற்பட அங்கொன்றும் இங்கொன்றுமாக இருப்பவர்கள் எத்தகைய இடர்பாட்டிலும் உறுதியாக இருந்துவேலை புரிவதையும் நம்மால் உணரமுடிகிறது.

மாற்றம் என்பது மட்டுமே மாறாதது. மாறுபவை மனித குலத்தினை மாண்புறச்செய்வதாக அமையட்டும். இந்தக் கல்வியாண்டில் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்புவரை உள்ள அனைத்து மாணவர்களையும் மொழிப் பாடங்களை நன்கு படிக்கவும், எழுதவும் கணிதத்தில் அடிப்படைச் செயல்களை எளிமையாகச் செய்யவும் தயார்செய்ய முடிவு செய்தேன். இதற்காக ஆசிரியர்களைக் கூட்டி எனது திட்டத்தை எடுத்துரைத்தேன். அதற்கென சில நிகழ்வுகளை அனைத்து வகுப்புகளிலும் நிறைவேற்ற முடிவெடுத்தோம்.

இதற்கு உந்துதலாக இருக்கும் ஒரு நிகழ்வை குறிப்பிட வேண்டும். ஆகஸ்டு - 8 ம் தேதி 2016 ம் ஆண்டு நான் இப்போது பணியாற்றிக் கொண்டிருக்கும் பள்ளியில் பணியில் சேர்ந்தேன். அச்சமயம் இயக்குனர் முதல் பள்ளித்துணை ஆய்வாளர்வரை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு கல்வித்தரத்தினை உயர்த்துவதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

## ஆங்கிலம் கற்பித்தல்

எங்கள் வட்டத்தைச் சேர்ந்த பள்ளித்துணை ஆய்வாளர் அவர்களும் எங்கள் பள்ளிக்கு வருகைபுரிந்த நாளன்று ஒரு நான்காம் வகுப்பு மாணவனை அழைத்து ஏப்ரல் என்ற வார்த்தையை ஆங்கிலத்தில் கரும்பலகையில் எழுதச் சொன்னார். அந்த மாணவன் ஒரு எழுத்துக்கூட எழுதவில்லை. கையில் சுண்ணக் கட்டியுடன் அமைதியாக நின்றான். ஆய்வாளர் என்ன சொல்லியிருப்பார், பள்ளியின் தலைமை ஆசிரியராகிய எனது மன நிலையைக் குறிப்பிட வேண்டிய அவசியமே இல்லை. நான் தொடக்கப்பள்ளி ஆசிரியராக பணியாற்றிய காலத்தில் அதிகப்படியாக முதல் வகுப்பு ஆசிரியராக இருந்து ஆங்கில எழுத்துக்களுக்குண்டான ஒலிகளை மாணவரகளாகவே கூற உதவி, அவற்றை முறைப்படுத்திக் கற்பித்து அறியச்செய்து படத்துடனும் கற்பித்த அனுபவம் பெற்றிருக்கிறேன். இந்த நம்பிக்கையை வைத்து பள்ளியில் உள்ள அனைத்து ஆசிரியர்களையும் ஆங்கில எழுத்துக்களுக்கு ஒலிகளைச் சொல்லிக்கொடுக்கப் பணித்தேன். ஆசிரியர்களும் அதை ஏற்றுச் செயல்படுத்தினர்.

தினமும் காலைப்பேரவையில் இரண்டு அல்லது மூன்று வார்த்தைகளை syllable-ஆக பிரித்து எழுத்துக்களாகக் கூறாமல் ஒலியாகக் கூறப் பயிற்றுவித்தோம். நாட்கள் செல்லச் செல்ல மாணவர்களே syllable-லைப் பிரிக்க ஆரம்பித்தார்கள். இப்படியாகப் பயிற்சி நடந்த போது 100 சதவீதம் வெற்றி என்று கூறமுடியாது. 4,5, வகுப்பு மாணவர்கள் 40 சதவீதம் மற்ற மாணவர்களுக்கு அடிப்படை விசயம் தெரிய வந்தது என்று உறுதியாகக் கூறுவேன். வகுப்பறைப் பதிவேட்டில், ஒவ்வொரு வார்த்தையையும் 5 முறை எழுதி வரவும் ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் வழக்கம்போல் சில மாணவர்கள் எழுதவில்லை. இவ்வாறாக 700 க்கும் மேற்பட்ட வார்த்தைகளை மாணவர்கள் அறிந்து கொண்டனர். இது ஆசிரியர்களால் விரும்பத்தக்கதாகவும் அமைந்தது, எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது. வரும் கல்வியாண்டில் சிறப்பு திட்டமிடலுடன், பதிவுகளுடன் செய்து விளைவுகளை எதிர்கொள்ள ஆவலுடனும் எதிர்பார்ப்புகளுடனும் இருக்கிறேன்.

## இனிமையாக மாற்றப்பட்ட கசப்பான சம்பவம்

எம் பள்ளியில் பயிலும் ஒரு குழந்தையின் பெற்றோர் அக்குழந்தையின் வயதைப் பார்க்காமல் பள்ளியில் சேர்ப்பதற்கான முயற்சிகளை எடுக்காமல் இருந்துவிட்டனர். அக்குழந்தையின் சகோதரி எனது பள்ளியில் படிக்கிறாள். அவள் மூலம் அவளது தங்கையைப் பள்ளிக்கு அழைத்து வரச் செய்தோம். மற்ற குழந்தைகளைப் போலவே அவளும் பள்ளிக்கு வந்ததும் அழுதாள்; ஆர்ப்பரித்தாள். ஆசிரியர்களால் கட்டுப்படுத்த இயலவில்லை. ஒரு நாள் பள்ளியின் கழிவறைக்குள் சென்று இரண்டு கதவுகளின் உள்தாழ்ப்பாள்களையும் போட்டுக் கொண்டு பதுங்கிக் கொண்டாள்.

அருகிலிருந்த நான் இதைக் கேட்டு உடனே கழிவறைக்குச் சென்று குழந்தையின் பெயர் சொல்லி அழைத்தேன். பதிலில்லை. மற்ற ஆசிரியரை அழைத்து அழைக்கச் சொன்னேன் அப்போதும் பதிலில்லை. பின்னர்அவரது தந்தையை அழைத்து குழந்தையின் பெயரைச் சொல்லி அழைக்கச் சொன்னேன். தந்தையின் குரல்கேட்டு குழந்தை வெளியே வந்தாள்.

உடனே நான் அவரிடம் குழந்தையை வீட்டுக்கு அழைத்துச் சென்று 10 நாட்கள் தங்கவைத்து பிறகு அழைத்து வருமாறு கூறினேன். அப்படியே நடந்தது. 10 நாட்கள் கழிந்தன. குழந்தை என்னை சிரித்த முகத்துடன் சந்தித்து 'காலை வணக்கம்' எனக் கூறினாள். நானும் சிரித்த முகத்துடன் 'காலை வணக்கம்' என்று கூறினேன். இது இன்றும் தொடர்கிறது. பள்ளி வேலைகளை முடித்துவிட்டு செல்லும் போதும் அவள் என்னைச் சந்தித்து, தொட்டு அழைத்து, 'நன்றி' என்று சொல்வாள். நானும் சிரித்த முகத்துடன் அன்பாக 'டாடா' என்று கூறுவேன். அவள் எதை எதிர்பார்த்தாள், எதனால் இந்த உற்சாகமும் மகிழ்ச்சியும் என்று தெரியவில்லை. அவள் மட்டுமல்ல இந்த உலகத்தில் உள்ள அனைவருமே அன்பினால் தொடப்படும் போது உற்சாகமும் மகிழ்ச்சியும் தன்னம்பிக்கையும் பொங்குவது இயல்பன்றோ!

இதுமட்டுமா! அவள் படிப்பிலும், விளையாட்டிலும், எழுதுவதிலும் எந்த ஒரு விசயத்தையும் ஆர்வமுடனும், நுணுக்கத்துடனும் கவனிப்பதில் அவளுக்கென்று ஒரு சிறப்பிடம் உண்டு. அக் குழந்தை நான் தத்தெடுக்காத எனது மகள். காமாட்சியின் தாய்மொழி வேறு என்பதால் அவள் மனதில் தோன்றும் எண்ணங்களை ஒலி வடிவில் கூற இயலாமல் விழியால் என்னை உற்றுநோக்கும் போது, என்னால் அவள் கூற விழைவதை உணரமுடிகிறதே தவிர அவள் மனதை படிக்க எனது அறிவு உதவி செய்யவில்லை.

அவளது அன்புக்கு நானும் ஆசிரியர் சமூகமும் கல்வித்துறையும் ஆற்ற வேண்டியவை எண்ணிலடங்கா. ஆனால் எது எப்படியாக இருந்தாலும் அவளை காமாட்சியாகவே இருக்கவிடும் பட்சத்தில் அவள் இந்த மனித சமுதாயத்திற்கு ஒரு மாபெரும் பங்கை அளிப்பார் என்பதை என் உள்ளுணர்வு சொல்கிறது. எனவே என்றும் அன்பு காட்டுங்கள். குழந்தைகளை அவர்களாகச் சிந்தித்துச் செயல்பட வையுங்கள். படைப்பாற்றலின் கருவூலமாக நமது குழந்தைகள் இருக்கிறார்கள் என்பதால் அவற்றிக்கு வேலை கொடுக்கும் விதமாக நமது பணிகளை அமைத்துக் கொள்ளுங்கள் என்று எனது பணிவான வேண்டுகோளை உங்கள் முன் சமர்ப்பிக்கிறேன்.

வாழ்க வளமுடன்!!!



**ஜெனின் ஆரோக்கிய மேரி,** தலைமை ஆசிரியர், அ.தொ.ப. கரிக்கலாம்பாக்கம்

# கல்விக் கண்ணோட்டம்

**கல்வி சம்பந்தமாக எழும் நிறைய கேள்விகளுக்குக் கவிதைகளின் மூலம் விளக்கம்**

## முன்னுரை

கல்வி என்பதைப் பற்றி பல்வேறு அறிஞர்கள் பலவாகப் பகிர்ந்துள்ளனர். கல்வி என்பது,

க - கல்லாமையை (அறியாமையை)

ல் - இல்லாமல்

வி - விலக்குவது கல்வி எனலாம் சிந்தனைகளைத் தெளிவிப்பதும் எனலாம்.

'கல்வி என்பது, அறியாமை இருள்போக்கும் அகல் விளக்கு"

'கல்லாமையைக் களையெடுக்கும் கருவி"

கல்வி எனும் போது… சில கேள்விகள் எனக்குள்ளே… கல்வி என்பது பேனா முனை மட்டுமா? கல்வி என்பது புத்தகம் மட்டுமா? கல்விக்குப் பணம் தடையா? கற்றவரால் மட்டும்தான் பண்பாளராக இருக்க முடியுமா? கல்விக்கும் அன்பிற்கும் தொடர்புண்டா? கல்வி ஆளுமைத்திறனை வளர்க்கிறதா? கற்றல் பள்ளிக்கூடத்தில் மட்டும் தானா? ஆசிரியர் என்பவர் யார்? கற்றல் - கற்பித்தல் எப்படி நிகழ்கிறது?

என்னைப் பொறுத்தமட்டில் கல்வி என்பது…

1. பேனா முனை மட்டுமா…
கல்வி என்பது பேனா முனையல்ல…
விரல் நுனி ஆடும் விளையாட்டு…
கற்றலின் - மூளை கூறும் பதில் கேட்டு
கோலம் போடும் பேனா முனை

2. கல்வி ஆளுமைத் திறனை வளர்க்குமா!
நிச்சயம் ஆளுமை வளர்க்கிறதே..
ஊற்றும் - நீரும் உரமும் வேரினிலே
அளவுக்கு மீறி வேண்டியில்லை
அளவோடு இருந்தால் போதுமென்றே
காயும், கனியும், ருசியாகும்
நிழலும் கூட நிதம் தருமென்றேன்
கல்வி ஆளுமைத் திறனை வளர்க்கின்றதே…

3. யார் யார் ஆசிரியர்?
கருவறைத் தாய் முதல் ஆசிரியர்
வகுப்பறையிலும் ஆசிரியர் தாய்
நல்லது சொல்லும் ஆசானை
நாமும் இனம்காணும் வேளையிலே
எல்லோரும் ஆசிரியர்…

4. கல்வி என்பது புத்தகம் மட்டும்
தானா…
புத்தகம் விழிக்கும் வேளையிலே..
கண்கள் திறக்கும் பார்வையிலே
மூளையின் …

5. கற்றல் கற்பித்தல் எப்படி?
பூவும் நாரும் போலவே..
உடலும் உயிரும் போலவே…
நகமும் சதையும் போலவே..
கற்றல்-கற்பித்தல் இரண்டுமே
சேர்ந்து வெளிச்சம் தந்திடுமே
கல்வி வெளிச்சம் தந்திடுமே..

6. கல்வி - அன்பிற்கும் தொடர்புண்டா..
நீர் புத்தகத்தை நேசிக்கனும்
புத்தகம் உம்மை சுவாசிக்குமே..
அதன் கருத்துகள் உம்மை வாசிக்குமே..
நீர் புத்தகத்தை நேசி
உண்டு - கல்விக்கும் அன்பிற்கும்
தொடர்புண்டு

7. கல்விக்குப் பணம் ஒரு தடையா...
பணம் ஒன்றும் வேண்டியில்லை
பந்தயக் கார உலகினிலே - கல்விக்குப்
பணம் ஒன்றும் வேண்டியில்லை
(தடையில்லை)
கற்றல் எங்கே இல்லையென்று
கேள்வி எழுப்பும் வேளையிலே
கற்றல் இல்லா இடமில்லை
வீதியிலே... வீட்டிலே.. பள்ளியிலே..
செல்லும் இடமெங்கும் கற்றலின்
கண் திறக்கையிலே...
உற்று நோக்கி கற்க பணம் எதற்கு?
கல்விக்குப் பணம் ஒரு தடையில்லை..
கற்றவரால் மட்டும் தான் பண்பாளராக
இருக்க முடியுமா!
இல்லை.. இல்லை
பாமரர் கூட கற்கின்றார்...
அனுபவ அறிவை தழுவையிலே - நல்ல
அனுபவ அறிவை தழுவையிலே
கற்றல் ஒன்றும் தடையில்லை...
கேட்கும் செவிக்கும் விருந்தளிக்கும்
கற்றல் அங்கும் நடக்கிறதே...
பாமரரும் பண்பாளனே...

8. கற்றல் பள்ளிக் கூடம் ... மட்டும்
தானா...
கற்றல் எங்கும் நிறைந்திருக்கும்
கண்களைத் திறந்துக் கொண்டிருந்தால்
கற்றல் கண்ணைக் கவர்ந்திடுமே...
வீடும் நாடும் பள்ளியுமே
கற்றலை அள்ளித் தருகிறதே
கரம் நீட்டி வாங்கிடத்தான்
இரண்டு கைகள் வேண்டுமென்றே
அள்ளித் தரும் வானம்போல்
கற்றல் எங்கும் நிறைந்திருக்கும்.



**லீனா,** தொ.ப.ஆ, அ.தொ.ப., தவளக்குப்பம்

# பூந்தோட்டமே எங்கள் பள்ளியின் முகத்தோற்றம்

**• கற்றல் சிறப்பாக நடைபெற, கற்றல் சூழல் இனிமையாக இருக்க வேண்டும். பள்ளித் தோட்டத்தையும், பாடல்களையும் மையமாகக் கொண்டு ஆசிரியர் பாடங்களைக் கற்பித்த அனுபவங்களை இக்கட்டுரையின் மூலம் நம்முடன் பகிர்ந்துள்ளார்.**

## நோக்கம்

மனிதனுடைய வளர்ச்சி நிலைகளில் மிகவும் முக்கியமானது குழந்தைப் பருவம். குழந்தைப் பருவத்தின் தேவைகளை உணர்ந்து அதற்குரிய சிறந்த சமூகச் சூழலையும், கற்றல் சூழலையும் உருவாக்கித்தருவது நமது கடமையாகும். இதில் இயற்கை எழில் சூழ்ந்த கல்விச்சாலையும் அடங்கும் என அனைவரும் இணைந்து பணியாற்றத் தொடங்கினோம்.

## செயல்பாடு

கல்விச் சோலையை உருவாக்குவதற்காகத் தலைமையாசிரியர், ஆசிரியர்கள், பிற பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் அனைவரும் இணைந்து ஒருசேரப் பணியாற்றியதால் மிக விரைவிலேயே நாங்கள் விரும்பிய பசுமையான மாற்றங்களைக் காணத்தொடங்கினோம். இம்மாற்றங்களுக்குக் காரணம் ‘நான்’ தான் என சுயநலம் பாராட்டாமல் ‘நீர்’ தான், ‘நீர்’ தான் என அனைவரும் பொதுநலமாகப் பேசியதாலோ என்னவோ எங்கள் பள்ளியின் நீர்வளமே பள்ளியின் பசுமையான மாற்றங்களுக்குக் காரணமாகிப்போனது. மாணவர்களும் தங்கள் பகுதியில் கிடைக்கும் பல்வேறு செடிகளையும் மரக்கன்றுகளையும் கொண்டுவந்து வந்தனர்.

மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து ‘களை எடுத்தல்’, ‘நீர் பாய்ச்சுதல்’, ‘வேலியிட்டுப் பாதுகாத்தல்’ போன்ற பல்வேறு பணிகளை வழங்கினோம். மண்வளத்திற்குத் தகுந்த பூச்செடிகளையும், காய்கறிச் செடிகளையும் மற்றும் மரக்கன்றுகளையும் நட்டு கண்போல் பாதுகாத்து வளர்த்து வந்தோம். மாணவர்களும் மிகுந்த ஆர்வத்துடன் இணைந்து பணியாற்றினர். தோட்டப்பணிகளில் மாணவர்கள் ஈடுபடும் பொழுது அவர்களுக்குப் பிடித்த உற்சாகமூட்டக்கூடிய சில பாடல்களைப் பாடிக்கொண்டே பணியாற்றினர். ஆசிரியர்களும் மாணவர்களோடு சேர்ந்து பாடிக்கொண்டே தோட்டப் பணிகளில் ஈடுபட்டனர். எங்கள் காய்கறித் தோட்டத்தில் கிடைத்த காய்கறிகளின் விவரம் பின்வருமாறு :

பச்சை மிளகாய் - 2 கிலோ, தக்காளி -1 கிலோ, கத்திரிக்காய் -1 லு கிலோ, வெண்டைக்காய்-11, தர்பூசணி-6.

## கற்றல் விளைவுகள்

மாணவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட பல்வேறு தோட்டப் பராமரிப்புப் பணிகள் மூலம் தோட்ட மேலாண்மை மட்டுமல்லாது தலைமைப் பொறுப்பு, குழு மனப்பான்மை, விட்டுக்கொடுத்தல், உழைப்பின் அருமை, சேர்ந்து பணியாற்றுதல், பொறுப்புணர்ச்சி போன்ற பல நற்பண்புகளை மாணவர்கள் கற்றுக்கொண்டனர். மேலும் தங்கள் வீடுகளிலும் சிறு தோட்டங்களை உருவாக்குவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டனர். தங்கள் அனுபவங்களை வகுப்பறையில் பகிர்ந்துகொண்டனர். பெற்றோர்களும் இந்தத் தோட்ட மேலாண்மை செயல்பாட்டுக்குப் பின்னர் மாணவர்கள் பொறுப்புணர்வோடு செயல்படுவதாகக் கூறினார்கள்.

## கற்பித்தலில் இசையின் பங்கு

கற்றலை இனிமையாக்க நான் கையிலெடுக்கும் மற்றொரு ஆயுதம் பாடல். மொழிப்பாடம் என்றாலே முழி பிதுங்கும் மாணவர்களுக்குக்

இசையே எம் ஆசை; இராகமே இசை
மனமே அதற்கு இசை (ஏற்றுக்கொள்)
பயிற்சி பெறு பல் விசை ( ஒரு தடவை)
அகிலமும் ஏறெடுக்கும் உன் திசை
தமிழில் தாளமிட்டுப்பாடு
பலன்கொடுக்கும் உன் ஏடு ( புத்தகம்)
கவிதை நயத்தை நீ நாடு (அணுகு)
கவலை இனி இல்லை உன்னோடு
கற்றல் திறன் சிறக்க, கடினத்தை நீ மறக்க
பறவை போல் மறக்க, பாடிப் பழகு உரக்க.

கூட பாடல் என்றால் அதில் ஒரு ஊடல், ஒரு தேடல் இருப்பதை ஆசிரியப் பெருமக்களாகிய நாம் உணரமுடிகிறது. தொடக்கக்கல்வியில் இருந்தே இந்நாட்டத்தை நாம் காணமுடிகிறது.

சில நேரங்களில் பாடல்களை மனதில் பதியவைக்கப் பரிச்சயமான திரைப்படப் பாடல்களின் எளிமையான இராகத்தைக் (மட்டும்) கைக்கொண்டால் எளிதாகப் பாடச் செய்து மாணவர்கள் மனதில் பதியச் செய்யலாம். மேலும் தாள நயத்தோடு பாடுவதற்குக் கைத்தட்டல் மற்றும் சிறு ஒலி எழுப்பும் உபகரணங்களைப் பயன்படுத்தினால் தங்களை அறியாமலேயே தாளத்துடன் கூடிய வரிகளை எளிதில் நினைவில் வைத்துக் கொள்வார்கள்.

நேசித்தால் இயற்கையைப் பெறலாம்
பேசினால் நட்பைப் பெறலாம்
பயின்றால் அறிவைப் பெறலாம்
பாடினால் அகிலத்தையும் பெறலாம்.

சிறுவயதில் நாம் கொடுக்கும் பயிற்சி ‘பசுமரத்தாணி போல’ மாணவர் மனதில் ஆழமாகப் பதியும். இதற்கு என் ஆசிரியப் பணியில் என்னுடன் கல்வியில் பயணித்த மாணவர்களே சான்று. நான் மாணவனாக இருந்த காலத்தில் எனக்கு பாடல்கள் மூலம் கற்பித்த ஆசிரியர்கள் இன்றும் என் மனதில் நீங்கா இடம் பெற்றவர்களாக இருக்கிறார்கள்.

எனவே பாடல்கள் வாயிலாகக் கல்வி கற்போம். அப்போது கல்வி கற்பது சுமையாக இல்லாமல் சுகமாக மாறும். அனைத்துப் பள்ளிகளிலும் எங்கள் பள்ளியில் உள்ளது போன்ற பூந்தோட்டத்தை உருவாக்கினால் பல நற்பண்புகளை எளிமையான முறையில் கற்பித்து, வாழ்வியலோடு இணைந்த கற்றல் அனுபவங்களை அனைத்து ஆசிரியர்களும் மாணவர்களுக்கு அளிக்க முடியும். மேலும் பாடல்கள் மூலம் கற்பிக்கும் முறையையும் முயற்சி செய்து பயன் பெறலாம்.



**அந்தோணி ஜோசப்,** தொ.ப.ஆ, அ.தொ.ப., பெரியார் நகர்.

# பள்ளிச்செயல்பாடுகளில் தலைமையாசிரியரின் பங்கு

**• நாடோடிச் சமூகக் குழந்தைகள் பள்ளிக்கு வருவதே சவால் என்கிற நிலையில் தலைமை ஆசிரியரின் பங்கு மிகவும் இன்றியமையாதது.**

**• பெற்றோர் ஆசிரியர் உறவு மேம்பட, பள்ளியின் தேவைகளை நிவர்த்தி செய்யத் தலைமை ஆசிரியர் முனைப்பெடுத்தல் வேண்டும்.**

**• பள்ளிச்செயல்பாடுகளில், பெற்றோரை ஈடுபடுத்தும் பொழுது, பள்ளி மேம்படுகிறது.**

தலைமை ஆசிரியையாகப் பொறுப்பேற்று இரண்டு ஆண்டுகள் ஆகிறது. ஆசிரியர் பணியை மகிழ்ச்சியாகவும், வித்தியாசமாகவும் என்னால் இயன்ற அளவில் செய்துகொண்டு வருகிறேன். எங்கள் பள்ளி பெரும் வயல்வெளிக்கு மத்தியில் உள்ளது. பள்ளியில் படிக்கும் குழந்தைகளில் எஸ்.சி மற்றும் எஸ்.டி குழந்தைகளும், ஒரு சில மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகம் சார்ந்த குழந்தைகளும் படித்து வருகின்றனர். குழந்தைகளின் வறுமை என்பது பல வடிவங்களில் வெளிப்படும். குறிப்பாக, இருளர் சமூகக் குழந்தைகள் சத்தில்லாமலும், சாப்பிடாமலும், பல நேரங்களில் உடல் முடியாத நிலையிலும் பள்ளிக்கு வருவர். பள்ளியில், பிறப்புச்சான்றிதழ், ஆதார் அட்டை இல்லாமலே பள்ளிக்கு வந்தாலும் பள்ளியில் சில குழந்தைகளைச் சேர்த்து வைத்துள்ளோம். பள்ளி சார்ந்த நிகழ்வுகளுக்கோ, குழந்தைகளைப் பற்றிப் பேசவோ பெற்றோரை வரவழைப்பது என்பது சாதாரணமல்ல. அதோடு, ஒரு குறிப்பிட்ட வேலைக்காகக் குடும்பத்துடன் பயணிக்கும் வழக்கம் உள்ளவர்களாக இருக்கின்றனர் இந்தக் குழந்தைகள். அச்சமயங்களில் இக்குழந்தைகள் பள்ளிக்கே வர மாட்டார்கள். உதாரணமாக, கரும்பு வெட்டும் வேலைக்குச் சென்றால் ஏறக்குறைய 4 மாதங்கள் பள்ளிக்கு வர மாட்டார்கள். மற்ற சமயங்களிலும் இரண்டு நாள், மூன்று நாள் என்று எங்காவது அழைத்துச் செல்லப்படுவர் . கடந்த ஆண்டு எங்கள் செயல்பாடுகளின் மூலம் 46 - ஆக இருந்த மாணவ எண்ணிக்கையை 72 - ஆக உயர்த்தினோம். 2017-18 கல்வியாண்டில் 102 - ஆக உயர்த்தியுள்ளோம். இதற்குக் காரணமான எங்கள் பள்ளியின் ஆசிரியச் செயல்பாடு மற்றும் மற்ற செயல்பாடுகளைக் குறிப்பிட்டாக வேண்டும்.

மற்ற எல்லா தலைமை ஆசிரியர்களும் செய்வதை தான் நானும் செய்கிறேன். இச்செயல்பாடு என்பது எனக்கு விருப்பமானதாகவும் நான் விரும்பி செய்வதாலும் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

• குழந்தைகளுக்கான வாசிப்புப்புத்தகங்களை ஏற்பாடு செய்தல். இடைவெளி நேரங்களில் ஆசிரியர்கள் நடத்தும் பாடங்களைப் பற்றி ஆலோசித்தல், தேவைப்படும் கற்றல் கருவிகளைச் செய்யவும், வாங்கவும் ஊக்குவித்து உதவுதல், ஆசிரியர் வள மையத்திலிருந்து வாராந்திரப் பாடத்திட்டத்தைப் பெற்றுத் தருதல் போன்ற பொறுப்புகளை நான் எடுத்துக் கொள்வது வழக்கம்.

• அலுவலக வேலை, அதைச்சார்ந்த எழுத்து வேலைகளை நானே மேற்கொள்வதால், ஆசிரியர்களால் கற்பித்தலில் முழுமையாகத் தங்களை ஈடுபடுத்தி கொள்ள முடியும் என்பது என் நம்பிக்கை. ஒரு ஆசிரியர் விடுப்பு எடுக்கும் பொழுது அந்த நேரத்தைப் பயன்படுத்தி குழந்தைகளுக்கு நான் முக்கியமாக சொல்லிக் கொடுக்க எண்ணும் விஜயங்களைச் சொல்லிக் கொடுப்பேன்.

• ஆங்கிலப் பேச்சாற்றல் பயிற்சியளிக்க தனிநேரம் ஒதுக்கி அதைச் செய்து வருகிறோம்.

• மாணவர்களை உள்ளூர் வயல், அஞ் சலகம் போன்ற இடங்களுக்குக் கல்விச் செயல்பாடுகளுக்காக அழைத்துச் சென்றோம்.

• காட்சி வழிக்கற்றலுக்கான ஏற்பாடுகளைப் பெறுவதற்கு முயற்சித்து வருகிறோம். கற்றலுக்கான பள்ளிச்சூழல்

- ‘ரோட்டரி க்ளப்’ சார்பாக மாதிரிக் கழிவறை எங்கள் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ளது. அதைக் குழந்தைகள் முறையாகவும் தொடர்ந்தும் பயன்படுத்தி வருகின்றனர்.

- நல்ல குடிநீருக்கான ஆர்.ஒ வசதி பள்ளியில் தொடர்ந்து பயன்பாட்டில் உள்ளது.

- 20 க்கு மேற்பட்ட மாணவர்கள் விளையாட மைதானம், நல்ல சுற்றுச்சுவர் எனப் பள்ளிக்கான அனைத்து வசதிகளுடன் பள்ளி இருப்பது குறிப்பிடத்தக்கது.

- என்.சி.சி மூலம் மூலிகைச் செடிகளை நட்டு பராமரித்து வருகின்றனர்.

## பெற்றோர் ஆசிரியர் உறவு

இதற்கான முயற்சிகள் பலவற்றை நாங்கள் எடுத்தபொழுதும் வெற்றி பெற முடியவில்லை என்று தான் சொல்ல வேண்டும். ஆனால், நாங்கள் சந்தித்து வரும் பிரச்சனைகளுக்கு மாற்று வழியில் தீர்வு காண முயன்று கொண்டே இருக்கிறோம். ஜுரத்தோடு குழந்தைகள் பள்ளிக்கு வரும் பொழுது, திருப்பி அனுப்பினால் பெற்றோர் வீட்டில் இருப்பதில்லை அதனால், மருந்து கொடுத்துப் பள்ளியில் ஓய்வெடுக்க வைக்கிறோம். காலை சாப்பாடு சாப்பிடாமல் வரும் குழந்தைகளைச் சாப்பிட வைக்க முயற்சிக்கிறோம். குழந்தைகள் கரும்பு வெட்ட இரண்டு மாதங்கள் சென்று திரும்பியவுடன் பயமில்லாமல் பள்ளிக்கு வரும்படி சொல்லி அனுப்புவதால், வந்த பிறகு வீட்டிலேயே இருந்து விடாமல் பள்ளிக்கு வருகின்றனர். உதாரணமாக விஷ்வா என்கிற மாணவர் 3 மாதங்களாகியும் பள்ளிக்கு வராத சூழ்நிலை இருந்தது நாங்கள் பலமுறை முயற்சித்தும் அவரது பெற்றோரைச் சந்தித்து விசாரித்த போது அவர், “இத்துணை மாதங்கள் கடந்து விட்டது. இனி எப்படி?” என்று வினவியதற்கு நாங்கள் அம்மாணவரை ஊக்குவித்து மீண்டும் பள்ளிக்கு வரும்படி செய்தோம். குழந்தைகளும் பெற்றோர்களும் சத்தில்லாமல் இருப்பது பற்றி எதாவது செய்ய முடியுமா? என யோசித்து வருகின்றோம். குழந்தைகள் பாதுகாப்புப் பற்றி அவர்களிடம் தொடர்ந்து பேசி வருகின்றோம்.

இதுவரையில்லாமல், இந்த ஆண்டு நாங்கள் நடத்திய குழந்தைகளுக்கான புத்தக வாசிப்பகம் திறப்பு விழா, பெற்றோர்களுக்கான யோகா, ஆண்டு விழா போன்ற நிகழ்ச்சிகளில் பெற்றோர்களுக்கும் விளையாட்டுப்போட்டி நடத்தி பரிசளித்தோம். நிகழ்வுகளில் பெற்றோர்களின் எண்ணிக்கை அதிகம் இருந்ததைப் பெருமையுடன் பதிவு செய்து கொள்கிறோம்.

## தொண்டு நிறுவனங்களின் உதவி

விளையாட்டுப் பொருட்கள் தின்பண்டங்கள், புத்தகப்பை போன்றவற்றை மாணவர்களுக்குப் பெற்றுக்கொடுத்தோம்.

பொரஷக்டர், கம்ப்யூட்டர் உதவியுடன் கற்றல் - கற்பித்தல் செயல்பாடுகளை மேம்படுத்த உள்ளோம். இன்டர்நெட் வசதி கல்வித்துறை மூலமாக விரைவில் கிடைக்கும்.

இணையதள வசதி பெற்றால் நினைத்த விஜயங்களை, கற்றல் தொடர்பான பல கருத்துகளை மாணவர்களுக்குக் கொண்டு செல்ல ஏதுவாக இருக்கும். வாரத்திற்கு ஒரு நாள் யூனிபார்ம் மாற்றிப்போட தொண்டு நிறுவனங்கள் மூலமாக ஏற்பாடு செய்ய முயற்சி எடுக்க உள்ளோம். வகுப்பறையில் சுவர்களில் வண்ணப்படங்கள் வரையவும் முயற்சி எடுக்க உள்ளோம்.

ஒவ்வொரு வகுப்பறையிலும் திட்டமிட்ட கல்விச் செயல்பாடுகளை நடைமுறைப்படுத்த ஆசிரியர்களுடன் தொடர் கலந்துரையாடல் மற்றும் பெற்றோர்களுடன் தொடர் சந்திப்புகள் நடத்தினோம்.



**மகேஷ்வரி,** அ.தொ.ப, இருளன்சந்தை




# LANGUAGE & ARTS

# CREATIVITY IN CLASSROOM




Creativity is the freest form of expression. There is nothing more satisfying and fulfilling for children than to be able to express themselves openly and without judgment. It is not only about doing different things, it is about doing things differently.

Are children naturally creative? Every child is born creative. They only look for suitable opportunities to express themselves. Every child is gifted; they bring out their best at different times. They pay more attention to what the teacher is saying and concentrate on their activities better. As a result, it reduces the stress on the teachers.

Does it really make a difference in the classroom? Creative classrooms do not just look different, they feel different. They provide an environment where students are more likely to express their ideas, think outside the box, approach challenging problems with innovative solutions and most importantly – learn faster and more effectively.

Are we truly giving that time and space for them? We need to complete the syllabus, teach cursive writing, work on activity books and so on; then how do we make time for creative activities? It is good to plan activities that give opportunities for children to express their creativity and enjoy learning.

- Every child is naturally creative and the classroom should provide the space for students to express their creativity and work with enthusiasm.
- There are a list of activities on creativity – storyboard, genius hour, Socratic questions, brainstorming, etc. The teacher has shared a creative exercise used in her classroom as an example. Students have given various reasons for the tortoise winning the race.
- Playing with higher order questions helps in character building. For example, ‘Would you cheat on a test if you knew you will not be caught?’

## Activities to foster creativity in classroom

I have shared a few creativity-based activities that can be used in class on a regular basis.

1. Torrence Task – A simple task in which you present an object such as a tin can and list all the different ways it can be used.

2. Virtual Reality – This is a great way to help students visualize environments and events that they would not be able to realistically access.

3. Brainstorming – This activity involves eliciting ideas from children to develop a story or finding a solution to a riddle.

4. Journaling – In this activity children jot down their daily events or record a happy or sad experience.

5. Genius hour – This is a movement that allows students to explore their own passion projects.

6. Storyboard – This board is a place where children exhibit their own stories or pictures that tell their stories.

7. Drawing/ painting – This is one of the best activities where all children participate to explore the world of colours.

8. One goes back – This is a game where three objects are initially given to children. Later, one object is taken back and the children are asked to think of an alternative.

9. Clay work – This is one of the best activities which gives shape to children's dreams.

10. Socratic questions – Socratic questions are those questions that prompt children to think and come up with further questions. This encourages all children to try and respond. Ideally the answers to such questions are not end points, but are instead a beginning to further analysis and deeper understanding. Some examples of Socratic questions are as follows:

- How would the world be different if animals could talk?
- If you could make one rule that everyone in the world have to follow, what would that be? Why?
- What would you do if you were invisible?

Socratic questions can also enable character building: Would you cheat on a test if you knew you would not be caught? If you could give one gift to every single child in the world, what gift would you give? What five words would describe you the most?

11. Completing a story - Here children add to or complete an existing story (usually a popular one). When I asked children of class one to suggest a different ending to the popular story 'The Hare and the Tortoise', they came up with answers like:

- The hare woke up before the tortoise reached the end line and won.
- There was a river in the middle of the forest in which the hare could not swim and so the tortoise won.
- The tortoise had already left a few carrots on the way to distract the rabbit.
- It was a magic tortoise; it could fly!
- The hare felt sorry for the tortoise and so waited for him.
- The hare was caught in a hunters net and the tortoise won.
- The deer carried the tortoise to the winning point when the hare was asleep.

This activity makes the children to use their imagination and creativity effectively.

## Conclusion:

Creative activities makes the teaching of a lesson very easy. Make time for creativity. Most of the creative activities mentioned above take only a few minutes to do. They require some preparation time and cost little money, if any. Let us live by the words of Dr. Ruth: "Live life every day like a turtle". To get anywhere, a turtle has to stick its neck out and take a risk. So take risks every day. It is the only way to truly live and make a difference in the world.



SRILAKSHMI VIJAYAKUMAR - PST - GPS EMBALAM.

# PRINT RICH CLASSROOM ENVIRONMENT AND READING CORNER



- Print rich environment and reading corner in primary language classroom can be used as effective strategies to expose students to reading during leisure time.

**Creating learning environment in the classroom** We, the staff members of GPS Karasur, planned to create a print rich environment for the students. We painted the classrooms based on the language focus for the grade.

## 1. Print Rich Environment

The pre-primary classroom is largely filled with pictures because young children are naturally curious and the colourful pictures motivates them to learn. The teacher sets up the framework for language learning by presenting situations and sentences. The teacher provides guided practice and encourages the learners to practise freely (Induction method). Then the teacher elicits the language from the learners. This method helps to introduce children to the second language through their mother tongue.

Primary grade students have more exposure to letters in the lower classes. Now they are at a level where we can introduce more words and sentences. Hence we painted the classrooms with lots of words and sentences along with pictures.

## 2. Reading corner

We purchased lots of books for children to read in their free time. The displays on the classroom walls are also good reading materials for them. During lunch time and free periods, they go to the reading room and read the Books they like.

*ONE BEST BOOK IS EQUAL TO HUNDRED GOOD FRIENDS.*

- *Dr. A.P.J. ABDUL KALAM*



**VETRISELVI**
**PST - GPS - KARASUR**

**R. SUBASRI**
**PST - GPS - KARASUR**



# எண்ணங்களின் வண்ணங்கள்

- ஓவியம் வரைதல் போன்ற செயல்பாடுகளில் மாணவர்கள் அதீத ஆர்வம் கொண்டவர்களாக இருக்கின்றனர்.
- ஓவியங்கள் மாணவர்களின் பேசும் மொழியாகவும் அமைகிறது.
- மாணவர்களின் கற்பனைத்திறம் ஓவிய செயல்பாடுகளின் பொழுது அதிகமாகிறது.

ஓவிய வகுப்பு என்றாலே மாணவர்களுக்கு மகிழ்ச்சியான வகுப்பாகவே இருக்கும். கற்றலில், மாணவர்களின் ஓவியம் கற்றல் முயற்சிகளுக்காக ஓவிய ஆசிரியர்களின் நிலைப்பாடு, முயற்சி மற்றும் திட்டமிடல் போன்றவற்றிக்கு விடையளிக்க சில உதாரணங்களோடு இக்கட்டுரையைப் படிக்கிறேன். மாணவர்களுடைய திறன்களை வளர்த்தெடுப்பதில் அவர்களுடைய மனநிலை அளவில் நாமும் நமது அணுகுமுறையும் இருத்தல் அவசியம். இவ்வகையில் ஓவியம் கற்றல் மற்றும் கற்பித்தல் எளிய முறையில் சாத்தியம்.

நடைமுறை பாடத்திட்டங்கள், வகுப்பறையை ஒரு குறிப்பிட்ட அளவில் கட்டுப்பட்டுள்ள தாக்குகிறது என்பது என்னுடைய கருத்து. பாடத்திட்டத்திலிருந்து ஓவியக்கண்காட்சியை நோக்கி ஆசிரியர்களின் செயல்திட்டம் அமைந்தால் சிறப்பாக இருக்கும். பின்தங்கிய நிலையிலிருந்து வரும் எம் பள்ளி மாணவர்களைக் கல்வியில் ஊக்கப்படுத்த ஓவியம் பெரிதும் பயன்படுகிறது. அதோடு தொடக்கப்பள்ளி மாணவர்கள் மற்றும் நடுநிலைப்பள்ளி மாணவர்கள் ஒரே இடத்தில் படிப்பதால் அவர்களை இணைக்கும் புள்ளியாக ஓவியம் உள்ளது. இருவரும் சேர்ந்து ஓவியங்களை




வரைந்தார்கள், இதுபோன்ற நிகழ்வுகளில் மெழுகுவண்ணம், வண்ண பென்சில், நீர்வண்ணங்கள், ஆயில் பேஸ்டல், போன்ற பொருட்களை ஆசிரியர்கள் தயார்ப்படுத்தி மாணவர்களின் தன்மைக்கேற்ப பயன்படுத்தி ஊக்கப்படுத்துதல் அவசியம் ஆகிறது.

ஓவியக்கண்காட்சி தயாரிப்பில் ஆசிரியர்களாகிய நாம், நம் மாணவர்களிடம் ஏற்பட்டுள்ள வளர்ச்சி, முயற்சி மற்றும் திட்டப்பயன் அறிய சில உதராணங்கள் மற்றும் சில மாணவர்களின்









செயல்களைக் குறிப்பிட்டுள்ளேன்.

1. 2-ஆம் வகுப்பில் பயிலும் மதன் என்ற மாணவன் பேச முடியாத நிலையில் உள்ள மாணவன். சாதாரணமாக அவனது கிறுக்கலில் முழுமை பெறாத படங்களை, கட்டைவிரல் ஓவியம் மூலம் படங்கள், காட்சிகளாக செயல்வடிவம் பெற்ற நிகழ்வு அந்த மாணவனுக்கு மிக்க மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. அவனுடைய கண்களில் பெருமிதத்தைக் காண முடிந்தது.

2. 3-ஆம் வகுப்பினில் பயிலும் ஆரியா என்ற மாணவியின் ஓவியங்கள், மனிதர்களின் குச்சி வடிவங்கள் மூலம் மாணவர்களின் செயல்பாடுகள் அடிப்படையிலான படங்களாக அமைந்தன. இதில் அந்த மாணவியின் கற்பனைத்திறனை அறிய முடிந்தது.

3. 4-ஆம் வகுப்பு ஷெகதீஸ் என்ற மாணவன் கவனச்சிதறல்களால் புரிதலில் சிரமமடையும் மாணவராகக் கருதினேன். ஓவியம் வரைதலில் சிரமம் கொள்ளாமல் அவரின் பங்கு அமைய, Creative Work என்ற முறையில் மெழுகு கோட்டு வண்ணம் தயார்செய்து கருப்பு நிற வண்ணம் கொண்டு ஓவியங்களை நிறைவுசெய்தது அந்த

மாணவனின் பங்களிப்பை அதிகரித்தது.

4. 6-ஆம் வகுப்பில் பயிலும் துர்கா என்ற மாணவி, கவனம் மற்றும் நினைவு சிதறல் கொண்ட மாணவி. சக மாணவர்களின் குழு ஒத்துழைப்புடன் அவளை ஊக்கப்படுத்தியதால், ஓவியக் கண்காட்சியில் பங்குபெற செய்தல் சாத்தியமானது.

5. முகேஷ் என்ற மாணவன், ஓவியங்களில் வண்ண‹ தீட்டுதலில் திறமையான மாணவர். இந்î ஓவியக்கண்காட்சி திட்டத்தில் Modern Art என்று சொல்லக்கூடிய கண்கவர் ஓவியம் மூலம் மாணவரின் ஓவியம் வரைதலில் உள்ள பரிணாம வளர்ச்சி, மற்ற மாணவர்களின் சிந்தனையைத் தூண்டும் விதமாக அமைந்தது.

6. 7-ஆம் வகுப்பினில் பயிலும் சேதுராம் மெதுவாக கற்கும் திறனுடைய மாணவர் என்று கருதப்பட்ட நிலையில், எதிர்பாராத விதமாக அறிவியல் விழிப்புணர்வு படம் வரைந்து ஆச்சரியத்தை ஏற்படுத்தி விட்டார்.

7. 8-ஆம் வகுப்பு தமிழ்ச்செல்வன் ஓவியம் வரைதலில், தேசிய நீர் மேலாண்மை ஓவியப் போட்டியில் புதுவை மாநில அளவில் பரிசு பெற்ற மாணவர் ஆவார். தொடர்ந்து அந்த மாணவனின் ஓவியங்களில் நுணுக்கம் நிறைந்த கருத்துப்படங்களாக சிறந்து விளங்கியது.

8. சுவேதா கடந்த ஆண்டு வரை ஓவியம் வரைதலில் பின் தங்கியிருந்தார். இந்த ஆண்டு ஓவியம் வரைதலில் ஆர்வம் ஏற்பட்டு அவளுக்கே உரித்தான பாணியில் ஓவியங்கள் வரைந்து அவருடைய படைப்புகள் சிறப்பு செய்தன.



ஓவியங்கள் வரைதல் வாயிலாக எளிய முறையில் கற்பித்தல் என்பது நமது பண்பாட்டு நிகழ்ச்சிகளை ஒட்டி அமைவது இன்னும் சிறப்பு.

தீபாவளி காட்சிகள், ஊர் திருவிழாக் காட்சிகள், மழைக்காலம் அதை ஒட்டிய ஓவிய காட்சிகள், பொங்கல் நிகழ்ச்சிகள், புத்தாண்டு ஒட்டிய வாழ்த்து அட்டைகளைத் தயாரித்தல் போன்றவை எளிய முறையில் மாணவர்களை ஊக்கப்படுத்தும் விதமாக ஓவிய வகுப்புகள் அமைவது கற்றல் எளிதாக நடக்க உதவுகிறது.



**க. லிங்கேஷ்வர்.,** நுண்கலை ஆசிரியர்,
Dr. B.R. அம்பேத்கர் நடுநிலைப்பள்ளி, பிச்சைவீரன்பேட்.

# ஏலேலோ ஐலசா

- எளிய பாடல்களைப் பாடுதல்
- சொற்களைத் தொடராக்கி எழுதவும், அதற்குரிய ஒலியுடன் வாசிக்கவும் செய்தல்
- படங்களைப் பார்த்து அதிலுள்ள பொருட்களைப் பற்றிப் பேசுதல்

**துணைக் கருவிகள்**

சொல் பட அட்டைகள், எழுத்து அட்டைகள், பட அட்டைகள், கைப் பேசி, வானொலி, வண்ணம் தீட்டுவதற்கு ஏற்ற படங்கள்.

**ஈடுபடுதல்**

மாணவர்கள் கற்றலில் உற்சாகமாகப் பங்கேற்கும் விதமாக பல்வேறு பாடல்களை ஆசிரியர் பாடிக் காட்டி, மாணவர்களையும் பின்பற்றிப் பாடச் செய்தல்.

**ஆராய்தல்**

பேச்சாற்றல் திறன் - ஆசிரியர் பல்வேறு பட அட்டைகளைக் காட்டி, அதிலுள்ள மரங்கள், விலங்குகள், பறவைகள், பொருள்களைப் பற்றிப் பேசச் செய்தல். படங்களைப் பார்த்து தங்கள் கற்பனைகளையும் சேர்த்து தங்கு தடையின்றிப் பேசுவதன் மூலம் பேச்சாற்றல் திறனை வளர்த்தல்.

கவனிக்கும் திறன் - மாணவர்கள் படங்களைப் பார்த்து அதிலுள்ள விலங்குகள், பறவைகள், மரங்கள் ஆகியவை பற்றிக் கதை கூறச் செய்தல். ஆசிரியரும் மாணவர்களுக்குச் சில கதைகளைக் கூறுதல். (எ.கா) முயலும் ஆமையும், வேடனும் புறாவும், ஆலமரமும் குருவியும்ஞ் மேலும், பறவைகள், விலங்குகள் பற்றிய பல்வேறு பாடல்களை ஆசிரியர் பாடிக் காட்டுதல். ஆசிரியரைப் பின்பற்றி மாணவர்கள் பாடுதல். (எ.கா) சிவப்புத் தக்காளி, எங்கள் வீட்டுப் பூனைஞ் இவ்வாறு மாணவர்களுக்குத் தெரிந்த கதைகள், பாடல்கள் ஆகியவற்றைக் கூறச் செய்வதன் மூலம் வகுப்பறையில் கவனச்சிதறல் இல்லாமல் கவனிக்கும் திறன் வளரும்.

உற்றுநோக்கும் திறன் - ஆசிரியர் காட்டும் பட அட்டைகளை நன்கு உற்றுநோக்கி அதில் எ,ஏ,ஐ வரிசையில் தொடங்கும் பொருள்களின் பெயர்களைக் கண்டுபிடித்துக் கூறுவதன் மூலம் உற்றுநோக்கும் திறனை வளர்த்தல்

**விளக்குதல்**

- ‘ஏலேலோ ஐலசா’ என்ற இப்பாடலை ஆசிரியர் அதற்குரிய அங்க அசைவுகளுடனும் செய்கைகளுடனும் பாடிக் காட்டுதல்; மாணவர்கள் பின்பற்றிப் பாடுதல்.
- மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்து ஒரு குழு ஒரு அடியைப் பாட மற்றொரு குழு அடுத்த அடியைப் பாடக் கற்றுத் தருதல். இதற்கு ஆசிரியர் உதவி செய்தல். இவ்வாறு பலமுறை பயிற்சி செய்த பின்னர், தனித்தனியாக ஒரு அடியைப் பாட அடுத்த மாணவன் மற்றொரு அடியைப் பாடக் கற்றுத் தருதல்
- சரியாகப் பாடாத மாணவர்களை இனம்கண்டு ஆசிரியர் அவர்களுக்கு மேலும் பலமுறை இப்பாடலைப் பொறுமையாகச் சொல்லித்தருதல் வேண்டும். கைப்பேசியில் இப்பாடலைப் பதிவுசெய்து திரும்பத் திரும்ப அவர்கள் கேட்குமாறு செய்ய வேண்டும். இப்பாடலைத் தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருப்பதால் அனைத்து மாணவர்களின் மனதிலும் இப்பாடல் மிக ஆழமாகப் பதிந்து விடும்.

பாடலைக் கற்பிப்பது மட்டும் அல்லாது மேலும் சில செயல்பாடுகள் செய்து அவர்களின் மொழித்திறன்களை வளர்த்தல். அவை,

- படங்கள் ஒட்டிய சொல் அட்டைகளை மாணவர்களிடம் கொடுத்து அவ்வட்டைகளில் உள்ள படங்களைப் பார்த்துப் பெயரினைக் கூறச்செய்தல். அவ்வட்டைகளில் எழுதப்பட்டுள்ள சொற்களை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துதல். அச்சொற்களை அதற்குரிய ஒலிநயத்துடன் வாசிக்கவும் கற்றுத் தருதல்.
- தனித்தனியாக எழுதப்பட்ட எழுத்து அட்டைகளைக் கொடுத்து புதிய எழுத்துக்களை அறிமுகப்படுத்துதல். அவ்வெழுத்துக்களை



அதற்குரிய வடிவத்துடன் எழுதுவதற்குப் பயிற்சி அளித்தல்.

• எழுத்துக்கள் நன்கு அறிமுகமாகிய பிறகு அவ்வெழுத்துகளிலிருந்து புதிய சொற்களைக் கூறவும் பயிற்சியளித்தல்

• சொற்றொடர் அட்டைகளை மாணவர்களிடம் கொடுத்து வாசிக்கக் கற்றுத் தருதல்

## விரிவாக்குதல்

தனித் தனியாக பல்வேறு சொற்கள் எழுதப்பட்டிருக்கும் சொல் அட்டையை மாணவர்களிடம் கொடுத்துப் படிக்கச் செய்தல்

• ஒரு மாணவனிடம் ஒரு சொல் அட்டையைக் கொடுத்து வாசிக்கச் செய்தல். அச்சொல்லின் இறுதி எழுத்தைக் கரும்பலகையில் எழுதச் செய்தல்

• மற்றொரு மாணவனை அந்த இறுதி எழுத்தை முதலாவதாகக் கொண்டு தொடங்கும் புதிய சொல் அட்டையைக் கண்டுபிடித்து வாசிக்கச்செய்தல். இவ்வாறு வகுப்பறையில் உள்ள அனைத்து மாணவர்களையும் இதில் பங்கேற்கச் செய்தல்



கொக்கரக்கோ சேவலே
கொண்டையாட்டும் சேவலே
நித்தம் என்னைக் காலையில்
நேரத்திலே எழுப்புவாய்
தூங்குகின்ற உலகையே
குரல் கொடுத்து எழுப்புவாய்
கொக்கரக்கோ சேவலே
வாழ்க உந்தன் சேவையே!

• காய்கறிகள், விதைகள், தானியங்கள் இவற்றைக் கொண்டு புதிய உருவங்களை உருவாக்கச் செய்தல். ஆசிரியர் கொடுக்கும் பட அட்டைகளைப் பெற்று அதற்கேற்ற பொருத்தமான வண்ணங்களைத் தீட்டி மகிழ்தல்.

## மதிப்பீடு

1. ஏலேலோ என்ற பாடலைத் தனித்தனியாகவும் குழுவாகவும் பாடச் செய்தல்

2. 'படங்களைப் பார்த்துப் பெயரினை எழுதுதல், சொல்வது எழுதுதல் பயிற்சி

3. எழுத்து அட்டைகளை வரிசையாக அடுக்கிக் கூறும் பயிற்சி

4. சொற்றொடர் அட்டைகளை வாசித்தல், எழுதுதல் பயிற்சி

5. படங்களுக்குப் பொருத்தமான சொற்களையும், சொற்களுக்குப் பொருத்தமான படங்களையும் இணைக்கும் பயிற்சி இச்செயல்பாடுகளின் வாயிலாக இப்பாடத்திற்கான கற்றல் நோக்கங்களை மாணவர்கள் அடைவர் என்பது எனது எண்ணம்.



**ரேவதி**, தொ.ப.ஆ, அ.தொ.ப. வில்லியனூர்

# ஓர் ஆசிரியர் பல வகுப்புகள்



ஓராசிரியர் பள்ளி என்பது புதுச்சேரியைப் பொறுத்தமட்டில் ஒருசில மட்டுமே உள்ளன. ஆனாலும் அவ்வகைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எதிர்கொள்ளும் சவால்களையும் அவற்றை எதிர்நோக்கிய விதங்களையும் இக்கட்டுரையில் காணலாம்.

## எதிர்கொள்ளும் சவால்கள்

• L.K.G, U.K.G, ஒன்று, இரண்டு என நான்கு வகுப்புகள் உண்டு. ஆயினும் மாணவ - மாணவியர் எண்ணிக்கை பதினேழு மட்டுமே. அதில் இருவர் மாற்றுத் திறனாளிகள். ஒருவர் உடல் ரீதியில், மற்றொருவர் மனரீதியில் பாதிப்பு உடையவர். ஆயினும் அனைவரையும் ஒன்றாகவே வழிநடத்த வேண்டும். சவால்கள் வகுப்பில் மட்டுமல்ல, பெற்றோர், சமூகம் சார்ந்த இடர்கள் என பல உண்டு. அத்தயை சூழலில் முன்னோன் வள்ளுவப் பெருந்தகையின் குறள்களில் ஒன்று நினைவுக்கு வரும்.

“எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்

எண்ணுவம் என்பது இழுக்கு.”

எனும் திருக்குறள் கொடுக்கும் உந்துதலைக் கொண்டு எனது பள்ளி சார்ந்த அனைத்து பணிகளையும் செய்து முடிக்கிறேன், செய்து கொண்டே இருப்பேன். பள்ளியின் தினக்கூலி ஊழியர், சகோதரர் திரு.இரா.முருகன் அவர்கள் எனக்குப் பக்கபலமாக அனைத்து பணிகளையும் செய்து முடிக்க உதவுவார். அவர் இல்லையேல் அனைத்திலும் ஒரே ஆளாக என்னால் ஒன்றும் செய்ய இயலாது.

• L.K.G முதல் இரண்டாம் வகுப்பு வரை உள்ள மாணவர்களை ஒரே அறையில் ஒன்றாகவே அமர வைத்து கற்பிக்க வேண்டிய கட்டாயம். அநேக வகுப்புகளில் ஒரே பாடம் அனைத்துப் பிள்ளைகளுக்கும் உண்டானதாக அமைவதைத் தவிர்க்க இயலவில்லை.

• ஒன்றாம் வகுப்பில் கற்ற அதே பாடத்தினை மீண்டும் ஒருமுறை இரண்டாம் வகுப்பு மாணவர்கள், தற்போதுள்ள ஒன்றாம் வகுப்பிற்குக் கற்பிக்கும் போது கவனிக்க வேண்டிய நிலையும் உள்ளது. நேற்றும் அந்த வகுப்பிற்கு முதலில் பாடம் நடத்தினீர்கள் இன்றும் அவர்களுக்கே முதலில் நடத்துகிறீர்கள் என்று மற்றொரு வகுப்பைச் சேர்ந்த குழந்தைகள் அன்பாகக் கேட்கும் போது அவர்களைச் சமாதானம் செய்ய வேண்டிய நிலையும் உள்ளது.

## கற்றல் செயல்பாடுகள்

ஒன்று மற்றும் இரண்டாம் வகுப்புகளுக்கு பாடம் துவங்குவதற்கு முன்பு L.K.G மற்றும் U.K.G வகுப்புகளுக்கு படித்தல், எழுதுதல் மற்றும் வண்ணம் தீட்டுதல் போன்று ஏதேனும் ஒரு பயிற்சியினை அளிப்பேன். இவர்களுக்குப் பாடம் நடத்தும் போது ஒன்று மற்றும் இரண்டாம் வகுப்புகளுக்கு ஏதேனும் ஒரு பயிற்சியினைக் கொடுப்பேன். இவை அன்றாட வகுப்பறை செயல்பாடுகளுள் ஒன்றாக உள்ளது.

**கற்றல் வெளிப்பாடு:** எனது பள்ளியின் அனைத்து மாணவர்களும் மொழித்திறன், கணிதத்திறன் என அனைத்திலும் ஒளிரவே

செய்கின்றனர் என்பது எனக்கு ஒருவித களிப்பினை அளிக்கிறது.

ஒவ்வொரு முறையும் பெற்றோர்-ஆசிரியர் சங்கக் கூட்டத்திலும் மற்றொரு ஆசிரியர் பணியிடம் எப்போது நிரப்பப்படும் என்ற கேள்விக்கு விடையினைக் கூற இயலாமல், 'உங்கள் பிள்ளைகள் அனைத்துத் திறன்களையும் பெற்று தான் அடுத்த வகுப்பிற்குச் செல்வார்கள், அதற்கு நான் முழு பொறுப்பையும் ஏற்கிறேன்' என்று சமாதானம் செய்ய வேண்டிய நிலை உள்ளது.

**நம்பிக்கை**

அருகாமை பள்ளிகளான அ.தொ.ப. குடியிருப்புப்பாளையம், பொறுப்பாசிரியர் திரு.க.வெங்கடேசன் அவர்கள் மற்றும் அ.தொ.ப. ஆதிங்கப்பட்டு பேட் பொறுப்பாசிரியர். திரு. இல. சுந்தரமூர்த்தி அவர்கள் ஆகிய இருவருடனும் கற்பித்தல் மற்றும் பள்ளியின் பல்வேறு செயல்பாடுகள் குறித்து ஆலோசனையில் ஈடுபடுவதும் எனக்கு மிகவும் உதவியாக உள்ளது.

அடுத்த கல்வி ஆண்டு துவங்கும் நிலையிலாவது மற்றொரு ஆசிரியரை கல்வித்துறை எமது பள்ளிக்கு நியமிக்காதா என்ற எதிர்பார்ப்போடு மாணவ-மாணவியர் மற்றும் பெற்றோருடன் நானும் காத்து நிற்கிறேன்.



**கலைவாணன்,** தொ.ப.ஆ, அ.தொ.ப. சேலியமேடு பேட்



# கதை - மொழிக் கற்றலுக்கு அடித்தளம்

**நோக்கம்**

குழந்தைகளுடைய உலகம் புதிரானது; பார்வை விந்தையானது; கனவுகள் வண்ண மயமானவை. குழந்தைகளுடைய இந்த இயல்பினை மாற்றம் செய்யாமல் அவர்களது உலகில் எப்படி பயணம் செய்யப் போகிறோம் என மலைத்தேன்! தமிழ் மொழிப் பாடத்தில் குழந்தைகள் என்ன கற்க வேண்டும்? எப்படி அவர்களுக்கு உதவப்போகிறோம்? எது சரியான கற்பித்தல் முறை? போன்ற கேள்விகள் என் மனதைக் குடைந்து கொண்டே இருந்தன.

முதலில் என் குழந்தைகளோடு குழந்தைகளாக அவர்களது உலகில் நானும் இருக்க விரும்புகிறேன் என்பதை அவர்கள் உணரச்செய்ய வேண்டும் என நினைத்தேன். முதல் மாதம் முழுவதும் விளையாட்டுகள், பாடல்கள், கதைகள், நாடகங்கள், படங்களை விவரித்தல், களிமண் உருவம் செய்தல் என்பன போன்ற செயல்பாடுகளில் மாணவர்களோடு சேர்ந்து நானும் ஈடுபட்டு அவர்களோடு இரண்டறக் கலக்கத்தொடங்கினேன். குழந்தைகளுக்குள் நானும் ஒருவராக இருக்கத் தொடங்கிவிட்டேன் என்பதை, 'கவிதா, 'கவி' என்று அவர்கள் என் பெயர் கூறியும், 'அம்மா' என்ற உறவு முறைச்சொல்லாலும் என்னை அவர்கள் அழைத்ததிலிருந்து புரிந்து கொண்டேன்.

**செயல்முறை : சவாலே சமாளி**

ஒவ்வொரு எழுத்தாகப் பயிற்சி அளிப்பது எனக்கு அர்த்தமற்றதாகத் தோன்றியது. தனி ஒரு எழுத்துக்குப் பொருளில்லை. பொருளில்லாத எதனுடனும் தொடர்பை நாம் ஏற்படுத்திக் கொள்ள முடியாது. தொடர்பில்லாதவற்றைப் புரிந்து கொள்வது இயலாத காரியம். எனவே நான் எழுத்துக்களை அறிமுகம் செய்யாமல் நேரடியாக சொற்களையே அறிமுகம் செய்தேன்.

முதலில் வார்த்தைகளுக்கு உரிய படங்களை நகல் எடுத்துக் கொடுத்து வண்ணம் தீட்டச் செய்தேன். அப்படங்களைப் பெரிய அட்டையில் ஒட்டி பின் அவற்றின் பெயரைப் பெரிய எழுத்துக்களில் எழுதினேன். ஓவ்வொரு படமாகக் காண்பித்து கதையைக் கூறினேன். அதே கதையை இரண்டாம் முறை கூறும்போது படத்தைப்பார்க்காமல் என்னைப் பார்த்தனர். அவர்களால் கதையின் நிகழ்வுகளையும் அவற்றிற்கான ஒலிகளையும் பெயர்களையும் இணைத்துப் பார்க்க முடிந்தது. இதைப் பரிசோதிக்க ஒவ்வொரு குழந்தையையும் அழைத்து சிறிய சார்ட் பேப்பரில் அவர்கள் வண்ணம் தீட்டிய வார்த்தையை எழுதிக் கொடுத்து அதற்கான படத்தை வீட்டில் வரைந்து வரச் சொன்னேன். அவர்களின் படங்களைக் கொண்டே மாணவர்களை மேசை கதை

சொல்லச் சொன்னேன். மாணவர்கள் வட்டமாக அமர்ந்து ஆளுக்கொரு நிகழ்வாக அடுத்தடுத்து சொல்லிக் கொண்டே வந்து கதையை முடிக்க வேண்டும். மூன்றாம் வகுப்பு மாணவர்களால் அதைச் செய்ய முடிந்தது. சிறிய தாள்களில் வார்த்தைகளை எழுதி விசிறி மடிப்பது போல் மடித்தேன். ஒவ்வொரு மடிப்பைப் பிரிக்கும் போதும் ஒவ்வொரு எழுத்தாகத் தெரியும். மாணவர்கள் ஒவ்வொரு எழுத்தாக வாசித்து கடைசியில் முழு வார்த்தையையும் வாசித்தனர். உதாரணம்: ப, பட், பட்ட, பட்டம். இதன் மூலம் ஒரு வார்த்தைக்குள் பல எழுத்துகள் இருக்கின்றன என்பதை உணர்ந்தனர்.

அடுத்ததாக எழுத்துக்களை அறிமுகம் செய்ய வேண்டும்! அவர்களது வார்த்தைகளைச் சிறிய அட்டையில் எழுதி விளையாடத் தொடங்கினர். பிறகு அவர்களைக் குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவிற்கும் எழுத்துக்களைப் பெரிய அளவில் கொடுத்தேன். அவர்கள் அந்த எழுத்துக்களைத் தனித்தனி வடிவங்களாக வெட்டி எடுத்தனர். இதனால் எழுத்தின் வடிவத்தை அறிமுகப்படுத்த முடிந்தது. மேலும், அதில் வண்ணம் தீட்டும் செயல் குழந்தைகளின் கைகளை எழுதுவதற்குத் தயார்படுத்தியது. மேலும் வெட்டிச் சேர்க்கும் விளையாட்டை விளையாடினோம். சிறு அட்டைகளில் வார்த்தைகளை எழுதினோம். ஒவ்வொரு வார்த்தையுள்ளும் பல எழுத்துக்கள் இருக்கும் என்பதை உணரச் செய்தேன்.

ஆனாலும் சில குழந்தைகள் எனக்குச் சவாலாக இருந்தனர். ஆகஸ்ட் டு மாதம் ‘செல்லக் குட்டி என்ற பாடம், செப்டம்பரில் காய்! காய்! காய்! என்ற பாடத்தில் மீதமுள்ள எழுத்துக்களை அறிமுகம் செய்ய வேண்டும். முன்பு போலவே கதைகள் மூலம் வார்த்தைகளை அறிமுகம் செய்தேன் கூடுதலாக எழுத்துக்கள் அறிமுகம் செய்ய மைதானத்தில் பெரிய அளவில் எழுத்தை எழுதி அதன் மேல் நடக்க வைத்தேன். நடக்கும் போது அந்த எழுத்தில் தொடங்கும் அவர்களுக்குத் தெரிந்த சொற்களைக் கூறச் செய்தேன் மேலும் மைதானத்தில் அவர்களையே எழுதச் செய்து சிறுகற்களை அடுக்க வைத்தேன். மேலும், குரங்கு

- கதைகள் அனைவரையும் கவர்ந்திழுக்கும் காந்தம். காலங்காலமாக, ஒரு சமுதாயத்தின் பழக்கவழகங்களையும் கலாச்சாரங்களையும் வரைமுறைகளையும் அடுத்த தலைமுறைக்குக் கடத்துவதில் கதைகளின் பங்கு அதிகம். கதைகள் வாயிலாகக் கற்கும் போது ‘கற்றல் சுமை’ தெரிவதில்லை. மொழித்திறன்களை வளர்க்கும் நோக்கில் உருவாக்கப்பட்ட பாடங்களையும் கதைகள் வாயிலாகக் கற்பிக்கும் போது மொழி கற்பித்தலின் குறிக்கோள்களை அடையாமல் இருப்பதற்கான வாய்ப்பு மிகக்குறைவு.

- ஆசிரியர்-மாணவர் உறவு கற்றல்-கற்பித்தலை வெகுவாக பாதிக்கின்றது. மாணவர்கள் தங்களின் ஐயங்களைக் களையவும், வினாக்களை எழுப்பவும், கற்றலைச் சரிபார்த்துக் கொள்ளவும், படைப்பாற்றலை வளர்த்துக் கொள்ளவும் இது மிகவும் தேவைப்படுகிறது.

- தனித்து நிற்கும் எழுத்துக்குப் பொருளில்லை (சிலவற்றைத் தவிர). ஆனால் கதைக்குப் பொருளுண்டு, தொடர்பு உண்டு, வரிசைக்கிரமம் உண்டு, உயர்நிலைச் சிந்தனைக்கு வழிவகையுண்டு. அதனால் தான் முதலாம் வகுப்பு மாணவர்களுக்கு எழுத்துக்களைத் தனித்தனியாகக் கற்பிக்காமல் கதைகள் மூலம் ஒரு உட்காட்சியை ஏற்படுத்தி, வாக்கியங்களிலிருந்து வார்த்தைகளைக் கற்பித்து, பின் எழுத்துக்களை அறிமுகம் செய்கிறார், இவ்வாசிரியர்.

- குழந்தைகள் எழுத்தின் வடிவத்தைக் கற்க ஏதுவான வடிவங்களை வெட்டி எடுத்தல், விசிறி மடிப்பு, வெட்டிச் சேர்த்தல், வடிவத்தில் நடத்தல், வடிவத்தில் கற்களை அடுக்குதல் போன்ற செயல்பாடுகள் இக்கட்டுரையில் உள்ளன.

நட்ட வாழை மரம், எலியும் தையற்காரரும் எனப் பல கதைகளைக் கூறி அதன் மூலம் பல மொழிச்செயல்பாடுகளைச் செய்தது குழந்தைகளின் ஈடுபாட்டை அதிகரித்தது.

**கற்றல் விளைவுகள்:**

- சொற்கள் நேரடியாகக் கதைகள் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டதால் குழந்தைகள் அச்சொற்களை எளிதாக உள்வாங்கிக்கொண்டு படிக்க ஆரம்பித்தனர்.






- 'முதலில் சொற்கள், பின் எழுத்துக்கள்' எனும் முறையில் கற்பித்ததால் எழுத்துக்களை இனங்காண்பதும் வாசிப்பதும் குழந்தைகளுக்கு எளிமையாக இருந்தது. வார்த்தையிலிருந்து எழுத்திற்கு வந்ததால் எழுத்தின் வடிவம், ஓசை போன்றவற்றைக் கற்பது குழந்தைகளுக்கு எளிதாக இருந்தது.

- தினமும் அவர்களது கழுத்தில் சொல்லட்டையைத் தொங்கவிட்டு அப்பெயரைச் சொல்லியே ஒருவருக்கொருவர் அழைத்துக்கொண்டதால் குழந்தைகள் சொற்களை எளிமையாக மனதில் நிறுத்திக்கொண்டனர்.

- வடிவங்களை வெட்டி எடுத்தல், விசிறி மடிப்பு, வெட்டிச் சேர்த்தல், வடிவத்தில் நடத்தல், வடிவத்தில் கற்களை அடுக்குதல் போன்றவை எழுத்தின் வடிவத்தைக் குழந்தைகள் உணர ஏதுவாக இருந்தன. பாடம் சாராதா கதைகள் மூலம் குழந்தைகளின் சிந்தனைத் திறன், நடித்தல் திறன், படம் வரைதல், கதாபாத்திரங்களை ஆராய்தல், காரணம் அறிதல், ஊகித்தல் போன்ற திறன்களும் வளர்ந்தன.








**சு. கவிதா,** அ.தொ.ப. மணவெளி (அ)

# பங்கு நாடகம்

**குழந்தைகளிடையே சிந்திக்கும் ஆற்றலைப் பெருக்கவும், அவர்களின் தனித்தன்மையை வெளிக்கொணரவும், பயம் மற்றும் கூச்சத்தை விலக்கவும், தன்னம்பிக்கை வளரவும் 'பங்கு நாடகம்' கற்றலில் பெரும் பங்கு வகிக்கிறது.**

## கற்பித்தல் முறை:

குழந்தைகளிடையே சில சுவாரசியமான விடுகதைகளைக் கூறி அதன் வாயிலாகக் கதாபாத்திரங்களை அறிமுகப்படுத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. உதாரணமாக,

'நான் நிழல் தருவேன், நான் சுத்தமான காற்று தருவேன், நான் யார்? -மரம்.

நான் ஓடிக்கொண்டே இருப்பேன், நீரின் ஆதாரம், நான் யார்? -ஆறு.

நாடகத்தின் ஒரு கதாபாத்திரத்தை ஏற்று மாணவர்களிடையே நடித்துக் காட்டினேன். பிறகு ஒவ்வொரு மாணவனையும் ஒரு கதாபாத்திரத்தைப் போல் ஏற்ற இறக்கத்துடன் படித்துக்காட்டக் கூறினேன்.

## கற்றல் செயல்பாடுகள்:

மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து கதையை நாடகமாக்குவது குறித்து உரையாட வைத்தேன். பின்னர் கதாபாத்திரங்களை அட்டைகளில் வரைந்து வண்ணம் தீட்ட வைத்தேன். அதன் பின் அவ்வட்டைகளைக் கழுத்தில் அணிந்து கதாபாத்திரமாக மாறி நாடகத்தை நடிக்க வைத்தேன்.

## கற்றல் வெளிப்பாடு:

'பங்கு நாடகம்' வாயிலாக மாணவர்களிடையே சிந்திக்கும் ஆற்றல் அதிகரிக்கிறது. மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்கின்றனர். கற்றல் எளிமையாகிறது. காபாத்திரத்திற்குத் தேவையான வசனங்களைச் சொந்தமாகப் பேசி, உணர்வு பூர்வமாக நடித்தனர். உதாரணமாக,

நான் தான் மரம்; சுத்தமான காற்று தருவேன்; நிழல் மற்றும் காய்கனி தருவேன்; என்னுடன் விளையாடலாம்; பறவைகள் மற்றும் பூச்சிகளுக்கு இருப்பிடம் தருவேன்.

'பங்கு நாடகம்' எனும் கற்பித்தல் முறையைக் கையாண்டு பாடப்பொருளைக் கற்பித்ததால், மாணவர்கள் மகிழ்ச்சியோடும் புரிதலோடும் தங்கள் கற்றலை வெளிப்படுத்தியது எனக்கு பெருமிதமாக இருந்தது.



**காயத்திரி,** தொ.ப.ஆ, அ.தொ.ப. சுல்தான்பேட்.

# புள்ளி முதல்

**தமிழ் எழுத்துக்களை அறிமுகப்படுத்தும் விதமும் அவைகளைக் கற்பிக்கும் முறைகள் சிலவற்றையும் ஆசிரியர் இக்கட்டுரையில் எழுதியுள்ளார்.**

“தமிழிலும் இனிதொன்றும் இல்லை இவ்வுலகிலே,

தமிழின் சுவையால் கண்ட போதினிலே”

எனும் கூற்றுக்கு ஏற்ப, தமிழின் சிறப்புகளில் குறிப்பாக வார்த்தைகளைப் பிழையின்றி வாசிக்கும் பயிற்சியைப் பற்றி நான் என் வகுப்பறையில் நடந்த நிகழ்வுகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விழைகிறேன்.

தமிழைப் பொறுத்தமட்டில், நான் எவ்வாறு எளிய முறையில் வாசிப்புப் பயிற்சியை மேற் கொள்ளலாம் என யோசித்துண்டு. அதற்கான பல்வேறு உத்திகளை நான் எளிய முறையில் செய்திருக்கிறேன். முதலில், உயிரெழுத்துகள் - 12 ஐயும் அ - அம்மா; ஆ - ஆடு; இ - இலை என முறையே வார்த்தைகளின் மூலம் எழுத்துக்களைக் கற்பித்திருக்கிறேன். பிறகு மெய் எழுத்துக்களை உயிரெழுத்துக்களோடு இணைத்து ஒவ்வொரு வரிசையாகக் கற்பித்தேன். உதாரணமாக,

க- கன்று; கா- காகம்; கி- கிளி; கீ- கீரை; கு- குரங்கு; கூ- கூடை; கெ- கெண்டி;

கே- கேணி…

இவ்வாறு, தினம் ஒரு வரிசையின் வார்த்தைகளைக் கற்பிக்கும் போது அதிகபட்சம் 30 நாட்கள் போதுமானதாக இருந்தது. இவற்றை எழுதவைப்பதோடு மட்டும் அல்லாமல் உடனுக்குடன் பரிசோதித்தும் பார்த்தேன். இவற்றில் பிழைதிருத்தத்தையும் உடனுக்குடன் செய்தேன். இவ்வாறு செய்யும் போது மாணவர்கள் கற்றல், வாசிப்பு இரண்டையும் பிழையின்றி செய்ய முடிந்தது. ஒரு கல் இரு மாங்காய் என்பது போல் கற்றல் மற்றும் மாணவர்களின் வாசிப்புத் திறனில் வெற்றியும் கண்டிருக்கிறேன். புள்ளியிலிருந்து ஆரம்பித்து, விஜயங்களாகக் கற்பித்தல் இருக்க வேண்டும் என்ற என்னுடைய அவா ஈடேறி இருக்கிறது.

கற்பித்தல் இனிமையானது, கற்றல் அதனினும் இனிமையானது. இரண்டு கைதட்டினால் ஓசை எழும்பும். அதுபோல கற்றலும் கற்பித்தலும் கை கோர்க்கும் போது கற்றல் முழுமை பெறுகிறது. கற்றலை மாணவர்கள் தம் கரங்களில் ஏற்கையில் கற்பித்தல் தெளிவாகிறது.



**மா.லீனா,** தொ.ப.ஆ, அ.தொ.ப. இடையார்பாளையம்.

# எனது வகுப்பறை அனுபவங்கள்

**• மாணவர்கள் காதால் செய்தியை உள்வாங்கி பிரதிபலிக்கும் ஊடகம் அல்ல. உயிரும், உணர்வும் உள்ள திறமைசாலிகள். இதனால் கதை கூறுதல், நாடகம், விளையாட்டு, குழு செயல்பாடுகள் இவற்றின் வாயிலாக மாணவர்களை முழுமையான கற்றலில் ஈடுபடுத்தி கற்றலின் ஆர்வத்தைத் தூண்டுவது அவசியமாகிறது.**

**• மாணவர்களின் பங்களிப்பைப் பெற்று கற்றல் கற்பித்தலில் ஈடுபடுத்தும் பொழுது அவர்களின் கற்றல் ஆர்வத்தை மட்டுமில்லாமல் கற்றலின் நோக்கமான பல திறன்களையும் வளர்ப்பதற்கு ஊக்கமளிக்கின்றது.**

**• ஒரு நாடகம் எவ்வாறு மொழித்திறன்களை வெளிப்படுத்தும் கருவியாக அமைகிறது என்பதை இக்கட்டுரையில் காணலாம்.**

இந்த உலகம் நாள் தோறும் ஒரு புதிய செய்தியை, அனுபவத்தைக் கற்றுத்தந்து கொண்டிருக்கின்றது என்றால் அது மிகையாகாது. அந்த வகையில் வகுப்பறை என்ற உலகம் மாணவர்கள் என்ற புத்தகத்தின் வாயிலாக ஆசிரியர்களுக்கு நித்தம் புதிய அனுபவத்தை வழங்குகிறது. இந்த மகிழ்ச்சியான தருணத்தில் எனது வகுப்பறை கற்றல்-கற்பித்தல் அனுபவங்களை உங்களிடம் பகிர்ந்து கொள்வதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

### ஆசிரியரின் கடமைகள்

மாணவர்கள் ஏதோ ஒரு எதிர்பார்ப்புடன் பள்ளிக்குள் நுழைகிறார்கள். அவர்களது எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்வது ஆசிரியர்களின் தலையாய கடமை. மாணவர்கள் காதால் செய்தியை உள்வாங்கி பிரதிபலிக்கும் ஊடகம் அல்ல. உயிரும், உணர்வும் உள்ள திறமைசாலிகள். அவர்களது திறமையை வெளிக்கொணர்வது ஆசிரியரின் தலையாய கடமையாகும். கற்றல்-கற்பித்தல் செயல்பாடுகளில் மாணவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்திக் கல்வி கற்றலை இனிமையான ஒன்றாக மாற்ற வேண்டியது ஆசிரியர்களின் அவசியமாக உள்ளது.

### மொழி கற்பித்தல்

புத்தகத்தில் உள்ளவற்றை அப்படியே வாசித்துக் காண்பித்து மாணவர்களைத் தேர்வுக்குத் தயார் செய்வதில் பயன் ஒன்றும் இல்லை என்பதை நான் நன்கு உணர்ந்துள்ளேன். இதனால் கதை கூறுதல், நாடகம், விளையாட்டு, குழு செயல்பாடுகள் இவற்றின் வாயிலாக மாணவர்களை முழுமையான கற்றலில் ஈடுபடுத்தி கற்றலின் ஆர்வத்தைத் தூண்டுவதற்கு முயற்சி செய்தேன். அதில் நாடகம் என்பது மொழிகற்பித்தலுக்கு மிகவும் உகந்ததாக உள்ளது. மாணவர்களை நடிக்க வைக்க முயற்சிப்பதின் வாயிலாக உரைநடைகள், வசன உச்சரிப்புகள் வாயிலாக மொழியையும், மாணவர்களின் பங்கேற்பின் மூலம் நடிப்புத்திறன், உடல் அசைவுத் திறன்கள், ஒருங்கிணைப்புத் திறன்கள் போன்றவற்றையும் வளப்படுத்த உதவுகின்றது.

### நாடகம்.

உதாரணமாக 3 - ஆம் வகுப்பு தமிழ் பாடத்தில் உள்ள விடுதலை வீரர் என்ற பாடத்தில் திருப்பூர் குமரனின் வாழ்க்கை வரலாறு பாடமாக அமைந்துள்ளது. இதனை நானும் மாணவர்களும் கலந்துரையாடி நாடகமாக நடிக்கத் திட்டமிட்டோம். பின்பு நடிப்பதற்கு

விருப்பமுள்ள மாணவர்களை அழைத்து, யார், யாருக்கெல்லாம் தமிழைப் பிழையின்றி படிக்கத் தெரியும் என்று கேட்டேன். பின்பு புத்தகத்தில் உள்ள விசயங்களை உரையாடல்களாக மாற்றச் செய்து மற்ற மாணவர்களின் பாத்திரத்தை உறுதி செய்யச் செய்தேன். அடுத்த கட்டமாக மாணவர்களிடையே அவர்களின் உரையாடலை நாடக வடிவத்திற்கு மாற்றச் செய்து நடித்துக் காட்டச் செய்தேன். அன்று முழுவதும் நேரம் கிடைக்கும் போதெல்லாம் மாணவர்களைப் பயிற்சி செய்யச் சொல்லி, மறுநாள் வரும் பொழுது அந்தக் கதாபாத்திரத்துக்கு ஏற்ற ஆடைகளையும், பொருட்களையும் வீட்டிலிருந்து எடுத்துவரச் சொன்னேன். மாணவர்களும் மிகுந்த ஆர்வமுடன் சரி என்று சொல்லிவிட்டு அவர்களுக்குள்ளாகவே பயிற்சிக்குத் தயாரானார்கள்.

## நாடக அரங்கேற்றம்.

மறுநாள் ஒரு சில மாணவர்கள் பள்ளிச் சீருடைக்குப் பதிலாகக் கதாபாத்திரத்திற்குரிய வெள்ளை வேட்டி மற்றும் வெள்ளைச் சட்டை உடுத்தி வந்ததிலிருந்து அவர்கள் கதாபாத்திரமாகவே மாறியிருப்பது தெரியவந்தது. வகுப்பறைக்குள் வந்ததும் ஒரே ஆரவாரம் தான். வகுப்பறையில் மேடை இல்லாதது தான் குறை. மற்றபடி மாணவர்கள் அனைவரும் உணர்ச்சி ததும்ப தேசியக் கோடியைக் கையில் ஏந்தி வந்தே மாதரம், வந்தே மாதரம் என்றதும் வகுப்பில் இருந்த மற்ற மாணவர்களும் கோஷமிடத் துவங்கியதில் பள்ளியிலிருந்த மற்ற வகுப்பு மாணவர்களும் வந்து காணத்துவங்கி விட்டனர். இதனால் வகுப்பறை நிகழ்வு, பள்ளியின் நிகழ்வாகவே மாறிவிட்டது. பின்னர் திருப்பூர் குமரனைத் தடியால் அடிக்கும் பொழுதும், தான் கீழே விழுந்தும் தன் தாய் நாட்டின் கொடியைக் கீழே விழ விடாமல் பாதுகாத்த நிகழ்வு அப்படியே ஒரு நிமிடம் என்னை மட்டுமல்லாது மற்ற ஆசிரியர்களையும் மெய்சிலிர்க்க வைத்து விட்டது என்றால் அது மிகையாகாது. அந்த அளவுக்கு இந்த 3 ஆம் வகுப்பில் மாணவர்களின் நடிப்புத் திறனும், தேசப்பற்றும் மறைந்து கிடப்பது மிகவும் வியப்பே.

## கற்றலின் விளைவு.

இதன் வாயிலாக விடுதலை வீரர் பாடம் ஒரு திரைப்படமாகவே அனைவரின் மனதிலும் பதிந்துவிட்டது. இனி வேறு ஏதாவது ஒரு பாடத்தில் இந்த மாதிரி அமையுமா என்று தெரியவில்லை என்ற குழப்பத்துடனே மாணவர்களின் கற்றலை எளிமையாக்கியதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியே. மேலும் அனைவரும் பங்கேற்று புரிந்து கொண்டு கற்றதில் எனது பணிச் சுமையும் குறைவாகவே இருந்ததாக உணர்கின்றேன். இது போன்று மாணவர்களின் பங்களிப்பைப் பெற்று கற்றல் கற்பித்தலில் ஈடுபடுத்தும் பொழுது அவர்களின் கற்றல் ஆர்வத்தை மட்டுமில்லாமல் கற்றலின் நோக்கங்களை அடைவதற்கு ஊக்கமளிக்கின்றது.



**கிருஷ்ணகுமார்**, தொ.ப.ஆ, அ.தொ.ப. பாகூர்பேட்

# மொழி கற்பித்தல் செயல்பாடுகள்

**கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளில் குழந்தைகள் அனைவரும் மகிழ்ச்சியுடன் முழுமையாகப் பங்குபெறும் பொழுது கற்றல் தானாகவே நடைபெறுகின்றது. அதனால் ஒரு பாடத்தையோ அல்லது ஒரு கருத்தையோ வகுப்பிலுள்ள அனைத்து மாணவர்களுக்கும் ஏற்றவாறு பல்வேறு வழிகளில், செயல்பாடுகளில் கற்பிக்க முயலும்போது அங்கு கற்றல் கற்பித்தலின் நோக்கமும் முழுமையடைகின்றது. இதற்கேற்றார் போல் தான் எனது மொழி கற்பித்தல் வகுப்பும் செயல்படுகின்றது.**

இங்கு படிக்கின்ற அனைத்து மாணவர்களின் பெற்றோர்களும் கூலித் தொழிலாளர்களாக உள்ளதால் தினமும் அவர்கள் பல பிரச்சனைகளைச் சந்திக்கின்றனர். அதனால், மாணவர்கள் மகிழ்ச்சியான முறையில் தங்கள் தனித்திறனை வெளிப்படுத்தும் வகையில் பல விழாக்களைக் கொண்டாடுவோம். உதாரணமாக- மாணவர் தினம், யோகா தினம், காடுகள் தினம், சுதந்திர தினம், உலகநீர் தினம், தாய்மொழி தினம்...

### காலைப் பேரவை:

காலைப் பேரவையில் தினமும் திருக்குறள், பொது அறிவு, பழமொழி, வாய்பாடு, புதிய சொல், செய்திகள், கதைகள் என 1-ம் வகுப்பிலிருந்து 5-ம் வகுப்பு வரை உள்ள மாணவர்களைக் கலந்து கொள்ளச் செய்வோம். அதற்காக மாணவர்கள் நமட்டு சிரிப்புடன் வெட்கப்பட்டுச் சொல்லும் போது மிகவும் அருமையாக இருக்கும்.

### தமிழ் வகுப்பு:

காலைப் பேரவை முடிந்ததும், தினமும் ஒரு திருக்குறளையும் புத்தகத்தில் உள்ள ஒரு சில பாடல்களையும் செய்கைகளுடன் மாணவர்களுடன் நானும் சேர்ந்து ஆடி, பாடி மகிழ்ச்சியில் கலந்து கரைந்திடுவோம். என்னுடைய வகுப்பறையில் தமிழைப் பொறுத்தமட்டில், எழுத்துகளை அறிமுகப்படுத்துவதில் முதலாவதாகக் கரும்பலகையில் எழுதி மாணவர்களைப் படிக்க வைப்பேன்.

- ட, ப, ம, ய, ர இந்த எழுத்துகளைப் படத்தின் மூலம் இனம் கண்ட பிறகு எழுத்துகளை மின் அட்டைகளில் எழுதி அறிமுகம் செய்வேன்.
- பிறகு எழுத்துக்களை உச்சரிக்க, வாசிக்கப் பயிற்றுவிப்பேன்.
- பின்பு மேற்கண்ட எழுத்துகளைக் கொண்டு சொற்களை உருவாக்கப் பயிற்றுவிப்பேன். அதே வார்த்தைகளை வீட்டுப்பாடமாகவும் எழுதப் பணிப்பேன்.
- கையெழுத்து பயிற்சி ஏட்டில் அவ்வெழுத்துகளைப் பழக்குவிப்பேன்.
- புத்தகத்தில் உள்ள வார்த்தைகளையும், குழந்தைகளுக்குத் தெரிந்த வார்த்தைகளையும் (எ.கா) பந்து, பட்டம், படம், பம்பரம், பழம் போன்றவற்றை இனம்காணச் செய்வேன்.
- எழுத்துகளை உணர்வு பூர்வமாகக் கற்கும் வகையில் தரையில் மணலைப் பரப்பி எழுதச்செய்து, அந்த எழுத்தின் மேலே கூழாங்கற்களை அடுக்கச் செய்வேன்.

இவ்வாறு நாம் ஏதேனும் ஓர் எழுத்தைச்

சொல்லும் போது மாணவர்களே சென்று அந்த எழுத்துக்கள் போன்று நிற்கவும், அமரவும், படுக்கவும் பயிற்றுவித்ததில் மாணவர்கள் அனைவரும் எழுத்துக்களை அடையாளம் கண்டு எழுத, படிக்கக் கற்றுக் கொண்டதன் மூலம் கற்பித்தலின் முழுவிளைவினையும் நான் கண்டு மகிழ்ந்தேன்.

**நெஞ்சம் நெகிழ்ந்த நினைவுகள்:**

என்னிடம் படித்த மாணவர்களை வெளியில் சந்திக்கும் போது. என்னுடைய மனம் மகிழ்ச்சி அடையும். அவர்களின் உயர்ந்த நிலையை நினைத்து நான் பூரிப்படைந்திருக்கிறேன். இதைவிட வேறென்ன வேண்டும் இந்த ஆசிரியப் பணிக்கு.



**கீதா,** தொ.ப.ஆ, அ.தொ.ப. இடையார்பாளையம்

# புதிர்களை அறிவோம்



### எனது பள்ளி - ஒரு பின்புலம்

எங்கள் அரியாங்குப்பம் அரசுத் தொடக்கப் பள்ளியில் குறைந்தளவு மாணவர்களே படிக்கின்றனர்; அவர்கள் அனைவரும் பொருளாதாரத்தில் மிகவும் பின் தங்கியவர்களின் குழந்தைகளே. மேலும், எங்கள் பள்ளியைச் சுற்றிலும் நிறைய தனியார் பள்ளிகள் இருப்பதால் அரசுபள்ளியில் மாணவர்களைச் சேர்ப்பது மிகவும் கடினமான வேலையாக இருக்கிறது.

### கடந்த ஆண்டு எங்கள் வகுப்பறை

கடந்த ஆண்டு நாங்கள் எங்கள் மூன்றாம் வகுப்பில் முயன்ற சில செயல்பாடுகளையும், கையாண்ட உத்திகளையும் இங்கே எழுதியுள்ளோம். செய்யுளைப் பொதுவாகக் கற்க சிரமப்படும் மாணவர்கள், கதைகள் மூலம் கற்பித்த போது முழு ஈடுபாட்டுடனும் மகிழ்ச்சியுடனும் கற்றனர். உதாரணமாக, புதிய ஆத்திச்சூடியை நாங்கள் கதைகள் மூலம் விளக்கிக் கூறினோம். செய்யுள் பகுதியான நல்வழியில் இடம்பெறும் 'வன்சொல்லும் இன்சொல்லும்' என்ற தலைப்பில் உள்ள "வெட்டனவை மெத்தனவை வெல்லாவாம் வேழத்தில்" என்ற செய்யுளை இரு ஆடுகள் கதைகள் மூலம் விளக்கிக் கூறினேன். மாணவர்கள் தங்களை ஆடுகளாகக் கருதிப் படித்த விதம் என்னை மிகவும் ஈர்த்தது. 'புதிர்களை அறிவோம்' என்ற பாடத்தைப் பல புதிர்களைக் கேட்டும், புதிர் புத்தகங்களைத் தேடியெடுத்துப் படிக்கச் செய்தும் விடைகளை அறியச் செய்தோம்.

### அனுபவப் பகிர்வு

வகுப்பில் நாங்கள் செயல்படுத்திய பல்வேறு முயற்சிகளில் எங்களைக் கவர்ந்தவைகள்....

- **புதிர்கள் மாணவர்களின் மொழித்திறன்களை வளர்ப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றன. புதிர்களுக்கான விடைகளைக் கண்டுபிடிக்கும் செயலில் காரணம் அறிதல், ஆராய்தல், சரிபார்த்தல், வினா எழுப்புதல், தொடர்புபடுத்துதல்,ஞ் போன்ற பல திறன்களோடு சொற்களஞ் சியமும் பெருகும்.**

- **இந்த வகுப்பறையில் மாணவர்கள் சுதந்திரமாகப் பேசவும் வினா எழுப்பவும் தேவையான அளவு இடம் இருந்திருக்கிறது. நிலம் சார்ந்த புதிர்களைக் கூறவும் அவற்றிற்கான விடைகாணவும் இச்சுதந்திரம் தேவைப்படுகிறது.**

**இவ்வாறு ஆசிரியர்களும் மாணவர்களும் பல புதிர்களைக் கொண்டுவந்து விளையாடியதால், படங்களுக்குரிய புதிர்களைத் தாமே உருவாக்கும் செயல்பாடு எளிமையாகியது.**

## வகுப்பறைச் சவால்கள்

1. புதிர்களை வாசித்துப் புரிந்து கொள்வதில் சிக்கல், 2. புதிர்களுக்கு விடை கண்டுபிடிக்க முடியாமல் திணறுதல், 3. புதிய புதிர்களை உருவாக்குவதில் சிரமம்

## வகுப்பறைச் செயல்பாடுகள்

நான் முதலில் பாடபுத்தகத்தில் வரும் புதிர்களை வாசிக்கச் செய்து அதற்கு விடை தெரியுமா? என்று மாணவர்களைச் சோதித்தேன். அவர்கள் வெவ்வேறு பதில்களைக் கூறினார்கள். பிறகு நானே சில புதிர்களைக் கரும்பலகையில் எழுதி மாணவர்களை வாசிக்கச் செய்தேன். மேலும் பல புதிர்களைக் கேட்டேன். 'அண்ணனுக்கு எட்டும் தம்பிக்கு எட்டாது. அது என்ன?', 'டாக்டர் வந்தாரு, ஊசி போட்டாரு, காசு வாங்காமல், பறந்து போனாரு' போன்ற புதிர்களைச் சொன்னேன். விடையைக் கண்டுபிடிக்கச் சில குறிப்புகளைக் கொடுத்து உரையாடினோம்.

என் வகுப்பு மாணவர்கள் கீழே சென்று இரண்டு மற்றும் ஒன்றாம் வகுப்பு மாணவர்களிடமும் மற்ற வகுப்பு ஆசிரியர்களிடமும் இந்தப் புதிரைக் கூறி விடை கேட்டார்கள். அவர்களுக்குத் தெரியவில்லை என்றதும் இதற்குக் கூடவா உங்களுக்குப் பதில் தெரியவில்லை, எங்களுக்குத் தெரியும் என்ற பெருமிதத்துடனும், மகிழ்ச்சியுடனும் மணி அடித்ததும் வீட்டிற்குத் துள்ளிக் குதித்துக் கொண்டு சென்றார்கள்.

மேலும் சில புதிர்கதைகளைச் சொல்லியும் (உ.ம்) 'வரம் ஒன்று பலன் பத்து!' போன்று பல புதிர்கள் அடங்கிய சொல் அட்டைகளைக் கொடுத்தப் படிக்கச் செய்தேன். அது அவர்களுக்கு வாசிப்பு பயிற்சியாகவும் அமைந்ததை உணர்ந்தேன்.

## வரம் ஒன்று! பலன் பத்து (புதிர்கதை)

ஒரு ஊரில் கண்பார்வை அற்ற ஏழை ஒருவன் இருந்தான். அவன் பிச்சை எடுத்து வாழ்க்கை நடத்தினான். அந்த வாழ்க்கை அவனுக்குப் பிடிக்கவில்லை எல்லோருடைய ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாக நேரிடுகிறது. அதனால் ஆற்றில் குதித்து இறந்து விடலாம் என்று ஆற்றுக்குச் செல்கிறான். உடனே இறைவன் அவன் முன் தோன்றி, "ஒரே ஒரு வரம் மட்டுமே கேட்க வேண்டும்; உனக்கு என்ன வரம் வேண்டும் கேள்" என்றார். பார்வையற்றவனோ தம் மனதிற்குள் 'கண்பார்வை, நிறைய பணம், மனைவி, குழந்தை, மகிழ்ச்சி ஆகியவை வேண்டும். இவற்றில் எது குறைந்தாலும் உயிர் வாழ்வதில் பயன் இல்லை' என்று கூறிக்கொண்டான். அறிவு நிரம்பிய அவன் கடவுளிடம் ஒரே ஒரு வரம் கேட்டான். அந்த வரத்தின் மூலம் விரும்பியது அனைத்தும் கிடைத்தது. அப்படியானால் அவன் கேட்ட வரம் என்னவாக இருக்கும்?

விடை: வரம் ஒன்று! பலன் பத்து!

என் பேரன் தங்கக் கிண்ணத்தில் சோறு சாப்பிடுவதை நான் ஏழடுக்கு மாளிகையின் உச்சியிலிருந்து கண்குளிர பார்க்க வேண்டும் என்று இறைவனிடம் வரம் கேட்டான்.

மேலும் சில விளையாட்டுகள்: புதிர்களை வாசித்து அவற்றிற்கு ஏற்ற படங்களைக் கண்டுபிடித்துப் பொருத்தினர். அடுத்ததாக, புதிர்களை வாசித்து அவற்றிற்கான விடைகளை எழுதினர். இதன் வாயிலாகப் பலவகைப் புதிர்களை வாசித்து, உரையாடி விடைகண்டறியும் திறனை வளர்த்துக் கொண்டனர்.

இவ்வாறு விளையாடும் போது மாணவர்கள் பெரும்பாலும் ஆங்கில வார்த்தைகளையே கூறினர். உதாரணமாக, கல்பட்டால் உடையும் கண்ணாடி மாளிகை, அது என்ன? என்பதற்கு 'bubbles' என்று சொன்னார்களே தவிர, 'நீர்க்குமிழி' என்ற வார்த்தை அவர்களுக்குத் தெரிந்திருக்க வில்லை.

புதிர்களை உருவாக்குதல்: பல வகையான புதிர்களை வைத்து விளையாடிய பிறகு, மாணவர்கள், புதிகளை உருவாக்கத் தயாராயினர். அனைவருக்கும் ஒரு படத்தைக் கொடுத்து அதற்கு வண்ணமிடச் சொன்னேன். படத்திற்குரிய வண்ணங்களைத் தீட்டியது நான்

எதிர்பார்த்ததே. அதற்கடுத்து படத்திற்கேற்ற குறிப்புகளை எழுதினர். நிறைய பிழைகள் இருந்தன. சில வார்த்தைகளை என்னிடம் கேட்டு எழுதினர். ஒருவருக்கொருவர் மாற்றி பிழைதிருத்தம் செய்து கொண்டனர். இறுதியாக, அவர்களின் படைப்புகளை வகுப்பறைச் சுவரில் ஒட்டினோம்.

## கற்பித்தலின் விளைவுகள்

புதிர்களுக்குத் தீர்வு காணும் செயல்முறை, மாணவர்கள் வெவ்வேறு விதங்களில் சிந்திக்கவும் கொடுக்கப்பட்ட தகவலைப் பகுப்பாய்வு செய்யவும் அவர்களுக்குத் தோன்றிய விசயங்களை எது சரி? எது தவறு?என்று முடிவு செய்யவும் வாய்ப்பளித்தது. இச்செயல் முறையானது மாணவர்கள் அனைவரும் மகிழ்ச்சியான, முழுமையான கற்றலில் ஈடுபட உதவுவது மட்டுமல்லாமல் அவர்களின் உயர் சிந்தனைத் திறனைத் தூண்டுவதற்கும் உதவியாக அமைகின்றது.



பச்சை நிறத்தில் இருப்பேன்
எனக்கு காம்பு உண்டு
பாக்கும் சுண்ணாம்பும் நண்பர்கள்
நான் யார்?



பச்சைப் பெட்டிக்குள்
வெள்ளை முத்துக்கள்
அது என்ன?



கல் எறிந்தால் போதும்
அரண்மனையே காலியாகிவிடும்
அது என்ன?



**சுமதி,** தொ.ப.ஆ, அ.தொ.ப. அரியாங்குப்பம்பேட்

# நிறங்களும் மரங்களும்

- பொதுவாக, குழந்தைகள் தங்களுக்குத் தெரிந்தவற்றை அடிப்படையாகக் கொண்டு, தெரியாதவற்றைக் கற்கின்றனர். எனவே ஒவ்வொரு ஆசிரியரும் பாடப்பொருள் சார்ந்து மாணவர்களுக்கு என்ன தெரிந்திருக்கின்றது என்பதைக் கண்டறிந்த பின்பே கற்பிக்க முனைய வேண்டும்.

- முன்மழலையர் வகுப்பில், பார்த்துப் பழகிய பொருட்களைக் கொண்டு, செய்து பார்த்துக் கற்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டால், கற்றல் இனிமையாவும் ஆழமாகவும் இருக்கும்.

- இயற்கையாகவே குழந்தைகளிடம் பேசும் குணம் உண்டு. இக்குணத்தை வகுப்பறை உரையாடல்களாக மாற்றி, கற்றல்-கற்பித்தல் செயல்பாடுகளில் இணைத்திருக்கிறார், ஆசிரியர்.

## நோக்கம்

பால்மணம் மாறா பாலகர்களுக்கு அவர்கள் தினந்தோறும் கண்டுகளிக்கும் வண்ணங்களையும் உண்டுகளிக்கும் பழங்களின் வழி பல்வேறு மரங்களையும் அறிமுகம் செய்தல். “என்னதான் சிறியவர்களாக இருந்தாலும் ஏற்கனவே அவர்கள் சில வண்ணங்களையும் மரங்களையும் அறிந்திருப்பார்கள் அல்லவா!?” அவற்றையெல்லாம் கண்டறிந்து, பின் தெரியாதவற்றை அறிமுகம் செய்வதற்கு உரிய திட்டங்களை வகுத்தேன்.

## நிறங்களைப் பற்றிய அறிமுகம்

குழந்தைகளிடம் ‘‘இது என்ன”? ‘’இது என்ன நிறம்/கலர்”? போன்ற சிறு சிறு கேள்விகள் கேட்டு அவர்களின் பதில்களில் இருந்து, அவர்கள் அதுவரை அறிந்துள்ள வண்ணங்கள் இரண்டு மட்டும்தான் என்று அறிந்துகொண்டேன், அவை மஞ்சளும் சிவப்பும்.

அம்மா முகத்தில் பூசிக்கொள்ளும் நிறம் என்ன? - மஞ்சள்

ஆப்பிள் பழத்தின் நிறம் என்ன? - சிவப்பு.

அதன்பின் அன்றாடம் பயன்படுத்தக்கூடிய பொருட்களைக் காட்டியும், நினைவுபடுத்தியும் பல்வேறு வண்ணங்களின் பெயர்களை நேரடி அனுபவத்தோடு அறிமுகம் செய்தேன். ஒவ்வொரு நிறத்தின் பெயரையும் அந்நிறம் கொண்ட பொருட்களோடும் பழங்களோடும் உயிரினங்களோடும் தொடர்புபடுத்திக் கற்றுக் கொண்டனர். அவர்கள் கற்றுக்கொண்டவைகளில் இருந்து சில எடுத்துக்காட்டுகள்:

என்னுடைய கற்பித்தலானது உரையாடல் முறையை அடிப்படையாகக் கொண்டது. வினா-விடை, உரையாடல், சீரான இடைவினை மற்றும் அதிகாரப் பரவல் என மாணவர்கள் கற்பவற்றைப் புரிந்துகொண்டு யோசித்துப் பதில் அளிக்கும் வகையில் எனது உரையாடல் கற்பித்தல் முறை அமைந்திருக்கும்.

## வகுப்பறை உரையாடல்கள்

- ஆரஞ்சு நிறம் பற்றிப் பேசும்பொழுது, “ஆரஞ்சு நிறத்தில் இருப்பதால் தான் அப்பழத்திற்கு ஆரஞ்சு எனப் பெயர் வந்ததா?” என ஒரு மாணவன் கேட்டதும் அவனைப் போலவே நிறைய மாணவர்கள் நிறங்களின் பெயர்க் காரணங்களைக் கேட்கத் தொடங்கினர்.



| வ.எ | நிறங்களின் பெயர்கள் | தொடர்புடைய பொருட்கள் |
|---|---|---|
| 1 | பச்சை | இலைகள், புல், |
| 2 | நீலம் | வானம் |
| 3 | கருப்பு | தலைமுடி, காகம் |
| 4 | ஆரஞ்சு | ஆரஞ்சுப் பழம் |

• “பழம் என்றால் என்ன?” என்று மாணவர்களிடம் கேட்டேன். ஒரு சில மாணவர்கள் “அம்மா தின்னக் கொண்டுப்பாங்க” என்று கூறினார்கள். மேலும் சிலர் “பழம் வட்டமாக, இனிப்பாக, புளிப்பாக” இருக்கும் என்று பழங்களின் பண்புகளைச் சேர்த்துக் கூறினார்கள்.

நிறங்களைப் பற்றிய அறிமுகத்தைப் பழங்களின் வழி கற்ற பிறகு, மாணவர்கள் பெற்றோர்களுடன் பழக்கடைகளுக்குச் செல்லும் பொழுதெல்லாம் என்னென்ன பழங்கள் உள்ளன? அவற்றின் நிறம் என்ன? என்பதையெல்லாம் கேட்டுத் தெரிந்து கொண்டுள்ளார்கள்.

## மரங்களைப் பற்றிய அறிமுகம்

• பழங்களைப் பற்றிய உரையாடலின் பொழுது “பழங்கள் எங்கு கிடைக்கும்?” எதிலிருந்து தோன்றுகின்றன? போன்ற கேள்விகளைக் கேட்டு மரங்களைப் பற்றிய அடிப்படை அறிமுகத்தை மாணவர்களுக்கு ஏற்படுத்தினேன்.

• மாணவர்களுக்கு மரங்கள் பற்றிய பார்வையை விரிவு செய்திட குறும்படங்களைக் காண்பித்தேன்.

• மரத்தைப் பற்றிய கதை ஒன்றையும் கூறினேன்

• ஒவ்வொரு குழந்தைக்கும் மரத்தின் கோட்டுப்படம் ஒன்றைக் கொடுத்து வண்ணம் தீட்டச்செய்தேன்.

## ஒரு குழந்தையின் கதை

“நிறங்களும் மரங்களும்” கற்பித்தல் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களைப் படங்கள் வரையச் செய்தேன். மாணவர்களும் ஆர்வமுடன் படங்களை வரைந்தனர்.

## கற்றல் விளைவுகள்

• மாணவர்கள் தங்களுடைய திறமைகளை வெளிப்படுத்த வாய்ப்புகள் வழங்கி, நானும் அதிலிருந்து நிறைய கற்றுக் கொண்டேன்.

• உரையாடல் வழி கற்பித்தல், மாணவர்களின் புரிதலையும் சிந்திக்கும் திறனையும் அதிகப்படுத்தியது.

• எழுத்துக்களைக் கற்பிப்பதற்கு ஒரு தூண்டுகோலாகவும் மிகச் சுலபமாகவும் இருந்தது.

• மாணவர்கள் தாமாகவே கதை சொல்லியது மிகவும் வியப்பாக இருந்தது.

இந்த அனுபவங்கள் என்னுடைய தன்னம்பிக்கையை அதிகமாக்கியுள்ளதால் அடுத்த கல்வியாண்டில் மீண்டும் லிரிநி வகுப்பில் மகிழ்வோடு அடியெடுத்து வைக்க உள்ளேன். LKGல் கற்றதைப் பயனாகக் கொண்டு UKG-ல் அவர்களாகவே சிந்தித்து தொடர்புபடுத்திப் புதிய செய்திகளைக் கற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.



**M. மகேஸ்வரி**, தொ.ப.ஆ, அ.தொ.ப. மணவெளி (அ)



# நானும் என் குட்டிகளும்

## எனது வகுப்பறை அனுபவங்கள்

இந்த ஒரு வருடம் 34 குழந்தைகளுடன் முதலாம் வகுப்பில் முதலாம் வகுப்பில் பயணித்த நேரங்களில் நான் கற்றுக்கொண்டவை பல. பிஞ்சுக் கைகள்; பிஞ்சுக் கால்கள் ஆனால் வாய்ப்பேச்சோ அப்பப்பா! அப்பப்பா? என்ன மாதிரியான பேச்சு! எத்தனை எத்தனை கேள்விகள்! பயம் என்பதே கிடையாது. எனக்கு இவை பிடித்திருந்தன. குழந்தைகளிடம் அணுகுவதற்குப் பல்வேறு வழிமுறைகளை ஆராய்ந்தேன். பாடப்புத்தகத்தில் உள்ள பயிற்சிகளை முடிக்கவேண்டும்; பாடத்திட்டத்தின்படி போகவேண்டும் போன்ற விதிமுறைகளை நான் ஏற்கவில்லை. நான் என் விருப்பப்படி என் குழந்தைகளுடன் ஒருசேரக் கற்றுக்கொண்டேன். சில கேள்விகளுக்குப் பலமுறை திருதிருவென்று முழித்தேன்; சமாளித்தேன். முதலாம் வகுப்பில் குழந்தைகளின் சுறுசுறுப்பு, பங்குகொள்ளும் விதம் அளப்பரியது. முதலில் பயந்தேன், பிறகு ஒரு தைரியம், பல்வேறு வகையான பயிற்சிகளை மாணவர்களே தொட்டு ஆராய்ந்து செய்யும் வகையில் வகுப்பறையிலேயே அமைத்திருந்தேன். நூல், ஊசி, பஞ்சு, பசை, மணிகள், கத்தரிக்கோல், கிளிஞ்சல்கள், வண்ணக்காகிதங்கள் போன்றவை எப்போதும் எங்கள் வகுப்பறையில் இருக்கும்.

## வகுப்பறை உரையாடல்

ஒரு பாடத்தை ஆரம்பிக்கின்றோம் என்றால் உதாரணமாக 'மேகங்கள்' என்றால் வகுப்பறையை விட்டு வெளியே வந்து வானத்தைப் பார்த்துப் பல்வேறு வகையான உரையாடலுக்குப் பிறகுதான் பாடத்திற்குச் செல்வோம். உரையாடலுக்குப் பிறகு வரையச் சொல்வேன். நிறைய கேள்விகள், பலவிதமான பதில்கள், ஆரம்பத்தில் மாணவர்கள் அமைதியாக கேட்டக்கேள்விக்கு மட்டும் பதில் அளித்தனர். ஆனால் நாட்கள் செல்லச்செல்ல பயமின்றிப் பல்வேறு கேள்விகளை எதிர்கொண்டு பதிலளித்தனர். ஆனால் நாட்கள் செல்லச்செல்ல பயமின்றிப் பல்வரி கேள்விகள் வரத்தொடங்கின. சிலசமயங்களில் என்னுடன் விவாதித்து

மாணவர்கள் தங்களுடைய சந்தேகங்களுக்கு விடைதேடிக் கொள்வார்கள்.

## சூழலை உருவாக்குதல்

முதலாம் வகுப்பில் மாணவர்கள் முழு சுதந்திரத்துடன் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தும் சூழலை அமைத்துக் கொடுத்தால்தான் கற்றல் - கற்பித்தல் முழுமையடையும். பள்ளியின் எந்த ஒரு விழாவாக இருந்தாலும் முதலாம் வகுப்பின் பங்களிப்பு கண்டிப்பாக இருக்கும். பொம்மலாட்டம், வில்லுப்பாட்டு, நடனம், பாட்டு, கதைகூறல், தனிநடிப்பு, கோலம், விளையாட்டு என அனைத்துக் கலைகளிலும் ஈடுபடவைத்தேன். அனைவரும் பார்த்து வியந்தனர். முதலாம் வகுப்பில் ஊட்டும் உணர்வுகள்தான், மரத்திற்கு விதை போல அடிப்படையாக அமைபவை. அவற்றைச் செம்மையாகப் பக்குவமாகப் பராமரித்துக் கொண்டு செல்வோமானால் நல்லமாணவனை உருவாக்கினோம் என்ற திருப்தி நமக்கு வரும்.

## ஒவ்வொரு நாளும் விழாக்கோலம்

அனைத்துச் செயல்பாடுகளும் உணர்வு பூர்வமான அன்றான வாழ்க்கையில் தொடர்புபடுத்தும் படியாக அமைந்திருக்க வேண்டும். “எப்பொழுதும் விழாக்கோலம்தான்; வகுப்பறைக்குள் பார்ப்பதைவிட வெளியேதான் அதிகமாக உங்களைப் பார்க்கின்றோம்” என்று எல்லோரும் கேட்பார்கள். பல்வேறு விழாக்கள், செயல்பாடுகள் நிறைந்ததே வகுப்பறை. நான் என் குடும்பத்துடன் செலவழித்த நேரங்களைவிட நிறைய நேரம் என் குழந்தைகளுடன்தான் இருந்தேன். அவர்களை நான் புரிந்துகொண்டதை விட அவர்கள் என்னை நன்றாகவே புரிந்துகொண்டார்கள். பிறந்தால் பெண்ணாகப் பிறக்கவேண்டும்; அப்படிப் பெண்ணாகப் பிறந்தால் சின்னஞ்சிறு பிஞ்சுகளுடன் பணியாற்றவேண்டும்.

## வண்ணங்களின் விழா

ஒருமுறை வண்ணங்களை அறிமுகப்படுத்த ‘கலர்ஸ் டே’ கொண்டாடினோம். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வண்ணம். அந்த நாள் முழுவதும் செய்யும் கைவினைப் பொருட்களும், விளையாட்டுகளும், உரையாடல்களும் செயல்பாடுகளும் அந்த நாளுக்குரிய வண்ணத்தைச் சார்ந்தே இருக்கும். இதன் மூலம் என் குட்டிகள் வண்ணங்களின் பெயர்களை அறிந்து கொண்டதோடு நிரைய பேசி, எழுதி, வரைந்து, வண்ணம் தீட்டி, விளையாடி, சேகரித்து,

**• கேள்வி கேட்பது என்பது குழந்தைகளின் உரிமை. ஒவ்வொரு குழந்தையும் பள்ளிக்கு வருவதற்கு முன்பே பலவற்றைத் தெரிந்து கொண்டு வருகிறார்கள் என்றால், அது அவர்கள் பார்க்கும், கேட்கும் ஒவ்வொன்றையும் உற்றுநோக்குவதாலும் கேள்வி கேட்பதாலும் தகவல்களை ஒருங்கிணைத்துச் சேமிப்பதாலும் தான். வகுப்பறையில் இத்தகைய நிகழ்வுகளுக்கு வாய்ப்பு குறைவாகவும் ஆசிரியர் சொல்வதை மட்டுமே கேட்டு மனப்பாடம் செய்யும் நேரம் அதிகமாகவும் இருக்கிறது**

**• வகுப்பறை உரையாடல்கள் மாணவர்களின் தன்னப்பிக்கையை அதிகப்படுத்துவதோடு கற்றலுக்கு அவர்களைப் பொறுப்பேற்க வைக்கிறது. ஆசிரியர் மாணவர்களின் நிலையை, புரிதலை அறிந்து கொள்ள உறுதுணையாக இருப்பதோடு, அவர்களுக்கு எவ்விதமான உதவி எப்போது தேவைப்படுகிறது என்பதையும் ஆசிரியருக்கு உணர்த்துகிறது.**

**• இவ்வாறு ஆசிரியர்களும் மாணவர்களும் இணைந்து விளையாடி, பேசி, செய்து மகிழும்போது வகுப்பறை யாரோ ஒருவருடையது அல்ல, என்னுடையது என்ற எண்ணம் ஒவ்வொரு குழந்தையின் மனதிலும் ஆழமாகப் பதியும். அதனால் பள்ளிக்கு வருவதையோ பாடங்களைக் கற்பதையோ எக்குழந்தையும் பாரமாக நினைக்க வாய்ப்பில்லை.**

சொல்லிக்கொடுத்துஞ் என்று திட்டமிடாத பல கற்றல் செயல்பாடுகள் நிகழ்ந்தன.

### மனதைக் கவர்ந்த என் குழந்தைகளின் உரையாடல்

காலைப்பொழுது வகுப்பறைக்குள் நுழைந்தேன். ஒரே சலசலப்பு என்னவென்றால் நேற்று பாடம் நடத்தும் பொழுது மாணவர்களிடம் வானத்தைப் பற்றித் தெரிந்து வரச்சொல்லி இருந்தேன். மாணவர்கள் ஒருவருக்கொருவர் காரசாரமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

ஆகாஷ்: நான் வானத்தில் சிங்கத்தைப் பார்த்தேன்.

வாகினி: நானும் முயலைப் பார்த்தேன். திடீர்னு மறைஞ்சி போச்சு.

தமிழ் : டேய்! டேய்! நானும் மாடிக்குப்போய் வானத்தைப் பார்த்துக்கிட்டே மிஸ் சொன்னதைப்பத்தி யோசிச்சேன்டா…அப்போ எனக்கு வானம் சாய்வா படுத்துக்கிட்டு இருந்த மாதிரி இருந்துச்சுடா. நான் எழுந்து உட்கார்ந்த உடன் வானம் தூங்குன மாதிரி இருந்துச்சு.

வாஹினி: என்னடா வானம் சாய்ஞ்சிருக்கு, தூங்கிருக்குனு ஔறுற? நீ cursive writing எழுதிட்டு மாடிக்குப் போனியாடா?

இவ்வாறு இருவரும் பேசிக்கொண்டிருந்தனர். இதைக் கேட்கையில் எனக்கு ஒரே சிரிப்பாக இருந்தது. நாங்கள் அனைவரும் சிரித்துக் கொண்டே வகுப்பறையை விட்டு வெளியே சென்றோம். வானத்தைப் பார்த்தோம். மேகங்கள் பற்றிப்பேசிக் கொண்டே பாடல் பாடினோம், ஆடினோம், மறுபடியும் கேள்விக்கணைகள்.

தரணி: மிஸ் மிஸ், நாங்க டூர் போனோம். மலையைப் பார்த்தோம். மலை, எங்களைத் தொடர்ந்து துரத்திக் கொண்டே வந்தது. அது ஏன் மிஸ்? நிறைய மேகங்கள் வந்துச்சு. மேகம் மழை கொடுக்கும்னு சொன்னீங்க மிஸ். எப்ப மேகம் எல்லாம் அதிகமா ஆகும். அது எப்படி நிறைய மழை கொடுக்கும்?

பின், வானத்தில் இருப்பதைப் பற்றிப் பேசியதைப் படமாக வரைந்து வண்ணம் தீட்டினர். மறுபடியும் கேள்விகள் தொடர்ந்த வண்ணம் இருந்தன.

தரணி: மிஸ், ஏன் மிஸ் மேகத்துக்கு blue கலர் அடிக்க சொல்றீங்க? நான் நிறைய மேகங்கள் வரைஞ்சு இருக்கேன், நிறைய மழை வரப்போகுது. அதனால் நான் Black colour அடிக்கிறேனே மிஸ்.

தீபிகா: மிஸ் மிஸ் என்னோட மேகத்துக்கு Kit Box- ல் இருந்து பஞ்சு, பசை எல்லாம் வச்சி வெள்ளை மேகம் வரையப்போகிறேன்.

இவ்வாறு பல கேள்விகளைக் கேட்டுக்கொண்டுதான் இருப்பார்கள் என் குட்டிகள். இது ஒரு மாதிரிதான், உண்மையான அனுபவம் பெற நீங்கள் என் குட்டிகளுடன் பேசிப்பழகவேண்டும். ஆனால், நான் எல்லா நேரத்திலும் ஒரே மாதிரி இருந்ததே கிடையாது. இப்பொழுது நினைத்தாலும் வருத்தமாக உள்ளது.



முறைசாரா விளையாட்டுகள்



முறைசாரா உரையாடல்கள்



ஒரு தலைப்பில் தானே பேசுதல்

## என்னை முந்தும் என் குழந்தைகள்

ஒரு தலைப்பை ஆரம்பித்துத் தொடரும்போதே மாணவர்கள் மிஸ் மிஸ் இப்படி ஒட்டலாமா? இதையெல்லாம் ஒன்னுசேர்த்து ஒட்டி இப்படிப் பண்ணலாமான்னு என்னிடம் கேள்விகள் கேட்டு நான் பதில் சொல்லுவதற்கு முன்னர் அவர்களே சொல்லிவிடுவார்கள். இதற்கெல்லாம் ஆரம்பத்தில் இருந்தே பல்வேறு வகையான செயல்பாடுகளையும் கருத்துப் பரிமாற்றங்களையும் சுதந்திரமாகச் செய்ததேயாகும்.

குழந்தைகள் பயமின்றித் தங்கள் மனதில் உள்ள கருத்துக்களைத் தயக்கமின்றிச் சொல்லும் வாய்ப்பினை அமைத்துக் கொடுத்தாலே போதும் முழுமையான திருப்தியினை நம்மால் உணரமுடியும். மாணவர்கள் முழு சுதந்திரத்துடன் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்துவார்கள். நாம் சொல்ல நினைத்த செய்தியைச் சுலபமாக மாணவர்கள் மனதில் பதியவைக்கலாம்.

### கற்றல் விளைவுகள் :

- Kitboxல் உள்ள ஊசி-நூல், பஞ்சு, பசை, வண்ணத்தாள்கள், பென்சில்கள், வரைபடத்தாள்கள் போன்ற அனைத்தையும் பயன்படுத்தக் கற்றுக்கொண்டனர்.
- மாணவர்கள் முழு சுதந்திரத்துடன் தங்கள் கருத்துகளை வெளிப்படுத்துவார்கள்.
- பள்ளி விழாக்களில் பொம்மலாட்டம், வில்லுப்பாட்டு, நடனம், பாட்டு, கதை




கூறுதல், தனி நடிப்பு, கோலம் என அனைத்து கலைகளிலும் ஈடுபடுகின்றனர்.

- முதலாம் வகுப்பில் விதைக்கும் உணர்வுகள் தான் அவர்கள் வாழ்வின் அடித்தளமாக அமையும்

இவ்வாறு பல சிறந்த பாடங்களையும் இனிமையான அனுபவங்களையும் மகிழ்ச்சியான நினைவுகளையும் சுமந்தபடி இரண்டாம் வகுப்பிற்காகக் காத்துக் கொண்டிருக்கிறோம்.



**ஜெஜலட்சுமி**, தொ.ப.ஆ, அ.தொ.ப. கரிக்கலாம்பாக்கம்



# கதைகளின் பெருவிழா

> 1. கதைகளின் வாயிலாக மொழித்திறன் வளர்ச்சியடைகிறது.
>
> 2. கதைகளினால் மாணவர்களின் கற்பனைத்திறன் எல்லையற்றதாகிறது.
>
> 3. குழந்தைகளிடம் கதைகூறுதல் என்னும் இயல்பான நிகழ்வு வாய்ப்புகளுக்காகக் காத்திருக்கின்றன.
>
> 4. குழந்தைகளுக்கு இவ்வுலகின் அனைத்துமே உயிருள்ளதாக அமைவதால் அவர்கள் அனைத்துப் பொருட்களோடும் உரையாடுகிறார்கள்.

ஒரு கரும்பலகை, நான்கு குழந்தைகள், கையில் சுண்ணக்கட்டித் துண்டோடு... பதினைந்து நிமிடம் கழித்து அழகோவியமாய் காட்சியளித்தக் கரும்பலகை. ஆங்காங்கே குழந்தைகள் வரைந்த கோடுகள், வளைவுகள், சிறுசிறு முட்டைகள், வெவ்வேறு உருவங்கள், படங்கள், நடுநடுவே குழந்தைகள் பேசிக்கொண்ட சொற்றொடர்கள் என அனைத்தையும் ரசித்தவளாய் நான் உருகி உட்கார்ந்த நிலையில், மொழி குழந்தைகளின் பேச்சில் விளையாடுவதைக் கண்டேன். வரைந்ததை மனதிலும் கேமராவிலும் படம் பிடித்தேன்.

மொழி வளர்ச்சி என்பது பிறப்பில் தொடங்கி வியக்கக்கூடிய வேகத்துடன் பல பிரிவுகள் அடங்கியதாக உள்ளது. வட்டம் V-ல், L.K.G முதல் III-ம் வகுப்பு வரை கொண்டது எங்கள் அகரம் அரசு தொடக்கப் பள்ளி. பெரும்பாலும் குழந்தைகள் அவரவர் தேவைகளையும்ஆசைகளையும்ஆயிரமாயிரம் கேள்விகள் மூலம் நமக்குப் புரிய வைப்பார்கள், எம் பள்ளி குழந்தைகளும் அவ்வண்ணமே.

குழந்தைகளைப் பாடப் புத்தகங்களைத் தாண்டி பிற செயல்பாடுகள் மூலம் உடல் வளர்ச்சி, ஐம்புலன் இயக்க வளர்ச்சி, அறிவுத்திறன் வளர்ச்சி, மொழி வளர்ச்சி, சமூக மற்றும் தனிப்பட்ட வளர்ச்சி, மன எழுச்சி மற்றும் ரசனை வளர்ச்சி ஆகியவற்றை வளப்படுத்தி செம்மைப்படுத்த எண்ணினேன். இக்கல்வியாண்டின் (2017-18) முதல் SMC - PTA கூட்டத்தில் இவ்வாண்டிற்கான திட்டத்தை வரையறுக்கும் போதே எம் பள்ளியின் தொடக்கப்பள்ளி ஆசிரியைகள் திருமதி. T. பவானி மற்றும் திருமதி. J. தரணி ஆகியோருடன் கலந்துரையாடி 'வாசிப்பு திருவிழா' நடத்துவது குறித்துப் பெற்றோர்களிடமும், குழு உறுப்பினர்களிடமும் உரையாடினோம். இதைப்பற்றி எம் பள்ளி குழந்தைகளிடமும் விளக்கிக் கூறினேன். 'பிள்ளைங்க நல்லா வரனும் Miss, அதுக்கு என்னலாம் செய்யனுமோ எல்லா செய்யுங்க Miss' என்று தங்கள் மகிழ்ச்சியை வார்த்தைகளால் வெளிப்படுத்தினர். பின்

- முதல் பருவத்தில்'அறிவியல் திருவிழா'
- இரண்டாவது பருவத்தில், L.K.G முதல் III ஆம் வகுப்பு வரை' Reading day via phonetic way'ஆங்கில வாசிப்பு திருவிழா,
- மூன்றாவது பருவத்தில் 'கதைகள் திருவிழா' என முடிவெடுக்கப்பட்டது.

ஒவ்வொரு விழாவிலும் அனைத்துக் குழந்தைகளுக்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டது. குழந்தைகள் கற்று கற்பிக்கவும் செய்தனர். பல தருணங்களில் எங்கள் குழந்தைகளே எங்களுக்கு ஆசானாக இருந்தனர். எதைப் பார்த்தாலும் அதை வைத்துக் கதை சொல்லும் குழந்தைகள் எம்பள்ளியில் இருப்பதை நான் பார்த்திருக்கிறேன். "பள்ளி நேரம் முடிந்தும் வீட்டுக்குப் போகாம என்னடா பன்ற" என்று நான் கேட்க, இரண்டாம் வகுப்பு குழந்தை ஒன்று, "இருங்க Miss, செடிகிட்ட பேசிகிட்டு இருக்கேன்" என்று கூறியது எனக்கு நினைவிருக்கிறது. ஒரு நொடியில் என்னை அசத்திய அக்குழந்தையின் பதிலைப் பிற ஆசிரியர்களிடம் பகிர அடுத்த நாளே 'கதை விழா' விற்கு அடித்தளம் போட்டோம்.

அந்தந்த குழந்தைகளுக்குத் தெரிந்த, பிடித்தக் கதைகளை முதலில் கேட்டோம். கொஞ்சும் தமிழிலும் ஆங்கிலம் கலந்த தமிழிலும் கதைகளைக் கூறினர். அவரவர் எந்த மொழியில் கதை கூற விழைகிறார்கள் என்பதையும் கேட்டறிந்தோம். பட்டியல் தயாரித்து



சுவரில் மாட்டினோம். பின் குரல் ஏற்றத்தாழ்வு, முகபாவங்கள், உடல் அசைவுகள் முதலிய கதையிலுள்ள அம்சங்களை, குழந்தைகளுக்குச் செய்து காட்டினோம். ஒருபக்கம் ஒவ்வொரு நாளும் குழந்தைகள் அவரவர் கதைகளுக்கு மெருகேற்றினர்; மறுபக்கம் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு விதமான கதை காட்சியமைப்பை உருவாக்க ஆசிரியர்கள் நாங்கள் மண்டையை உடைத்துக் கொண்டும் விவாதம் செய்தும் பல புத்தகங்கள், வலைதளங்கள் ஆகியவற்றை ஆராய்ந்தும் ஒரு முடிவுக்கு வந்தோம். ஒவ்வொரு கதையையும் காட்சியமைத்தல், அதற்குத் தேவையான பொருட்கள் என்னென்ன என்பதைப் பட்டியலிட்டு மாட்டினோம். அதற்கே ஒரு மாதம் ஓடியது. நடுவில் மழலையர் விழா, ஆண்டு Inspection (ஆய்வு) வேறு. அப்பாடா! என்று அனைத்தையும் செம்மையாக முடித்துக் கடந்தோம். இறுதியாக மார்ச் இரண்டாவது வாரத்தில் காட்சிப் பொருள்கள் செய்யத் தொடங்கினோம். விழாவிற்குப் பொதுவாகத் தேவைப்படும் உபகரணங்களை வாங்கினோம். அவரவர் வீட்டில் உள்ள சிறு அட்டைப்பெட்டியிலிருந்து பெரிய குளிர்சாதன அட்டைப்பெட்டி வரை அனைத்தையும் சேகரித்தோம். தையற் கடையில் வீணாக இருக்கும் வெட்டப்பட்ட துணிகள், நூல் கண்டுகள், நம் சமையலறையில் இருக்கும் காலி நெய் டப்பாக்கள் மற்றும் Surf-Excel, Talcum powder டப்பாக்கள், மரத்துகள்கள், Shuttle cock வைக்கும் உருள் டப்பாக்கள், துடைப்பக் குச்சிகள், ஊசுடு ஏரி வழியில் கொட்டிக்கிடக்கும் கூழாங்கற்கள் இன்னும் பற்பல பொருட்களையும் கொண்டு வந்து குவித்தோம். குழந்தைகளும் அவரவர் பங்கிற்கு பென்சில் டப்பாக்கள், களிமண் மூட்டைகள், Calendar அட்டைகள், புடவை அட்டைகள் என்று எடுத்துக்கொண்டு வந்திருந்தனர். காட்சியமைப்பை அந்தந்த குழந்தைகளை வைத்துக்கொண்டே செய்தோம். எண்ணிலடங்கா யோசனைகளை ஆசிரியர்கள் கூற, குழந்தைகளும் எத்தனையோ குறுக்குக் கேள்விகளைக் கேட்க, அதற்கேற்றாற்போல் மீண்டும் காட்சிகளை மாற்றியமைக்க என பன்னிரண்டு நாட்கள் உருண்டோடின.

'கதை விழா" வைக்க SMC - PTA கூட்டங்களில் நாள் குறிக்கலானது. ஏப்ரல் 5,6-ம் தேதி நடத்தலாம் என முடிவெடுக்கப்பட்டது.பள்ளித் துணை ஆய்வாளர் வட்டம்-V, திரு. ஜி. பக்கிரிசாமி அவர்களிடம் எங்களின் விழா பற்றிக் கூற,



அவர் ஒப்புதல் தெரிவித்தார்.மார்ச் இறுதிவாரம் அட்டைப்பெட்டிகள் வீடுகளாக, Shuttle cock பெட்டிகள் விலங்குகள், பறவைகளாக, துடைப்பக் குச்சிகள் வேலிகளாக, Ice-cream குச்சிகள் ஒரு வீட்டின் அறையாக, குளிர்சாதனப் பெட்டியின் அட்டைப்பெட்டி வீட்டின் அறையாக, தொலைக்காட்சி பெட்டி Puppet Theatre- ஆக, Paper cup வீடுகளாக பாணிபூரி தட்டு கொக்கு, கௌதாரியாக, Woollen நூல் புல்வெளி/ கோழிக்குஞ்சுகளாக, நெய் டப்பாக்கள் பன்றிகளாக, பஞ்சு முயலாக இன்னும் பல பொருட்கள் பலப்பலவாக மாறின. பொருட்கள் மட்டுமா மாறின; ஆம் குழந்தைகளும் கதை ஆசிரியர்களாக, பொம்மலாட்ட கைப்பாவை வல்லுநர்களாக மாறினர். அப்பப்பா... என்று பெருமூச்சு விட்டோம். இதற்கிடையில் Story Map, Story road, Story Tower, Story Sequencing, Story Ladder, Story Stores, Story Structure, Writing என்று I முதல் III வகுப்பு குழந்தைகள் கதைகளை எழுதவும் வரையவும் செய்தனர். Story Gap Filling செயல்பாட்டின் மூலம் நூல்கண்டு வைத்து Story Web உருவாக்கினர். வகுப்பறையைக் கதை திரையரங்கமாக மாற்றினோம். திரும்பும் திசையெங்கும் கண்கவர் கதைப்பாத்திரங்கள், ஒவ்வொரு புள்ளியிலும் ஒளிந்திருக்கும் கதைகள், ஆங்காங்கே கதைக் கூறுதல் / கேட்டல் ஆகியவற்றின் நன்மைகளைக் கொண்ட பதாகைகள் என்ற வேறு உலகமாகக் காட்சியளித்தது எங்களது பள்ளிக்கூடம். ஏப்ரல் 5, காலை 7.30 மணிக்குத் தோரணங்கள் கட்டி, வரவேற்பு மேசையில் பூ, கற்கண்டு வைத்துக் குழந்தைகளைக் கொண்டாட தயாராகிவிட்டோம். ஊர்பஞ்சாயத்துத் தலைவர், வட்டம்-V பள்ளித் துணை ஆய்வாளர், இன்னும் பல ஆசிரியர்கள், குழந்தைகளின் பெற்றோர்கள், பொதுமக்கள் என அனைவரும் ஒன்று திரள விழா தொடங்கியது. மழலை மொழியில் பொம்மைகள், கைப்பாவைகளை ஆட்டியும் அசைத்தும் மடை திறந்த வெள்ளமெனவும் சலசல வென்ற நீரோடையாகவும் மென்மையான தென்றலெனவும் வெவ்வேறு பரிணாமங்களில் குழந்தைகள் அவரவர் கதைகளைக் கூறிக் கொண்டிருந்தனர். அத்தனை குழந்தைகளும் உடலளவிலும் உள்ளத்தளவிலும் ஆனந்தமாய் இருந்ததை, இதுவரையிலும் இருப்பதை எங்களால் உணர முடிகிறது. குழந்தைகளையும் ஆசிரியர்களையும் ஊக்குவிக்கும் வண்ணம் பரிசுகள் வழங்கப்பட்டது. தொலைக்காட்சி மற்றும் செய்தியாளர் நண்பர்களும் எங்களோடு இணைந்திருந்தனர். பல்வேறு பள்ளி ஆசிரியர்கள், தனியார் பள்ளி குழந்தைகள் என வந்தவாரே இருந்தனர். முகமெல்லாம் புன்னகை! பூத்துக்குலுங்கும் பூக்களாய் குழந்தைகள், பரபரப்பாகவே பூக்களைச் சுற்றும் தேனீக்களாய் எம் பள்ளி ஆசிரியைகள்... ஊழியர் அக்காக்கள்... என எங்களுக்கான இன்னொரு உலகத்தில் அன்றைய தினம் நிறைவுற்றது.



**கி. அனிதா**, .தொ.ப.ஆ, அ.தொ.ப, அகரம், புதுச்சேரி

# வகுப்பறை மாற்றம்

- மூன்றாம் வகுப்பில் பிற பள்ளிச்சூழலில் இருந்து வரும் மாணவர்களைக் கற்றலில் ஒருங்கிணைக்கும் உத்திகள் .
- குழுவழிக் கற்றல் முறையில் அதிக அளவில் குழந்தைகள் வேகமாகவும் செம்மையாகவும் கற்றுக் கொள்கின்றனர்.
- குழுச்செயல்பாட்டின் மூலம் அனைத்துத் தர மாணவர்களும் கற்றல் கற்பித்தலில் ஒருங்கிணைந்து மேம்படுதல்.

## வகுப்பறை மாற்றம்

என் பெயர் ஈஸ்வரி. நான் தர்மாபுரி அரசு தொடக்கப் பள்ளியில் பணிபுரிந்து வருகிறேன். இது நகர்ப்புறம் சார்ந்த பள்ளியாகும். ஒரு ஆசிரியராக மாணவர்களுடைய கற்றல் நிகழ்வுகளின் மீதும் அவர்களுடைய ஒழுக்கம் சார்ந்த விஷயங்களின் மீதும் பெரிதும் அக்கறை எடுத்துக்கொள்வது என்னுடைய பண்பாகும்.

எங்கள் பள்ளியில் கடந்த ஆண்டில் மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தது. இவ்வாண்டின் துவக்கத்தில் தனியார் பள்ளிகளிலியிருந்தும் (கற்றலில் குறைபாடு உள்ளவர்கள் என்று பள்ளியிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்கள்) பிற மாநிலத்திலிருந்தும் மாணவர்கள் மூன்றாம் வகுப்பில் சேர்ந்தனர். எனவே, வகுப்பில் கற்றல் குறைபாடு உடைய மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது. இந்தக் குறைபாடுகளைக் களைய எனக்குத் தெரிந்த பல முயற்சிகளை மேற்கொண்டேன். புதிய மாணவர்கள் வெவ்வேறு பாடத்திட்டத்தில் பயின்று வந்திருப்பதால் இந்தப்பாடத்திட்ட முறையை அவர்களுக்குக் கற்பிப்பதில் பெரும் சிரமம் ஏற்பட்டது. அதில் கற்பித்தலில் மாற்றம் ஏற்படுத்த சிலமுயற்சிகளை மேற்கொண்டேன்.

## நான் கற்றுக் கொண்டவை

கற்றல் - கற்பித்தல் செயல்பாட்டில் நன்குப் படிக்கத் தெரிந்த மாணவிகளே ஆர்முடன் பங்கேற்றார்கள். மற்றவர்கள் தொய்வுடன் தனித்தே இருந்தனர். இந்த நிலையில் படிக்க முடிந்த மாணவர்களையும் பின் தங்கிய மாணவர்களையும் குழுவாக இணைந்து கற்க வழி செய்தேன். இந்த உத்தியின் மூலமாக மாணவர்கள் திறன் மேம்பட்டது. மெல்ல கற்கும் மாணவர்களும் கற்றலில் தானாகவே முன்வந்து பங்குபெற ஆரம்பித்தனர். குறிப்பாகக் கற்றலில் குறைபாடு உடைய மாணவர்ளே இந்தக் குழுக்கற்றலில் அதிக ஆர்வத்துடன் பங்கேற்றனர். இதனை உற்று நோக்கிய நான் பெரும்பாலான பாடங்களுக்கு இந்த முறையைப் பின்பற்றினேன், மேலும், மொழிப்பாடத்துடன் கணிதம், சூழ்நிலையியல் ஆகியவற்றை கற்பிக்கும் போது அனைத்து மாணவர்களும் முன்னேறியது, எனக்கு மிகுந்த மனநிறைவை ஏற்படுத்தியது.

இவ்வாறு அனைத்து மாணவர்களும் குழுக்கற்றலில் பங்குபெறுவதோடு, அவர்களது தனித்துவமான கற்பனைத்திறனையும், ஓவியம் வரையும் திறனையும் வெளிப்படுத்தினர். இப்போது என் வகுப்பில் பெருவாரியான கற்றல் - கற்பித்தல் துணைக்கருவிகளை மாணவர்களே செய்கின்றனர். கதை, கவிதை போன்ற படைப்பாற்றல் திறன்களை அவர்கள் வெளிப்படுத்தும் போதும் ஓர் ஆசிரியராக எனக்கு பெருமகிழ்ச்சி ஏற்படுகிறது. பாடப்புத்தகத்தில் இருக்கிற கதைகளுக்கு மாணவர்கள் தாங்களாகவே உருவாக்கிய







கதாபாத்திரங்கள் மற்றும் துணைக்கருவிகள் அவர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்துவதை நேரில் கண்கூடாய் உணர்ந்தேன்.

படம்1 தாங்களாகவே கதாப்பாத்திரங்களைச் செய்யும் மாணவர்கள்.

**முடிவுரை:**

மாணவர்கள் பல்வேறு கடினமான சூழல்களிலிருந்து வகுப்பறைக்குள் நுழைகின்றனர். பொருளாதாரச்சூழலும், வாழ்க்கைச்சூழலும் அவர்களுக்குப் பெரிய இடர்ப்பாடுகளை ஏற்படுத்துவதும், தினசரி அவர்களின் வாழ்க்கை போராட்டமாகவே இருக்கிறது. இவ்வாறான சூழ்நிலையில் வரும் மாணவர்களுக்கு ஆசிரியர் தருகின்ற அன்பும், அரவணைப்பும், அக்கறை தாண்டிய பற்றும், பரிவுமே வழிகாட்டியாக இருக்கும். ஆரம்ப வகுப்பு மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்த இவ்வகையான முயற்சிகளைச் செய்வதன் மூலம் மாணவர்களின் கற்றல் மேலும் சிறப்படையும்.



**ஈஸ்வரி,** தொ.ப.ஆ, அ.தொ.ப, தர்மபுரி

# படங்களைப் பார்! படைப்பாளியாகு!

- கதைகேட்கும்மாணவர்களுக்குக் கதையைக் கூறவாய்ப்பளிக்க வேண்டும்.
- படங்களைக் கொண்டு கதைகூறினால், மாணவர்களால் அப்படங்களில் உள்ள சொற்களின் துணைக்கொண்டு கதையைக்கூற இயலும்.
- படைப்பாற்றல் திறனும் கற்பனைத்திறனும் வளர்கிறது.
- கதைகளின் வாயிலாகச் சொற்களையும் எழுத்துக்களையும் கற்பித்தல் எளிமையடைகிறது... ஆழமாகிறது... அர்த்தமுள்ளதாகிறது.

## நாங்களும் கதை சொல்லுவோம்

கதை என்றால் எல்லோர்க்கும் பிடிக்கும். அதுவும் மழலை மொழியில் கேட்பது என்றால், ஒரு அலாதியான பிரியம். நம் பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்குப் பல்வேறு கதைகளை நாம் கூறி இருப்போம். அவர்களும் அதைக்கேட்டு.... அசைபோட்டு, ஆனந்தத்தில் மூச்சுமுட்டித் திளைத்து இருந்திருப்பார்கள். அவர்களுக்கு நாம் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தால் அவர்களும் கதை சொல்லுவார்கள் என்பது தான் எம் எண்ணம். என் முதலாம் வகுப்பு மாணவர்களுக்குக் குட்டிக்குட்டிக் கதைகளைக் கூறுவதுண்டு. பாடப்புத்தகத்திலுள்ள படங்களை வைத்துக்கதை கூற முயற்சித்தேன். அப்படத்தில் உள்ள சொற்களை அவர்களால் எளிதில் நினைவில் வைத்திருக்க முடிந்தது. மேலும், அக்கதையை அவர்களாகவே எடுத்தியம்ப முடிந்தது. நானும் மாணவர்களும் இணைந்து சில படங்களைக் கொண்டு கதை மற்றும் பாடல்களை உருவாக்கினோம். இப்பொழுது என் மாணவர்களுக்குச் சில படங்களைக் காண்பித்துக் கதை உருவாக்கக் கூறினால் அவர்களும் அப்படங்களைக் கொண்டு கதைகளைக் கூறும் இயல்பை அடைந்துள்ளனர்.

நம் சிறுவயதில் 'ஒரு ஊர்ல' என்று தொடங்கும் பொதுவான கதைகளை, நாம் எல்லோரும் கேட்டு திளைத்திருப்போம். இன்றைய குழந்தைகளுக்கு நாம் கதை சொல்கிறோமா? என்பதை சுய அலசலுடன் அணுக வேண்டிய காலத்தின் கட்டாயத்தில் இருக்கின்றோம். 'கதைசொல்லுதல்' என்பது வெறும் கதை சொல்லுதல் மட்டுமல்ல, கதைகளின் வழியாகக் குழந்தைகள் பெறவிருக்கும் மொழி அறிவு, அன்பு, ஈகைக்குணம் போன்ற பலப்பரிணாமங்களில் குழந்தைகளைப் பயணிக்கவைத்தலாகும்.

வெறும் அறிவுரை மட்டும் கதைகளில் இருந்தால் அவற்றை இன்றைய குழந்தைகள் எளிதாகப் புறந்தள்ளிவிட்டுப் போய்விட வாய்ப்புகள் அதிகம். கதைசொல்லுதல் என்பது சிறப்பான கலை. அப்படிக் கதைசொல்லும் கலையை மாணவர்கள் வளர்த்துக் கொண்டால், மாணவர்களின் கற்பனைத் திறன் மற்றும் மொழி ஆற்றல் வளரும் அல்லவா!

எம் பள்ளி சிறார்களின் ஒலி வண்ணத்தில் உருவான சிறுகதைகள் இதோ உங்கள் வாசிப்புக்கு.

## வகுப்பறையில் மாணவர்கள்

## படம் பார்த்துக் கதை கூறுதல்

எழுத்து, சொற்கள், வார்த்தைகளைக் கற்பித்தல் போன்ற போதனா முறைகளில் பல குழப்பங்கள் எனக்கு உள்ளன. ஒவ்வொரு மாணவர்களும் தனித்திறன் பெற்றவர்கள். அவ்வாறிருக்க நாம் ஒரு பொருளையோ அல்லது சொற்களையே காண்பித்து அல்லது சொல்லி, அதனை இவ்வாறு தான் கூற வேண்டும் என்று சொல்வதை விட,

பிடித்தக் கதைகள், விளையாட்டுகள், படங்கள் மூலம் சொல்லிக் கொடுக்கும்போது அது அதிகமான கற்றல் விளைவுகளைத் தந்தது.

## கதை பிறந்த கதை

நான் முதலில் ட, ப, ம, ர, ழ எழுத்துக்களில் இருக்கும் சொற்களைப் படம், பட்டம், மரம், பம்பரம், பழம் போன்ற படங்களைக்காண்பித்துக் கூற வைத்தேன். ஆனால் மாணவர்களுக்கு அது கடினமாக இருந்தது என்பதை உணர்ந்தேன். மாற்று வழிக்கான தேடலில் 'இச்சொற்களைக் கொண்டு ஒரு கதையை உருவாக்கலாமே' என தோன்றியது. ஒரு கதையை உருவாக்கி, மாணவர்களுக்குக் கூறினேன். அவர்களும் ஆர்வத்துடன் கேட்டனர்.

என் மாணவர்கள் புத்தகத்தில் உள்ள சொற்களுக்குத் தாங்களாகவே ஒரு கதையை உருவாக்கினார்கள் (கப்பல், கண், பலா, வயல், வானம், மான்). முதலில் மாணவர்கள் ஒவ்வொரு படத்துக்கும் ஒரு நிகழ்வுகளைக் கூறினர். பின்பு நான் சில கேள்விகளைக் கேட்டு, அவர்களின் கருத்துகளைச் சேர்த்து ஒரு கதையாக உருவாக்கினோம்.

## கதை

ஒரு ஊர்ல ஒரு வயல் இருந்தது. அந்த வயல்ல மான் ஒன்று அங்கும் இங்கும் நடந்துனு இருந்தது. அங்க ஒரு பெரிய பலா மரத்துல பலா பழம் காய்திருந்தது. வயலுக்கு மேல வானம் இருந்தது. அதுல இருந்த மேகம் ஒன்னு கப்பல் மாதிரி இருந்தது.

வரிசை சொற்களுக்குக் கதை மற்றும் பாடல் உருவாக்கினோம்:

அ வரிசை முதல் ஔ வரை உள்ள சொற்கள் (அணில், ஆமை, இறகு, ஈ, உழவர், ஊசி, எறும்பு, ஏழு, ஐந்து, ஒன்று, ஓநாய், ஔவை).

## கதை கதையாம் காரணமாம்

மாணவர்கள் முதலில் ஒவ்வொரு படத்தையும் பார்த்து ஒரு நிகழ்வை கூற ஆரம்பித்தனர். அந்நிகழ்வுகள் ஒன்றுக்கு ஒன்று தொடர்பில்லாமல் இருந்தது. எனவே வரிசையாகச் சொற்களை எடுக்காமல் எந்தப் படச் சொற்களை வேண்டுமானால் பயன்படுத்தலாம் என்றேன்.

பிறகு தேவைப்படும் போது கேள்விகள் கேட்டு மாணவர்கள் சொல்ல சொல்ல உருவான மற்றொருகதை இதோ.



“ஒரு ஊர்ல ஒரு அணில் இருந்தது. அந்த அணில் மாமரத்துல ஐந்து மாம்பழம் பறிச்சிட்டு இருந்தது. நான்கு மாம்பழம் சாப்பிட்டு ஒரு மாம்பழத்தை ஔவைக்காக வைத்திருந்தது. கீழே போட்ட மாங்கொட்டையில் ஈக்கள் மொய்த்தன. ஏழு எறும்பு மரத்தின் மேல ஏறியது. மாமரத்துக்குப் பின்னாடி ஒரு குளம் இருக்கு. அதுல ஒரு ஆமை வாழ்ந்து வந்தது. அவ்வழியே உழவர் ஒருவர் வருகையில் அவர் காலில் ஊசி குத்தி விட்டது. அதனை எடுப்பதற்காக மாமரத்தின் அடியில் உட்கார்ந்தார். அவ்ஊசியை எடுத்தார். இரத்தம் வழிய, இரத்தத்தை அங்குக் கிடந்த இறகு மூலம் துடைத்தார். உழவர் அங்குக் கிடந்த மாமரத்து விதையை வீட்டிற்கு எடுத்துச் செல்லும் போது வழியில் ஒரு ஓநாயை பார்த்து வேகமாக வீட்டிற்குப் பயந்து ஓடிச் சென்றார். அந்த விதையை மண்ணில் புதைத்து வைத்து தண்ணீர் ஊற்றினார்.

**பாரதியாக எம் முத்துக்கள்**

நானும் மாணவர்களும் சேர்ந்து ஒரு பாடல் உருவாக்கினோம். (க வரிசை சொற்கள்)

முதல் வரியை நான் பாட ஆரம்பித்தேன்.

கரடியே கரடியே எங்கிருக்க

காட்டுக்குள்ள நானிருக்கேன்.

அடுத்ததாக மாணவர்களைக் கேட்டேன். ‘கி’ எழுத்தில் தொடங்கும் சொற்களைக் கூறச் சொன்னேன்.

மாணவர்கள் கிளி, கீரி, கிருஷ்ணா என்று கூறினர்.

கிளியே கிளியே எங்கிருக்க

கீற்று மேல நானிருக்கேன்.

‘கு’ எழுத்தில் தொடங்கும் சொற்கள்

மாணவர்கள்: குரங்கு, குரு, குயில்

குயிலே குயிலே எங்கிருக்க

கூரை மேல நானிருக்கேன்.

‘கெ’ எழுத்தில் சொற்களைக் கண்டறிய மாணவர்களுக்குச் சிரமமாக இருந்தது. எனவே, நானே

கெண்டை மீனே எங்கிருக்க

கேணிக்குள்ள நானிருக்கேன்.

கைத்தட்டி நாமும் பாடிடுவோம்.

‘கொ’ எழுத்தில் மாணவர்கள் ‘கொக்கு, கொரங்கு’ என்றனர்.

கொக்கே கொக்கே எங்கிருக்க

கோயில் வெளியே நானிருக்கேன்.

கௌதாரியே எங்கிருக்க

நீயே பார்த்துத் தெரிஞ்சிக்கோ.

பின்னர் மாணவர்களை இப்பாடலைப் பாட வைத்து அதற்கான படங்களை இணையத்தில் தேடி ஒரு காணொளி உருவாக்கினோம்.

**SSA புத்தகத்தைப் பார்த்துக் கதை கூறுதல்**

மாணவர்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்தும் நோக்கில் ஒவ்வொரு பள்ளியிலும் ‘Reading corner’ அமைக்கப்பட்டது. எங்கள் பள்ளியின் ஒன்றாம் வகுப்பிலும் ‘ Reading corner’ உள்ளது. அதில் நிறையப் படக்கதைப் புத்தகங்களும் SSA படக்கதைப் புத்தகங்களும் உள்ளன. அவற்றை மாணவர்கள் அவ்வப்போது எடுத்துப் படித்துச் சில நேரங்களில் கிழிப்பதும் உண்டு. படங்கள் உள்ள ஆங்கில புத்தகங்களை மாணவர்களுக்குக் கொடுத்துக் கதைகூற சொன்னேன். தமிழ்ப் படப்புத்தகங்களை மாணவர்களை எழுத்துக்கூட்டியும், படத்தைப் பார்த்தும் கதைகளைப் புரிந்து கொள்வார்கள். ஆனால் ஆங்கில புத்தகத்தைப் படத்தைப் பார்த்து மட்டுமே நிகழ்வுகளையோ, கதைகளையோ யூகிப்பார்கள். சில சமயம் அவர்களின் யூகிப்புக் கதைக்கு ஒத்துப்போகும். சில சமயம் அவர்களாகவே ஒரு புதுக் கதையை உருவாக்குவார்கள். புத்தக வாசிப்பின் போது குழுவாக மாணவர்களைச் செயல்பட வைத்தால் அவர்களது கற்பனைத்

திறனில் புதுப் புது நிகழ்வுகள் மற்றும் கதை உருவாகும் என்பதில் ஐயமில்லை. ஒவ்வொரு மாணவ மாணவிகளும் ஆர்வத்தோடு படத்தைப் பார்த்துக் கதையைக் கூறினார்கள். அதில் ஒரு புத்தகத்தில் உள்ள கதை அவர்கள் தமிழ்ப் பாட புத்தகத்தில் ஏற்கனவே படித்து, நடித்தக் கதை என்பதால் அவர்கள் அக்கதையை நடித்து கதை கூறினார்கள்.

### கதையைக் கேட்டு வரைதல்

மாணவர்களுக்குப் பிடித்தச் செயல்களுள் ஒன்று படம் வரைதல். ஏதோ ஒரு படத்தை வரைவதற்குப் பதிலாக, ஏன் ஒரு கதைக்குப் படம் வரைய வைக்கலாமே என்ற எண்ணம் தோன்ற, மாணவர்களுக்கு அவர்கள் ஆங்கில புத்தகத்தில் உள்ள ஒரு கதையைக் கூறினேன்.

### அப்புவும் அவன் நண்பனும்

அப்பு என்ற யானை அவன் தையல்கார நண்பன் குறும்புச் செய்யும் போது, அதற்கு யானை தனது புத்திக் கூர்மை மற்றும் நினைவாற்றல் மூலம் பதிலடி தந்தது.

மாணவர்கள் நான் கூறிய கதையைக் கேட்டு, அதற்குப் படத்தை வரைந்து பின்னர் அவர்களின் மழலை மொழியினில் கதையைக் கூறினர்.

### கதை அனுபவம்

மொழிப் பாடத்திற்குக் கதை கூறுதல் என்பது இன்றியமையாத ஒரு கற்பிக்கும் முறை. ஆசிரியர்கள் கதை, உரையாடல், பாடல் மூலமாகக் கற்பிக்கும் போது மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் கற்பித்தல் மகிழ்ச்சியைத் தரும்.

இவ்வாண்டு கதை மற்றும் பாடல்கள் மூலம் சில பாடங்களைக் கற்பித்தேன். அதற்கு மாணவர்களிடம் இருந்து நல்ல வரவேற்பு இருந்தது. வருகிற கல்வியாண்டில் அனைத்துப் பாடங்களுக்கும் இதனை முயற்சிக்க உள்ளேன். நாம் மாணவர்களோடு இணைந்து உருவாக்கும் கதை மற்றும் பாடல்கள், கற்றல் கற்பித்தலுக்கு மிகவும் உதவும்.

### குறிப்பு

- மூன்றாம் பருவத்தில் முயற்சித்தது.
- இதன் இணைப்பாக மூன்று வீடியோக்கள் புகைப்படங்கள் உள்ளன.

### உதவிய நூல்கள்

1) பாடப்புத்தகம்
2) ‘புத்தகப்பூங்கொத்து’ புத்தகங்கள்
3) கதைக்குள் கதை



**சசிகுமார்,** தொ.ப.ஆ, அ.ந.ப., மணப்பட்டு புதுச்சேரி.

# கற்றல் திருவிழாவில் என் மாணவர்கள்

**மாணவர்கள் கற்றல் செயல்பாட்டில் விருப்பமுடன் செயல்படுவதற்கான பல்வேறு வாய்ப்புகளை வழங்குகின்ற மொழி வகுப்பில், உற்று நோக்கல் என்கிற செயல்பாடு எவ்வாறு மாணவர்களின் கற்றல் - கற்பித்தல் செயல்பாட்டில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது என்பதின் அனுபவப்பகிர்வு.**



## உற்று நோக்கல்:

குழந்தைகள் இயல்பிலேயே எல்லாவற்றையும் உற்று நோக்கி, மொழியின் மூலமாக வெளிப்படுத்தும் திறன் பெற்றவர்கள். குழந்தைகளுக்கு இருக்கிற இந்தத் திறனின் மூலம் குழந்தைகளை ஆர்வமுடன் மொழி வகுப்பில் பங்கேற்க செய்ய முடியும் என உறுதியாக நம்பினேன். பாடத்தில் இருக்கிற படங்களை மாணவர்களிடம் காண்பிக்கும் போது மாணவர்கள் படங்களை உற்றுநோக்கி படத்தைப் பற்றிய விளக்கங்களைத் தகவல்களாகக் கூறினர். படத்தைப் பற்றிய மாணவர்களின் விளக்கங்கள் அவர்களின் கற்பனைத் திறனை வெளிப்படுத்துகிற வகையிலும் அமைந்தது. மாணவர்களின் கருத்துக்களைப் பாடத்தோடு இணைக்கிற வகையில் வினா எழுப்பிய பொழுது மாணவர்களின் பேச்சுத்திறனும், எடுத்துரைக்கும் திறனும் சிறப்பாக இருப்பதை எண்ணி மகிழ்ச்சியாக இருந்தது.

## கற்றல் திருவிழாவும் உற்று நோக்கலும்

புதுவையில் அரசுப்பள்ளி மாணவர்களுக்காக நடந்த 'கற்றல் திருவிழா', மாணவர்களின் கற்றல் - கற்பித்தல் செயல்பாட்டில் பல நிலைகளில் உதவி புரிவதற்காக மேற்கொண்ட ஒரு முயற்சியாகும். இந்த நிகழ்வில் எம் பள்ளி மாணவர்களும் கலந்து கொண்டனர். அவர்களின் உற்றுநோக்கல் திறனைக் கண்டறியும் வகையில் மாணவர்களிடம் அவர்கள் பார்த்த நிகழ்வுகள் குறித்து விளக்கிச் சொல்லச் சொன்னேன். தாங்கள் உற்றுநோக்கிய நிகழ்வுகளை, தகவல்களாக மாணவர்கள் அழகாக எடுத்துரைத்தார்கள். சில இடங்களில் நான் புதிய சொற்களை அறிமுகப்படுத்தியும் அவர்களின் பேசும் திறனை ஊக்குவித்தேன். இதன் மூலமாக மாணவர்களின் உரையாடும் திறன் சிறப்பாக வளர்ச்சி அடைந்துள்ளதை அறிந்து கொள்ள முடிந்தது.

## முடிவுரை:

மாணவர்களுக்கு இயல்பாகவே இருக்கிற உற்றுநோக்கல் திறனை கற்றல் - கற்பித்தல் செயல்பாட்டில் பயன்படுத்தும் போதும் பாடத்தோடு இணைத்துப் பயன்படுத்தும் போதும் மாணவர்களின் பேசும் திறன் வளர்வதோடு கற்றலும் இனிமையாகிறது.... நிறைவடைகிறது.

**ஷாலினி,** தொ.ப.ஆ, அ.தொ.ப, சவரிராயலு நாயக்கர் தொடக்கப்பள்ளி, புதுச்சேரி.

# இரு மொழிகளையும் இணைத்துக் கற்பித்தல்

**மாணவர்கள் தாய்மொழியில் தங்கு தடையின்றி எழுதப் படிக்கவும், ஆங்கிலத்தில் எளிய வாக்கியங்களை எழுதப்படிக்கவும் தெரிந்திருத்தல் நலம் என்பதை அடிப்படையாகக் கொண்டது.**

## திட்டம்

எழுத்துக்கள், சொற்கள், சொற்களை வகைப்படுத்துதல் (kinds of words) ஒருமை பன்மை, காலங்கள், வினா வார்த்தைகள், வாக்கிய வகைகள் மற்றும் நிறுத்தற்குறியீடுகள் போன்றவற்றைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் கற்பித்து, இரு மொழிகளையும் இணைத்துக் கற்பிக்கத் திட்டம் தீட்டினேன்.

## வகுப்பறைச் செயல்பாடுகள்

தமிழ் எழுத்துக்களை அறிமுகப்படுத்தி உயிர், மெய், உயிர்மெய் என்று வகைப்படுத்தி பின்பு ஆங்கில எழுத்துக்களுடன் தொடர்புப்படுத்திக் கற்பித்தேன் எ.கா. உ, வு - U. எளிய ஈரெழுத்து வார்த்தைகளை அறிமுகப்படுத்தினேன் (எ.கா. ஆண், ஊண், காண் & Ban, Pan, Can).

எதிர்ச்சொல் மூலம் வார்த்தைகளை அறிமுகப்படுத்திப் பயிற்சி அளித்தேன் ( எ.கா. Big* Small - பெரிய*சிறிய)

சைகைகளின் மூலம் இரு மொழிகளிலும் Action Words - ஐ பட அட்டைகளின் மூலம் பெயர்ச் சொல்லுக்காகப் பயிற்சியளித்தேன். பின்பு சொற்றொடர் பயிற்சி அளித்தேன் (எ.கா: A Big Cat - ஒரு பெரிய பூனை).

காலங்கள் - தமிழில் வினைச்சொல்லுடன் சேர்த்தும், ஆங்கிலத்தில் is, was, has, had எனப் பயன்படுத்தி அறிமுகப்படுத்தினேன்.

வாக்கிய அட்டைகள் மூலம் சிறிய வாக்கியங்களைப் பயிற்சி அளித்தேன் (எ.கா. I am Eating - நான் சாப்பிடுகிறேன்).

'நான் - எனபதற்குப் பதிலாக மற்றொருவரை அழைக்க நீ, அவன், அவள், பெயர் என்பது போல ஆங்கிலத்தில் மற்றொருவரை அழைக்க he, she, it & name பயன்படுத்தலாம் என்று பயிற்சி அளித்தேன்.

## செயல்பாடுகள்

மாணவர்களுக்கு ஏற்கனவே தெரிந்திருந்தாலும், எழுத்துகளை அடையாளங்காண இரண்டு மொழிகளிலும் எழுத்து அட்டைகளைத் தயார் செய்தேன். அவற்றைக் கொண்டு பலமுறை பல பயிற்சிகள் செய்தோம்.

ன, ண, ந, ர, ற, ல, ள பயன்படும் இடங்கள் பற்றிப் பயிற்சி அளித்தேன்.

வு, உ, யி, இ, ஊ, யெ, எ, யே, ஏ, வொ, ஒ, வொ, ஓ பற்றியும் பயிற்சி அளித்தேன்.

தமிழில் உயிர் எழுத்தெல்லாம் விளையாடிக் கொண்டிருந்தன. மெய் எழுத்துகள் எல்லாம் அமைதியாய் இருந்தன. 'ஏன் எனக்கு உயிர் இல்லை?' என்று மெய் எழுத்துகள் கேட்டன. 'நீ கவலைப்படாதே, நாங்கள் உங்களுக்கு உயிர் தருகிறோம் என்று கூறின உயிர் எழுத்துக்கள்' - என்று உயிர்மெய் எழுத்துக்கள் உருவாகும் விதத்திற்கு ஒரு கதையை உருவாக்கினேன்.

216 எழுத்துகள் உருவாகும் விதம் பற்றிக் கூறினேன். எழுத்துகளுக்குப்பின் இரண்டெழுத்து வார்த்தைகள் நிறைய படித்தல், எழுதுதல் பயிற்சி அளித்தேன்.

## உதாரணம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆண் | கண் | அரி | பரி | சிரி | பொரி |
| ஊண் | நாண் | உரி | மரி | திரி | கோரி |

| | | | | |
|---|---|---|---|---|
| உண் | நுண் | எரி | வரி | பிரி |
| எண் | புண் | ஏரி | காரி | விரி |
| கண் | தூண் | ஓரி | பாரி | கீரி |
| தண் | பெண் | சரி | மாரி | சூரி |
| பண் | மண் | நரி | கிரி | பூரி |

வார்த்தைகள் நிறைய தெரிந்தன. எழுதப் படிக்க எனத் தொடர்புள்ள பயிற்சிகள் கொடுத்தேன்.

க கா
ங ஙா

எனப் படிக்கும் போது மாணவர்களுக்குக் குறில், நெடில் ஓசை வேறுபாடு தெரிந்தது.

ஆங்கிலத்தில் Names of the letters, sounds of the letters, vowels and consonant பற்றி விளக்கினேன். பல வார்த்தைகளுக்குப் பயிற்சி அளித்தேன்.

| | | |
|---|---|---|
| Ban | Man | Tan |
| Can | | Pan |
| Fan | | Ran |

சைகை செய்தலின் மூலம் Action Words இரு மொழிகளில் (தனித்தனியாகப்) பயிற்சி அளித்தேன். பட அட்டைகள் மூலம் பெயர்ச்சொல் பயிற்சி அளித்தேன்.

பின்பு சொற்றொடர் பயிற்சி அளித்தேன்.

| | |
|---|---|
| A Big Cat | ஒரு பெரிய பூனை |
| A Small Cat | ஒரு சிறிய பூனை |
| A Tall Cat | ஒரு உயரமான பூனை |
| A Short Cat | ஒரு குள்ளமான பூனை |
| A Fat Cat | ஒரு குண்டான பூனை |
| A Thin Cat | ஒரு ஒல்லியான பூனை |

Letters, Words and Types of sentences முடிந்தவுடன் தமிழிலும் ஆங்கிலத்திலும் Tenses அறிமுகப்படுத்தினேன்.

| Present Tense | Past Tense |
|---|---|
| Is, am | was |
| are | were |
| has, have | had |
| will | would |
| be, being | been |

தமிழில் வினைச்சொல்லுடன் சேர்ந்தே காலம் தனியே வருவதில்லை என எடுத்துரைத்தேன். Sentence Cards மூலம் வாக்கியங்கள் எழுதப்பயிற்சி அளித்தேன்.

| | |
|---|---|
| நான் சாப்பிடுகிறேன் | I am Eating |
| நான் எழுதுகிறேன் | I am writing |

விருப்பமும், முயற்சியும் இருந்தால் நாம் பல மொழிகளைக் கற்றுக்கொள்ளலாம் என்ற புரிதல் வந்தது.

## இரு மொழிகளை இணைத்ததின் பயன்கள்

மாணவர்கள் இரு மொழிகளையும் எளிதாய் கற்றுக்கொண்டனர். மாணவர்களிடம் மொழி பற்றிய புரிதலை ஏற்படுத்தியது. நாம் அதிகரிக்க வேண்டியது கற்றல் ஆர்வத்தையே தவிர, கற்றல் சுமைகளை அல்ல. விருப்பமும், முயற்சியும் இருந்தால் நாம் பல மொழிகளைக் கற்றுக்கொள்ளலாம் என்ற புரிதல் வந்தது.



**சுகுணா,** தொ.ப.ஆ, அ.தொ.ப, பங்கூர்.

# சிறப்புத் திறன் குழந்தைகளுக்கான சிறப்பானக் கல்வி

- **சிறப்புத்திறன்உடையகுழந்தைகளுக்கு மொழி கற்பித்தலில் எடுக்கவேண்டிய முயற்சிகள்.**
- **செவித்திறன் குறைபாடுடைய குழந்தைகளுக்கு மொழி கற்பிக்கும் முறைகள் மற்றும் நுட்பங்கள்.**
- **செவித்திறன் குறைபாடுடைய குழந்தைகள் மற்றவர்களிடமிருந்து எவ்வாறு வேறுபடுகின்றனர்?.**

செவித்திறன் குறைபாடுடைய குழந்தைகள் மற்றவர்களிடம் இருந்து எவ்வாறு வேறுபடுகின்றனர்?.

என் பெயர் ஸ்ரீ ஷெயஸ்ரீ. நான் தற்போது ஆனந்த ரங்கப்பிள்ளை அரசு சிறப்புப் பள்ளியில் பட்டதாரி ஆசிரியராகப் பணிபுரிகிறேன். நான் முதன் முதலில் சிறப்பாசிரியராக என் பணியைத் தொடங்கும் போது எனக்கு ஏற்பட்ட அனுபவங்களை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். ஏனெனில் சாதாரணப் பள்ளியில் ஆசிரியராகப் பணிபுரியும் ஒவ்வொரு ஆசிரியரும் தன் பணிக்காலத்தில் குறைந்தது இரண்டு, மூன்று செவித்திறன் குறையுடைய மாணவர்களுக்காவது பாடம் கற்பிக்க வேண்டியுள்ளது. அத்தகைய ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் என்னுடைய இந்த அனுபவம் பயன் தரும் என்று நம்புகிறேன்.

நான் 2005ஆம் ஆண்டு முதன் முதலில் ஒரு தனியார் பள்ளியில் சிறப்பாசிரியராகப் பணியில் சேர்ந்தேன். எனக்கு 10 மாணவர் கொண்ட வகுப்பு வழங்கப்பட்டது.

நானும் புதிதாக ஆசிரியர் பயிற்சி முடித்த உற்சாகத்தில் ஆர்வமாகப் பணிபுரியத் தொடங்கினேன். வரைபடங்கள், மின்னட்டைகள் என உணவு இடைவேளை உட்பட கூடுதல் நேரம் உழைத்தேன். ஆனாலும் மாணவரின் மொழி மற்றும் தொடர்பு கொள்ளும் திறனில் பெரிய அளவில் முன்னேற்றம் இல்லை. என்னுடைய உற்சாகமும் நாளடைவில் குறையத் தொடங்கியது. இந்த நிலையை உடனே மாற்றவேண்டும் என்று தோன்றியது. ஆனால் என்ன செய்யவதென்று தெரியாமல் பல நாள் சிந்தித்து என்னுடைய கற்றல் கற்பித்தலைச் சுயப்பரிசோதனை செய்து கொள்ள முடிவு செய்தேன். அதன் விளைவாக செவித்திறன் குறையுடைய குழந்தைகளிடம் முன்னேற்றம் ஏற்பட்டது.

குறையின் அளவு, தன்மை, குறை கண்டறியப்பட்ட வயது, குறையினால் ஏற்படும் பாதிப்பு, தீவிரம், பெற்றோர் ஒத்துழைப்பு செவித்துணைக் கருவி, பள்ளியில் சேர்க்கப்பட்ட வயது, குழந்தைகளுக்கு இடையேயான வேறுபாடு போன்றவற்றினைச் சார்ந்தே கற்பித்தல் அமையும் என்பது எனக்குப் புரிந்தது. பின் மேற்கண்டவற்றின் அடிப்படையில் ஒவ்வொரு மாணவர்களைப்பற்றி அறிந்து கொண்ட பின்னர் மீண்டும் புதிதாக என்னுடைய பணியைத் தொடங்கினேன். மாணவரும் ஆர்வமுடன் கற்கத் தொடங்கினர்.

சாதாரணப் பள்ளியில் செவித்திறன் குறைபாடு உடைய குழந்தைகளுக்குக் கற்பிப்பது பற்றிய சில முக்கியக் கருத்துகளை உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

### செவித்திறன் குறையுடைய குழந்தைகளுக்கு மொழி கற்பிக்கும் நுணுக்கங்கள்:

மனித இனத்திற்கு கிடைத்துள்ள வியக்கத்தக்கப் பரிசுகளில் ஒன்று மொழி.

இது தகவல் பரிமாற்றத்திற்கான கருவி ஆகும், எண்ணங்களை, உணர்ச்சிகளை, யோசனைகளைப் புரிந்துகொள்ளவும், வெளிப்படுத்தவும் உதவுகிறது. பொதுவாக சாதாரண அல்லது செவித்திறன் உடைய குழந்தைகள் ஒரு குறுகிய காலத்திற்குள் தனது தாய் மொழியை எவ்வித முயற்சியுமின்றி நன்றாகக் கற்கின்றனர். இது அவர்களின் கேட்டல் திறன் நன்றாக இருத்தலால் மட்டுமே சாத்தியமாகிறது. ஆனால் செவித்திறன் குறையுடைய குழந்தைகளுக்குச் சுற்றுச்சூழல் ஒலிகளையும், பிறரின் பேச்சு ஒலிகளையும் கேட்க இயலாததால் மொழியைப் புரிந்துகொள்வதிலும் வெளிப்படுத்துவதிலும் இடர்ப்பாடுகள் உருவாகிறது. இத்தகைய குழந்தைகள் இயல்பாக மொழி வளர்ச்சி பெறுவதில் நிறைய சாவல்களை எதிர்கொள்கின்றனர். எனவே பெற்றோர்கள், சிறப்பு ஆசிரியர் மற்றும் சிறப்பு வல்லுநர்கள் செவித்திறன் குறையுடைய குழந்தைகளுக்கு மொழி கற்பிக்கும் பின்வரும் மொழி கற்பித்தல் நுணுக்கங்களைப் பின்பற்றுகின்றனர்.

1. உரையாடல்
2. செய்திகள்
3. பாட்டு
4. திட்டமிட்ட செய்முறை
5. கதை
6. உதட்டு வாசிப்பு
7. நேரில் சென்று கற்றல்
8. படக்கட்டுரை
9. பேச்சுப்பயிற்சி
10. ஒலிக்கேட்டல்

**உரையாடல்**

செவித்திறன் குறையுடைய குழந்தைகள் இயல்பான சூழலில் மொழியைக் கற்றுக்கொள்ள இந்த உரையாடல் முறை பயன்படுகிறது. இங்கு ஆசிரியர் தாய் தன் குழந்தைகளுடன் உரையாடுவது போல இயல்பாக இயற்கையான சூழலில் உரையாடி, குழந்தைகள் சைகை, அல்லது ஓரிரு வார்த்தைகளில் வெளிப்படுத்தும் செய்திகளுக்கு முறையான மொழிவடிவம் கொடுத்து அதை கரும்பலகையில் எழுத வேண்டும். பின்னர் அதிலிருந்து பயிற்சிகள் அளிக்கப்படும். மொழி வளர்ச்சியில் சற்று உயர்நிலையில் உள்ள மாணவர்களுக்கு உரையாடலைத் தொடர்ந்து, உரையாடல் தொகுப்பு எழுதப்பட்டு அதில் இருந்தும் பயிற்சிகள் அளிக்கப்படும்.

**உதாரணம்:**

ஒரு குழந்தை வானத்தில் ஓர் வானூர்தியினைப் பார்க்கின்றது. ஆசிரியர் அதைப்பற்றி மாணவரை உரையாட ஊக்குவிக்கின்றார்.

ரோஹித் - ஆஹா! விமானம்

மீனா - இதற்கு சிறகுகள் உள்ளது

ரூபா - இது மேலே வானத்தில் உள்ளது

நேஹா- நான் அதில் உட்கார்ந்து இருக்கிறேன்

ஆசிரியர் - இது ஒரு அதிவிரைவு வாகனம்

**உரையாடல் தொகுப்பு:**

**விமானம்**

வானத்தில் விமானம் செல்வதைப் பார்த்த ரோஹித் “ஆஹா! விமானம்”, என்று கூறினாள். உடனே ரூபா இது மேலே வானத்தில் உள்ளது என்றாள். இதைப்பார்த்த நேஹா நான் அதில் உட்கார்ந்து இருக்கிறேன் என்று மகிழ்ச்சியாகக் கூறினாள். “நாம் தினமும் பயன்படுத்தும் வாகனங்களுள் விமானம் மிகவும் விரைவாக செல்லும் வாகனம் ஆகும்”, என்று ஆசிரியர் கூறினார்.

**பயிற்சிகள்**

1. புதிய வார்த்தைகள்

2. பொருள் கூறுக

3. பிரித்து எழுதுக

4. சேர்த்து எழுதுக

5. வார்த்தைகளைக் கட்டத்தில் எழுதுக

6. எழுத்துக்களை எண்ணி எழுதுக

7. யார் கூறியது?

8. கோடிட்ட இடங்களை நிரப்புக

9. வாக்கியத்தை வினாத்தலைப்புகளுக்குக் கீழ் எழுதுக

**எ.கா:**

1. யார்? எப்பொழுது? எங்கு? வினைச்சொல்

மீனா நேற்று கோவிலுக்குச் சென்றாள்.

2. யார்? யாருடைய? எங்கு? எதற்கு? வினைச்சொல்

இராமன் குமரன் வீட்டிற்கு விளையாடச் சென்றான்

10. பொருத்துக. (வார்த்தைகள். படங்கள்)

11. பேச்சுப்பயிற்சி

12. ஒலிக்கேட்டல்

## செய்திகள்

நாள்தோறும் முதல் பாடவேளையில் ஆசிரியர் மாணவர்களுடன் உரையாடி மாணவர் கூறும் தகவல்களைச் செய்திகளாகக் கரும்பலகையில் எழுதுவார். பின்னர் அதிலிருந்து பயிற்சிகள் அளிக்கப்படும்.

**எ.கா:**

1. நேற்று - ஆம்தேதி - கிழமை

2. இன்று - ஆம் தேதி - கிழமை

3. நாளை - ஆம் தேதி - கிழமை

4. சென்ற மாதம்.......................

5. இந்த மாதம்.......................

6. அடுத்த மாதம் .......................

7. இன்று வானம் .......................

8. இன்று மூன்றாம் வகுப்பு மாணவி சத்யாவிற்குப் பிறந்தநாள்.

9. நேற்று இரவு இடி மின்னலுடன் மழைபெய்தது.

10. சிந்துவிற்கு உடல்நிலை சரியில்லததால் நேற்று பள்ளிக்கு வரவில்லை.

உரையாடல் மற்றும் செய்திகள் எழுதுவதற்குத் தேவையானக் கருத்துகள் பின்வரும் முறைகளிலும் பெறப்படுகிறது.

1. தினமும் வீட்டிலிருந்து ஏதேனும் ஒரு பொருள் கொண்டுவந்து அதைப்பற்றி உரையாடுதல்.

2. நாட்குறிப்பு மூலம் செய்திகளைப் பெறுதல்.

3. செய்தித்தாள், நாளேடுகளில் உள்ள செய்திகளைப் பற்றி உரையாடுதல்.

**பாடல்**

குழந்தைகள் விரும்பும் கற்றல் கருவிகளில் மழலைப்பாடல்களும், சிறுவர் இலக்கியப் பாடல்களும் முதன்மையானவை. செவித்திறன் குறையுடைய குழந்தைகளின் வளர்ச்சிக்கும் இத்தகையப் பாடல் சிறந்த கருவியாகப் பயன்படுத்தப் படுகிறது. இவர்களுக்குப் பாடல்களைக் கற்பிக்கும் போது தாளம், ஓசை, அபிநயம், உச்சரிப்பு, குரல் ஏற்றத் தாழ்வு, புதிய வார்த்தைகள், ஒரே ஓசையுடைய சொற்கள் போன்றவற்றிற்கு அதிக முக்கியத்துவம் தரப்படுகிறது.

**எ.கா:**

பட்டம் பாட்டு

பார் பார் பட்டம் பார்

பச்சை நிற பட்டம் பார்

பாபு விட்ட பட்டம் பார்

பறந்து போகும் பட்டம் பார்

காய் பாட்டு

குட்டைக் குட்டைக் கத்தரிக்காய்

குண்டு குண்டு பூசணிக்காய்

நெட்டை நெட்டை முருங்கைக்காய்

நீண்டு தொங்கும் புடலங்காய்

திட்டமிட்ட செய்முறை

இம்முறையில் மாணவர்கள் செயல்கள் மூலம் மொழியைக் கற்று கொள்வதற்கான சூழல்கள் ஆசிரியரால் திட்டமிட்டு அமைத்துத் தரப்படுகிறது. மேலும் மாணவர்கள் செயல்பாடுகள் மூலம் மொழியைக் கற்று கொள்ளும் வகையில் ஆசிரியர் மாணவர்களை வழிநடத்துவார். பின்வரும் நோக்கங்களுக்காகச் செவித்திறன் குறையுடைய குழந்தைகளுக்கு இம்முறைப் பயன்படுத்தப்படுகிறது.

1. சொற்களஞ்சியம் வளர்த்தல்

2. மாணவர் சிறு சிறு வாக்கியங்களைக் கற்றுக் கொள்ள வாய்ப்பளித்தல்

3. வினைச்சொற்களையும், காலத்தையும் பொருள் பொதிந்த சூழலில் கற்பித்தல்

4. படைப்பாற்றல் திறன் வளர்த்தல்

5. ஐம்புலன்களையும் கற்றல் கற்பித்தலுக்குப் பயன்படுத்துதல்

6. மாணவர்கள் சிறுசிறு திறன்களைக் கற்றுக் கொள்ள வாய்ப்பளித்தல்

7. செயல்களின் படிநிலைகளையும், தனக்கான வாய்ப்பு வரும் வரை காத்திருக்கவும் கற்பித்தல்.

எ.கா:

எலுமிச்சைப் பழச்சாறு தயாரித்தல்

தேவையான பொருட்கள், செய்முறை போன்றவை, உண்மைப் பொருள்கள் மற்றும் வரைபடத்தாளின் உதவியோடு கற்பிக்கப்பட்ட பின்னர், செயல்கள் மாணவரால் செய்யப்படுகிறது. இவை பின்வருமாறு கரும்பலகையில் எழுதப்படும். பின்னர் அதிலிருந்து பயிற்சிகள் அளிக்கப்படும். இதில் வினைச்சொற்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

எதிர்காலம் - நிகழ்காலம் - இறந்த காலம்

“சிந்து எலுமிச்சைப் பழத்தை வெட்டுவாள்.”

“சிந்து எலுமிச்சைப் பழத்தை வெட்டுகிறாள்”

“சிந்து எலுமிச்சைப் பழத்தை வெட்டினாள்”.

“ராகுல் எலுமிச்சைப் பழத்தைப் பிழிவான்; ராகுல் எலுமிச்சைப் பழத்தைப் பிழிகிறான்; ராகுல் எலுமிச்சைப் பழத்தைப் பிழிந்தான்”.

“சந்தோஷ் தண்ணீர் ஊற்றுவான்; சந்தோஷ் தண்ணீர் ஊற்றுகிறான்; சந்தோஷ் தண்ணீர் ஊற்றினான்”.

“நிஜா சர்க்கரைப் போடுவாள்; நிஜா சர்க்கரைப் போடுகிறாள்; நிஜா சர்க்கரைப் போட்டாள்”.

“சத்யா உப்பு போடுவாள்; சத்யா உப்பு போடுகிறாள்; சத்யா உப்பு போட்டாள்”.

“டீச்சர் ஜூஸை கலக்குவார்; டீச்சர் ஜூஸை கலக்குகிறார்; டீச்சர் ஜூஸை கலக்கினார்”.

**முடிவுரை:**

மேற்கூறியது போல பல செயல்பாடுகள் மூலம் ஒரு ஆசிரியராக செவித்திறன் குறையுடைய குழந்தைகளுக்கு ஒரு நல்ல கல்வியை அளிக்க முடியும் என்பதை இந்தக் கட்டுரையில் கூற முயற்சித்துள்ளேன்.



**ஸ்ரீ.ஜெயஸ்ரீ**, ஆனந்தரங்கப்பிள்ளை அரசு சிறப்புப் பள்ளி

# கதை கூறல்

## கதை கேட்போமா.

9 ஆண்டுகால ஆசிரியர் பணியில் கடந்த ஓராண்டு காலமாக முதல் வகுப்பு மாணவர்களைக் கையாளுவதற்கான வாய்ப்பைப் பெற்றேன், அது ஒரு நல்ல அனுபவத்தைத் தந்தது. 8 ஆண்டுகால ஆசிரியர் பணியை முற்றும் துடைத்து எறிந்து மீண்டும் முதல்முதலில் பணியேற்று வகுப்பறைக்குள் நுழைந்த முதல் அனுபவத்தைக் காலம் மீண்டும் பரிசளித்திருந்தது. அத்தகைய சூழலில், மாணவர்களை எப்படி ஒரு கதை கூறல் வழியாகக் கையகப்படுத்திக் கொண்டேன். அதன்மூலம் மொழியறிவு வளர்ச்சிக்கு, சொற்களஞ்சியப் பெருக்கத்திற்கு எப்படி பயன்படுத்திக் கொண்டேன் என்பதை ஒரு கதையின் வாயிலாகவே உங்களிடம் கூறுகின்றேன்.

## பெயர் சொல்லும் கதை

பணிமாறுதல் பெற்று பள்ளிக்குள் நுழைந்தவுடன் பள்ளியில் இளையவர் என்பதால் முதல் வகுப்பு தந்தார்கள். அதுவரை பணியாற்றிய பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர்களின் பற்றாக்குறையால் 6,7,8 வகுப்புகளையே கையாண்டதால், முதன்முதலில் புதியதோர் அனுபவத்தை எதிர்கொள்ளும் ஆர்வத்துடன் வகுப்பறைக்குள் நுழைந்தேன். முதல் வகுப்பு மாணவர்கள் என்பதால் வகுப்பறை மட்டுமல்ல பள்ளிச் சூழலே அவர்களுக்குப் புதிதானது. அதனால் வகுப்பில் ஒரு சிலரைத் தவிர எல்லோரும் குழப்பத்துடனும் மிரட்சியுடனும் என்னை பார்த்தார்கள், இன்னும் சிலர் என்னை பார்த்தவுடன் தங்கள் அழுகை சத்தத்தின் ஒலி அளவை கூட்டி வைத்தார்கள். சிலர் வகுப்பறையை விட்டு வெளியேறி ஓடுவதற்கான முன் தயாரிப்புடன் இருந்தார்கள். இவர்களை எப்படி வசப்படுத்துவது என்று யோசித்துக் கொண்டிருக்கும் வேளையில் ஒரு மாணவன் தானாகவே முன்வந்து “உங்க பெயரென்ன?” என்றான். ஆகா, அவனை வைத்துத்தான் வகுப்பறையை வசப்படுத்த வேண்டுமென்றெண்ணி என் பெயர் சிங்கம் என்றேன். ‘சிங்கமா?’ என்று அவன் சிரித்துக்கொண்டு ஓடியமர்ந்தான்.

## கைக்குலுக்க வைத்த கதை

அவன் பக்கத்தில் இருந்த மாணவர்களிட மெல்லாம் என்னைக் கைக்காட்டி பேசிக் கொண்டான். பிறகு இன்னொருவன் மெதுவாக என்னிடம் வந்து உங்கள் பெயர் சிங்கமா? என்றான். ஆமாம் உன் பெயரென்ன? என்றவுடன், சற்றும் தயங்காமல் “புலி” என்றான். “புலி எங்க இருந்து வருது?” என்றேன். ‘ரோட்டுபக்கமிருந்து’ என்றான். நாங்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே இன்னும் சில மாணவர்கள் பயத்தைப் பின்பக்கமாக வைத்துக்கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக எங்களை நோக்கி முன் நகர்கிறார்கள் என்பதை அறிந்து கொண்டு, புலிக்குக் கதை தெரியுமா? என்றேன். மீண்டும் நான் கேட்பதற்கு முன்பே ஒரு கதையைச் சொல்லத் துவங்கிவிட்டான். துவக்கமுமில்லாமல் முடிவுமில்லாமல் ஒரு கதையைக் கூற ஆரம்பித்தான். ஆம் அந்த கதைதான் அழுகையைக் குறைத்தது. வெளியேறுவதற்காக வாசல்வரை சென்றவர்களைத் திரும்பிப் பார்க்க வைத்தது. சொல்லப்போனால் எனக்கும் அவர்களுக்கும் இடையே இருந்த தூரத்தைக் குறைத்து ஒரு கைக்குலுக்கலை நிகழ்த்தியது அந்தக் கதை.

## சினேகிதம் வளர்ந்த கதை

அடுத்தநாள் பள்ளிக்கு நுழையும் வரை அந்தச் சிங்கமும், புலியும் வகுப்பறைக்குள் உலாவிக்கொண்டே இருந்தன. என்னை பார்த்தவுடன் கத்தி கூப்பாடு போடும் மாணவர்களில் சிலர் புன்னகையோடு வரவேற்றனர். அதிலொருவன் வீட்டிலிருந்து வரும்போது புத்தகப்பைக்குள் சில கதைகளையும் எடுத்துப் போட்டு வந்திருந்தான். கதை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமானத் தூரங்களைக் குறைத்து சினேகிதத்தை வளர்க்கப் பெரும்பங்காற்றுகிறது.

## கதையற்ற கதை :-

மாணவர்கள் கதை சொல்லத் தயாரானால்

எந்த எதிர்பார்ப்புமில்லாமல் கேட்கத் தயாராக வேண்டும். ஏனெனில் அவர்களின் கதையில் நீதி, கருத்து, உவமை, புதிர், புத்திசாலித்தனம் என்று நீங்கள் எதிர்பார்க்கின்ற எந்த ஒன்றும் இருக்காது. ஆனால் அது குழந்தைகளுக்கானக் கதையாக இருக்கும் என்ற உத்தரவாதத்தை மட்டும் தர இயலும், குழந்தைகளுக்கானக் கதையைக் குழந்தைகளைத் தவிர யாராலும் எழுதிவிட முடியாது என்று நம்புபவன் நான்.

இன்று குழந்தைகளுக்கானக் கதை புத்தகங்கள் ஏராளமாக வருகின்றன. ஆனால் அவையெல்லாம் குழந்தைகளுக்கானக் கதைகள் என்று நம்புகின்ற பெரியவர்கள் எழுதுகின்ற கதைகள். அதில் அறிவுரை, நல்லொழுக்கம் போன்ற கருத்துகள் இருக்குமே அன்றி குழந்தைகளைக் குதூகலப்படுத்தும் கதைகள் இருப்பதில்லை. குழந்தைகளின் கதைகள் ஒருபோதும் ஒரு ஊரில் ஒருத்தர் என்று துவங்காது. நன்றாகக் கவனித்தால் அவர்களின் கதைகளில் துவக்கமே இருக்காது. துவக்கமில்லாத கதையில் எப்படி முடிவு இருக்கும். ஆதலால் அந்தக் கதையில் முடிவும் இருக்காது. அது இடையில் தோன்றி நீங்கள் விழிப்பதற்கு முன் இடையிலேயே மறைந்துவிடும். ஒரு அழகானக் கனவைப் போன்றது. அதில் குரங்கு செல்போன் பேசும். கரடி கடலைமிட்டாய் வாங்கி சாப்பிடும். சிங்கத்திற்கும் புலிக்கும் பொம்மை டிவி பார்ப்பதில் சண்டை வரும். இப்படி காலத்திற்கேற்ப கதாப்பாத்திரங்களால் ஆன கதையில் கதையே இல்லையென குழந்தைகளிடம் விசாரணை வைக்கும் ஆசிரியர்களைக் குழந்தைகள் விரும்புவதில்லை. ஏனெனில் அவர்களிடம் இருப்பதெல்லாம் கதையற்ற கதைகள்.

## கதைகள் வகுப்பறை

கதைகள் இருந்து கற்றல் நடைபெறுவது என்பது மிக எளிதானது என்பதுடன் மாணவர்களுக்கு மிக நெருக்கமான கற்றல் சூழலை உருவாக்கும் என்பதை அறிந்தேன். கதைகளின் வாயிலாகக் காகம், குருவி, மயில் என்பவை பறவைகள். சிங்கம், புலி, கரடி, யானை போன்றவை விலங்குகள் என வேறுபாடுகளைக் கற்பித்தேன். இரவு, பகல் என்ற பொழுதுகளையும் அந்தப் பொழுதுகளில் காணும் காட்சிகளையும் எளிமையாகக் கதையின் வாயிலாக விவரித்தேன்.

**உதாரணமாக:**

மாலை நேரம் வந்தவுடன் பறவைகள் எல்லாம் தன் கூடுகளுக்குத் திரும்புகின்றன. சிறது நேரத்தில் இருட்டிவிட்டது. நிலா நடு வானில் வந்து காட்டை எட்டிப்பார்த்தது. நட்சத்திரங்களெல்லாம் நிலவொடு துணைக்கு வந்து மின்னிக் கொண்டிருந்தன, என்பதன் மூலம் இருட்டு, நிலா, நட்சத்திரம் போன்றவை இரவோடு தொடர்புடையன என்பதை எளிதாகப் புரிந்து கொள்ள துணைபுரியும்.

## சொற்களஞ்சியம் கதைகள்

கதைகளில் வரும் பூ, வா, தா, போ, போன்ற ஓர் எழுத்துச் சொற்களில் ஆரம்பித்து மலை, காடு, இலை, கிளை போன்ற ஈரெழுத்துச் சொற்கள், சிறகு மயில், இரவு போன்ற மூவெழுத்துச் சொற்கள் என கொஞ்சம் கொஞ்சமாக முதல் வகுப்பு மாணவர்களுக்கு அவர்கள் சொல்லும் கதைகளில் இருந்தே அவர்களுக்கானக் கற்றலை நிகழ்த்தலாம். பல்வேறு சொற்களை அவர்கள் எளிய முறையில் அறிந்து கொள்ள கதைகள் உதவுகின்றன.

## கதையின் முடிவு

இப்படி எளிய முறையில் கதையிலிருந்து அவர்களுக்கு அறிமுகமாகி கதையின் வாயிலாகவே ஒரு கற்றலை நிகழ்த்தலாம், மேலும் மொழிப்பாடங்களில் சொற்களைக் கற்பிக்க, சொற்களைக் கொண்டு எளிய வாக்கியங்களை அமைக்க கதைகள் துணைபுரிகின்றன.



**சீ. வினோத்குமார்**. ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, திருப்பரங்குன்றம். மதுரை.



# பிள்ளைத்தமிழ் புத்தகமும் தமிழ் வகுப்பறையும்

- பாடப்புத்தக மொழிக்கும் வட்டார பேச்சுவழக்கிற்கும் இடையேயுள்ள வேறுபாடுகளினால் கற்றலில் உண்டாகும் தொய்வுகளைப் 'பிள்ளைத்தமிழ்' புத்தகம் நீக்குகிறது.
- படைப்பாற்றல் திறன் மற்றும் வருணித்து எழுதுதல்.
- கவனஈர்ப்பு என்பது மிகவும் எளிமையாகிறது.

## எங்கள் வகுப்பறை பற்றி

எங்கள் பள்ளி அபிசேகப்பாக்கத்தில் உள்ளது. பெரும்பாலான குழந்தைகள் ஒடுக்கப்பட்ட சமூகத்திலிருந்து வருகின்றனர். கல்வி கற்கும் மாணவர்களில் தொண்ணூறு சதவீத மாணவர்கள் முதல் தலைமுறையினர். எங்கள் பள்ளியில் பெண்குழந்தைகள் அதிகமான கற்கின்றனர். ஆண் குழந்தைகள் குறைவான எண்ணிக்கையில் இருந்தாலும் சில பிரச்சனைகளோடு இருப்பதாக இருக்கும். அதாவது, கற்றல் குறைபாடு, அதிவேகமாக செயல்படும் குழந்தைகளாய் இருப்பர். பெற்றோர்களைப் பொறுத்தவரை கல்வியினால் அவர்களது வாழ்வு மாறும் என முழுநம்பிக்கையை கல்வியின் மீது வைத்துள்ள பெற்றோர்கள் அவர்கள். தாங்கள் குழந்தைகள் மீது அக்கறை காட்ட வேண்டும் என்று எண்ணினாலும் வேலைப்பளு உடைய பெற்றோர்கள், அரசுப்பணியில் இருக்கும் பெற்றோர்கள், கல்வி கற்றோர், கல்லாதவர் மற்றும் குடிப்பழக்கத்திற்கு ஆளான அப்பாக்கள் என பலதரப்பட்ட பெற்றோர்கள் இருக்கின்றனர்.

## தமிழ் வகுப்பறைப் பற்றி

கடந்த காலங்களைப்போல் இல்லாமல் தமிழ் வகுப்பில் நடந்துள்ள மாற்றம் என்னவென்றால் தமிழ் முக்கியமான மொழியல்ல என்ற கருத்து நிலவுகிறது. சி.பி.எஸ்.இ கல்விமுறை மற்றும் ஆங்கில வழி கல்வி முறையினை பின்பற்றுவதால் மாணவர்கள் தமிழைவிட ஆங்கிலத்தை எளிமையாகக் கருதுகின்றனர். ஆங்கிலத்தில் எழுத்துக்கள் குறைவு, தமிழில்




எழுத்துக்கள் அதிகம் என்பதால் தமிழ் கடினம் என்று தாங்களாகவே முன் முடிவெடுக்கின்றர். எப்பொழுதும் நாம் கற்பிக்கும் முறையில் வாய்மொழி செயல்பாடுகளைவிட எழுத்துக்களை கற்றல், சொற்கள் மற்றும் சொற்றொடர்களை கற்றல் போன்ற செயல்பாடுகள் அவர்களை தமிழ் கற்றலில் தொய்வடைய செய்கின்றன. மேலும் ஆங்கிலத்தில் எழுதுவது எளிமையாக இருந்தாலும் ஆங்கிலத்தில் பேசுவதும் படிப்பதும் குதிரை கொம்பாகவே உள்ளது. தமிழைப் பயன்படுத்தாமல் இருக்கவும் முடிவதில்லை. ஏனெனில் அதுதான் பேசும் மொழி. ஆனால் கல்வியில் அந்நியமாக்கப்பட்ட மொழி. மற்ற எந்தபாடமும் தமிழில் இல்லாததாலும் அது தேவையா என்ற கேள்வி இருப்பதாலும், கவனமாக இருக்கும் என்னைப்போன்ற ஆசிரியர்களுமே கூட 'அதுதானே' என்ற உணர்தலுக்கு வந்துவிட வேண்டியுள்ளது. இந்த என் இரண்டாம் தர மனப்பான்மையைப் போக்க உதவும் நூலாக 'பிள்ளைத்தமிழ்' புத்தகம் இருந்தவற்றிற்குக் காரணமாக இரண்டு விசயங்களைக் குறிப்பிடலாம். மொழி பற்றி எங்கள் பயிற்சி மற்றும் உரையாடல்.

## பிள்ளைத்தமிழ் புத்தகம்

இப்புத்தகம் ஆசிரியர் வட்டத்தில் புத்தகத் திறனாய்வில் அறிமுகமானது. ஆனால் தனமேரி ஆசிரியர் அவர்கள் பைபிள் போல் என்று குறிப்பிட்டதும், சுபாஷினி ஆசிரியர் அவர்கள் "இப்புத்தகத்தோடு வகுப்பறைக்குள் சென்றால் மாணவர்கள் குதூகலமடைவர்" என்று குறிப்பிட்டதும் தான் என் கவனத்தை ஈர்த்தது. திரும்பத்திரும்ப படிக்கும் புத்தகமாகவும் பாடங்களுக்குத் துணைபுரியும் புத்தகமாகவும் மாறியது.

வ. கீதா மற்றும் கோ. பழனி எழுதிய இப்புத்தகம், தாரா பதிப்பகத்தால் வெளியிடப்பட்டது. இது ஆசிரியர்களுக்கான மொழிக்கல்வி பற்றிய கையேடு. இப்புத்தகத்தின் முதல் பகுதி தமிழ் அறிஞர்களும் ஆசிரியர்களும் கூறியுள்ள கருத்துக்களை முன் வைக்கிறது. இக்கருத்துக்கள் மொழிக்கல்விக்கும் குழந்தைகளின் வளர்ச்சிக்குமிடையேயான நுட்பமான உறவைப் பற்றியது. குழந்தைகள் பேசும் மொழியில் நம்மை அக்கறைப்படவைக்கிறது. குறிப்பாக ஆரம்பக்கல்வியில் குழந்தைகளிடம் நாம் எதிர்பார்க்கும் கவனித்தல், பேசுதல் திறன்

முழுமையாக நடைபெற சுலபமாகவும் ஆழமாகவும் செயல்பட குழந்தைகளின் தினவாழ்க்கையில் பேசப்படும் விசயங்களை வகுப்பறைக்குள் பயன்படுத்துவது பற்றி உணர்த்துகிறது. நமது தமிழ்பாடபுத்தகத்தில் உள்ள தூயதமிழ் சொற்களுக்கும் வட்டார மற்றும் பேச்சுவழக்கிற்கும் வேறுபாடு இருப்பதால் மாணவர்கள் தமிழைப் படிக்கும் போதும் எழுதும்போதும் கடினமாகக் கருதுகின்றர். பிள்ளைத்தமிழ் புத்தகத்தை கற்றல் பொருளாக பயன்படுத்தும்போது இந்த கடினத்தன்மையை வெகுவாகக் குறைக்கிறது. நான் மூன்றாம் வகுப்பிற்கும் தமிழ் கற்பிக்கிறேன். இந்த குழந்தைகளின் படைப்பாற்றல் திறன் மற்றும் வருணித்து எழுதுதல் போன்றவற்றிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளன. பிள்ளைத்தமிழ் புத்தகத்தில் உள்ள கதைகளையும் பாடல்களையும் அச்செயல்பாடுகளுக்கு பயன்படுத்தும்பொழுது மிகப்பெரிய மாற்றத்தைக் காண முடிந்தது.

இப்புத்தகத்தின் இரண்டாம் பகுதி பாடப்பொருளுக்கு இணையான வழக்கு/ நாட்டுப்புற பாடல்களைக் குறிப்பிட்ட தலைப்பின்கீழ் தொகுத்தளித்துள்ளது. உதாரணத்திற்கு நான் முதல் வகுப்பு தமிழ்ப் பாடத்தில் பந்து பாடல் நடத்தினால் அதில் பலூன் பாடல் இருக்கும். பந்து பாடல் நமக்கு “ப” வரிசைக்கு இருப்பது போல அது இருந்தாலும் குழந்தைகள் மறக்க முடியாதது போலவும் அந்நியோன்ய உணர்தலோடும் இருக்கும்.

**பாடல் வரிகள்**

“பத்து பைசா விலையிலே பலூன் ஒன்று வாங்கினேன்;

பலூன் ஒன்று வாங்கினேன் பைய பைய ஊதினேன்;

பைய பைய ஊதவே பந்து போல ஆனது;”

இப்பாடலைப் பந்து, பலூன் போன்ற பொருட்கள் கொடுத்து வாய்மொழியாக பாட வைத்துவிட்டு பின்னர் எழுத்துக்களையும், சொற்களையும் கற்பிக்கும்போது மிக எளிமையாகக் கற்கின்றனர். தமிழ்ப் பாடத்தை இனிமையாகவும் எளிமையாகவும் உணர்கின்றனர். மேலும் இப்புத்தகத்தில் மழைப்பாடல்கள், பொம்மைப்பாடல்கள், விலங்குப்பாடல்கள், காய்கறிப்பாடல்கள், கேள்வி பதில் பாடல்கள், நகைச்சுவைப் பாடல்கள், ஆடலுடன் கூடிய பாடல்கள் என்ற தலைப்புகளின் கீழ் தொகுக்கப்பட்ட இப்பாடல்கள், நம் ஒவ்வொரு பாடத்திற்கும் பயன்படுத்தக்கூடியதாக இருக்கும். இப்பாடல்கள் அனைத்தும் நாட்டுப்புறப்பாடல்களே! எனவே பாடல்களை கற்க மிக எளிமையாக உள்ளன.

எடுத்துக்காட்டாக, ‘என் ஆசை’ என்ற பாடலை வாய்மொழியாக கற்பித்துவிட்டு, தங்களது ஆசைகளை இப்பாடல் வரிகளோடு இணைத்து எழுதி வருமாறு கூறினேன். என்ன ஆச்சரியம்! எப்பொழுதும் எனக்கும் இவ்வகுப்பிற்கும் சம்மந்தமே இல்லை என்பதுபோல இருக்கும் மாணவன்கூட மிக ஆர்வமாக பாடல் எழுதி வந்தான். இத்தகைய செயல்பாடுகள் மாணவர்களின் மனநிலையையும் அவர்களின் விருப்பு வெறுப்புகளையும் அறிந்துக்கொள்ள முடிந்தது.

மூன்றாம் பகுதி கதைகளால் ஆனது. நீதிக்கதைகள், தந்திரக்கதைகள், வேடிக்கைக் கதைகள், காரணக் கதைகள், சாகசக் கதைகள் என்ற தலைப்புகளில் உள்ள இக்கதைகளை நாம் கூறும்பொழுது (பாடத்துடன் இணைத்தும் இணைக்காமலும்) குழந்தைகளிடமிருந்து கவனஈர்ப்பைப் பெற முடிகிறது. கவனஈர்ப்பு என்பது இன்றைய வகுப்புகளின் பெரிய பிரச்சனைகளாக உள்ளது. அதைத்தவிர்க்க நான் இப்பகுதியை பெரும்பாலும் பயன்படுத்தினேன். சில கதைகளை சொல்வது, சில கதைகளை வாசிப்பது என்ற வகையில் பயன்படுத்தினேன். மேலும் இக்கதைகளை மாணவர்களையும் வாசிக்க வைத்தேன். ஆர்வத்துடன் வாசித்தனர்.

நான்காம் பகுதி நாடகம் - முதல் வகுப்பிற்கு நான் அதிகம் பயன்படுத்தவில்லை. நான்

அவ்வப்பொழுது வாசிப்பேன்.

வகுப்பறைக்கு நேரடியாகப் பயன்படாமல் என் மொழிக்கற்பித்தலின் கோட்பாடுகளைப் புரிந்துகொள்ள உதவும் பகுதி அது. குழந்தைகளுக்குக் குறிப்பாக இளம் குழந்தைகளின் வகுப்பறையை அவர்கள் வாழ்வியல் மொழியோடு இணைக்க தொ. பரமசிவம் மற்றும் மற்றவர்களின் உரையாடல் உதவியது.

- ‘சூப்பர்’ பெரும்பாலான தமிழரால் பயன்படுத்தப்பட்டால் அதுவும் தமிழ்தான்.

- பேச்சு மொழிக்கும் பகுதி மொழிக்கும் இலக்கணம் உள்ளது.

- மக்களின் வாழ்வில் பாடல், கதை எல்லாம் இணைந்து இருக்கிறது. அதை எடுக்கும் பொழுதுதான் குழந்தை மொழிக்குள் தங்கு தடையின்றி பயணிக்கும்.

இது போன்ற புரிதலை உருவாக்க இப்புத்தகம் தொடர்ந்து பயன்பட்டுக்கொண்டே இருக்கிறது.

## அனுபவம்

என் பாடத்திட்டமிடலில் மூன்று விசயங்களை நான் முதன்மைப் படுத்துவதுண்டு. ஒன்று குழந்தைகளின் மொழித்திறன், இன்னொன்று அவர்கள் அதன்மூலம் பெரும் ஆளுமைத் திறன், மூன்றாவது மகிழ்ச்சியான கற்றல். நான் தேர்ந்தெடுக்கும் படங்கள், பாடல்கள், கதைகள், பயிற்சிகள் இவற்றை மையமாகக் கொண்டு இருக்கும். அதற்கு எனக்குத் துணையாக இருப்பவைகளுள் பாடப்புத்தகமும் பிள்ளைத்தமிழும் அடங்கும்.



**து. சங்கர தேவி,** தொ.ப.ஆ, அ.தொ.ப, அபிசேகப்பாக்கம்.



# கைவினையும் கைப்பழக்கம்

பாடங்களைக் கடந்து, ஒவ்வொரு மாணவனின் தனித்திறனை வெளிக் கொணர்வதும் பள்ளியின் கடமையே. அவ்வாறு மாணவர்களின் தனித்திறன்களை வளர்க்கும் முயற்சியில் ஈடுபடும் போது, அவர்களின் சுற்றுச் சூழலைக் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. இப்பள்ளி, ஒருபுறம் கடலாலும் மற்றொரு புறம் ஆறாலும் சூழப்பட்டுள்ள நிலையில் கடல் பொருட்களைக் கொண்டு கைவினைப்பொருட்களைச் செய்வது பொருத்தமானதாக இருக்கும்.

பலவகை கடல் பொருட்களும் அவற்றைக் கொண்டு செய்யக்கூடிய கைவினைப் பொருட்களும், கடல் பொருட்களைப் பதப்படுத்தும் விதம், அவற்றைக்கொண்டு கலைப்பொருட்களைச் செய்யும் விதம் போன்றவை இக்கட்டுரையில் கொடுக்கப்பட்டுள்ளன.

ஒரு ஆசிரியர் மாணவர்களுக்குச் சுதந்திரத்தைக் கொடுத்துப் பாராட்டும் போது ஆசிரியர் செய்து காட்டிய ஒரு பொருளை மட்டுமல்லாது 400க்கும் மேற்பட்ட பலவிதமான கலைப்பொருட்களை உருவாக்கியது சிறப்பு.

## நோக்கம்

'புத்தகப்படிப்பு, பருவத் தேர்வு, பெறுகின்ற மதிப்பெண் என்பதோடு மட்டும் முடிவதல்ல கல்வி. ஒருவனின் தனித்திறமையை வெளிக்கொணரும் திறவுகோலாக அமைவதும் கல்வியே'. இயல்பாகவே மாணவர்கள் இசை, விளையாட்டு, நடனம் எனப் பல்வேறு கலைகளில் திறன்மிக்கவர்களாகவும், அவற்றை வெளிப்படுத்த ஆர்வமிக்கவர்களாகவும் இருப்பார்கள். அம்மாணவப்பருவத்தில் அவர்களைக் கண்டறிந்து அவர்களின் திறன்வளர உதவுவது ஆசிரியரின் கடமையாகும்.

## ஓவியமும் மாணவர்களும்

ஓவியக்கலை என்பதில் இயற்கையாகவே குழந்தைகள் அதிக ஆர்வம் கொண்டவர்களாக இருப்பார்கள். ஓவியம் என்பதை மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகவே கருதுகின்றனர். ஓவியம் வரையும் போது வரைந்தகோடுகளை அழிப்பானால் அழிப்பதும், பின் வரைவதும், அழிப்பதும் என அவர்கள் வரையும்போது வெளிப்படுத்தும் முகபாவங்களைப் பார்ப்பது மனதைக் கொள்ளைக் கொள்ளும் காட்சி. ஒரு உருவத்தை

அவர்களுக்கு வரைந்துகாட்டி பின் அவர்களை வரையும்படி சொல்லும்போது,அவர்கள் வரையும் ஒவ்வொரு உருவமும் பல அவதாரங்கள் எடுக்கும். ஒவ்வொரு உருவமும் வித்யாசமான தோற்றத்தில் இருப்பதைக் காணும்போது எந்த மாணவனும் ஒரு சிறந்த படைப்பாளியே! எந்த மாணவனும் மா கலைஞனே!

## கைவினையும் மாணவர்களும்

இதுபோன்றே ஓவியத்தின் அடுத்த பிரிவாகக் கருதப்படுவது கைவினை (கிராப்ட்). மாணவர்களுக்கு ஓவியத்தின் மீது இருக்கும் ஆர்வம், மகிழ்ச்சி அவ்வளவு என்றால், கைவினையைப் பற்றி என்ன சொல்வது? ஓவியத்தை விட பலமடங்கு ஆர்வம் கைவினைப் பொருட்கள் செய்வதில் இருக்கும். ஏனெனில் ஓவியத்தில் தன் கற்பனையில் தோன்றிய பிம்பத்திற்கு உருவம் கொடுக்கின்றனர். ஆனால் கைவினையில் அவர்கள் மனக்கண்ணில் தோன்றிய உருவம் நிஜமாகிறது. எனவேதான் எந்த மாணவனும் கைவினைப்பொருள் செய்வதில் அதிக ஆர்வத்தோடும், மகிழ்ச்சியோடும் ஈடுபடுகிறான். அம்மாணவனின் இயற்கையான ஆர்வத்தைத் தக்கவைத்து அதைச் சிதைக்காமலும், பாழ்பட்டுப்போகாமலும் மேலும் மெருகேற்றி அம்மாணவனை இக்கலையில் பிரகாசிக்கச் செய்வது ஆசிரியரின் கடமை.

## நிலம் சார்ந்த கலை

கற்பிக்கப்படும் கலை அந்த மண் சார்ந்ததாகவும், அந்தப் பகுதி சார்ந்ததாகவும் இருப்பது மிகச்சிறப்பானது. ஏனெனில் அப்பொழுதுதான் அதில் ஓர் உயிர்ப்பும், ஓர் உண்மை நிலையும் இருக்கும். கலைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக இருப்பதற்குக் காரணம் அந்தப்பகுதி மக்களின் பண்பாடு, நாகரிகம், வாழ்க்கைமுறை, மண், இயற்கைச்சூழல் போன்றவையே ஆகும்.

அவ்வகையில் புதுவையிலிருந்து 10கி.மீ தொலைவில் உள்ள தவளக்குப்பம் என்ற ஊரின் கிழக்குப் பக்கமாக 3 கி.மீ. தொலைவில் உள்ள மிக அழகான, இயற்கை எழில்கொஞ்சும் இதமான தட்பவெப்பம் நிலவும், ஒரு பக்கம் கடலாலும் மற்ற பக்கங்கள் ஆற்று நீராலும் சூழப்பட்ட அழகிய மீனவ கிராமம் தான் நல்லவாடு. இவ்வூரின் கடற்கரைக்கு அருகில் உள்ளதுதான் எங்கள் அரசு நடுநிலைப்பள்ளி நல்லவாடு. எம் பள்ளி மாணவர்கள் அனைவரும் நெய்தல் நிலப்பண்பாடு, பழக்கவழக்கம், பண்பு நலன்கள் கொண்டவர்களாகவும், அவர்களின் பெற்றோர் கடல்சார்ந்த தொழில் புரிபவர்களாகவும் இருக்கின்றனர்.

அவ்வகையில் எம் பள்ளி மாணவர்கள் காலை விழித்தது முதல் இரவு உறங்கும் வரை கடற்கரை மணலிலும், ஆற்றங்கரை ஓரத்திலும் தடம்பதித்துத் திரிவர். விடுமுறைக்காலங்களில் இவ்விடங்களிலேயே தங்கள் பொழுதினைக் கழிப்பர்

இத்தகைய கடற்கரை மணற்பரப்பில் விளையாடும் போது அவர்கள் கண்களிலும், கைகளிலும் கிடைக்கும் சங்குகள், மணிகள், சோழிகள், கிளிஞ்சல்கள் பலப்பல வண்ணங்களிலும், பலப்பல கோணங்களிலும், அளவுகளிலும், வெவ்வேறு வடிவங்களிலும் காணப்படுகின்றன.

## கைவினைப் பட்டறை - செயல்பாடுகள்

இத்தகைய கடல் சார்ந்த புதையல்களைச் சேகரித்து வரச்செய்து, காயவைத்து, தரம்பிரித்து, சுத்தம் செய்து பார்க்கும் போது ஒவ்வொரு சங்கு மற்றும் கிளிஞ்சல்களின் அழகை வார்த்தைகளால் வருணிக்க முடியாது. இதுபோன்று மேலும் பல கடல்சார்ந்த பொருட்களான நட்சத்திரமீன், கடல்தாவரம், கடல்குதிரை, கடல்மரம், கடல் ஆமை ஓடு, கனவாமீன் ஓடு போன்றவற்றைச் சேகரிக்கச் செய்தேன்.

எம் பள்ளித் தலைமையாசிரியரின் முன்அனுமதியுடனும் வழிகாட்டுதலுடனும் மூன்றாம் பருவம் தொடக்கத்தில் 6, 7, 8-ம் வகுப்பு மாணவர்களை அழைத்து கைவினைக் கண்காட்சி நடத்தப்படவிருப்பதையும், அதற்கான காட்சிப் பொருள்கள் மற்றும் கைவினைப் பொருள்கள் செய்யும் பட்டறை, ஓவியம் வரைவதற்கான பயிற்சி ஆகியவை பாட

வேளைகளில் மற்றும் ஓய்வு நேரங்களில் எனது அறையில் நடத்தப்படும் என்று மாணவர்களுக்கு அறிவித்தேன். இதில் அனைத்து ஆசிரியர்களும் பங்கேற்று மாணவர்களை ஊக்குவித்தனர்.

மாணவர்கள் சேகரித்து வந்த கடலசார் பொருட்களைக் கொண்டு நான் செய்து காட்டிய மாதிரி உருவங்களைப் போலவே மாணவர்களையும் செய்யுமாறு வழிகாட்டினேன். நான் செய்யும் ஒவ்வொரு கலை வேலை பாட்டையும் மாணவர்கள் எளிதில் புரிந்து கொள்ளுமாறு நிதானமாகச் செய்து காட்டினேன்.

**கலைக்கூடம் - கற்றலின் வெளிப்பாடு :**

கோழி, மயில், வாத்து, கொக்கு, மீன்கொத்திப்பறவை, முயல், பாண்டாக்கரடி, நகைப்பெட்டி, பெண், வண்ணத்துப்பூச்சி, படகு, கப்பல், மரம், மலை, வீடு, பெண்களுக்கான கம்மல், மணிகள் எனப் பல பொருட்களை எம் மாணவர்கள் உருவாக்கியுள்ளனர். என் வழிகாட்டுதலையும் தாண்டி மாணவர்கள் தங்கள் கற்பனைக் கேற்ப புதுப்புது வடிவங்களைப் படைத்துள்ளனர்.

எம் மாணவர்கள் இப்பட்டறை மூலம் ஏறத்தாழ 400 -க்கும் மேற்பட்ட கலைப் பொருட்களைப் படைத்து, பார்க்கும் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினர். பயன்படாத கிளிஞ்சல் முதலான வீண் பொருட்களைக் கொண்டு கலைக்கூடத்தையே உருவாக்கிவிட்டனர் எம் பள்ளி மாணவர்கள்.

நிறைவாக, மாணவர்களின் கலைக்கல்வி மீதான ஈடுபாடு அவர்களிடையே தன்னம்பிக்கையையும் ஒழுக்கத்தையும் வளர்க்கிறது. பொருளாதார அளவில் தன்தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் அளவிற்கு அவர்களின் கலைப்படைப்புகள் அமைந்துள்ளன. இது அவர்களிடம் ஆர்வத்தையூட்டி முன்னேறிச் செல்ல தூண்டுகோலாகவும் அமைகிறது. ஏழை மாணவர்களுக்கு இக்கலை பெரிய புதையலாகவே உள்ளது.





**ஆர்.தனராஜா,** தொ.ப.ஆ அ.தொ.ப, நல்லவாடு

# வகுப்பறை விளையாட்டுகள்

- மாணவர்களின் கற்றல் பெரும்பாலும் விளையாட்டின் வழியே இருக்கின்றன. எனவே, ஆசிரியர் ஒன்றாம் வகுப்பு மாணவர்களின் கணிதத்திறன்களை மேம்படுத்த வியாபார விளையாட்டை வடிவமைத்துள்ளார். கணிதத் திறன்களோடு வேறு சில வாழ்க்கைத் திறன்களும் மேம்பட இவ்விளையாட்டு உதவியாக இருக்கிறது.

- அவர்கள் இயல்பு வாழ்க்கையில் நடந்த ஒரு நிகழ்வு மூலம் கற்றல் வெளிப்பாட்டை வெளிப்படுத்திய அனுபவம்.

- மாணவர்களுக்குச் சுதந்திரம் அளிக்கும் போது அவர்களின் திறமைகளை முழுமையாக வெளிப்படுத்துகின்றனர். உதாரணமாக, எந்தப் பொருளை விற்பது, லாபத்தை ஈட்டுவது, கணக்கு தெரியவில்லை என்றால் நண்பர்களை நாடுவது.

- 'மாணவர்களை உண்மையான வாழ்வியல் செயல்பாடுகளில் ஈடுபடுத்தும் போது அவர்களின் கற்றல் ஆழமாக இருக்கிறது' என்பதற்கான உதாரணங்கள் பல இக்கட்டுரையில் இருக்கின்றன.

## நோக்கமும் பின்னணியும்

இந்த வருடம் முழுவதும் பச்சைப்பசேல் என இளஞ்செடிகளாக இருக்கும் முதலாம் வகுப்பு மாணவர்களுடன் பயணிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. 'எவ்வாறு முதல் வகுப்பைப் பூத்துக்குலுங்கும் பூஞ்சோலையாக மாற்றப்போகிறேன்?!' என்ற மேலோங்கிய எண்ணம் இன்றும் என் மனதில் மாறாமல் அப்படியே உள்ளது.



முதலாம் வகுப்புக் குழந்தைகளுடன் சேர்ந்து பயணிப்பது என்பது மிகவும் சிரமமான காரியம். முதல் இரண்டு மாதம் எனக்குத் தூக்கமே இல்லை. 'நான் ஏன் இப்படி நடந்து கொள்கிறேன்?' எனக்கு இவ்வளவு கோபமும் அழுகையும் எங்கிருந்து வருகிறது? ஏன் வருகிறது?' என்றெல்லாம் எண்ணிக் குழம்பித் தவித்தேன். பல்வேறு கற்பித்தல் முறைகளையும் உத்திகளையும் பயன்படுத்தினேன். இருப்பினும் எனக்கு எதுவும் திருப்திகரமானதாகத் தோன்றவில்லை.

ஆழ்ந்து யோசித்து ஒரு முடிவுக்கு வந்தேன். வகுப்பறையில் நேரடியான அனுபவங்களுடன் கூடிய உயிரோட்டமுள்ள சூழலை ஏற்படுத்தி குழந்தைகளுடன் உரையாடத் தொடங்கினேன்.

## செயல்பாடு

பிற ஆசிரியர்கள் துணையுடன் மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்தேன். கடைக்காரர், நுகர்வோர் என இரு குழுக்களாகப் பிரிந்திருந்த மாணவர்களைப் பல்வேறு பொருட்களை வாங்கவைத்தும் விற்க வைத்தும் வியாபாரம் குறித்த ஒரு நேரடியான அனுபவத்தை

மாணவர்களுக்கு வழங்கினேன். இந்த அனுபவத்தை மெருகேற்றும் வகையில் சென்ற வருடம் எங்கள் பள்ளியில் தலைமையாசிரியர் நடத்திய 'பல்பொருள் அங்காடித் திருவிழா' மிகவும் உயிரோட்டமுள்ளதாக அமைந்தது. தலைமையாசிரியர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அனைவரும் பொருட்களை வாங்கிப் பயனடைந்தனர்.

## அங்காடித் திருவிழா

அதே 'பல்பொருள் அங்காடித் திருவிழாவை' என்னுடைய முதலாம் வகுப்பில் பயன்படுத்தினேன். மாணவர்கள் அனைவரும் ஆர்வமுடன் பொருட்களை வாங்கியும் விற்றும் வியாபார விளையாட்டில் ஈடுபட்டனர். அனைத்து மாணவர்களுக்கும் பயனுள்ளதாகப் 'பல்பொருள் அங்காடித் திருவிழா' அமைந்திருந்தது.

பள்ளியைத் தயார் செய்தோம்; போஸ்டர்களை ஒட்டினோம்; அவரவருக்கான இடத்தை ஒதுக்கினோம்; தேவையான பொருட்களை வாங்கி வைத்தோம். திருவிழாவன்று என் குட்டிகள் அவரவர் கடைக்குத் தேவையான பொருட்களோடு வந்து, வியாபாரம் செய்ய ஏதுவான வகையில் பொருட்களை அடுக்கி வைத்தனர்.

ஆசிரியர்களும் மற்ற வகுப்பு மாணவர்களும் கடைகளுக்கு வந்து வாங்கத் தொடங்கினர். அவர்களுடன் என் குழந்தைகள் பேரம் பேசிய விதம் என்னை ஆச்சர்யப்படுத்தியது.

சரியான பணத்தை வாங்கிக் கொண்டனர். மீதி எவ்வளவு கொடுக்க வேண்டும் என்று நோட்டில் எழுதி, கணக்கிட்டுக் கொடுத்தனர்.

## வாழ்வியல் அனுபவங்கள்

ஒரு மாணவன் என்னிடம் ''மிஸ், மிஸ் நேத்து எங்க அம்மா கூட கடைக்குப் போனேன். ஒரு பிஸ்கட் பாக்கெட் வாங்கினேன். வாங்கியவுடன் விலையைச் சரிபார்த்தேன் ரூ.10 அதிக பட்ச விலை என இருந்தது. ஆனால் கடைக்காரர் ரூ. 12 என்னிடம் வாங்கியது எனக்கு அதிர்ச்சியாக இருந்ததது. விலை எவ்வளவு? என்று நான்




கேட்டவுடன் கடைக்காரர் 2 ரூபாயைத் திருப்பித்தந்தார். மேலும், எனக்குப் பிடித்த purple colour பிஸ்கட் பாக்கெட் வேண்டுமென்று கேட்டேன். கடைக்காரர் ''உனக்கு purple colour-லாம் தெரியுமா? Purple ஸ்பெல்லிங் சொல்லு உனக்கு இலவசமாகவே நான் பிஸ்கட் தரேன், "என்று சொன்னார். நான் எனக்கு எல்லா கலர் ஸ்பெல்லிங்கும் தெரியும்னு சொல்லி, purple ஸ்பெல்லிங் வேகமாகச் சொன்னேன். அவர் என் கன்னத்தில் ஒரு முத்தம் கொடுத்துப் பாராட்டினார்" என்று கூறினான். அவன் கூறியதைக் கேட்க எனக்கு வியப்பாக இருந்தது.

## என்றோ கற்றது

பாடல்கள், கதைகள் மூலமாக பல்வேறு வண்ணங்களை அறிமுகப்படுத்தி எந்த ஒரு பொருளிலும் உள்ள வண்ணத்தின் பெயரைச் சொல்வதற்கான அறிவையும் திறனையும் மாணவர்களுக்கு ஏற்கனவே அளித்திருந்தோம், அதனால் purple கலர் ஸ்பெல்லிங்கை எளிதாகச் சொன்னான் என்பதைப் புரிந்துகொண்டேன். மேலும் வகுப்பறை வியாபார விளையாட்டின் மூலம்தான் விலையைச் சரிபார்க்கக் கற்றுக் கொண்டான் என்பதையும் நான் உணர்ந்து கொண்டேன். மேலும் Money என்ற பாடம் நடத்தும்பொழுது என் வகுப்பறையை ஒரு கடையாகவே மாற்றி நடத்தியது பாடநோக்கங்களை எளிதாக அடைய உதவியது.

என் பள்ளிவளாகம் மரங்கள் நிறைந்து

பச்சைப்பசேல் என இயற்கை எழிலோடு காட்சியளிக்கும். நான் வகுப்பறையில் பாடம் நடத்தியதை விட மரத்தடியில் இயற்கை எழில் சூழ பாடம் நடத்தியதே அதிகம்.

குயவன் எவ்வாறு களிமண்ணில் தகுந்த அளவில் தண்ணீர் ஊற்றி, குழைத்து, சரியாகப் பக்குவப்படுத்தி அழகான ஒரு மண்பானை வடிப்பதைப் போல குழந்தைகளுக்கும் சரியான சூழலை ஏற்படுத்திக் கொடுத்தால் சிறப்பாகக் கற்று எதிர்காலத்தில் சிறந்த குடிமக்களாக விளங்குவர்.

## கற்றல் விளைவுகள்

இம்மாதிரியான முறையில் கற்பித்ததன் மூலம், பொருட்களின் மதிப்பையும் வேறுபாடுகளையும் அறிந்து கொண்டனர். வியாபார நுணுக்கங்களை அறிந்து கொண்டனர். பெரும்பாலான குழந்தைகள் பல விஷயங்களை ஒப்பிட்டு உரையாடும் அளவிற்குத் திறன் பெற்றனர். மாணவர்கள் கேள்விகளை எதிர்கொள்ளும் விதமும் அவற்றிற்குப் பதில் அளிக்கும் விதமும் வியத்தகு அளவில் முன்னேற்றம் அடைந்திருந்தன. மகிழ்ச்சி, ஈடுபாடு, பேச்சுத் திறன், பயமின்மை, துணிச்சல், பேரம் பேசுதல், மற்றவரைச் சம்மதிக்க வைத்தல், பொறுப்புணர்வு, பிளாஸ்டிக்கின் தீமை, ஊட்டச்சத்து தொடர்பான அறிவு (உணவுத் திருவிழா), மாணவர்களிடையே ஒருங்கிணைப்பு, ஒருவருக்கொருவர் ஆதரவு, கூட்டல் (ஆயிரங்களில்), கழித்தல், பணம் பற்றிய அறிவு, போன்ற பல்வேறு வகையான திறன்களை வியாபார விளையாட்டின் மூலம் மாணவர்கள் அறிந்து கொண்டனர்.

## சவால்கள்

9 குழந்தைகள், கழித்தல் தெரியாததால் மீதி பணத்தைக் கணக்கிட்டு வாங்கச் சிரமப்பட்டனர். அதற்காக அவர்கள் மற்ற குழந்தைகளிடமிருந்து உதவியைப் பெற்றது சிறப்பாகவே இருந்தது.



**கெஜலட்சுமி,** தொ.ப.ஆ, அ.தொ.ப., கரிக்கலாம்பாக்கம்

# முதல் வகுப்பு தமிழ்ப் புத்தகம் - ஒரு பார்வை

> முதல் வகுப்பு பாடப்புத்தகம் குழந்தைகளுக்கு ஏற்புடையதாக மாற்றப்படுதல் அவசியம்.
>
> • குழந்தைகளுக்குக் கதைகளும் பாடல்களும் ஏற்புடையதாக இருப்பதால் பாடப்புத்தகத்தில் அவற்றை அதிகம் சேர்க்க வேண்டும்.
>
> • குழந்தைகளுக்குக் கடினமான இருக்கிற, அவர்களின் பயன்பாட்டில் இல்லாத சொற்களைத் தவிர்க்க வேண்டும்

## அறிமுகம்

ஒன்றாம் வகுப்புத் தமிழ்ப்பாடநூலில் உள்ள பாடப்பகுதிகளுக்கு நான் பாடத்திட்டம் எழுதும் போது ‘அவர்களுக்கான திறன்கள் என்னென்ன? அத்திறன்களுக்கு ஏற்ற பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதா? அப்பயிற்சிகள் மாணவர்களின் கற்றல் திறனுக்கு ஏற்றாற்போல் இருக்கின்றனவா? ஏதேனும் பயிற்சிகள் சேர்க்க வேண்டியுள்ளதா? ’என்றெல்லாம் கவனத்தில் கொண்டு தான் எழுதுவேன்.

அவ்வாறு மேற்கொள்ளும் திட்டமிடலில் உண்டான போதாமை மற்றும் வேண்டாமைகள் பற்றியே நான் இங்குக் கூறப்போகிறேன்.

## பாடநூல் பற்றி

முதல் வகுப்புத் தமிழ்ப்பாடநூலில் ஒவ்வொரு பாடத்திற்கும் ஒரு பாடல், ஒரு படம் அறிமுகம் செய்யப்பட்டிருக்கும். பாடத்தில் எழுத்துக்களுக்கும் சொற்களுக்கும் படத்துடன் அதனைச் சார்ந்த பயிற்சிகள் கொடுக்கப்பட்டு இருக்கும்.

குழந்தைகளின்பங்கு-சிறுகுழந்தைகள்எப்போதும் கதையை விரும்பி கேட்கக்கூடியவர்கள். பாடல் பாடுதல் பிடிக்கும் என்றாலும் படத்தைக்காட்டி கூறப்படும் கதைகளை விரும்பி கற்கின்றனர். படத்துடன் இருக்கக்கூடிய சொற்களை மிக எளிமையாகவும் உணர்வுப்பூர்வமாகவும் கற்கின்றனர். படமின்றி கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களைப் புரிந்து கொள்வது அவர்களுக்குக் கொஞ்சம் கடினமாகவே உள்ளது. பாடநூலில் கொடுக்கப்பட்டுள்ள எழுத்துப்பயிற்சியைப் பாடப்புத்தகத்தில் மட்டுமல்லாது சுவடியிலும் எழுதுவது கூடுதல் சுமையாகவே கருதுகின்றனர். புத்தகத்தில் ஏழுதியதை ஏன் மீண்டும் சுவடியில் எழுத வைக்க வேண்டும் என்ற மிக உணர்வோடு என் மாணவர்கள் எழுதுவதைக் கண்டு இருக்கிறேன். அவர்களைக் கஷ்டப்படுத்துவது போலவே உணர்கிறேன்.

## சேர்க்க வேண்டியவை

ஒவ்வொரு மாதத்திற்கும் ஒரு பாடல் கற்பிக்கும் படியாக உள்ளது. அவ்வாறு இல்லாமல் ஒன்றுக்கு மேற்பட்ட புதிய பாடல்கள் இணைத்தால் நன்றாக இருக்கும். அதே தலைப்புகளில் பாடல்கள் கண்டுப்பிடித்துப் பாட வைத்தால், அதைச் சுமையாக கருதாமல் சுலபமாகப் பாடுவதைப் பார்க்கிறேன். ஒரு எழுத்திற்கு ஒரு படம் ஒரு சொல் என்று இருப்பதை மாற்றி மூன்று நான்கு சொற்களோடு படங்களைக் கொடுக்கலாம். மாணவர்கள் நிலைக்கு ஏற்ற எளிமையான பயிற்சிகளை அதிகப்படுத்தலாம். மேலும்,






படங்களுடன் கூடிய நன்னெறி கதைகளையும் இணைக்கலாம்.

### தவிர்க்க வேண்டியவை

முதல் பருவத்திலேயே எழுத்துகளைக் கொண்டு நூல் உருவாக்கவைத்திருக்கும் சூழல் மற்றும் அதை ஒட்டிய பயிற்சியைத் தவிர்க்கலாம்.

'நானே படிப்பேன் நானே எழுதுவேன்' போன்ற பகுதிகளில் கொடுக்கப்படும் சொற்கள் பெரும்பாலும் மாணவர்கள் நிலையைத் தாண்டியுள்ளது. அதாவது அவர்களுக்குப் பொருள் உணர்ந்து கொள்ள சிரமமாக உள்ளது. முதல் பருவம் முழுக்க சுலபமாக இருப்பது நல்லது. சங்கம், நாற்றம், பண்டம், கெண்டி, பௌத்தம் போன்ற குழந்தைகளின் பயன்பாட்டில் இல்லாத இது போன்ற கடினமான சொற்களை ஆரம்பப் பள்ளிக்குத் தேவையா? என்று நாம் சிந்திக்க வேண்டும். இது போன்ற சிரமங்களைத் தவிர்க்கலாம். எழுத்துப் பயிற்சிக்கென்று தனியாக ஒரு புத்தகம் தரலாம். அதிலும் குழந்தைகள் மகிழ்வோடு செயல்படக்கூடியதாக இருத்தல் நல்லது. பாடநூலில் உள்ள எழுத்துப்பயிற்சிகளைத் தவிர்த்துவிட்டுக் கூடுதல் பாடல்களோ கதைகளோ கொடுக்கலாம்.

குறிப்பு: முதல் பருவத்தில் முதல் நான்கு பாடங்கள் வரை 'க' மற்றும் 'கா' வரிசைகள் இரண்டாம்



பருவத்தில் 'கி', 'கீ', 'கு',' கூ' வரிசைகள் வரையும், மூன்றாம் பருவத்தில் 'கை', 'கெ', 'கொ' என மீதம் உள்ள மொத்த வரிசைகளையும் அடுத்து உள்ள பாடங்களில் கொடுத்துள்ளனர். அதுமட்டுமின்றி நாட்கள், மாதங்கள், சுவைகள் மற்றும் நிறங்கள் எனக்கூடுதல் பகுதிகளையும் கொண்டுள்ளது. இரண்டாம் பருவம் வரை மாணவர்கள் கற்றலில் எந்த வித குழப்பங்களும் இன்றி நன்றாக எழுத்துக் கூட்டி கற்கும் மாணவர்கள் கூட மூன்றாம் பருவ இறுதியில் தமிழ் எழுத்துகளை அடையாளம் காணுவதில் தங்களுக்குள் குழப்பிக்கொள்கின்றனர். இது போன்ற சிரமங்கள் ஏற்படுவதைத் தவிர்க்க ஒட்டுமொத்தமாகத் திணிப்பதைத் தவிர்க்கலாம்.

### முடிவுரை

முன் தொடக்க நிலையில் மாணவர்கள் ஆயுத, உயிர் மற்றும் மெய்யெழுத்துகள் என மொத்தம் 31 எழுத்துகளை மட்டுமே கற்கின்றனர். அதன்பின் அடுத்த நிலையிலே 216 எழுத்துகளைப் படிக்கவும் எழுதவும் அவ்வெழுத்துகள் சார்ந்த சொற்களையும் படித்தாக வேண்டும் என அமைக்கப்பட்டிருப்பது என்பது மாணவர்களுக்கு ஒரு சுமையா அல்லது இந்த நிலைக்குச் சரியானதா? என்பதைப் பற்றி அனைவரும் சிந்திப்போம் வாருங்கள்!



**இராஜதிலகம்,** தொ.ப.ஆ, அ.தொ.ப செம்பியபாளையம்

# தமிழ் மொழிப்பாடம் கற்பித்தலில் விளையாட்டுக்கள் மற்றும் திறன்பேசி செயலியின் பயன்பாடு

- **தமிழ் மொழிப் பாடம் கற்பதில் மாணவர்கள் சந்திக்கும் சவால்கள்.**
- **அச்சவால்களை எதிர்கொள்ள ஆசிரியர்கள் எடுத்த சில உத்திகள்.**
- **மொழி கற்றலில் தொழில்நுட்ப செயலிகளைப் பயன்படுத்துதல்.**

இன்றைக்கு நாம் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சனை, தொடக்க நிலை வகுப்பு மாணவர்களின் படித்தல் திறனையும் எழுதுதல் திறனையும் மேம்படுத்துவதேயாகும்.

மாணவர்களுக்கு எழுத்துக்களையும் உச்சரிப்புகளையும் பல முறை கற்பித்தாலும் அவர்கள் எழுதும் பொழுது பிழையாக எழுதுவதைக் காண்கிறோம். தமிழ்ப்பாடத்தில் ஒரு பாடலையோ, சொல்லையோ வாய்மொழியாகச் சொல்லும் போது மிகச்சரியாக சொல்லும் மாணவர்கள் அதை எழுதும் போது பல்வேறு பிழைகளுடன் எழுதுகின்றனர். இந்த நிலைப்பாடு தொடக்கநிலை வகுப்பு மாணவர்கள் முதல் 6,7,8 வகுப்பு மாணவர்களிடமும் காணமுடிகிறது. விளையாட்டுக்கள் மூலம் பல்வேறு பயிற்சிகளைச் செயலியின் வாயிலாகவும் மாணவர்களுக்குக் கொடுப்பதன் மூலம் அவர்களை பிழையில்லாமல் உச்சரிக்கவும் எழுதவும் வைக்கமுடியும்.

## தமிழ்க்கற்றலில் எதிர் கொள்ளும் சவால்கள்

1. ஒரு சொல்லையோ, பாடலையோ ஆசிரியர் சொல்லிக் கொடுக்கும் பொழுது கற்கும் மாணவர்கள் அவற்றை மனப்பாடம் செய்து வாய்மொழியாகச் சொல்கின்றனர். ஆனால் அதைப் பார்க்காமல் எழுதச் சொல்லும் போது சரியாக எழுதத் தெரியாமல் தடுமாறுகின்றனர்.

2. வரி வடிவத்தை சரிவர எழுதிப் படிக்காதது மற்றொரு காரணம்.

3. எழுதும் பொழுது எழுத்துக்களைச் சொல்லிக் கொண்டு எழுதாமல் இருப்பதும் மனதில் எழுத்துக்கள் பதியாமல் இருப்பதற்குக் காரணமாக அமைகின்றது.

4. ஆர்வமில்லாமல் இருப்பதும் முறையான எழுத்துப்பயிற்சி பெறாததும் காரணமாக அமைகின்றது.

5. மாணவர்கள் மனப்பாடம் செய்வதைத் தவிர்க்க எழுத்துக்களை நினைவில் கொள்ள எழுத்துக்களை எழுதுவதற்கும், உச்சரிப்பதற்கும் பயிற்சி அளித்தல்.

சிக்கலுக்கானப் படிநிலைகள்

### எழுத்துக்களின் வரி வடிவம்

இதுபோன்ற எழுத்துக்களை உடைய மின்னட்டைகளைத் தயாரித்து அவற்றைக் கொண்டு பயிற்சி அளித்தல்.

### குறில் நெடில் வேறுபாடு அறிதல்

எழுத்துக்களைச் சரியாக உச்சரிக்காதற்கும் குறில் நெடில் வேறுபாடு தெரியாததும் காரணமாக அமைகின்றது குறில் நெடில் ஓசையுடைய எழுத்துக்களை வரிசைப்படுத்துதல், ஒற்றைக் கொம்பு, இரட்டைக் கொம்பு வரி வடிவத்தைத் தனித்து அடையாளம் காணுதல்.

| குறில் | நெடில் |
|---|---|
| கெ | கே |
| பெ | பே |

இது போன்ற எழுத்துக்களை எழுதி



------ | ம | ர | ம் |



------ | நா | ய் |



------ | கி | ளி |

பயிற்சி அளித்தல். மேலும் எழுத்துப் பயிற்சி அட்டைகளைக் கொடுத்தும் பயிற்சி அளித்தல். இதனால், குறில் நெடில் எழுத்துக்களை அறிவதோடு அதனை உச்சரிக்கவும் அறிந்து கொள்வர்..

குழு விளையாட்டு - உச்சரிப்புப் பயிற்சி

ஒற்றைக் கொம்பைப் பயன்படுத்தி வரும் எழுத்துக்கள் குறுகிய ஓசை உடையதாக வரும், இரட்டைக் கொம்பைப் பயன்படுத்தி வரும் எழுத்துக்கள் நீண்ட ஓசையைக் கொண்டு இருக்கும் என்று விளக்கிவிட்டு குறில், நெடில் எழுத்துக்களை உச்சரிக்கும் பயிற்சி அளித்தல். குழுவிற்கு 4 பேர் வீதம் 5 குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் தனித்தனியே குறில் நெடில் ஓசையுடைய சொற்களைக் கொடுத்து உச்சரிக்க வைத்து விளையாடுதல்.

## வாக்கியம் அமைக்கும் விளையாட்டு

குழுவிற்கு 4 மாணவர்கள் வீதம் 5 குழுக்களாக அமர வைத்து ஒவ்வொரு குழுவிற்கும் ஒற்றைக் கொம்பு, இரட்டைக் கொம்பு, சுழிகள் எல்லாம் வருவது மாதிரியான வாக்கியத்தைக் கொடுத்து விட வேண்டும். வாக்கியத்தை அமைப்பதற்கு தனித்தனி எழுத்துக்கள் அடங்கிய துண்டு அட்டைகளைக் கொடுத்துவிட வேண்டும். பின்னர், கொடுத்த வாக்கியத்தை எழுத்து அட்டைகளை வைத்து அமைத்துக் காட்டச் சொல்ல வேண்டும். அப்பொழுது மாணவர்கள் ஆர்வமாகவும் உற்சாகமாகவும் அந்த எழுத்துத் துண்டு அட்டைகளில் எழுத்துக்களைத் தேடி தேடி வாக்கியங்களை அமைக்கும் பொழுது தவறில்லாமல் வாக்கியம் அமைக்கின்றனர். அதோடு மட்டுமில்லாமல் ஒற்றைக்கொம்பு இரட்டைக் கொம்பு வேறுபாடும் நன்கு அறிந்து கொள்கின்றனர்.

## சொல்வதை எழுதுதல்

சொல்வதை எழுதுதல் பயிற்சியின் வாயிலாக மாணவர்களின் எழுதுதல் திறனும், நினைவாற்றலும் நன்கு மேம்படும். வாய்மொழியாக சரியாகச் சொல்கின்ற மாணவர்கள் எழுதும் பொழுது பிழையோடு எழுதுவதைக் காண்கிறோம். வகுப்பில் தினமும் 15 நிமிடம் சொல்வதை எழுதுதல் பயிற்சி அளிப்பதன் மூலம் எழுதும்பொழுது ஏற்படும் பிழைகளைக் கண்டறிந்து அதற்கு தீர்வு காணலாம்.

## படங்களுக்குரிய எழுத்துகளைக் கண்டறிதல்

மாணவர்களை வட்டமாக அமரச் செய்து ஒரு வட்டத்தில் எழுத்துக்கள் உள்ள அட்டையைப் போட்டு விட வேண்டும். பின்னர் படத்தைக் காட்ட வேண்டும் படத்திற்கு உரிய எழுத்துக்களை மாணவர்கள் தேடி எடுத்து சேர்த்து வைக்க வேண்டும். இந்த விளையாட்டு மூலம் மாணவர்கள் எழுத்துக்களை அறியவும் இணைத்துச் சொல்லவும் அறிந்து கொள்வர்.

## படத்தின் பெயரை எழுதுதல்

படத்தைக் கொடுத்து அதன் பெயரை எழுதச் சொல்லும் போது படமும் அதன் பெயரும் நினைவில் எப்போதும் நிற்கும். இந்தப் பயிற்சி அளிப்பதன் மூலம் மாணவர்களின் நினைவாற்றல் திறனும், புரிதல் திறனும் மேம்படும்.

மேற்கண்ட பயிற்சிகள் எல்லாம் இன்றைய காலத்திற்கு ஏற்றாற்போல் குழந்தைகளுக்குப் பிடிக்கின்ற வகையில் மொபைல் செயலியில்

வந்துள்ளது. அவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் மாணவர்கள் மிகுந்த மகிழ்ச்சியோடு ஆர்வமுடன் கற்கின்றனர்.

என்னுடைய வகுப்பறையில் செயலி மூலம் தமிழ் கற்பித்த அனுபவங்கள்.

1. சொல்லி அடி(<https://goo.gl/rN7cFY>) :

சொல்லி அடி என்ற செயலியில் படம்பார்த்துக் கண்டுபிடி, சொல்லுக்குள் சொல், சொல் விளையாட்டு, எதிர்ச்சொல்லைக் கண்டுபிடி, இணைச்சொற்களைக் கண்டுபிடி, குறிப்புகள் மூலம் கண்டுபிடி போன்ற விளையாட்டுக்கள் இருந்தன.

இந்தச் செயலியின் மூலம் மாணவர்கள் சொல் உருவாக்கவும், எழுத்துக்களைச் சரியான முறையில் அடையாளம் காணவும் கற்றுக் கொண்டனர். மேலும் எதிர்ச்சொல் அறிதல், இணைச்சொற்கள் அறிதல் போன்றவற்றை ஆர்வமுடன் கற்றுக் கொண்டனர்.

2. சொல்லினம் செயலி(<https://goo.gl/8gBZj4>) :

சொல்லினம் செயலி மூலம் சொற்களை உருவாக்குவதற்குப் பயிற்சி அளித்தேன். இதன் மூலம் சொற்களை உருவாக்கவும், வாசிக்கவும் கற்றுக் கொண்டனர்.

3. மாயக்கட்டம் செயலி(<https://goo.gl/VHK-KQt>) :

மாயக்கட்டம் செயலியும் சொல் உருவாக்குவதற்குப் பயன்படுகிறது. மாணவர்கள் ஆர்வமுடன் விளையாட்டு மூலம் மாயக்கட்டத்தில் உள்ள எழுத்துக்களை வைத்து சரியானச் சொல்லை உருவாக்கினர்.

4. தமிழ் கற்போம் செயலி (<https://goo.gl/FK5Hvb>) :

தமிழ் கற்போம் செயலியில் உள்ள வீடியாக்கள் மூலம் வாய்மொழிப் பயிற்சியும், எழுத்துப் பயிற்சியும் வழங்கினேன். இதன் மூலம் மாணவர்கள் சரியான உச்சரிப்புப் பயிற்சியும் எழுத்துப் பயிற்சியும் பெற்றனர்.

5. யோசி செயலி (<https://goo.gl/Hb8MN3>) யோசி செயலியில் விடுகதைகள், புதிர்கள், பழமொழிகள், சிந்தனைகள், பாடல்கள் உள்ளன. இவைகளில் மாணவர்கள் விடுகதைகள், புதிர் விளையாட்டுகளை ஆர்வமுடன் செய்தனர்.

## முடிவுரை

பொதுவாக தொடக்கநிலை மாணவர்களுக்குக் கற்பித்தலில் ஏற்படும் இடர்ப்பாடுகளை இன்றைய காலத்தில் நவீன தொழில்நுட்ப வளர்ச்சியால் எளிமையாக எதிர்கொண்டு களைய முடிகிறது. இதன் மூலம் மாணவர்களின் கற்றல் திறனும், ஆசிரியர்களின் கற்பித்தல் திறனும் மேம்படுகிறது.



முனைவர் **ப. இரமேஷ்,** உதவி ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, கருநிலம், காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், காஞ்சிபுரம் மாவட்டம்.




# கவிதைகள் படைப்போம் - முதலாம் வகுப்புக் குழந்தைகள்

- குழந்தைகளின் படைப்பாற்றலை 'கருத்தாடல் அணுகுமுறை'யின் மூலம் வளர்த்தல்.
- பாடல்கள் இயற்றுவதன் மூலம் பல்வேறு மொழித்திறன்களை வளர்த்தல்
- பாடல்கள் இயற்றுவதில் பேச்சுமொழியின் பயன்பாடு
- கருத்தாடல் அணுகுமுறையின் மூலம் மொழி கற்றலில் ஆர்வத்தை வளர்த்தல்.

## நோக்கம்

மொழிகற்றல் என்பது எழுத்துக்களை அறிவதிலும் வார்த்தைகளைப் படிப்பதிலும் மட்டுமே அல்ல; படைப்பாற்றலை உருவாக்கும் களமாகவும் வகுப்பறை அமைய வேண்டுமல்லவா!

முதல் பருவத்தேர்வு விடுமுறையில் அசிம் பிரேம்ஜி அறக்கட்டளை அளித்த பயிற்சிப் பட்டறையில் பாடப்புத்தகத்தில் வரும் படங்களைப் பயன்படுத்திப் பாடல்கள் உருவாக்கும் 'கருத்தாடல் அணுகுமுறை'யை அறிந்தேன். முதலாம் வகுப்பு மொழிகற்றல் செயல்பாட்டில் கருத்தாடல் அணுகுமுறையைப் பயன்படுத்தத் தொடங்கினேன்.

## செயல்பாடு

பாடப்புத்தகத்திலுள்ள படங்களைக் காண்பித்துப் பேச வைத்தேன். 'அவர்கள் என்ன செய்கிறார்கள்? இது என்ன?' - போன்ற வினாக்களை எழுப்பி, குழந்தைகள் பதிலாகக் கூறும் சொற்களைக் கரும்பலகையில் எழுதினேன். பிறகு அந்தச் சொற்களைக் கொண்டு மாணவர்களைப் பாடல் எழுத வைக்க மீண்டும் மாணவர்களுடன் உரையாடினேன்.

(எ.கா.) பாடப்புத்தகத்தில் உள்ள மரத்தைக் காட்டி நாம் மரத்தைப் பற்றிச் சிறிது நேரம் பேசலாமா என்றதும் 'சரி' என்றனர். 'இது என்ன மரம்' என்றதும் ஆலமரம்' என்றனர். பிறகு 'மரம்




முதல் வகுப்பு மாணவன் அவர்கள் உருவாக்கிய பாடலை வாசிக்கின்றான்

மரம் ஆலமரம் எழுதலாமா' என்றதும் 'சரி' என்ற ஒப்புதல் கிடைத்தது. எழுதி முடித்ததும் பச்சை வண்ண ஆலமரம் என்ற இரண்டாம் வரியும் வந்தது.

மரம் மரம் ஆலமரம்

பச்சை வண்ண ஆலமரம்

என்று இரு வரிகளை கரும்பலகையில் எழுதி முடித்ததும் பாடலாகப் பாடினோம். பின்னர் மாணவர்கள் இருவர் இருவராக வந்து வாசித்தனர்.

அனைத்து குழந்தைகளும் வாசித்து முடித்ததும் சொற்களைச் சுட்டிக் காட்டுமாறு கூறினேன். அவர்களால் சொற்களை அடையாளம் காண முடிந்தது. ஆலமரக் கோட்டுப்படங்கள் கொடுத்து வண்ணம் தீட்டச் சொன்னேன், மாணவர்கள் வண்ணம் தீட்டினர். அதை அட்டையில் ஒட்டி ஆலமரம் என்று எழுதினேன். மறுநாள் குழந்தைகள் முன்னிலையில் அவர்கள் கூறிய பாடல் வரிகளை வரைபடத் தாளில் எழுதி வகுப்பறையில் ஒட்டினேன். அந்த வாரம் முழுவதும் என் குழந்தைகள் உருவாக்கிய பாடல்கள் அனைத்தும் எங்கள் வகுப்புச் சுவரை அலங்கரித்தன. 'கிளி' என்ற வார்த்தையைக் கூறியவுடன் "கிளி, கிளி, பச்சைக்கிளி" என்றனர். "இரண்டாம் வரிக்கு என்ன எழுதலாம்"? என்று கேட்டபோது பலதரப்பட்ட பதில்கள் வந்தாலும், "சிவப்பு மூக்கு கிளி" என்று ஒரு மாணவன் கூறியதும் அனைவரிடமும் கேட்டுவிட்டு,

கிளி கிளி பச்சைக்கிளி

சிவப்பு மூக்கு பச்சைக்கிளி

என்று எழுதினேன். இவ்வாறு இரண்டு வரிப் பாடல்கள்களை எழுதிக் கொண்டு இருந்த போது அவையெல்லாம் இரண்டு வரிப் பாடல்களாக முடியவில்லை. "மிஸ் நா சொன்னது முன்னாடி வரனும்", "நா சொன்னதையும் எழுதுங்க", "நான் சொன்னது வந்தே ஆகணும்" என அன்புக் கட்டளைகள் வந்துகொண்டே இருந்தன. ஒரு சில சமயங்களில் குழந்தைகளைச் சமாதானம் செய்ய முடியாமல் பாடல் மூன்று வரி நான்கு வரிப் பாடல்களாக நீளும். கருத்தாடல் அணுகுமுறையில் உருவாகும் பாடல்கள் பொதுவாக அனைத்து மாணவர்களும் சேர்ந்து உருவாக்கிய பாடல்களாக இருக்கும். (எ.கா.)

'எளனி', 'மோதரம்', 'பஸ்' போன்ற சொற்களைப்

பயன்படுத்தும் போது “எளனி இல்லம்மா இளநீர்” என்றதற்கு “மிஸ் உங்களுக்குத் தெரியாதா? எளனி தான் குடிப்போம் அதான் correct” என்று கூறி ‘இளநீர்’ என்று எழுத என்னை அனுமதிக்கவே இல்லை. மோதிரம் என்று சொன்னதற்கு “விரல்ல ‘மோதரம்’ போட்டுக்குவேன்னு தான் சொல்லுவாங்க, ‘மோதிரம்’ இல்லை.” என்றே சாதித்தனர். ‘பஸ்’ என்பதைப் பேருந்து என்று தான் தமிழில் சொல்லவேண்டும் என்று நான் சொன்னதற்கு “படிக்கும் போது பேருந்துன்னு படிக்கலாம், பாட்டுக்கு பஸ்ஸுனே இருக்கட்டும்மா” என்று என்னைச் சமாதானம் செய்தனர் என் குழந்தைகள். நானும், சரி அவர்களது நடைமுறை மொழியே இருக்கட்டும் என்று எந்த ஒரு மாற்றமும் செய்யவே இல்லை. ஒருவேளை நான் “புத்தகத்தில் இப்படித் தான் இருக்கு, இளநீர் தான் சரி” என்று கூறி மாற்றி எழுதி இருந்தால் அடுத்தடுத்த பாடல்களை அவர்களால் சுதந்திரமாக உருவாக்க இயலாமல் போகலாம் எனக் கருதி அவர்களது விருப்பத்தின்படியே எழுதினேன்.

### கற்றல் வெளிப்பாடுகள்:

1. எழுத்துக்களைச் சொல்லிக் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை: இந்தக் கருத்தாடல் அணுகுமுறையைப் பயன்படுத்திப் பாடல்களை உருவாக்கும் போது, நவம்பர் மாதம். ‘கு’, ‘கூ’ வரிசை எழுத்துக்களைத் தனியாகச் சொல்லிக் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. (எ-கா)

குளம் குளம்; மீன் இருக்கிற குளம்

முயல் முயல்; வெள்ளை முயல்

ஆடு ஆடு; ஓடி வா ஆடு

புற்று புற்று; பாம்பு இருக்கிற புற்று

2. குழந்தைகளின் சொற்களஞ்சியத்திற்கு நாம் மட்டும் காரணம் அல்லவே!: ஒரு முறை ‘அழகான’ என்ற சொல் திரும்ப திரும்ப வந்தது. நான் “ஒரே சொல் திரும்ப திரும்ப வந்தால் போரடிக்கும் இல்ல” என்று கூறியதும் வேறு சொல்லைப் போட்டுப் பாடலை முடித்தனர். மற்றொருமுறை ‘தித்திப்பான’ என்ற சொல் திரும்ப திரும்ப வந்த போது விஷாலி என்ற சுட்டி “ஹேய் அத நாம கொய்யாவுக்குச் சொல்லிட்டோம், இப்ப வேற யோசிக்கலாம்“ என்று கூறினாள். வகுப்பு மீண்டும் சிந்திக்கத் தொடங்கியது. கௌதம் திடீரென ‘சுவையான’ என்றதும் வகுப்பே கைதட்டி ஆரவாரம் செய்தது. எனக்கோ இதுவரை ‘சுவையானது” என்ற வார்த்தையை நாம் சொல்லிக்கொடுத்ததே இல்லையே என்று யோசித்தேன். ஆம்! குழந்தைகளின் சொற்களஞ்சியத்திற்கு நாம் மட்டும் காரணம் அல்லவே! அவர்கள் கேட்கும், பார்க்கும் பாடல்கள், உரையாடல்கள் நிகழ்வுகள் என அனைத்துமே மாணவர்களின் சொற்களசியத்தை வளமாக்குகின்றன.

3. இந்த அணுகுமுறை மாணவர்களிடையே ஆர்வத்தை வளர்த்திருக்கிறது: ஒருநாள் விளையாட்டுப் பாடவேளையில் அனைத்துக் குழந்தைகளும் விளையாடிக் கொண்டு இருந்தனர். அப்போது கண்ணன், கௌதம் என்ற இருவரும் நான் கேட்ட எல்லா சொற்களுக்கும் போட்டி போட்டுக் கொண்டு யோசிக்காமல் பாடல்கள் சொல்லிக்கொண்டே இருந்தனர். மறுநாள் என்னிடம் “அம்மா

சேவலே சேவலே கொக்கரக்கோ சேவலே
காலையில் எழுப்பும் சேவலே

இட்டலி இட்டலி வெள்ளையான இட்டலி
வட்டமான இட்டலி அம்மா சுட்ட இட்டலி

மரம் மரம்; பழம் குடுக்கிற மரம் சிவன் சிவன்; நல்ல சிவன் வீடு வீடு; உள்ள இருக்கிற வீடு

நேத்து நாங்க சொன்ன பாட்டெல்லாம் எங்க? எழுதலையா? ஒட்டலையா?" என்று கேட்டனர். அந்தளவிற்கு மாணவர்களிடையே ஆர்வத்தை கருத்தாடல் அணுகுமுறை வளர்த்திருந்தது.

4. மீத்திறன் வளர்ந்தது: மூன்றாம் பருவத்தேர்வில் மூன்றாம் வகுப்புத் தமிழ்க் கேள்வித் தாளில் எங்கள் தோட்டம், செடிகள், பழங்கள், பூச்சிகள் என்ற சொற்களைத் தந்து விவரித்து எழுதச் சொல்லி கேள்விகள் இருந்தன. என் வகுப்பு மாணவி 'ஹன்சிகா'காலையிலேயே தேர்வு முடிந்தாலும் மாலை தான் வீடு செல்வாள். அவளிடம் "தோட்டம் என்ற சொல்லை வைத்து வாக்கியம் சொல்லம்மா" என்றேன். "தோட்டம் தோட்டம்; அழகான தோட்டம்" என்றாள். "இது பாடல் போல இருக்கிறதே!" என்று கூறிவிட்டு, எங்கள் வீட்டுத் தோட்டம் அழகாக இருக்கும் என்று உதாரணம் சொன்னேன். ஓரிரு நிமிடங்கள் கழித்து "செடிகளை வைத்துச் சொல்லம்மா" என்றேன். சரி என்று தலையாட்டி விட்டு "செடிகளில் இலைகள் பச்சையாக இருக்கும்" என்றாள். பாராட்டி விட்டு 'மரங்கள்' என்றேன், அதற்கு, அவள் "தோட்டத்தில் மரங்கள் உயரமாக இருக்கும்" என்றாள். அவள் சொல்வதைக் கேட்க கேட்க எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. அதன்பின் அவள் ஐந்தாம் வகுப்பு "READING CORNER"-ல் இருந்த புத்தகங்களை எடுத்து வாசித்துக் கொண்டு இருந்தாள்.

5. வாசிப்பிலும் பாடல் உருவாக்குவதிலும் ஆர்வம்: இந்தக் கருத்தாடல் அணுகுமுறையில் மாணவர்கள் தாங்களாகவே வாசிப்பில் ஆர்வம் காட்டினர். அனைத்துக் குழந்தைகளும் வாசித்தனர். இவர்களின் ஓய்வு நேர விளையாட்டே கவிதை எழுதுவது தான். எந்த ஒரு சொல்லையும் மையமாக வைத்து அவர்களால் சொந்தமாக 2 வரிகளை உருவாக்க முடிகிறது. இந்த அணுகுமுறையைத் தொடர்ந்து வருடம் முழுவதும் பயன்படுத்தினேன். அதன்மூலம் மாணவர்களின் ஒட்டு மொத்த மொழித்திறனும் ஒருமித்து வளரும் சூழல் இயல்பாகவே அமைந்து விட்டது. மேலும், மாணவர்களது பாடல்களில், வர்ணனை, பண்பு, பயன் போன்றவை இயல்பாகப் பயின்று வந்துள்ளன. மாணவர்களின் ஒட்டு மொத்த மொழித் திறனையும் ஒருமித்து வளர்க்கும் சூழல் இயல்பாகவே இவ்வணுகு முறையில் சாத்தியமாயிற்று. ஓய்வு நேரங்களில் மாணவர்களுக்குப் பாடல்கள் இயற்றும் தன்னார்வம் வளர்ந்தது. எந்த ஒரு சொல்லையும் மையமாக வைத்து அவர்களால் சொந்தமாக 2 வரிகளை உருவாக்க முடிகிறது. முதலாம் வகுப்பிலேயே என் மாணவர்கள் எனக்களித்த இந்தப் பரிசைவிட வேறென்ன வேண்டும் எனக்கு!



**கவிதா,** தொ.ப.ஆ, அ.தொ.ப. மணவெளி (அ)

# நடந்தது என்ன? - தமிழ்ப்பாடமும் நடந்தவைகளும்

• குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதில் ஆசிரியர் வெவ்வேறு முயற்சிகளை எடுக்க முடியும். அம்முயற்சிகளைப் பாடத்தின் மூலமாகவும் கொண்டு செல்ல முடியும்.

• குழந்தைகளுடன் உரையாடுதல், பெற்றோர் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தல், குழந்தைகள் பாதுகாப்பு மையத்தின் போன்ற சிறப்பு அழைப்பாளர்களுடன் பேசவைத்தல் மற்றும் பள்ளி அளவில் நிகழ்வுக்கு ஏற்பாடு செய்தல் எனத் தொடர் நிகழ்வுகளைச் செய்ய முடியும்.

• ஆசிரியர் கற்றலுக்குக் கமலாபாசின் அவர்களின் "யாரேனும் இந்த மவுனத்தைத் தகர்த்திருந்தால்" என்ற புத்தகம் பேருதவியாக இருந்தது.

**நோக்கம்**

- **பாடத்திட்டம்**

1) மாணவர் பாடத்தில் வரும் பாத்திரமாக மாறுவதற்கான சூழலை ஏற்படுத்துதல், கதை சொல்லல் மற்றும் பின் பாடத்தை வாசித்தல்.

2) **உரையாடல்**

விருந்தாளி அல்லது வித்தியாசமான மனிதர்கள் யார்?

புது இடம் - மறைவான இடம் பற்றி உணரவைத்தல்

நாங்கள் இருவரும் இப்பாடத்தைப் பற்றி ஒன்றாகத் திட்டமிட்டோம். ஆனால் வெவ்வேறு மாதிரி செயல்படுத்தியுள்ளோம். இரு வேறு அனுபவங்களும் உதவியாக இருக்கும் என்ற நம்பிக்கையில் சேர்ந்து பகிர்ந்து கொள்கிறோம்



## வகுப்பறையில் கலந்துரையாடல் (சுபாஷினி)

முதல் பகுதியை மாணவர்களுக்கு நான் திட்டமிட்ட படி செய்து முடித்து உரையாடலைத் தொடங்கும் பொழுது குழந்தைகளின் பதிலில் வித்தியாசங்களைப் பார்க்க முடிந்தது.

- திருடிட்டு போய்டு வாங்க.
- கொல பன்னிடுவாங்க.
- கடத்திடுவாங்க
- தொலைஞ்சி போயிடுவோம் என்ற பதில்களைக் கூறினர்.

செல்வி: தப்பா நடந்துக்குவாங்க - சைல்ட்லைன்ல (Child Line) சொன்னது மாதிரி என்று கூறினாள்.

கண்ணம்மா: தோப்புல ரெண்டு பேரயும் (பெயர்களைக் குறிப்பிட்டு) கூட்டிட்டுப் போயி தப்பா செஞ்சாங்க. நான் அவுங்க அம்மாகிட்ட போயி சொன்னேன். அவுங்க அம்மா அவள அடிஅடின்னு அடிச்சி வீட்ட விட்டே போகக்கூடாதுன்னு சொல்லிட்டாங்க.

வகுப்பறையில் இப்பாடம் முடிவடையாமல் இடையில் நின்றது. கண்ணம்மா குறிப்பிட்ட அந்தப் பெண்ணைக் கூப்பிட்டு பேசுவதா? அப்படிப் பேசினால் அடி வாங்கிய அவள் என்ன செய்வாள் என்ற கேள்வியுடன், இதைப்பற்றி உரையாடினேன். கமலாபாசின் அவர்களின் “யாரேனும் இந்த மவுனத்தைத் தகர்த்திருந்தால்” புத்தகம் கிடைத்தது; நானும் நாதனும் சேர்ந்து படித்தோம். புரிதல் உரையாடலில் விரிவானது. சென்ற ஆண்டு இது தொடர்பாக நான் பார்த்த படம், சைல்டு லைன் உரையாடல் என எல்லாவற்றையும் சேர்த்து ஒரு முடிவுக்கு வந்தேன். பெற்றோர் ஆசிரியர் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்தேன்.

## பெற்றோர் ஆசிரியர் கூட்டம்

பெற்றோர்களுக்கான கூட்டம் அடிக்கடி ஏதேனும் ஒரு விஷயத்தை முன்னிட்டு தொடர்ந்து நடந்து வருவதால் பெற்றோர்கள் இந்தக் கூட்டத்தை முக்கியமானதாகக் கருதி வந்திருந்தனர். குழந்தைகளின் பாதுகாப்பைப் பற்றிப் பேச அழைத்திருப்பதாகக் கூறி உரையாடத் துவங்கினேன். விளையாடும் பொழுது அடித்துக்கொள்கின்றனர், ரோட்டில் அலட்சியமாக நடந்து செல்கின்றனர், அவர்களை வீட்டில் தனியாக விட்டு விட்டுப் போகிறோம், சமூகத்தில் ஏதேதோ நடக்கிறது, பாதுகாப்புடன் இருக்காங்களா பாதுகாப்பு இல்லாம இருக்கங்களா? என்று துவங்கினேன்.

- நான்காம் வகுப்பு செல்வியின் அம்மா பேசத் துவங்கினார். “எங்கள் வீட்டிற்கருகில் குழந்தைக்கு ஒரு பிரச்சனை நடந்துச்சி. (அதை லேசாகக் குறிப்பிட்டு) போலீஸ் ஸ்டேசன் வரை போயிருக்கோம். என் மகளும் அவ கூட தான் இருப்பா… விளையாடுவா. ஆனா நீங்க பள்ளிக்கூடத்துல இதெல்லாம் சொல்லித்தறீங்கன்னு என் மகள் சொன்னாள்’ என்று முடித்தார்கள். அதற்காகச் சிலர் சிரித்தனர்.

மீண்டும் குறுக்கிட்டேன் “இது முக்கியமானதாக இருந்தால் பேசலாம். இதைப் பேசுவது தப்பு என்று நினைக்கிறீர்களா?” என்றதும் அமைதியாகினர். சிறு அமைதிக்குப்பின் மீண்டும் உரையாடத் துவங்கினர்.

- இரண்டு பேர் அப்பகுதியில் நடந்த சம்பவங்கள் சிலவற்றைக் குறிப்பிட்டனர். குழந்தைகள் காணாமல் போனது, வேலைக்கு நிம்மதியா போக முடியாதது எனச் சிலவற்றைக் குறிப்பிட்டனர்.
- அப்பாக்கள் - அமைதியாவே இருந்தார்கள் ஆனால் நன்றாக கவனித்தார்கள்.
- முக்கியமானது தான். நாங்கள் இது பற்றி வீடுகளில், தெருக்களில் பேசுகிறோம். குழந்தைகளைக் கண்காணிக்கிறோம் என்று முடித்தனர்.

கூட்டம் முடிந்ததும் பவானியின் அம்மா - “அவ குண்டா இருக்கிறதாலயும் சுத்தி பிரச்சனையா இருப்பதாலயும் பேசுங்க மிஸ். எனக்குப் பயமாவே

இருக்கு" என்று தனியாக வந்து பேசிவிட்டுச் சென்றார்கள்.

### அனைத்து மாணவர்களுடனும் உரையாடல்

மாணவர்கள் என்னிடம் பெற்றோர் கூட்டத்தில் என்ன பேசினீர்கள்? என்று கேட்டார்கள். அச்சமயம் எல்லா மாணவர்களையும் ஒரு இடத்தில் உட்கார வைத்து, மூன்றாம் வகுப்புப் பாடத்தைப் படித்து உரையாடலுக்குச் சென்றோம்.

பாதுகாப்பு என்றால் என்ன?

தனிப்பட்ட பாதுகாப்பு என்ன என்பதைப் பற்றிக் கேட்டோம்.

5 - ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ஒரே சிரிப்பு.

மூன்றாம் வகுப்பு மற்றும் ஐந்தாம் வகுப்பு மாணவர்கள் மட்டும் முறையாகப் பதிலளித்தனர். மொத்த பள்ளிக்கும் பாதுகாப்புப் பற்றிப் பேசியதோடு, சக மாணவர்களின் பாதுகாப்புப் பற்றிப் பேசி என்ன செய்ய வேண்டும் என விவாதத்திற்குப் பின் விவரித்தோம்.

### என் வகுப்பு: (நாதன்)

முதல் அனுபவம் என்பதால் யோசித்து யோசித்துச் செயல்பட்டேன். வகுப்பில் பெரும்பாலும் மாணவிகள் என்பதால் கட்டாயம் பாதுகாப்புக் குறித்துப் பேசியாக வேண்டும் என்ற உறுதி இருந்தது. எண்ணமும் திட்டமிடலும் வகுப்பறைக்கு உதவியது.

இப்பாடத்தைக் கதை போல சொல்லி பேசத்துவங்கினேன். தெரியாதவர்கள் கூப்பிட்டால் போகக்கூடாது, "என்னாது!" என்று ஒரு மாணவி சிரிக்கத் துவங்கினாள். சிரிப்பைக் கடந்து உரையாடலுக்கு இழுத்து வர பொறுமை தேவைப்பட்டது. ஏனென்றால் 'அவங்க கெட்டவங்களாக் கூட இருக்கலாம், ஏதாவது பன்னுவாங்க. ஆம்பள கூட பத்திரமா இருக்கனும்ன்னு சொல்லி முடித்ததும், ஆண்களுடன் கவனமா இருக்கிறதுன்னா என்ன?' என்று கேட்ட பொழுது, 'அவுங்க கிட்ட தனியா போகக்கூடாது' - என்று கூறினர்.

"நீங்கள் சொன்னது சரி தான். உங்களுக்குத் தெரிஞ்சவுங்க, தெரியாதவுங்க யாராக இருந்தாலும் தனியா வரச் சொன்னா போகக்கூடாது. நீங்கள் தனியா இருக்கும் பொழுது மடியில் உக்காரு என்றாலோ, முத்தம் தருகிறேன் என்றாலும் கூட அனுமதிக்கக்கூடாது. கட்டிப்பிடித்துக் கொஞ்சுவது, சட்டை, ஜட்டிக்குள் கை விடுவதையெல்லாம் அனுமதிக்கக் கூடாது" என்று விளக்கினேன். குழந்தைகள் சில கேள்விகளெல்லாம் கேட்டனர்.

"அண்ணன் சடையைப் பிடித்து இழுத்தாலும் அனுமதிக்கக்கூடாதா?" என்று கேட்டனர். "உங்களுக்கு அது பிடிக்காவிட்டால், வலித்தால், ரகசியமாகச் செய்தால்... அம்மாவிடம் சொல்லி அதை நிறுத்த வேண்டும்" என்று முடித்தேன்.

ஆனால் நான்காம் வகுப்புடன் இது பற்றிப்பேசுவது என்று பேசத்துவங்கினேன். இரண்டு மாணவிகள் வெட்கப்பட்டுக் கொண்டே சிரித்தனர், தலைகவிழ்ந்து, குனிந்து சிரித்துக்கொண்டனர். அதனால், மூன்றாம் வகுப்புப் பாடப்புத்தகத்தைக் கொண்டு வந்து அவர்களிடம் கொடுத்து வாசிக்கச் சொன்னேன், அவர்களும் வாசித்தனர். வாசிப்பு முடிந்ததும் உரையாடல் தொடர்ந்தது. கேள்விகளுக்குப் பதில் சொல்லாவிட்டாலும் கவனிக்கத்துவங்கினர். நல்ல தொடுதல் கெட்ட தொடுதல் பற்றிக் கூறினேன். "வெளியிலுள்ளவர்கள் வீட்டில் உள்ளவர்கள் யாராக இருந்தாலும் தனியாக அழைத்தால் யோசிக்க வேண்டும். அம்மா அப்பாவிடம் சொல்ல வேண்டாம் என்று சொன்னால் அவர்கள் ஏதோ தப்பு செய்கிறார்கள்" என்று எடுத்துக்கூறினேன்.

ஐந்தாம் வகுப்பிற்கும் மூன்றாம் வகுப்புப் புத்தகத்தை எடுத்துச் சென்று, நான்காம் வகுப்பு மாதிரியைப் பின்பற்றினேன். ஆனால் ஐந்தாம் வகுப்பு மாணவிகள் கெட்ட மனிதர்கள் என்பதற்கு நிறைய விளக்கம் அளித்தனர்.

"கறுப்பாக இருப்பார்கள்"

"போதையில் இருப்பார்கள்"

"பாலத்தின் குட்டைச்சுவரின் மேல் அமர்ந்து கிண்டல் செய்வார்கள்"

என விவரித்தனர். கெட்ட மனிதர்கள் சிகப்பாகவும் இருப்பார்கள்... படித்தவர்களாகவும் இருப்பார்கள் என்று அங்கு நான் சொல்லவில்லை, சொல்லியிருக்க வேண்டும் என்று மட்டும் எண்ணினேன். குழந்தைகளிடம் எப்படி நினைப்பதையெல்லாம் பேச முடியும்?

முதல் முறையாகக் குழந்தைகளிடம் பாலியல் துன்புறுத்தல், நல்ல தொடுதல், கெட்ட தொடுதல் பற்றிப்பேசியது, ஒரு நல்ல வேலையைச் செய்தது போல் இருந்தது. அடுத்தமுறை இன்னும் சிறப்பாகத் திட்டமிட்டு செயல்பட முடியும் என்ற நம்பிக்கையைத் தந்தது. சமீபத்தில், ஒரு நாள் "இப்புத்தகத்தில் உங்களுக்கு எந்தப்பாடம் பிடித்தது?' என்று அசிம் பிரேம்ஜியிலிருந்து வந்தவர்கள் என் வகுப்பில் கேட்டார்கள். அனைத்து மாணவர்களும் இப்பாடத்தைத் திறந்து இப்பாடம் தான் என்றனர். எனக்கு அது இன்னும் உந்துதலாக இருந்தது.

**குறிப்பு:**

- இப்பாடம் முதல் பருவத்தில் வந்திருந்தால் இன்னும் நிறைய தொடர் செயல்பாடுகளைச் செழுமையாக எடுத்துச் சென்றிருக்க முடியும்.

- இப்பாடம் நடத்தும் பொழுது, பாடத்தில் உள்ள மனிதர்களைப் புரிந்து கொள்ளுதல் பயிற்சியைக் கவனம் செலுத்த முடியவில்லை.

- பாடத்தில் நாம் உரையாட வேண்டிய விசயம் பொதுமைப்பட்டு இருப்பதால் எந்தக் குறிப்பிட்ட பாதுகாப்புப் பற்றி ஆசிரியர் பேச வேண்டியுள்ளது என்பது தெளிவாக இல்லை.

- எங்கள் பள்ளியிலுள்ள பகுதியில் 2 குழந்தைகள் பாலியல் தொல்லைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர், ஒரு குழந்தை காணாமல் போனது, குழந்தைகளுக்கிடையேயான சண்டையில் ஏற்படும் காயங்கள் எனப்பலவற்றை ஆசிரியராக உற்றுப்பார்க்க முடிந்தது. பல பெற்றோர்கள் இதைப்பற்றி உரையாடத் தயாராக இருந்தனர். இவையெல்லாம் ஆசிரியராக, நாம் பாடத்தின் மூலமாகவும் குழந்தைகளின் வெவ்வேறு சிக்கல்களைப் புரிந்து கொண்டு செயல்படவும் முடியும்... அது நம் கடமையாகவும் உள்ளது.

- இப்பாடம் மற்றும் இது தொடர்பான உரையாடலுக்குப் பிறகு மாணவர்கள் எங்களை நெருக்கமானவர்களாக உணர்ந்ததைக் கவனிக்க முடிந்தது.

- இப்பாடம் எப்படி நடத்தினீர்கள் என்று சில ஆசிரியர்களிடம் கேட்டோம். "வாசித்துவிட்டு விட்டுவிட்டோம், பெண்பிள்ளைகளைத் தனியாக அழைத்துப் பேசினேன்" என்பது போன்ற பதில்கள் மட்டுமே கிடைத்தது.

- வெவ்வேறு பள்ளி மாணவர்களிடம் கேட்ட பொழுது, "எங்களுக்கு இப்பாடம் நடத்தவில்லை, நாங்களே படித்தோம்" என்று குறிப்பிட்டனர்.

**உதவியவைகள்:**

- அசிம் ப்ரேம்ஜியில் நடந்த ஆசிரிய உரையாடல்.

- கமலாபாசின் அவர்களின் "யாரேனும் இந்த மவுனத்தைத் தகர்த்திருந்தால்" புத்தகம்.

கடந்த ஆண்டு சைல்ட்லைன் மூலம் நடந்த நிகழ்வு.



**அ. நாதன்,** தொ.ப.ஆ
அ.தொ.ப, சின்னகரையாம்புத்தூர்



**ஜி. சுபாஷினி,** தொ.ப.ஆ
அ.தொ.ப, நோணாங்குப்பம்

# நாடகம் வாயிலாகக் கற்றல்

- உச்சரிக்கும் திறனை மேம்படுத்துதல்.
- தனித்திறமையை வெளிக்கொண்டு வருதல்.
- குழு மனப்பான்மையை வளர்த்தல்.

நான்காம் வகுப்பில், 'தோழிக்கு விருந்து' என்ற பாடத்தை நடத்த நாடக முறையைக் கையாண்டேன். இந்த வகுப்பின் அனுபவங்களைத் தங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

### நாடக வடிவில் கற்றல் அமைவதால் ஏற்படும் பயன்கள்

வகுப்பு அமைதியாக இருப்பதோடு மாணவர்கள் ஆர்வமுடன் பங்கேற்பர். கல்வியில் பின் தங்கிய மாணவர்கள் கூட கற்றல் பொருளை எளிதில் புரிந்து கொள்வர். மாணவர்களிடம் உள்ள பயம், உச்சரிப்புப்பிழை, தாழ்வு மனப்பான்மை, கற்றலில் ஈடுபாடின்மை போன்றவற்றைக் களைய முடியும். மாணவர்களிடம் உள்ள தனித்திறமைகள் வெளிப்படும். ஆசிரியர் மாணவரிடையேயுள்ள தொடர்பு மேம்படும். அவர்கள் தயக்கமின்றித் தங்களின் கருத்துக்களை வெளிப்படுத்துவர். இது கற்றலுக்கு நல்லதொரு தொடக்கமாக இருக்கும்.

### பாடச்சுருக்கம்

எறும்பு, வெண்டைக்காய், கத்தரிக்காய், காரட் மற்றும் மரம் ஆகியோர் நண்பர்கள். ஒரு நாள், எறும்பு நண்பர்களுக்குப் பாயசம் செய்யும் முயற்சியில் பாயசப் பானைக்குள் விழுந்து விட்டது. ஒவ்வொரு நண்பரும் அடுத்தவரிடம் இச்சம்பவத்தைக் கூற முற்பட்டு தமது உருவத்தில் மாற்றம் ஏற்பட்டது. ஆனால், யாரும் நண்பரைக் காப்பாற்ற முயலவில்லை. இறுதியில் இதைப்பற்றிக் கேட்டறிந்த யாழினி என்ற பெண் ஓடிச் சென்று எறும்பைக் காப்பாற்றினாள், அவளுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை.



குண்டு குண்டு கத்திரிக்காய்,
உருண்டையான சுண்டக்காய்,
நீளமான முருங்கைக்காய்,
நீண்டுத் தொங்கும் புடலங்காய்,
பட்டை போட்ட வெண்டைக்காய்,
பச்சை நிற பாகற்காய்,
கொடியில் தொங்கும் அவரைக்காய்,
கோவை நிற மிளகாய்,
வாட்ட சாட்ட வாழைக்காய்,
வந்துப் பாரு என் தோட்டத்தில்!

### முன் ஆயத்தம்

பாடத்தைத் தொடங்குவதற்கு முன்பு, அனைத்து மாணவர்களின் மனநிலையையும் மகிழ்ச்சிக்கரமாக மாற்றுவதற்குப் பாட்டு, விளையாட்டு, கதை போன்றவைகளோடு வகுப்பை ஆரம்பிக்கலாம். நான் 'குண்டு குண்டு கத்தரிக்காய்.' பாடலைப் பயன்படுத்தினேன். இச்செயல்பாட்டுக்குப் பிறகு மாணவர்கள்

அனைவரும் கற்றலுக்கு ஆர்வமுடன் தயாராகினர். இது போன்ற செயல்கள் மகிழ்ச்சிகரமான கற்றலுக்கு வழி வகுக்கும்.

**நாடகமாக்கல் -கதைகூறல்**

தோழிக்கு விருந்து என்ற தலைப்பின் கீழ் உள்ள கதையை மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் கூறினேன்.

**நாடகப் பயிற்சி**

நாடகமாக்கல் செயல்பாட்டின் தொடக்கத்தில் மாணவர்களை இரண்டு குழுக்களாகப் பிரித்து, குழுவிற்கு ஒரு தலைவரை நியமித்தேன். மாணவர்களிடம் தாங்கள் நடிக்க விரும்பும் கதாபாத்திரம் பற்றியும் அவர்கள் உரையாட வேண்டிய குறிப்புகள் பற்றியும் கலந்துரையாடினேன். நாடகத்திற்குத் தேவையான முகமூடிகளை மாணவர்களே என் உதவியுடன் தயார் செய்தனர். ஒவ்வொரு மாணவரும் அவருடைய கதாபாத்திரத்திற்கு ஏற்ற உணர்ச்சிகளையும், வசனங்களையும், முகபாவங்களையும் வெளிப்படுத்தச்செய்தேன். சில, இடங்களில் மாணவர்களுக்கு என்னுடைய உதவி தேவைப்பட்டபோது உதவி செய்தேன். அவர்களின் முயற்சிக்குப் பாராட்டியது அவர்களை மேலும் ஊக்கப்படுத்தியது.

**கற்றல் வெளிப்பாடு:** இவ்வாறு புத்தகத்தில் உள்ள பாடங்களை மாணவர்கள் விரும்பும் வண்ணம் பல்வேறு செயல்பாடுகளை வடிவமைத்தல் கற்றல் மட்டுமல்லாது கற்பித்தலும் இனிமையாகும். இதன் வழியாக மாணவர்களின் உச்சரிப்புத்திறன் மேம்பட்டது, குழுமனப்பான்மை வளர்ந்தது, கற்பனைத்திறன் பெருகியது, விடாமுயற்சி, தன்னம்பிக்கை, பிறருக்கு உதவி செய்தல் போன்ற பண்புகள் மெருகேறியது.



**க.தேன்மொழி,** தொ.ப.ஆ, அ.தொ.ப., ஏம்பலம்

# உரையாடலினால் ஏற்படும் வகுப்பறை மாற்றங்கள்



- வகுப்பறையில் உரையாடலின் முக்கியத்துவம் மற்றும் கல்வியில் அதன் பங்கு.
- மாணவர்கள் மற்றும் ஆசிரியருக்கும் இடையேயான புரிந்துணர்வு.

அரசுப் பள்ளியில் என் ஆசிரியப்பணி 2016 ஆண்டில் துவங்கியது. என் பள்ளி காரைக்கால் மாவட்டத்தில் போலகம் என்னும் ஊரில் அமைந்துள்ளது. இங்கு 201 மாணவர்களும், 6 ஆசிரியர்கள் மற்றும் 1 தலைமையாசிரியர் உள்ளனர். முதல் வகுப்பு மாணவர்களுக்கு மட்டும் அனைத்துப் பாட ஆசிரியராக பணியாற்ற விரும்புவதை என் பள்ளி பொறுப்பாசிரியருக்குத் தெரிவித்தேன். ஆனால், அவர் உட்பட என் சக ஆசிரியர்கள் எவரும் நான் அவ்வாறு பணியாற்றுவதை விரும்பவில்லை. என்னை அனைத்து வகுப்பிற்கும் பாடம் கற்பிக்க வேண்டும் என்று கூறினார்கள். நான் என் குறிக்கோளை விட்டு சிறிதும் பின் வாங்கவில்லை. மீண்டும் மீண்டும் முதல் வகுப்பிற்குப் பாடம் நடத்த வாய்ப்பு வேண்டும் என்று தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தேன்.

உலகில் உள்ள பெரும்பான்மையானவர்கள் உலகிற்கு ஏற்றபடி தங்களை மாற்றிக் கொள்கின்றனர். ஆனால் சில முரண்பட்ட மனிதர்கள் மட்டுமே தங்களுக்கு ஏற்றப்படி உலகை மாற்றியமைப்பதில் சலிக்காமல் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். உலகத்தின் முன்னேற்றம், மாற்றம் மற்றும் மறுமலர்ச்சி இவர்களைச் சார்ந்தே நடைபெறுகின்றது. இவ்வரிகளுக்குப் பொருத்த மானவர்கள் எனக்குக் கல்வி கற்பித்த ஆசிரியர்கள். இவர்களின் மாறுபட்ட கற்பித்தல் விளைவாகவே நான் ஆசிரியர் ஆகும் வாய்ப்பினைப் பெற்றேன். என் ஆசிரியர்கள் போல நானும் திகழ விரும்புகிறேன். மேலும் வலுசேர்க்கும் விதமாக என்னை மேம்படுத்திக் கொள்ளவே நான் என்னை ஆசிரியர் வட்டத்தில் இணைத்துக் கொண்டேன். பின்பு என் எண்ணத்தை எங்கள் பள்ளி துணை ஆய்வாளரிடம் கூறினேன். அவர் என் சிந்தனைக்குச் செயல் வடிவம் தர வாய்ப்பினை அளித்தார். இத்தருணத்தில் அவருக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் மட்டும் இவ்வாய்ப்பினை எனக்கு அளித்திருக்காவிட்டால் இவ்வருடம் என் மாணவர்களிடம் நான் கற்கும் வாய்ப்பினை இழந்திருப்பேன்.

## செடியும் மாணவர்களும்...

நான் பலமுறை என் மாணவர்களிடம் பேசியுள்ளேன். மேலும் மரம், செடிகளுக்குக் கேட்கும்திறன், தொடு உணர்வு உள்ளது என்பதை நான் பல்வேறு நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டி கூறியுள்ளேன். இதனை மாணவர்கள் செயல் வடிவத்துடன் உணர்வு பூர்வமாக கற்கவேண்டும் என எண்ணி நெல் விதைத்து வளர்க்கத் தொடங்கினோம். ஒவ்வொரு மாணவரும் தனித்தனியாக விதைத்துப் பராமரித்தார்கள்.

பள்ளிக்கு வந்ததும் தண்ணீர் ஊற்றுவார்கள். வெயிலில் எடுத்து வைத்துப் பராமரிப்பர். பள்ளி முடியும் போது திரும்ப வகுப்பறையில் எடுத்து வந்து வைத்து தண்ணீர் ஊற்றி வளர்ப்பர். இதனை தினமும் தொடர்ச்சியாகச் செய்வர். அந்த நெல் விதையிலிருந்து துளிர் வந்ததும் சந்தோஷத்தில், "மிஸ் என் செடி வளர்ந்துடுச்சு..., வாங்க பாருங்க", என்பர். அது சிறிது வளர்ந்தவுடன் அதனை அழகாக வருடிவிடுவர். என்னிடம் சொல்வார்கள், "மிஸ் நீங்கதானே சொன்னீங்க செடிகிட்ட, பேசுனா, வருடிவிட்டா அதுக்குப் புரியும், சீக்கிரமா வளரும்னு, நான் செஞ்சிட்டேன்" எனச் சொல்லி சந்தோஷம் அடைவார்கள்.

இவை எனக்கு மிகுந்த மகிழ்ச்சியையும், நெகிழ்ச்சியையும் ஏற்படுத்தியதோடு மட்டுமல்லாமல் சிந்திக்கவும் தூண்டியது. இந்நிகழ்வு என் மாணவர்களுக்காக மேலும் நான் எப்படி பணியாற்ற வேண்டும் என்ற உத்வேகத்தினை ஏற்படுத்தி என்னை அவர்களுக்காக முழுமையாக செயல்பட வைத்தது என்றே கூற வேண்டும்.

## அடுத்த வாரம் என்ன செய்யப் போகிறோம்?

வாரத்தில் இரு நாட்கள் என் வகுப்பறையின் செயல்பாடுகளைப் பற்றி என் மாணவர்களுடன் நான் கலந்துரையாடுவது வழக்கம். அப்போது என் மாணவர்கள் அவர்களுக்குப் பிடித்த நிகழ்வு, பிடித்த தருணம் மற்றும் அவர்கள் உணர்ந்தவற்றைக் கூறுவார்கள். நான் அதற்கு ஏற்றார் போல் அடுத்த வாரச் செயல்பாடுகளை அமைத்துக் கொள்வேன். இவ்வாறாகப் பாடம் திட்டமிடுவதில் என்னோடு சேர்ந்து அவர்களின் பங்களிப்பும் இருப்பதை நான் உறுதிசெய்வேன்.

இவ்வாறு மாணவர்களுடன் ஓர் ஆசிரியர் தனது வகுப்பறையில் உரையாடும் பொழுது பல நல்ல மாற்றங்கள் ஏற்படும். மாணவர்கள் மற்றும் ஆசிரியருக்கும் இடையேயான புரிந்துணர்வு மேலும் வலுப்பெறும் என்பதை அனுபவப்பூர்வமாக உணர்ந்திருக்கிறேன் என்பதை இங்கு மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்கிறேன்.



**பரமேஸ்வரி,** தொ.ப.ஆ, அ.தொ.ப., போலகம், காரைக்கால்



# மேடையில் ஆயிஷா

## இன்றைய கல்விக் கூடங்கள்

கல்வி வியாபாரமாகிவிட்ட இன்றைய சூழ்நிலையில், கல்வி நிறுவனங்கள் போட்டி போட்டுக் கொண்டு மாணவர்களின் அறிவை வளர்க்கின்றோம் என்ற பெயரில் வங்கியில் பணத்தைச் சேமிப்பது போன்று மாணவர்களின் மூளையில் தகவல்களைச் சேகரிக்கத்தான் முனைகின்றனர். வகுப்பறைச் செயல்பாடுகளும் மாணவர்களை வளப்படுத்துவதாக இல்லாமல் சிறுமைப்படுத்துவதாக உள்ளது. இதனால் தான் இன்றைய நாளிதழ்களில் அடிக்கடி வகுப்பறைக்குள், பள்ளி வளாகத்திற்குள் மற்றும் பள்ளி விடுதியில் மாணவர் தற்கொலை என்ற செய்திகளைப் படிக்க வேண்டியுள்ளது. இதை வெளிப்படுத்தும் விதமாகத்தான், “Shut Up மணியடிச்சு எவ்வளவு நேரமாச்சு? ஏன்? இன்னும் என்ன அங்க சத்தம்? யார் கையிலேயும் புத்தகத்தக் காணோம். ஏய் அங்க என்ன சத்தம்? அடி பிச்சிருவேன் கம்முன்னு உட்காரு. ஏய் உனக்கென்ன வேணும், அங்கென்ன சத்தம் வந்திட்டு இருக்கு”, என்று சொல்லிகொண்டே இருக்க மற்றொரு புறம் வகுப்பறைகளில் பாடம் நடத்தும் சத்தங்களும் கேட்கின்றது. “மிஸ், மிஸ் என்ற தழுதழுத்த குரலோடு எனக்கு ஒரு சந்தேகம் மிஸ். உனக்கென்ன சந்தேகம். மிஸ் அடிக்காதீங்க மிஸ், மிஸ் வலிக்குது மிஸ். கேள்வி கேட்குறது தப்பா, தப்பா”, என்ற கோஷத்துடன் இந்த ஆயிஷா நாடகம் துவங்குகிறது.

## ஆயிஷா - அறிமுகம்

ஆயிஷா மற்ற மாணவிகள் போன்று ஆசிரியர்களின் குரலுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்காமல் எதையும் ஆராய்ந்து பார்க்கும் ஆர்வமும், புதிய விசயங்களைக் கற்றுக் கொள்ளும் முனைப்புடனும் ஒரு விஞ்ஞானி போல் காணப்படுவாள். அதனால் அவள் மேல் மிகுந்த அக்கறை கொள்கின்றார் அவளுடைய அறிவியல் ஆசிரியர். அவர் பள்ளியில் ஆசிரியராக மட்டுமில்லாமல் மாணவிகள் காப்பாளராகவும் பணியாற்றுகின்றார். ஒரு அறிவியல் ஆசிரியர் ஒருவர் தன்னுடைய பழைய நினைவுகளை அசை போட்டு எனக்கு ஆயிஷாவ ரொம்ப பிடிக்கும், ஆயிஷாவ ரொம்ப பிடிக்கும் என்று சொல்லி கொண்டே சிறிது நேரத்தில் கண்ணே ஆயிஷா, ஆயிஷா என்று கதறி அழ ஆரம்பித்து விடுகின்றார். என் ஆய்ஷாவ தெரியுமா உங்களுக்கு என்று சொல்லிவிட்டு, ஒரு கிறிஸ்துவ பள்ளியில் எட்டு வருடங்களுக்கு முன்பு தான் பணியாற்றிக் கொண்டிருக்கும் பொழுது, அங்கு 10 ஆவது B பிரிவில் படித்தவள் தான் ஆயிஷா என்று

தன்னுடைய கடந்தகால ஆயிஷாவின் வகுப்பறை நிகழ்வுக்குச் சென்றுவிடுகின்றார்.

### ஆயிஷாவின் அறிவியல் அறிவு

அன்று காந்தவியல் பாடத்திற்காகக் கரும்பலகையில் செவ்வக வடிவில் காந்தத்தை வரைந்து மாணவிகளுக்குப் பாடம் நடத்திக் கொண்டிருக்கின்றார் அறிவியல் ஆசிரியர். அப்பொழுது அருகில் அமர்ந்திருக்கும் மாணவி வலுக்கட்டாயமாக ஆயிஷாவின் கையைப் பிடித்து உட்கார வைக்கும் முயற்சியையும் மீறி காந்தவியல் பற்றிய தனது கேள்விகளைத் துவக்க நினைக்கின்றார். அதற்கு வாய்ப்பளிக்காமல் ஆசிரியர் வகுப்பைத் தொடர மீண்டும், மீண்டும் தொந்தரவு செய்து வகுப்பு நேரம் முடிந்து விடுகின்றது. கோபத்துடனே திட்டிவிட்டு வகுப்பறையை விட்டு வெளியேறும் ஆசிரியரைப் பின் தொடர்கின்றாள் ஆயிஷா. ஒரு கட்டத்திற்கு மேல் உன் சந்தேகம் தான் என்ன சொல்லு என்ற ஆசிரியர் அனுமதித்த அடுத்த நிமிடம் ஒரே பரபரப்புடனும், பரவசத்துடனும் தனது கேள்விகளை ஆரம்பித்து விடுகின்றார்.

வட துருவம் வந்து தென் துருவத்த இழுத்துடுமின்னு நீங்க சொன்னீங்கள்ல, அப்போ வடக்கே இருக்குற காந்தம், ஏற்கனவே இழுத்துட்டு தானே இருக்கும். எல்லா காந்தத்தோட கவர்திறனும் ஒன்னுன்னு நாம வச்சுக்கிட்டா அது ஒட்டிக்கிறதுக்கு வாய்ப்பே இல்லையே. அது ரெண்டு பக்கமும் நகராம அப்படியே தானே இருக்கும். இதே கோணத்துல, பூமியில இருக்குற காந்தத்த நாம ஆராய்லாம்ல என்று கேட்டுக் கொண்டே ஆசிரியரின் அருகில் நகர்ந்து இத பாருங்க மிஸ் என்று தன் கையிலிருக்கும் புத்தகத்தை ஆசிரியரிடம் காண்பிக்கிறாள். மிஸ் இங்க பாருங்களேன், 'The truth of Magnets' அருமையா இருக்கு. நீங்க படிச்சிருக்கீங்களா மிஸ். ஆயிஷா நீ இந்த புக்கெல்லாமா படிக்கிற? இதெல்லாம் ரொம்ப அறிவுத்திறனுள்ள புக்காச்சே? இது எப்படி உனக்கு கிடைச்சது என்ற வியந்து போய், அந்த நொடியிலிருந்து ஆயிஷாவின் அபிமானியாகி விடுகின்றார் அறிவியல் ஆசிரியர். பின் அறைக்கு வந்து ஆயிஜா கொடுத்த புத்தகத்தில் இருக்கும் மாவட்ட நூலகத்தின் முத்திரையைப் பார்த்தும், அவள் அடிக் கோடிட்டுப் படித்திருக்கும் விசயங்களைப் பார்த்தும் ஆயிஷாவைப் பற்றி மிகுந்த பெருமிதம் கொள்கிறார் ஆசிரியர். பின்பு அடிக்கடி தன் அறைக்கு வர அனுமதித்து உணவு பரிமாறி அவளுடன் அறிவையும் உறவையும் பகிர்ந்து கொள்கிறார்.

### ஆயிஷா ஆசிரியர்களுக்கு அந்நியமானவள்

ஒரு நாள் பள்ளியிலுள்ள ஆசிரியர்கள் ஒய்வறையில், 11 ஆம் வகுப்பு கணித ஆசிரியர் தன்னுடைய மாணவிகளின் பெரும்பாலானோர் கணக்கு வீட்டுப்பாட நோட்டில், ஆயிஷா வீட்டுப் பாடம் எழுதி கொடுத்திருப்பதைக் கண்டுபிடித்து அடித்ததோடு மட்டுமில்லாமல் பள்ளி முதல்வரிடம் கொண்டு சென்று, அவள் பாதுகாவலரை வரச் சொல்லி பள்ளி மாற்றுச் சான்றிதழ் வழங்கவும் ஏற்பாடுகள் செய்துவிட்டதாக, சக ஆசிரியரிடம் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டு அறிவியல் ஆசிரியர் மிகுந்த வேதனைக்கு உள்ளாகிறார். உடனே ஆயிஷாவை பள்ளி முழுவதும் தேடியும் கிடைக்காமல் பரிதவிக்கும் பொழுது தூரத்தில் தன்னுடைய பாதுகாவலருடன் ஆயிஷா வருவதைப் பார்க்கிறார். பின்பு ஆயிஷாவின் பாதுகாவலரும் பெற்றோர்கள் இல்லாத இவளால் நாங்கள் எப்படி கஷ்டப் படுகின்றோம் பாருங்கள், ஒரு பத்தாவது வரையாவது படிக்கட்டும் என்று நினைகின்றோம் என வருத்தப்பட்டு, இனிமேலும் இவ்வாறு நடந்து கொள்ளாதவாறு புத்திமதி சொல்லச் சொல்லி அறிவுறுத்துகின்றார்கள்.

### அறிவியல் ஆசிரியரின் அரவணைப்பு

பாதுகாவலர் சென்றதும் கட்டியணைத்து, ஏன் ஆயிஷா என்கிட்ட எதுவுமே சொல்லல? என்று வேதனையோடு காணப்படும் ஆயிஷாவை மாலை தனது அறைக்கு வரச் சொல்லிவிட்டு சென்றுவிடுகின்றார். மெழுகுவர்த்தி எரிஞ்சா நல்லா வெளிச்சம் தெரியுது; ஆனா வெப்பம் கம்மியா இருக்கு? அடுப்பு எரிஞ்சா நிறைய

வெப்பம் இருக்கு; ஆனா வெளிச்சம் கம்மியா இருக்கு? துணி சோப்பு அழுக்கு நீக்குறதுக்கும், குளிக்கிற சோப்பு அழுக்கு நீக்குறதுக்கும் என்ன வித்தியாசம்? என்று ஆயிஷா வகுப்பறையில் கேட்ட கேள்விகளையெல்லாம் நினைத்துக் கொண்டே, ஆயிஷா தன் அறைக்கு வருவதற்காகக் காத்திருக்கின்றார். அப்பொழுது ஆயிஷா வருகின்றாள், வரும்பொழுதே கையில் புத்தகம் ஒன்றைக் கொண்டுவந்து ஆசிரியரைப் பார்த்ததும் மிகவும் பரபரப்பாக அந்தப் புத்தகத்தைப் பற்றி விவரிக்கிறார். தான் கொண்டு வந்திருப்பது The Most Dangerous Man in America by Benjamin Franklin என்று சொல்லிவிட்டு பிராங்களின் கண்டுபிடிப்புகளைப் பற்றிப் பேசும் பொழுது அவளது முகத்தில் சந்தோஷம் பொங்குகின்றது. அறிவியல் ஆசிரியருக்கும் பிராங்களினை ரொம்பப் பிடிக்கும் என்பதால் அவரும் ஆய்ஷாவை அரவணைத்துக் கொண்டு அறிவு பொண்ணுடா நீ, இந்த வயசுல உனக்கு இவ்வளவு அறிவாடா என்று வியக்கின்றார்.

## ஆயிஷா - ஆசிரியர்களுக்கெல்லாம் ஆசிரியர்

அந்த சந்தோசத்திலே ஆசிரியர் அவளுக்கு உணவு சமைக்க, ஆயிஷா ஆசிரியரின் புத்தகங்களையெல்லாம் எடுத்துப் படிக்கின்றாள். அப்பொழுது ஆங்கிலத்தில் ஒரு சில வரிகள் புரியாததால் ஆசிரியரிடம் விளக்கம் கேட்கிறார். திடீரென ஏதோ தோன்றியது போன்று மிஸ், மிஸ் நீங்க ஏன் இந்த புத்தகங்களைத் தமிழில் எழுதக்கூடாது என்றதும் ஆசிரியர் ஒரு நிமிடம் தன்னை மறந்து ஆயிஷாவையே பார்த்துக் கொண்டிருக்க, ஆயிஷாவோ மிஸ் ஏன் மிஸ் நீங்க எழுதுங்க மிஸ் என்று மீண்டும் நிச உலகத்துக்கு கொண்டு வர, நான் உனக்காக எழுதுரேன்டா என்று கட்டியணைத்து கண்ணீர் வடிக்கின்றார். சரி சரி நான் உனக்காக எழுதுறேன் ஆனா நீ இனிமேல் நூலகத்திலிருந்து புக்கைத் திருடக்கூடாது, புக்கு வேணும்னா என்கிட்ட கேளு என்ற சொன்னவுடன், போங்க மிஸ் நான் தான் படிச்சிட்டு அங்கே வச்சுடுறேனே, என்று நமட்டுச் சிரிப்பு சிரித்துக் கொண்டே அறையை விட்டு கிளம்புகின்றாள்.

## கேள்வியே வேள்வி

ஆயிஷாவின் கைப்பையிலிருந்து லென்ஸ், ஆய்வகத்தில் பயன்படுத்தும் பொருட்கள் ஒவ்வொன்றாக வெளியே எடுத்தவாறே, குழந்தை தன்னை உணர்ந்து கேள்வி கேட்க நாம அனுமதிக்கின்றோமா? என்று சக ஆசிரியர்களின் அடக்குமுறைச் செயல்பாடுகளை மிகுந்த கோபத்துடனும், ஆவேசத்துடனும் சுட்டிக்காட்டுகிறார். அப்பொழுது அழவும் முடியாமல் அழாமல் இருக்கவும் முடியாமல் ஒரே தவிப்புடன் அங்கு வரும் ஆயிஷா ஆசிரியரைப் பார்த்ததும் தடுமாறுகின்றார். என்ன ஆயிஷா என்ன ஆச்சு என்று கேட்பதற்கு தனக்கு ஒன்றும் இல்லை காலில் சிறிது காயம் அவ்வளவு தான் மிஸ் என்று தட்டிக் கழிக்கிறாள். ஆயிஷாவின் காலை பார்க்கும் ஆசிரியர் அதிர்ச்சியில் உறைந்து விடுகின்றார். கண்களில் கண்ணீர் ததும்ப ததும்ப கணக்கு மிஸ் பேப்பர் கொடுத்தாங்க, நான் எழுதினதுக்கு ஏன் மார்க் போடலனு கேட்டதற்குச் சொந்த சரக்குக்கு எல்லாம் மதிப்பெண்கள் போட முடியாதுன்னு சொல்லிட்டாங்க. அதுமட்டும் இல்லாமல் நான் 10 ஆம் வகுப்பு படிப்பதால் நோட்ஸ்ல இருக்குறத அப்படியே எழுதணுமாம், நோட்ஸ்ல தப்பிருந்தா என்ன பண்றதுன் கேட்டதுக்கு என்ன செம்ம அடி அடிச்சுட்டாங்க மிஸ்னு சொல்லிட்டு வலி தாங்காமல் அழும் பொழுது நமது இதயம் கணத்து விடுகின்றது.

## வரலாறும் - வலியும்

அன்னைக்கு வரலாற்று ஆசிரியரிடம் அசோகரைப் புத்த மதத்திற்கு மாத்தினது யாருன்னு கேட்டேன், அவுங்க புத்த பிட்சு ஒருத்தருன்னு சொன்னாங்க. அவர் பெயர் என்னனு கேட்டுட்டு நானே உபகுதர்னு சொன்னதுக்கு, உனக்கு தெரிஞ்சிருக்கிறதால எனக்கு தெரிஞ்சிருக்கா இல்லயானு டெஸ்ட் பண்ணுறையானு போட்டு அடி அடினு



அடிச்சுட்டாங்க மிஸ் என்றதும் ஆயிஷாவின் கன்னத்தோடு கன்னம் ஒட்டிக்கொண்டு, தானும் அழுது கொண்டே என்னோட ஆயிஷா அழக்கூடாது என்று தேற்றுகிறார். நான் டியூசனுக்கு எதுவும் போறதில்ல அதனால தான் ஆசிரியர்களால பழிவாங்கப்படுறேன். தொடர்ந்து கேள்வி மேல கேள்வி கேட்டா யாருக்குத் தான் பிடிக்கும்? அவுங்க செய்யுற வேலையைக் கடினமாக்கினா யாருக்குத் தான் பிடிக்கும்? அதனால தான் என்னை யாருக்கும் பிடிக்க மாட்டீங்கிறது? மாணவர்கள் அடிவாங்காம, திட்டு வங்காம எந்தவொரு விசயத்தையும் கத்துக்க முடியாதா? மாணவர்கள் கேள்விகேட்பது அவ்வளவு பெரிய குற்றமா? என்று ஆசிரியரிடம் கேட்டுக் கொண்டே அழுகின்றாள். மிஸ் வலி ரொம்ப வலிக்குது மிஸ், எனக்கு வலிக்காம இருக்க ஏதாவது உதவி செய்கிறீர்களா என்று ஆசிரியரிடம் கேட்கும் போது அனைவருக்கும் கண்ணில் கண்ணீர் ததும்பி விடுகின்றது. அன்று இரவு வலியிலும் வேதனையிலுமே நகர்கின்றது.

மறுநாள் விடுமுறை என்பதால் ஆயிஷாவின் வருகைக்காகக் காத்திருக்கும் ஆசிரியருக்கு வாயிற்படியில் ஏதோ ஒரு மாணவி அழைப்பது ஆயிஷா அழைக்கிறாள் என்பது போன்று ஓடுகின்றார். ஆயிஷா வேதியியல் ஆய்வுக்கூடத்திற்கு அருகில் இருக்கிறாள் உங்களை அழைத்து வரச் சொன்னார் என்று மற்றொரு மாணவியின் குரல் கேட்க இன்னும் வேகம் எடுத்து ஓடுகின்றார் வேதியியல் ஆய்வுக் கூடத்தை நோக்கி.

## அழிவிலும் அறிவியல்

வேதியியல் கூடத்தில் ஆயிஷா நைட்ரஜன் ஆக்ஸைடை குடித்துவிட்டு குற்றுயிரும், குறையுயிருமாய் கிடப்பதைப் பார்த்து பதபதத்து போய் தன்னுடைய மடியில் தூக்கி வைத்து கதறுகின்றார். என்னடி ஆச்சு என்பவரிடம் தன்னுடைய தீராத வலிக்கு மருந்து கிடைத்து விட்டதாய், அதனை வைத்து தவளைக்குப் பரிசோதனை செய்த பின்னர் தானும் குடித்து விட்டதாகவும் தனக்கு தற்போது குச்சியால் அடிப்பது கூட உணரமுடியவில்லை என்று சிறிது சிறிதாக தன்னுடைய வலியிலிருந்தும், உலக உணர்விலிருந்தும் பிரிந்து பயணிக்க ஆயத்தமாகிறாள். ஆசிரியரும் உடன்வந்த மாணவியும் கதறி அழ, அரங்கமும் அழுகையில் மூழ்கிவிடுகின்றது. இறுதியாக. நான் ஆயிஷா பேசுறேன், நான் உங்களை எல்லாம் ஒர் கேள்வி கேட்கிறேன். மேரி க்யூரி போல, கரோலின் போல நம்ம நாட்டுல பேர் சொல்லுற மாதிரி ஒரு பெண் கூட விஞ்ஞானியா வர முடியல ஏன்? ஏன்? என்று இன்னும் நிஜ உலகில் பயணிக்கின்ற எத்தனை ஆயிஷாகளுக்கு எல்லாம் ஒரு பதில் கிடைக்க வேண்டும் என்று தன் பயணத்தைத் துவங்குகின்றாள். கீழ்க்காணும் பாடலோடு ஆயிஷாவின் பயணம் முடிவடைகின்றது.

“போகுமோ பயணம், பொசுங்குதே ஜனனம்,
கல்விச் சாலைகளே, பிள்ளை கண்ணீர்
குடிக்காதே (போகுமோ..)
கையில் தடி எடுத்து, நீ பாடம் புகட்டாதே
எங்கள் கையில் தீ கொடுத்து, கொல்லித்
தீயாய் மூட்டாதே, (போகுமோ..)
பூ விதையைத் தரும் மரங்கள் தோண்டி
அழிக்காதே,
ஒளி வலையை இருள் மனங்கள் மூடி
அழிக்காதே, (போகுமோ..)
அதிகாரம் என்னும் தூணெடுத்து
வகுப்பறையை வாய்க்காதே,
பள்ளிக் கூடங்களைப் பலிகாடாய் மாற்றாதே
(போகுமோ..)
கேள்விகள் பிள்ளையின் படிப்புரிமை,
ஆராய்வது அவர்களின் பிறப்புரிமை
(போகுமோ..)”

# கல்வியில் ஜனநாயகம் - நாடகம்



2018 ஆம் ஆண்டு மேடையில் திசைமானி கருத்தரங்கிற்காக தயாரிக்கப்பட்டு நாடகம் அரங்கேற்றப்பட்டது. கலைஞர் அருணகிரி அவர்களால் பயிற்சியளிக்கப்பட்டு ஆசிரியர்கள் சுபாஷினி, ஜேம்ஸ், கேஷவர்தினி, பரமேஷ்வரி, ராஜதிலகம், நாதன் ஆகிய ஆசிரியர்கள் பங்கேற்றனர். சிவப்பு பால் பாயின்ட் பேனா, குட்டி இளவரசன் ஆகிய நூல்களை மையப்படுத்தி காட்சிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்நாடகத்தின் காட்சிகள் ஆசிரியர்களுக்குள்ளும், ஆசிரிய மாணவர்களுக்குள்ளும், மாணவர்களுக்குள்ளும் என ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளது. முழு நாடக வசனங்களையும் பதிப்பிக்க முடியாமல் கடந்துள்ளோம். ஆனால் முழு நாடகக்காட்சி website ல் வெளியிடப்படும்.

வகுப்பறைக் காட்சி - நேரம் காலை 10 மணி

(பொதுவாக மாணவர்களை ஆசிரியர்கள் நடத்துகின்றனர் என்பதும், எப்படி நடத்த வேண்டும் என்பதையும் முன் வைக்கும் காட்சி.)

நபர் 1:ஏய்..... ஸ்ஸ்ஸ்... பேசாத ... வாய மூடு... ஏன் கத்தி தொலைக்கிறீங்க... நீங்கள், ஏன் ஸ்கூலுக்கு வரீங்க

நபர் 2: கேட்டீங்களா... கேட்டீங்களா... தினமும் மாணவர்கள் இதைத்தான் கேட்குறாங்க. யார் இந்த அதிகாரம் கொடுத்தது. பிறக்கும் போதே நீங்க ஆசிரியரா?, இல்ல இந்த நாற்காலியில் உட்காரும் போது இந்த அதிகாரம் வந்ததா?

இந்த அதிகாரம் வேணுமா?...

நபர் 3: ஹேய்... என்னா அழகா வரைஞ்சிருக்க மணி... கையக் கொடு..

நபர் 4: ஹேய்... சூப்பரா வரைஞ்சிருக்க... நல்ல பிள்ளை

மாணவர்கள் காலையில் பள்ளிக்குக் கிளம்பும் காட்சி

(மாணவர்கள் ஜா... பூட்... விளையாடிக் கொண்டிருக்கின்றார்கள்)

மாணவி 1: ஏய் வாடி ஸ்கூலுக்குப் போகலாம். நேரம் ஆகிடுச்சு.

மாணவி 2: நான் வர்ல, நேத்து டீச்சர் அடிச்சு கை வீங்கிடுச்சு.

மாணவி3: ஸ்கூலுக்கு வர்லனாதாண்டி அடிப்பாங்க. வா போகலாம். ராஜி நீ!

மாணவி (1): ஏய் நாதன், இன்னுமா விளையாடுற? வா ஸ்கூலுக்குப் போவோம்.

மாணவி 4: ஐயயோ... நானும் வரலை... எனக்குக் காலில் காயம்.

ஏய் நாதன்... உங்கப்பா வரார்...

மாணவர்கள்: என்னாது அப்பாவா?... அப்ப நாங்களும் ஸ்கூலுக்கு வரோம்.

(திமுக்கு திக்காவா... திமுக்க திக்காவா... பாடல்)

(மாணவர்கள் பள்ளிக்கு விரைகின்றனர். பள்ளியில்)

(வித்தியாசமான / பழமையான ஆசிரிய உரையாடல் - காட்சி)

மாணவர்கள்: Good Morning Siiiiiiiiiiiiiiiiiiiiiiiiir...

ஆசிரியர் 1: (அலட்சியமாக) Good Morning பசங்களா...

மாணவர்கள்: சார்... நீங்க? இங்க இருக்கீங்க?

ஆசிரியர் 2 :(சலிப்பாக) இங்கஞ் சரி...நேத்து நான் எங்க இருந்தேன்?

மாணவர்கள்: சார்... நான் சொல்றேன் சார்...( பல மாணவர்கள் கத்தினர்)

ஆசிரியர் 2: ச்சீ... ச்சீ... ச்சீ... அமைதியா இருங்க.... ஏய்... நீ சொல்லு.

மாணவி 2 : சார் நீங்க வீட்ல இருந்தீங்க சார்...

ஆசிரியர் 2 :ஏய்.. அடச் சீ... பாடத்துல, எங்க இருந்தோம்னு கேட்டா...

மாணவன் 2 : சார்... சார்... நான் சொல்றேன் சார்...

ஆசிரியர் 2 : டேய்... சொல்லு. . எங்க இருந்தேன்?

மாணவன்2 : அது வந்து... அது வந்து... மாடு... மாடு...

ஆசிரியர் 2 : ச்சீ... (அடித்துக் கொண்டே) உட்கார். நேத்து கொடுத்த Homework எடு .

மாணவி 1 : சார்... நான் எழுதல சார்...

ஆசிரியர் 2 : ஏன்... ஏன்... நீ எழுதல? (முட்டிப் போடச் சொல்கிறார்)

(மாணவர்களை அடிமைப்படுத்துவது பற்றிய பாடல்)

ஆடு பொம்மை .. அடங்கு பொம்மை (2)

கதறு பொம்மை பதுங்கு பொம்மை

நீங்க எல்லா என் பொம்மை?

பொம்மை... பொம்மை... நீங்க எல்லாம் என் பொம்மை...

மாணவர்கள்: : (அழுது கொண்டே) பொம்மை... பொம்மை... நாங்க எல்லாம் பொம்மை.. பொம்மை.

ஆசிரியர் 1 : கேட்டீங்களா.. கேட்டீங்களா.. அழுகுரலைக் கேட்டீங்களா. அழுகுரல் எங்க கேட்கணும்? யாராவது செத்துபோயிட்டா இறந்தவங்க வீட்ல தான் கேக்கணும்.

வகுப்பறையில் கேட்டா என்ன அர்த்தம்? வகுப்பறையில் மரணங்கள் நடக்குது... கண்ணுக்குத் தெரியாத மரணங்கள் நடக்குது. இதைப் பற்றி...

(ஆசிரியர் வகுப்பறைக்குள் பதற்றமுடன் நுழைகிறார்)

ஆசிரியர் 1 : எதுக்குடா அழுறீங்க... ஏன் முட்டி போட்டுருக்கீங்க... எழுந்து நில்லுங்க...

மாணவி 2 : சார்... சார்... சாரு முட்டி போட வச்சுட்டாரு சார்.

ஆசிரியர் 2 : ஐயயோ... ஐயயோ... கண்ணுங்களா. சார் முட்டி போட வச்சுட்டாரா?. என்ன செய்யலாம்? புதுப் பாடம் நடத்தலாம்னு இருந்தேன். நீங்க இப்படி இருந்தா எப்படி நடத்துறது. சரி.. பாட்டு பாடலாமா?

மாணவர்கள்: (சிறு புன்னகையுடன்) பாடலாம் சார்...

நிலா நிலா ஓடி வா - (கூட்டமாக முழுப்பாடல் பாடுகின்றனர்)

(மாணவர்கள் ஆசிரியர் அருகில் உட்கார போட்டிப் போடுகின்றனர்)

ஆசிரியர் 2 : வகுப்பறையில் நடக்குற பஞ்சாயத்து அப்பப்பா.

மாணவி : சார், உங்க பக்கத்துல இவதான் நேத்தும் உட்கார்ந்திருந்தா...

ஆசிரியர் 2 : Pencil குடுக்கறீங்க.. Sharpener குடுக்கறீங்கஞ் இடத்தை.

மாணவி 1 : சரிங்க சார்!. சார். இவன் இன்னைக்குக் குளிக்கல!

ஆசிரியர் 2 : போன வாரம் தண்ணி பத்தி படிச்சோம். அத தப்பா புரிஞ்சிக்கிட்டியோ?. தினமும் குளிக்கணும். சரி தண்ணி எப்படி குடிப்பீங்க?

மாணவர்கள்: (குழுவாக) தண்ணிய, இப்படி மோந்து குடிப்போம் சார்.

ஆசிரியர் 2 : தண்ணிக்குள்ள கை உள்ள போகுமா?

மாணவர்கள் : போகும்ம்ம் சார்...

ஆசிரியர் 2 : கைக்குள்ள இருக்குற அழுக்கும் தானே உள்ள போகும்?

மாணவர்கள் : ஆமா சார்..

ஆசிரியர் 2 : ஆ... வயத்துக்குள்ளையும் போகும். போன என்ன ஆகும்?

ஆசிரியர் 2 : சரி... இப்போ... நம்ம நேத்து பாடுன பாட்டைப் பாடலாமா?

மாணவர்கள் : சரிங்க சார்... பாடுவோம் சார்...

(மாணவர்கள் ஆடலுடன் பாடத் தொடங்குகின்றனர்)

ஆடு ஆடு ஆடு

ஆடு போல ஓடு

ஆடு ஆடு ஆடு

ஓடு ஓடு ஓடு

நீ துள்ளிக்குதிச்சு ஓடு

தேடு தேடு தேடு

வழியை நீயும் தேடு”

மாணவர்கள் : ஹேய்... Jolly.. Jolly...

ஆசிரியர் 2 : இப்போ நாம் பாட்டு பாடியாச்சு.. அடுத்தது என்ன?

மாணவி 3 : படம் வரையுறது சார்...

ஆசிரியர் 2 : சூப்பர்... Pencil-யும் Note-book-யும் எடுங்க..

(சல சலப்பு மற்றும் பென்சில் பஞ்சாயத்தைச் சரி செய்கிறார்)

ஆசிரியர் 2 : இந்தா... உனக்குப் பென்சில்... இப்போ எல்லாரும் வரையுங்க... அப்புறம் ஆடு பத்தி கொஞ்சம் முத்து முத்தா எழுதுங்க ரெண்டு வரி.

மாணவி 1 : சார்... எனக்கு எழுதத் தெரியாது சார்...

ஆசிரியர் 2 : தெரிந்ததை எழுது. சார் அப்புறம் சொல்லித் தாரேன்.

மாணவி 1 : (துள்ளலுடன்) சரிங்க சார்..

மாணவி 4 : சார்... முடிச்சுட்டேன் சார்...

ஆசிரியர் 2 : (மாணவியின் ஓவியத்தை உற்றுநோக்கியபடி) என்னது ஆடா... ஆடு எங்க இருக்கு?.

மாணவி 4 : ஆடு இந்த பெட்டிக்குள்ள தான் இருக்குது சார்.

ஆசிரியர் 2 : பெட்டிக்குள்ள ஆடு எப்படிங்க இருக்கும்?

மாணவி 4 : எங்க வீடு ரொம்ப சின்னது சார் அதான் பெட்டிக்குள்ள.

ஆசிரியர் 2 : அந்த ஆடு எப்படி பெட்டிக்குள்ள மூச்சு விடும்.

மாணவி 3 : சார்... அந்த பெட்டியில் குட்டியா.. ரெண்டு ஓட்டை போடுங்க.

(ஆசிரியரும் மாணவர்களும் ஹோ...Jolly Jolly... எவ்வளவு அறிவு கொட்டிக் கிடக்குப் பாருங்க.)

(மாணவி 3-ஐ நோக்கி, ஆசிரியர்) நீ எழுதிட்டியாம்மா. நல்ல பொண்ணு.

மாணவி 3 : ஆட்டுக்கு நாலு காலு, ரெண்டு கொம்பு

மாணவி 2 : சார் ஆட்டுக்கு ஒரு வாலு! (செய்கை மூலம் காட்டினாள்)

மாணவி 1 : சரிங்க சார்.. வாலு போடுறேன்.

மாணவி 2 : வாலை வரையனும்... இது கூட தெரியல...

ஆசிரியர் 2 : எல்லாரும் சூப்பரா எழுதியிருக்கீங்க... Very good... பேசும் போது நல்லா பேசுறோம்ல... இதை எழுதும்பொழுது கொஞ்சம் மாத்தி எழுதனும். அதே போல், இப்போ நான் உன்னிடம் சொல்கிறேன். நீ மாத்தி சொல்லு.

"எனக்கு இரண்டு கைகள் உள்ளன". அதே மாதிரி ஆட்டுக்கு எத்தனை கால்கள் உள்ளன?"

மாணவி 2 : நான்கு கால்கள்

ஆசிரியர் 2 : யாருக்கு எனக்கா?

மாணவர்கள்: ஆட்டுக்கு சார்

ஆசிரியர் 2 : அப்போ திருத்தி சொல்லுங்க

மாணவர்கள் : ஆட்டுக்கு நான்கு கால்கள் உள்ளன.

மாணவி 3 : சார் என்னோட ஆட்ட photo எடுத்து Whatsappல எங்க அப்பாவுக்கு Send பண்ணுங்க சார்.. (உரையாடல் நீளமாகத் தொடர்கிறது)

மாணவி 2 : சார் எல்லாருக்கும் போட்டோ எடுத்து அனுப்புங்க சார்...

ஆசிரியர் 2 : எல்லாருக்கும் பண்ணிடுவோம். .. இன்னைக்கு ஆடு பாட்டு பாடுனீங்க.. நாளைக்கு மாடு பத்தி பாட்டு நீங்களே பாடப் போறீங்க.

(மாணவர்கள் குதூகலிக்கின்றனர்)

ஆசிரியர் 2 : Thankyou... Bye... செல்லங்களா..

(ஆசிரியர் வெளியேறிய பின் - மாணவர்களுக்குள்)

மாணவி 1 : இந்தச் சார், ரொம்ப நல்ல சார்ல...

மாணவி 2 : சாரு பாட்ட மாத்தி பாட சொன்னாருல்ல... பாடலாமா?

(மாணவர்கள் பாடத் தொடங்குகின்றனர்)

"மாடு மாடு மாடு!

மாடு போல யாரு! சேறுக்குள்ள ஓடி!

சோறு போடும் மாடு

பாலு குடுக்கும் மாடு

புல்லு திங்கும் மாடு.

மாணவர்கள் : ஹேய்... Jolly... jolly...

(மணி அடிக்கிறது... சில நிமிடங்களுக்குப்பின் - காட்சி)

மாணவி 1: ஏய்... மிஸ் வராங்கடா.. ஏய் இந்த மிஸ் அடிக்குற மிஸ் தான...

மாணவன் 2: ஆமா... கையில் குச்சி வச்சிருக்காங்க...

ஆசிரியை 2 : குச்சி இல்லாம எதுவும் செய்ய முடியல. (ஆசிரியை நுழைகிறார், சில நிமிடங்களுக்குப் பின்) உள்ள வந்து எவ்ளோ நேரம் ஆச்சு... எருமமாடு மாதிரி உட்கார்ந்திருக்கீங்க...

மாணவர்கள்: பயத்துடன் Good Morning miss...

ஆசிரியை 2 : (சலிப்பாக) Goooddd Mooorrrn-ing... நான் கேட்ட பிறகு. அப்புறம்.. உங்க சாரு பாடமெல்லாம் முடிச்சாச்சா?

மாணவன் 2 : ஓ... எப்பவோ முடிச்சுட்டாரே எங்க சார்...

ஆசிரியை 2 : ஓ... முடிச்சுட்டாரா. உங்க சாரு வேற வேலைனு போயிட்டாரு. உங்கள எங்க தலையில் கட்டிட்டு (கோபத்துடன்) Penicl, note வச்சுருக்கீங்களா...

மாணவர்கள் : ஆ... வச்சுருக்கோம் மிஸ்....

ஆசிரியை 2 : நான் எழுதுறதை அப்படியே எழுதுங்க(Blackboard-ல் எழுதுகிறார்)

மாணவன் 2 : போன period-ல இதுதான் எழுதினோம்.

... (ஆசிரியையுடன் கசப்பான உரையாடல் நீள்கிறது)

ஆசிரியை 2 : உங்கள சொல்லி குத்தம் இல்ல. உங்க சாரு உங்கள அப்படி பழக்கி வச்சுருக்காரு. நடத்தும் போதே பாத்ரூமுக்கு அனுப்புறது ... என்ன கேட்குறியோ... அதை செய்யுறது...

மாணவன் 2 : எங்க சாரு பாத்ரூம் வந்தா உடனேஞ்

(மாணவி அழுதுக்கொண்டே வெளியேறுகிறாள். அங்கு பால்காய்ச்சும் அக்கா மாணவியைக் கூப்பிட்டு பேசும் காட்சி)

அக்கா : ஏன் அழற?

மாணவி 1 : மிஸ்... நோட்டு கேட்குறாங்க.

அக்கா : சரி இதுக்கு ஏன் அழற?, வா! நான் மிஸ்கிட்ட சொல்றேன்.

மாணவி 1 : அக்கா வேணாம் அக்கா, மிஸ் அடிப்பாங்கக்கா...(அக்கா மாணவியுடன் வகுப்பறைக்குள் நுழையும் போது மாணவர்களை ஆசிரியர் அடித்துக் கொண்டிருக்கிறார்)

ஆசிரியை 2 : வாங்க... வாங்க... என்னாச்சு?

அக்கா : பாப்பாகிட்டட நோட் இல்லையாம். வராண்டால நின்று அழுதுகிட்டு இருந்தா. அதான் கிளாஸ்ல விட்டுட்டு போலானு வந்தேன்.

ஆசிரியை 2 : ஐயோ... சரி நீங்க போங்க நான்... (அக்கா வெளியேறுகிறார்)

ஆசிரியை 2 : (கோபத்துடன்) வா... இங்க வா... நீ எங்க போன?(ஆசிரியை கிள்ளுகிறார்) வாட்டர்னு சொல்லிட்டு பஞ்சாயத்து இழுத்துட்டு வர... நோட்டு இல்லனா என்கிட்ட சொல்ல வேண்டியது தானே... ஏய்... என்னது இது. ஆ... ஒரு pencil இல்ல, Pen இல்ல, ஒரு நோட்டு இல்ல... இதலாம் தூக்கிக்கிட்டு ஸ்கூலுக்கு



வந்துடுதுங்க... எல்லாம் என் தலையெழுத்து.

(பையைத் தூக்கி எறிந்து, மாணவியைத் தள்ளிவிட்டு) நீயும் அது கூடயே கிட

(பாடல் காட்சி)

“அடக்கி ஒடுக்குவதல்ல பள்ளிக்கூடம்

அடிச்சு ஒடிப்பதல்ல”....

(ஆசிரியை வகுப்பறையிலிருந்து வெளியேறி, தனியே புலம்புகிறார்). அந்த classroom-க்கு பேனாலே உயிர்போய் உயிர் வருது. என்ன புள்ளைங்க அதுங்க. இப்படி இருக்குதுங்க.

(மற்றொரு ஆசிரியைப் போகின்ற வழியில் சந்திக்கிறார்... பின்)

ஆசிரியை 3 : என்னாச்சு மிஸ்? ஏன் இப்படி புலம்பிக்கிட்டு இருக்கீங்க?

ஆசிரியை 2 : இந்த வகுப்பிற்குப் போனாலே தலைவலி வருது.

ஆசிரியை 3 : அவர்கள் எப்பவும் ஆட்டமும் பாட்டமும், துள்ளலுமா இருப்பாங்க.

அசிரியை 2 : அப்படி தான் மிஸ் நானும் நினைச்சுகிட்டுப் போனேன். ஆனா அதுங்க அங்க இருக்குற பிரச்சனையை நம்மகிட்ட சொல்லாம.

ஆசிரியை 3 : யாரிடம் பயமில்லையோ... அங்கதான் புள்ளைங்க வந்து சொல்லுவாங்க.

ஆசிரியை 2 : பயமா?... அப்படி பயப்படுறதுக்கு நான் என்ன பண்ணேன்?. நான் என்ன சிங்கமா?. இல்ல புலியா? என்ன பாத்து பயப்படுறதுக்கு.

ஆசிரியை 3 : அதெல்லாம் அடக்கி, ஒடுக்கி zoo-ல வச்சுட்டாங்க. உங்கிட்ட தான் எல்லாமே இருக்கிறது. உங்க கைல இருக்கிற சிவப்பு மையையும், பெரம்பையும் தூக்கி எறிஞ்சிட்டு, அதிகாரம் என்ற முகத்திரையை அகற்றி, மகிழ்ச்சியோடு முக மறுமலர்ச்சியோடு போங்க. நம்ம பிள்ளைங்க எப்படி நம்மகிட்ட ஓடி வராங்கனு தெரியும்.

ஆசிரியை 2 : என்ன மிஸ் சொல்றீங்க?

(ஆசிரியை 3 கடந்து செல்கிறார்)

ஆசிரியை 2 : என்னது இந்தப் பெரம்பா?... இந்த சிவப்பு மையா? இது ஒரு தடை... இதுவா ஒரு தடை.. இதனால தான் என் பசங்க என் கூட சேர்ந்து பழக மாட்றாங்களா? அவங்கள புரிஞ்சுக்கிறதுக்கு இதுதான் தடையா? அவங்கள கண்டிக்க, காயப்படுத்த இது தான் கருவினா... இந்தப் பெரம்பு இனிமேல் எனக்கு வேணாம்... இந்த ரெட் பென் எனக்கு வேணாம்... இது தெரியாமா அந்த பிஞ்சுகளை எவ்வளவு பிரச்சனைக்கு உள்ளாக்கி இருக்கேன். இந்த அதிகாரம்ங்ற முகமூடி எனக்கு வேணாம்.

பாடல் - திமுக்கு திமுக்காவ... திமுக்குதிக்காவா (பாடலுடன் முடிகிறது)

*Notes :*

*Notes :*

# Glimpses from Medaiyil Thisaimaani















AZIM PREMJI FOUNDATION
#5 Nessa Illam, PSCB Nagar, Opp. RTO, Puducherry - 605 004.
www.azimpremjifoundationpuducherry.org, www.azimpremjifoundation.org

Send us your feedback :
thisaimaani@azimpremjifoundation.org
✆ 8220001765 - 9500400446

MOTHER'S GRACE 0413 2336204